2819

T. N. C. A Debates

Official Report

Vol I No 4&5

11, 12, March 1885

D
V211, 31 N85
N85.1.4&5;1
136364

3533 | அ.சா/85

வெளியீடு 3-9-85]    [Issued 3-9-8:

2819

26 -1985
எழும்பூர் சென்னை-600 008

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 11, 1985 - தொகுதி I எண் 4

Monday the 11th March 1985 - Volume I No 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Madras - 600 009**

விலை: ரூ. 3-50 காசுகள்]    [Price Rs. 3-50 paise

## உள்ளடக்கம்

11—3—1985

நாடு ஆவணக்காப்பகம்
26 டிச 1985
சென்னை-600 008


| | |
|---|---|
| 1 அறிவிப்புகள் — | |
| (அ) உலக கிரிக்கெட் கோப்பைக்கான போட்டியில வெற்றி பெற்று உலக சாம்பியன் பட்டத்தைப் பெற்றுள்ள இந்திய அணியினருக்குப் பாராட்டுகள் .. .. | 109—110 |
| (ஆ) வினாக்களுக்கான விடைகளை துறைகள் அனுப்பி வைத்தல் .. .. | 110—111 |
| (இ) இறுதித் துணை நிதிநிலை அறிக்கை 1984–85 நிதிநிலை அறிக்கை 1985–86 மற்றும் முன்பண மானியக் கோரிக்கைகள் 1985–86 அளித்தல் (ஆ.செ.) .. | 111 |
| (ஈ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் .. | 112 |
| 2 தகவல் கோரல் — | |
| உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை .. | 112 |
| 3 அரசினர் சட்ட முன்வடிவு — | |
| பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருத்த) சட்டமுன்வடிவு 1985 .. .. | 112—113 |
| 4 ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் — | 113—249 |
| விவாதம் .. .. | 113—134 |
| திரு. செ. செம்மலை .. .. | 113—134 |
| திரு. ஆர். ரெங்கசாமி .. .. | 134—141 |
| திரு. தி. அன்பழகன் .. | 141—147 |
| திரு. ஏ. எஸ். ரவீந்திரன் .. .. | 147—161 |
| திரு. அ. ரகுமான்கான் .. .. | 161—183 |
| திரு. மு. ஜான் வின்சென்ட் .. .. | 183—202 |
| திரு. வி. பி. சிந்தன் .. .. | 203—218 |
| திரு. அ. பாலுசாமி .. . | 218—227 |
| திரு. வி. தங்கவேலு .. .. | 227—235 |
| திரு. செ. தங்கராசு .. . | 236—241 |
| திரு. டி. வெங்கடரெட்டி .. .. | 242—249 |
| பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் — .. | 249—252 |

V2!!,31 N85
N85.1.4 ዏ5;1
தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136364
சென்னை-600 008.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1985, மார்ச் 11, திங்கட்கிழமை

மாசி 28, ரக்தாட்சி, திருவள்ளுவர் ஆண்டு 2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

இனிய சொற்கள் இருக்கும்போது அவற்றை விட்டுக் கடுமையான சொற்களைக் கூறுதல் கனிகள் இருக்கும்போது காய்களைப் பறித்துத் தின்பதைப் போன்றது.

## 1. அறிவிப்புகள்

(அ) உலக கிரிக்கெட் கோப்பைக்கான போட்டியில் வெற்றி பெற்று உலக சாம்பியன் பட்டத்தைப் பெற்றுள்ள இந்திய அணியினருக்குப் பாராட்டுகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஆஸ்திரேலிய நாட்டில் மெல்போர்ன் நகரத்தில் நடந்த உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் "உலக சாம்பியன்" பட்டத்தை இந்திய அணியினர் கைப்பற்றியமைக்கு, குழுவின் தலைவர் திரு. சுனில் கவாஸ்கருக்கும், திறம்பட விளையாடிய அவர் அணியினருக்கும் இந்த அவையின் சார்பாகவும் என் சார்பாகவும் பாராட்டுதலைத் தெரிவிக்கின்றேன். குறிப்பாக தமிழகத்தைச் சார்ந்த திரு ஸ்ரீகாந்திற்கும், திரு. எல். சிவராமகிருஷ்ணனுக்கும் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். (கரவொலி) . . .

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு எவ்வளவோ பிரச்சனைகள் இருந்தாலுங்கூட, நம்முடைய நாட்டுக்கு மிகப் பெரிய பெருமையை ஈட்டுகின்ற அளவிற்கு நம்முடைய கிரிக்கெட் குழுவினர் மிகப் பெரிய சாதனையை நிகழ்த்தியிருக்கிறார்கள் மீண்டும். குறிப்பாக தமிழகத்தைச் சார்ந்த 2 வீரர்கள் இதிலே பங்கு பெற்று இருக்கின்ற காரணத்தால், நம்முடைய அரசின் சார்பிலே தமிழக வீரர்களுக்கு, மற்ற மாநிலங்களில் பரிசுகளை வழங்குவதைப்போன்று இங்கேயும் வழங்கப்படுமா? அதோடு அவர்களுக்கு பொது வரவேற்பும் அளிக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய அளவிலோ அல்லது சர்வதேச அளவிலோ, இதுபோன்ற வெற்றிக்களைத் தேடித் தருகின்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்களுக்கு பல்வேறு பரிசுகள், மற்றும் வசதிகள் தருவதற்கான ஒரு திட்டம் அமுலில் இருக்கின்றது. நம்முடைய ஹாக்கி குழுவிற்கு தலைமை தாங்கிச் சென்று வெற்றி தேடித் தந்த திரு. பாஸ்கர் அவர்களுக்கு ஒரு வீட்டையே நாம் தந்திருக்கிறோம்.

### (ஆ) வினாக்களுக்கான விடைகளை துறைகள் அனுப்பி வைத்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 25—2—1985 அன்று உறுப்பினர்கள் பதவி ஏற்றதற்குப் பின்னர் பல உறுப்பினர்கள் வினாக்களுக்கான முன்னறிவிப்புகளைக் கொடுத்து வருகின்றனர். அனுமதிக்கப்பட்ட வினாக்கள் அரசுத் துறைகட்கு அனுப்பப் பட்டுள்ளன, தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகின்றன.

குறுகிய கால வினாக்களுக்கான அறிவிப்புகளும் பெறப்பட்டு துறைகளுக்கு உடனுக்குடன் அனுப்பப்படுகின்றன. வினாக்களுக்கான விடைகளை செயலகத்துறைகள் தயாரித்து அனுப்ப விதி என் 44-ல் வரையறுக்கப்பட்டுள்ள கால அளவு உடுக்குறியிட்ட வினாக்களுக்கு 42 நாட்களும், குறுகிய கால வினாக்களுக்கு 7 நாட்களும் ஆகும். எனவே, நடப்பு கூட்டத்தில்



வைத்துக் கொள்ள இயலாது. வினா நேரம் முழுமையாக இருப்பினும், அரசுத் துறைகளுக்கு அனுப்பியுள்ள வினாக் களுக்கு விடைகள் வரப்பெற்றால் உடனுக்குடன் நடப்புக் கூட்டத் தொடரில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அவைக்கு அறிவித்துக்கொள்கிறேன்.

விதி எண் 44-ல் வரையறுக்கப்பட்டுள்ள கால அளவு முடியும் வரை காத்திராமல், அரசுத் துறைகள் உடனடியாக வினாக்களுக் கான விடைகளை தயாரித்து அனுப்ப, மாண்புமிகு அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### (இ) இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 1984-85, நிதிநிலை அறிக்கை 1985-86 மற்றும் முன்பண மானியக் கோரிக்கைகள், 1985-86 அளித்தல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவுகள் 205(1), 202(1) மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 196(1) ஆகியவற்றின் கீழ், 1984-85 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கை யும், 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையும் மற்றும் 1985-86 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை சட்டமன்றப் பேரவைக்கு கீழ்க்கண்ட நாட்களில் அளிக்க வேண்டும் என்று ஆளுநர் அவர்கள் குறித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

| | | |
|---|---|---|
| 1984-85 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதிநிலை அறிக்கை | .. | 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 20 ஆம் நாள் புதன் கிழமை |
| 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1985-86 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கை | .. | 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை |

(ஈ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு மற்றும் ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி-9, உள்விதி (1)-ன் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் முதல் கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Per capita inc me) நியமிக்கிறேன் :

1. திரு. மா. சின்னராசு
2. திரு. செ. செம்மலை
3. திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்
4. திரு. மு. இராமநாதன்
5. திரு. வே. இரா. ஜெயராமன்

## 2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிக்கை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வக்கீல்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருப்பது பற்றி நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றி சில உறுப்பினர்கள் அறையிலே வந்து கேட்டார்கள். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசும்போது இதுபற்றியும் பேசலாம் என்று குறிப்பிட்டேன். அதையேதான் இப்போதும் குறிப்பிடுகிறேன்.

## 3. அரசினர் சட்ட முன்வடிவு

பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:



"1985-ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

## 4. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்.

* **திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 8 ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு * தமிழ்நாடு சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்".

**திரு. மு. ஜான் வின்சென்ட்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் இத்தீர்மானத்தை வழி மொழிகிறேன்.

**திரு. செ. செம்மலை:** பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க 8-வது சட்டமன்றத்தின் முதல் கூட்டத் தொடரில் மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பையும் அதை மொழிவதற்கு ஒரு சந்தர்ப்பத்தையும் கொடுத்த தங்களுக்கு என் நன்றியை முதலிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்

---

** 253-264ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

*265-282ம் பக்கங்களில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் படிக்கப் பெற்ற ஆளுநர் உரையின் தமிழாக்கம் இணைப்பு ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

டிருக்கிறேன். நான் வரலாற்றுச் சிறப்புமிக்க 8 வது சட்டமன்றம் என்று குறிப்பிட்டதற்குக் காரணம் இதுவரை எந்த அரசியல் தலைவனும் 3 முறை தேர்தலைச் சந்தித்து, அவற்றிலே வெற்றியும் பெற்று, 3 முறை தொடர்ந்து முதலமைச்சராக ஆனதற்குத் தமிழகத்திலே வரலாறு கிடையாது. ஆனால் அப்படிப்பட்ட ஒரு சரித்திர சாதனையை இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் நிகழ்த்தி இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

7-வது சட்டமன்றக் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருந்த சமயம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் உடல் நலம் குன்றி மருத்துவமனையிலே சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தார். அந்தச் சமயத்தில் அவர் உடல்நலம் பெற வேண்டுமென்ற அந்த அடிப்படையில், சட்டமன்றப் பேரவையை ஒத்திவைக்கின்ற சூழ்நிலையில் இங்கே கருத்துக்கள் எல்லாக் கட்சித் தரப்பினராலும் பேசப்பட்டன. முதல்வர் அவர்கள் நல்ல உடல்நலம் பெற்று மீண்டும் இந்த அவைக்கு வந்து தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென்றும் மீண்டும் தொடர்ந்து நல்லாட்சியை இந்த நாட்டுக்கு வழங்க வேண்டுமென்றும் இந்த மாமன்றம் அன்றைக்கு விரும்பியது. இந்த மாமன்றத்தினுடைய விருப்பத்திற்கு இணங்கவும் கோடானு கோடி நாட்டு மக்களுடைய நல்லெண்ணத்திற்கு ஏற்பவும் நம்பிக்கையுடையவர்களின் பிரார்த்தனை பலிக்கும் வகையிலும் இன்றைக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் நாமெல்லாம் மகிழ்ச்சியுறுகிற அளவிற்கு இங்கே மீண்டும் முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கிறவர்கள் என்பதை நாமெல்லாம் எண்ணிப் பார்த்து பெருமைப்படுகிறோம் பூரிப்படைகின்றோம். அப்படிப்பட்ட முதல்வர் அவர்கள் நல்ல உடல் நலத்தோடு இங்கே திரும்பி வந்து பணியாற்றுவதற்குக் காரணமாயிருந்த மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கும் இன்றைய பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களுக்கும் உடல்நலத்தைப் பேணிக் காத்த மருத்துவ வல்லுநர்களுக்கும் இன்றையதினம் நாம் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம்.





நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைய தினம் பணியாற்றத் தொடங்கியவுடன் புதிய உத்வேகத்துடன் இங்கே அமர்ந்து இந்த நாட்டை வழி நடத்திச் செல்கின்ற அந்தக் காட்சி நமக்கெல்லாம் பூரிப்பும் மகிழ்ச்சியும் அளிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். அதற்கொப்ப தமிழ்நாட்டு மக்கள் இன்றைக்குப் புரட்சித் தலைவருடைய தலைமையிலான நல்லாட்சிக்கு அங்கீகாரம் வழங்கியிருக்கிறார்கள். அவருடைய நல்லாட்சிக்கு இன்றைக்கு நல்லாதரவு தந்திருக்கிறார்கள் என்பதைத்தான் இந்தத் தேர்தல் முடிவு காட்டிக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 3.10)

ஆனால் சிலர் இந்த வெற்றிக்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த வெற்றிக்கு, குறிப்பாக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வெற்றிக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய வெற்றிக்கும், காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய வெற்றிக்கும் மிக முக்கிய காரணம் அனுதாபமே என்று அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்வதைப்போல அனுதாபத்தினாலே வெற்றிபெற்றது உண்மை என்றால் மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு இங்கே நிச்சயமாக இடம் இருந்திருக்காது. ஆகவே, இது அனுதாபத்தினால் கிடைத்த வெற்றி அல்ல. அனுதாபத்தினால் கிடைத்த வெற்றி என்று சிலர் சொல்லிக்கொண்டு தாங்கள் மக்களுடைய அனுதாபத்தைப் பெறுவதற்கு தேர்தல் நேரத்திலே என்னென்ன சொன்னார்கள் என்பதை மக்கள் மறந்துவிட தயாராக இல்லை. வீட்டு நாயாக தங்களை வர்ணித்துக் கொண்டார்கள்; செருப்பாக தங்களை வர்ணித்துக்கொண்டார்கள்; எரிகிற விறகாக தங்களை வர்ணித்துக்கொண்டார்கள். இப்படியெல்லாம் வர்ணித்துக்கொண்டும் மக்களுடைய அனுதாபத்தை அவர்களால் பெற முடியவில்லை என்பதை இன்றைக்கு மக்கள் நினைத்துப்பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

(திரு. செ. செம்மலை) [1985 மார்ச் 11

என்னைப் பொறுத்தவரையில், நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வெற்றி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய வெற்றி, அவர்களுடைய தலைமைக்கு கிடைத்த வெற்றி; அவர்களுடைய திட்டங்களுக்குக் கிடைத்த வெற்றி. இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கிற சத்துணவுத் திட்டத்திற்குக் கிடைத்த வெற்றி. இன்னும் சொல்ல வேண்டுமென்றால் புரட்சித் தலைவர் அவர்களுடைய, குடிசைக்கு ஒரு மின் விளக்கு இலவசமாக அளிக்கும் திட்டம், இதர இலவச மின்சார வசதியளிக்கும் திட்டங்கள், குடிநீர் திட்டங்கள், போக்குவரத்துத் துறையிலே ஏற்பட்டுள்ள சாதனங்கள், திட்டங்கள் இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்களுக்குக் கிடைத்த வெற்றிதான் இந்த வெற்றி. இப்படிப்பட்ட பல்வேறு காரணங்களினால்தான் இந்த மகத்தான வெற்றியை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை இங்கே நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே போடுகிற எல்லாத் திட்டங்களும் ஏழை எளிய மக்களுடைய குடிசைகளின் கதவுகளைத் தேடி, நேரடியாகப் போய்ச் சேருகின்றன. அதனுடைய பிரதிபலிப்பாகத்தான் இந்த ஆளுநர் உரை இருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையைப்பற்றி சில கட்சித் தலைவர்கள் "உப்பு சப்பு இல்லாத உரை" என்று சொல்லியிருக்கிறார்கள், பத்திரிகைகளில் செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் உப்பு சப்பு இல்லாத உரை என்று சொல்வதற்குக் காரணம் அவர்கள் உப்பில் சுவையை அறியாத குற்றமே தவிர இந்த உரையின் குற்றம் அல்ல. உப்பின் சுவையை அறியாதது அவர்களுடைய நாக்கின் குற்றம் என்றுதான் சொல்ல வேண்டும். ஒருவனுக்கு காய்ச்சல் இருந்தால், அவன் எந்த ருசியான பொருளைச் சாப்பிட்டாலும் நாக்கு அந்த ருசியை அறியாது, ருசியாகவும் இருக்காது. அதைப்போன்று இன்றைக்கு பொதுத் தேர்தலிலே ஏற்பட்ட காய்ச்சல் காரணமாக எதிர்க்



1985 மார்ச் 11] (திரு. செ. செம்மலை)

கட்சிக் காரர்களுக்கு உப்பு சப்பு இல்லாத உரையாக இருப்பதிலே வியப்பு இல்லை. காய்ச்சலோடு சளியும் சேர்ந்து கொண்டால் சுத்தமாக ருசிக்காது. அதைப்போன்று பொதுத் தேர்தலிலே ஏற்பட்ட காய்ச்சலுக்குப் பிறகு புதுச்சேரியிலும் திருப்பத்தூரிலும் ஏற்பட்ட சளியின் காரணமாக இந்த உரை அவர்களுக்கு உப்பு சப்பு இல்லாத உரையாகக் காட்சியளிக்கிறது.

புரட்சித் தலைவர் அவர்களுடைய சாதனங்களை நாம் ஒப்பு நோக்கிப் பார்க்க வேண்டும். முந்தைய ஆட்சியிலே நடைபெற்ற சாதனைகளையும் இந்த ஆட்சியிலே நடைபெற்றிருக்கிற சாதனைகளையும் அத்தோடு பிற மாநிலங்களிலே ஏற்பட்டுள்ள சாதனைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தான் இந்த ஆட்சியின் திட்டங்கள், பெருமைகள் நமக்கு நன்றாகத் தெரியும். 'ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதைப்போன்று இந்த ஆட்சியின் சாதனைகளில் ஒன்றிரண்டை மட்டும் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அரிசி உற்பத்தியைப் பொறுத்த வரையில் 1977-ல் 42 இலட்சம் மெட்ரிக் டன் அளவைதான் நம்மால் அடைய முடிந்தது. ஆனால் இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் 1984 ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 60 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தியை எட்டியிருக்கிறோம்.

அது மட்டுமல்ல. பொது விநியோகத்தில் இன்றைக்கு ஒரு குடும்ப கார்டுக்கு 20 கிலோ அரிசியை வழங்கிக்கொண்டிருக்கிறோம். அப்படி விநியோகம் செய்கிறபோது விவசாயிகள் பாதிக்கக்கூடாது என்பதற்காக மத்திய அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற கொள்முதல் விலையைவிட நாம் சற்று அதிகமாகக் கொடுத்துவருகிறோம். நம்முடைய பற்றாக்குறையை பூர்த்தி செய்ய வெளி மாநிலங்களிலிருந்தும் அவர்கள் கேட்கும் விலையைக் கொடுத்து கொள்முதல் செய்கிறோம். அந்த அளவுக்கு அதிக விலை கொடுத்தாலும் பொது விநியோகத்தில் ஒரு கிலோ அரிசி ரூ. 1.75 என்ற அளவுக்கே விநியோகம் செய்து, அதனால் ஏற்படுகிற நஷ்டம் எவ்வளவாக இருந்தாலும் அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. இந்தத் திட்டத்தினால் அரசாங்கத்திற்கு

(திரு. செ. செம்மலை) [1985 மார்ச் 11

கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. இருந்தாலும் பொது மக்களுக்கும் பாதிப்பு ஏற்படக்கூடாது, உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கும் பாதிப்பு ஏற்படக்கூடாது என்ற முறையிலே எத்தனைய சங்கடங்கள் ஏற்பட்டாலும், மக்களுக்கு திருப்தி அளிக்கக் கூடிய வகையிலே அரசாங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போன்று போக்குவரத்துத் துறையை எடுத்துக் கொண்டால், 1977-ல் அரசுத் துறையிலே 4974 பஸ்கள்தான் இருந்தன. ஆனால் இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில், 1984-ஆம் ஆண்டின் கணக்குப்படி அரசு பேருந்துகளின் எண்ணிக்கை 8994 என்ற அளவுக்கு அது உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த அளவிற்கு கிராமங்கள் தோறும், பட்டி தொட்டிகள் தோறும் போக்குவரத்து வசதிகளை மக்களுக்காக அரசாங்கம் செய்து கொடுத்திருக்கிறது என்பதையும் நாம் எண்ணிப் பார்த்து பெருமைப்பட வேண்டும்.

அதேபோல புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய திட்டமான சத்துணவு திட்டத்தின் மூலம் சுமார் 80 இலட்சம் குழந்தைகள் பயன் பெற்று வருகிறார்கள் என்பதையும், 2.80 லட்சம் முதியோர்கள் இதனால் பயன் பெற்று வருகிறார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்கும்போது மகிழ்ச்சியடைகிறோம். அது மட்டும் அல்ல இந்த திட்டத்தின் மூலம் குழந்தைகளுக்கும் ஆதரவற்ற முதியோர்களுக்கும் நாம் உணவு அளிக்கிறோம் என்கிற பயனைவிட இரண்டு முக்கியமான பிரச்னைகளும் தீர்க்கப்பட்டிருப்பதையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஒன்று, இந்த திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 86 ஆயிரத்து 980 பேர்களுக்கு, அதிலும் குறிப்பாக, ஆதரவற்ற பெண்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், கைம்பெண்கள், தாழ்த்தப்பட்டவர்கள் போன்றவர்கள் வேலை வாய்ப்பை பெறுகின்றனர் என்பது; மற்றொன்று ஒரு புரட்சிகரமான திட்டமாக அமைந்திருக்கும் இந்த திட்டத்தின் மூலமாக, எவ்வளவோ சிரமங்களுக்கிடையே வாழ்ந்துகொண்டிருக்கும்



1985 மார்ச் 11] (திரு. செ. செம்மலை)

கிராம மக்கள் தங்கள் பிள்ளைகளை பள்ளியில் சேர்க்க வேண்டும் என்று நினைத்ததன் காரணமாக 3.65 லட்சம் பிள்ளைகள் புதியதாக பள்ளியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இது மிகப் பெரிய சாதனை என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் ஆளுநர் உரையிலே புதிய திட்டம் ஒன்றை அறிவித்திருக்கிறார்கள். சத்துணவு மையங்களிலே சாப்பிடுகிற குழந்தைகளுக்கு சீருடை வழங்குகிற திட்டத்தையும், 61,273 முதியோர்களுக்கு கூடுதலாக மதிய உணவு வழங்குகிற திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள். இது உள்ளபடியே வரவேற்கக் கூடிய ஒரு செய்தியாகும் என்பதை சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல மின் வாரியத் துறையை எடுத்துக் கொண்டாலும் கூட, எவ்வளவோ சங்கடங்களுக்கிடையே நமது மின் வாரியத்தினர் சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் நாம் இத்துறையில் முன்னணியில் இருக்கிறோம். கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கின்ற வகையில் இந்தியாவினுடைய ஒட்டு மொத்த சதவிதக் கணக்கைப் பார்க்கும்போது, நம்முடைய தமிழ்நாட்டில் கிராமங்களுக்கு மின்சார வசதி என்ற வகையில் 99.8 சதவீதத்தை எட்டியிருக்கிறோம். ஆனால் இந்தியா முழுவதும் இத்துறையில் பெற்றிருக்கிற சாதனை 60.5 சதவிதம் என்பதை இந்த நேரத்தில் இந்த அவைக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதுபோல விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்குவதிலும் தமிழகம் முன்னணியில் இருந்து வருகிறது

"Womb to tomb"

Out of 53.44 lakh pump sets, Tamil Nadu accounts for 9.84 lakh pump sets occupying the first position. Maharashtra comes next with 8.66 lakh pump sets.

என்று சர்வே ஆப் இண்டியன் இண்டஸ்ட்ரீஸ், 1948-லே குறிப்பிட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்த நேரத்திலே தமிழகத்தில் மின்சாரத் துறையில் நிலவி வரும் எவ்வளவோ சங்கடங்களுக்கிடையே இந்த சாதனையை நாம் எட்டியிருக்கிறோம்.

(திரு. செ. செம்மலை) [1985 மார்ச் 11

அதேபோல ஏழை விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என்னும் மிகப் பெரிய திட்டத்தை, விவசாயிகளுக்கு உதவ வேண்டும், தமிழக விவசாயிகள் கஷ்டப்படக் கூடாது, விவசாயிகளுக்கு எந்த ஒரு தொந்திரவும் இருக்கக் கூடாது என்ற அடிப்படையில் இந்த அருமையான திட்டத்தை அறிவித்து செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். அதன் காரணமாக லட்சக்கணக்கான சிறு விவசாயிகள் பயன் அடைந்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு இருக்கிற அரசியல் நிலைமையில், புரட்சித் தலைவர் அவர்களைப் பார்த்துத்தான் அரசியலே நடத்த வேண்டும் என்கிற நிலைமை அண்டை மாநிலங்களிலே உள்ளவர்களுக்கு மட்டும் அல்ல, தமிழ்நாட்டிலே உள்ள அரசியல்வாதிகளும் கூட அந்த நிலைமைக்கே ஆளாக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். புரட்சித் தலைவர் அவர்கள் அரசாங்கம் சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவித்து சில நாட்களிலேயே தேர்தல் வந்துவிட்டது. அந்த தேர்தல் நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே அவர்கள், 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விவசாயிகளுக்கு பம்ப் செட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவோம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இதைச் சுட்டிக் காட்டுவதற்கு காரணம் புரட்சித் தலைவர் அவர்கள் எந்த நிலையை எடுக்கிறார்களோ, புரட்சித் தலைவர் அவர்கள் அரசியலிலே எந்த விதத்தைப் பின்பற்றுகிறார்களோ, அதையே பின்பற்றினால்தான் அரசியலையே நடத்த முடியும் என்ற அளவிற்கு தமிழ்நாட்டு அரசியல் வாதிகள் தள்ளப் பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் மற்ற மாநிலங்கள் எல்லாம் அதை பின்பற்றுகிற நல்ல சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.



1985 மார்ச் 11] (திரு. செ. செம்மலை)

(முற்பகல் 9.20)

நம் நாட்டிலே சிறந்த முறையிலே, சீரிய முறையிலே நடைபெற்று வருகின்ற சத்துணவு திட்டத்தை மற்ற மாநிலங்கள் உற்று நோக்கி, தங்களுடைய மாநிலங்களிலும் இத்திட்டத்தினை நிறைவேற்றலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இதே திட்டத்தினை நம்முடைய தமிழ் நாட்டில் விமரிசனம் செய்த அரசியல் தலைவர்கள் இருக்கிறார்கள். இத்திட்டத்தினை பிச்சைக்கார திட்டம் என்றும், நூறு நாட்களுக்கு கூட இத்திட்டத்தினை நடத்த முடியாது என்றும், இப்படி சோறு போடுகின்ற திட்டத்திற்கு பதிலாக ரூ. 2-ஐ குழந்தையினுடைய தாயிடம் கொடுத்துவிட்டால் போதும் என்று ஆலோசனை சொன்ன தலைவர்கள் இன்று எந்த அளவிற்கு மாறி இருக்கிறார்கள் என்பதை ஒரு உதாரணத்தின் மூலமாக சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையை நாம் படித்து பார்ப்போமானால், அதிலே அந்த திட்டத்தைப் பற்றி சொல்லி யிருக்கிறார்கள். சத்துணவு திட்டத்தை உண்மையான சத்துணவு திட்டமாக நாங்கள் செம்மைப்படுத்த பாடுபடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுவும் எதைக் காட்டுகிறது என்று சொன்னால் சத்துணவு திட்டத்தை சொல்லித்தான் அரசியலிலே நாம் பிழைப்பு நடத்த முடியும் என்ற அளவிற்கு இன்றைக்கு ஒவ்வொரு அரசியல் தலைவரும் இத்தகைய நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையில் ஒரு மிகப் பெரிய திட்டமாக தொழில் கல்வி திட்டத்திற்கு ரூ. 1000 கோடி ஒதுக்கி படிப்படியாக அந்த திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொல்லி யிருக்கிறார்கள். உண்மையிலேயே இது வரவேற்கக்கூடிய ஒரு திட்டம். அது மட்டும் அல்ல. எதிர்கால தமிழகத்திற்கு தேவையான ஒரு திட்டம். இப்படிப்பட்ட ஒரு தொழில் கல்வி முறையை இன்றைக்கு புரட்சித் தலைவர் கண்டுபிடித்து நாட்டிற்கு அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். இதே திட்டம் ஒரு 30 ஆண்டுகளுக்கு முன்னாலேயே, அன்றைய ஆட்சியாளர் களாலே அறிமுகப்படுத்தி இருக்குமானால், இன்றைக்கு நாம்

எல்லாம் பேசிக்கொண்டிருக்கிறோமே வேலையில்லாத் திண்டாட்டம், அது நீக்கப்பட்டிருக்கும். அன்றைக்கு ஆட்சியிலே இருந்தவர்கள் அதைப் பற்றியெல்லாம் சிந்திக்காததினால் இன்றைக்கு நாட்டிலே இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்பதை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஒரு சாதாரண அரசியல்வாதி அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திப்பவன். ஆனால் அரசியல் ஞானி அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திப்பவன் என்று சொல்வார்கள். அதுபோல புரட்சித் தலைவர் அவர்கள் எந்த திட்டமானாலும் சரி, அடுத்த தலைமுறையினர், தலைமுறையினருடைய சந்ததியினர் பயன் பெறக்கூடிய, எதிர்காலத்திலே இந்த தமிழக சமுதாயம் நல்ல முறையிலே இருக்க வேண்டும் என்று பாடுபடுகின்ற ஒரு திட்டமாக இந்த திட்டங்களையெல்லாம் இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், சத்துணவு திட்டத்தையும், தொழிற் கல்வி திட்டத்தையும் இன்றைக்கு புரட்சித் தலைவர் நம்முடைய நாட்டிற்கு வழங்கி சீரிய முறையிலே அவற்றை செயல்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை பெருமையோடு எண்ணிப் பார்க்க கடமைப்பட்டு இருக்கிறோம். இன்றைக்கு இவ்வளவு திட்டங்களை எப்படிப்பட்ட நிலைமையிலேயிருந்து நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் கவனித்தாக வேண்டும்.

புதிய வரிகள் விதிக்கப்படாத ஒரு சூழ்நிலையிலே, விதிக்கப் பட்டிருக்கக் கூடிய வரிகளை நாம் வசூல் செய்ய முடியாத ஒரு சூழ்நிலையிலே, நிதி ஆதாரங்களை நாம் பெருக்க முடியாத ஒரு சூழ்நிலையிலே, சீரிய திட்டங்கள், நல்ல திட்டங்கள் இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருப்பதை பார்க்கிறோம். இந்த நிலையிலே மத்திய அரசினுடைய உதவி குறைந்து கொண்டே வருவதை கண்ணால் பார்க்கிறோம்

ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருப்பதைப் போல, எட்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகள் தமிழ்நாட்டினுடைய கோரிக்கைகளுக்கு நியாயம் வழங்குவதாக நிச்சயமாக இல்லை என்பதை ஒத்துக்கொண்டாக வேண்டும். ஏழாவது நிதிக் கமிஷன் பரிந்துரைப்படி தமிழகத்திற்கு சதவிகித கணக்கு அடிப்படையில்





7.21 சதவிகிதம் கிடைத்திருக்கிறது. எட்டாவது நிதிக் கமிஷன் பரிந்துரைப்படி அது 6.25 சதவிகிதமாக குறைந்திருக்கிறது என்பதை கவனிக்க வேண்டும். ஏழாவது நிதிக் கமிஷன் சிபாரிசு செய்த அளவைவிட எட்டாவது நிதிக் கமிஷனின் அளவு ஒரு சதவிகிதம் குறைந்துள்ளது. எட்டாவது நிதிக் கமிஷன் பின்தங்கிய நிலையில் உள்ள மாநிலங்களை முக்கியமாக கருத்தில் கொண்டு இந்த அணுகு முறையை நிதி ஒதுக்கம் செய்திருக் கிறது. அதனால் தமிழகத்திற்கு பெரிதும் ஏமாற்றம் ஏற்பட் டிருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நம்முடைய நிதி அமைச்சர் சொன்னதை இந்த நேரத்திலே, இந்த மன்றத்திற்கு எடுத்துச் சொல்வது என்னுடைய கடமை என்று நினைக்கிறேன். செம்மையான நிதி நிர்வாகம், மக்கள் தொகை பெருக்க கட்டுப்பாடு, சராசரி தனி நபர் வருமானம், வரி வசூலில் காட்டிய முனைப்பு, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் கணக்கு ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொண்டால் கூடுதல் நிதி கிடைத்திருக்கும். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை தமிழகம் செம்மையாக அமுல் நடத்தி, மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்தியதால், சராசரி வருமானம் உயர்ந்துள்ளது என்பதை காரணமாக காட்டி நிதிக் கமிஷன் சிபாரிசு செய்துள்ளது. இது தமிழகத்திற்கு ஏற்பட்ட பெருத்த ஏமாற்றம்; ஓரளவிற்கு நிதிக் கமிஷனின் சிபாரிசு மூலம் வஞ்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று டாக்டர் நாவலர் அவர்கள் ஒரு பத்திரிகையினுடைய பேட்டியிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நம்முடைய மத்திய அரசைப் பொறுத்தவரையில் இன்று மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குவதில் வைத்திருக்கிற அளவுகோல் சரியானதாகவில்லை என்பதை நாம் பலமுறை எடுத்துச் சொல்லி யிருக்கிறோம். இருந்தாலும் அந்த அளவுகோலை அவர்கள் தொடர்ந்து வைத்துக் கொண்டிருப்பதால் இன்று தமிழகம் குறைந்த ஒரு நிதியைத்தான் பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்கிறபோது வளர்ச்சித் திட்டங்களை நாம் செயல்படுத்துவதற்கு அது போதுமானதாக யில்லை என்பதைத்தான் நாம் இந்த நேரத்தில் உணர முடிகிறது. பிற்படுத்தப்பட்ட மாநிலங்களுக்குத்தான் அதிகத் தொகை

ஒதுக்கப்படும் என்று மத்திய அரசு சொல்லிக் கொண்டிருப்பது ஒரு நோஞ்சான் குழந்தைக்கு மட்டும் தான் ஒரு தாய் அதிகப் பராமரிப்பைத் தருவது என்றால் அது சரியல்ல. அப்படி நோஞ்சான் குழந்தையை தாய் கவனித்து அதன் பராமரிப்பில் அதிகக் கவனம் செலுத்தினால் அந்தக் குழந்தையும் தேறாது, அதே சமயத்தில் திடகாத்திரமாக இருக்கிற இன்னொரு குழந்தையும் நோஞ்சான் குழந்தையாக நோய்வாய்ப்பட்டு அதுவும் பாதிக்கப்படுகிற ஒரு சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுவிடும். எனவே, மத்திய அரசிடம் நம் மாநில அரசு, இந்த அளவுகோலைத் தளர்த்தி நல்ல திட்டங்களை நிறைவேற்றுகிற, நிதிநிலையைச் சரியாக வைத்துக் கொண்டிருக்கிற மாநிலங்களுக்கு, சீரிய முறையில் திட்டங்களை நிறைவேற்றி வரும் மாநிலங்களுக்கு, பயன் உள்ள வகையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற மாநிலங்களுக்கு சிறப்பாக நிதி ஒதுக்க வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும். தேவைப் படுமானால் அதற்காக இந்த மாமன்றத்தின் மூலமாக ஒரு தீர்மானத்தைப் போட்டுக்கூட அனுப்பினால் அது சரியாக இருக்கும் என்று தான் கருதுகிறேன். காரணம், 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஒரு தீர்மானத்தை நாம் இந்தச் சட்ட மன்றத்தில் போட்டு நிறைவேற்றி அனுப்பினோம். அதுதான் கல்பாக்கம் அணு மின் நிலையத்தின் முதல் பிரிவில் உற்பத்தி செய்யப்படுகிற 235 மெகா வாட்ஸ் மின் உற்பத்தி முழுவதும் தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானமாகும். ஆனால் அதற்கு முன்னால் மத்திய அரசின் நிலைமை அந்த மின்சார உற்பத்தி முழுவதையும் உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரம் முழுவதையும் நம் தமிழகத்திற்குக் கொடுக்காமல் மற்ற மாநிலங்களுக்கும் அதைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற அந்த ஒரு நிலையில்தான் அவர்கள் இருந்தார்கள். ஆனால் நம் சட்டமன்றத்தின் மூலம் தீர்மானம் போட்டு அனுப்பிய பிறகு மத்திய அரசு தன்னுடைய நிலையை மாற்றிக் கொண்டு முழு மின்சாரத்தையும், முதல் பிரிவில் உற்பத்தி செய்யப்படுகிற 235 மெகா வாட்ஸ் மின்சாரத்தை நமக்கு வழங்குவதாக அவர்கள் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். உள்ளபடியே அதற்காக மத்திய அரசுக்கு நாம் நன்றி செலுத்தியாக வேண்டும். ஆகவே அப்படிப்





பட்டதொரு தீர்மானத்தை, இன்று நிதி ஒதுக்கப்படுகிற நிலையில், நிதி ஒதுக்கப்பட இப்போது வைத்திருக்கிற அளவு கோலை மாற்றி தமிழ்நாடு போன்ற வளர்ந்து வருகிற மாநிலங்களுக்குத் தக்கபடி அதிக நிதி ஒதுக்கப்படுகிற ஒரு சூழ் நிலை ஏற்படுகிற வகையில் ஒரு தீர்மானத்தை நாம் போட்டு அனுப்பினால் அது பயன் உள்ளதாக இருக்கும் என்று தெரிவித் துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் நமது மின்சார நிலை பற்றி நான் சொல்லியாக வேண்டும். இன்று மின்சார நிலைமையைப் பொறுத்தவரையில் நாம் ஒரு பற்றாக்குறை மாநிலமாக இருந்தாலும் அந்தப் பற்றாக்குறைக்கு நிச்சயமாக இந்த அரசாங்கம் காரணம் அல்ல என்பதை இந்த நேரத்தில் தெளிவாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இன்றைக்கு இந்த அரசாங்கம் மின் உற்பத்தியைப் பெருக்குவதில் காட்டுகிற அக்கறையை, எடுத்து வருகிற முயற்சியை இதற்கு முன் இருந்த அரசாங்கங்கள் செய்திருந்தால் இன்றைக்கு இந்த மின் கட்டுப்பாடு நிச்சயமாக இருந்திருக்காது. இன்று மின்சாரத் துறையில் நாம் மின் உற்பத்தியில் மிகப் பெரிய சாதனையை எட்டியிருக்கலாம். ஆனால் முன்பு இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மின் உற்பத்திக்காக எந்தவிதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் மின் விநியோகம் செய்கிறோம் என்று ஊர் ஊராக கம்பங்கள் நட்டு கம்பிகளை இழுத்தார்களே தவிர மின் உற்பத்திக்கான எந்தவிதமான முயற்சியும் அவர்கள் எடுத்துக்கொள்ளாததன் காரணமாகத்தான் இன்று இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகும் மின் பற்றாக்குறை மாநிலமாக நாம் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை யாராலும் மறந்துவிட முடியாது. புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் இன்று வட சென்னை மின் நிலையத்தில் மூன்று யூனிட்கள் மொத்தம் 650 மெகாவாட்ஸ் மின் உற்பத்தி செய்யும் திட்டமும், தூத்து குடியில் இரண்டாவது அனல் மின் நிலையம், 420 மெகாவாட்ஸ் உற்பத்திக்கான ஒரு திட்டமும் மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கின்றன. அந்த இரண்டு திட்டங்களும் ஏற்றுக்கொள்ளப் படுகிற ஒரு சூழ்நிலை இன்று இருந்துகொண்டிருக்கிறது.

மேலும் மேட்டூர் அனல் மின் நிலையம் 1985-86-ல் உற்பத்தியைத் தொடங்கும் என்ற நல்ல செய்தி வந்திருக்கிறது. அதில் முதல் பிரிவு 420 மெகாவாட்ஸ் உற்பத்தி செய்கிற திறனை பெற்றிருக்கும் என்று சொல்லுகிறார்கள். அதோடு கூடங்குளம் அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரையில் சைட் செலக்ஷன் கமிட்டி ரிப்போர்ட் கிடைத்திருப்பதாக சொல்லப்படுகிறது. அந்தத் திட்டங்கள் எல்லாம் விரைவில் நிறைவேற்றப்படுமேயானால், அவற்றிற்காக மத்திய அரசு அனுமதியை நமக்குக் கொடுக்குமேயானால் நம் மாநிலத்தின் மின்சாரப் பற்றாக்குறை நிலைமை மாறி மின்சாரத்தைப் பொறுத்தவரையில் தன்னிறைவு பெறுகிற ஒரு மாநிலமாக நம் மாநிலம் நிச்சயமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் உறுதியாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் நெய்வேலி இரண்டாவது சுரங்கத்தின் மூலம் 600 மெகா வாட்ஸ் மின் உற்பத்தி கிடைக்கும் என்று சொல்லியிருக்

(முற்பகல் 9-30)

கிறார்கள். அதிலே ஒரு பகுதியை மட்டும் தமிழ்நாட்டிற்கு வழங்குவதாக மத்திய அரசு சொல்லியிருக்கிறது. ஆனால், நான் மத்திய அரசை இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக் கொள்வதெல்லாம், அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற முழு மின்சாரத்தையும் நம்முடைய தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், ஒகேனக்கல் நீர் மின் திட்டம். அந்தத் திட்டம் கானல் நீராகவே தொடர்ந்து இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. அதிலிருந்து 600 மெகாவாட் மின்சாரம் எடுக்கலாம் என்ற நிலைமை இன்றைக்கு இருந்தாலும், அதை ஏனோ மத்திய அரசு ஒத்தி போட்டுக் கொண்டு வருகிறது. அதை ஒரு இன்டர் ஸ்டேட் பிராப்ளமாகக் கருதாமல் மத்திய அரசு அதிலே தலையிட்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றி அந்தத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் மின் உற்பத்தியில் ஒரு பகுதியை தமிழ்நாட்டிற்கு கொடுக்க வேண்டும். அதற்காக மத்திய அரசு இந்தத் திட்டத்தை விரைவிலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் இந்தச்



சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பப் பட்டிருக்கின்ற திட்டங்களையெல்லாம் நடைமுறைக்குக் கொண்டு வந்தால், நிச்சயமாக தமிழகம் மின் உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற மாநிலமாகத் திகழும் என்பதில் ஐயப்பாடு இல்லை. எனவே, மத்திய சர்க்கார் இன்றைக்கு தொழில் வளர்ச்சிக்காக எவ்வளவோ பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், மின் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுத்து தமிழக அரசுக்கு உதவ முன்வர வேண்டும். தமிழக சர்க்காரால் அனுப்பப்பட்டிருக்கின்ற அந்த திட்டங்களுக்கு எல்லாம் விரைவிலே ஒப்புதல் தரவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்வது எனது கடமையாகும் என்று கருதுகிறேன்.

அதேபோல், இராமகுண்டம் திட்டத்திலே இருந்து 130 மெகா வாட் மின்சாரம் கிடைக்க இருக்கின்றது என்று சொல்லுகிறார்கள். அதை விரைவில் பெறுவதற்கு, கிடைப்பதற்கு மத்திய அரசாங்கம் முன்வர வேண்டும். அதேபோல், தொழில் துறையைப் பொறுத்த வரையில் இன்றைக்கு தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி 1979-ல் 12 சதவிகிதம் இருந்தது. இன்றைக்கு அது 13 சதவிகிதம் ஆக எட்டியிருந்தாலும், கடந்த ஆண்டுகளில் தமிழ் நாட்டில் ரூபாய் 1000 கோடி முதலீட்டில் 500 பெரிய, நடுத்தர தொழில் களைத் தொடங்கியிருந்தாலும், இன்றைக்கு மத்திய அரசினுடைய முதலீடுகளைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டிலே அது குறைந்திருக்கிறது என்ற நிலைமைதான் இருந்து வருகிறது. எனவே, மத்திய சர்க்கார் அதிக முதலீட்டை தமிழ்நாட்டிலே போட்டு, பெரிய கனரகத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். நம்முடைய விருப்பத்தை மத்திய சர்க்கார் நிறைவேற்றும் என்ற நம்பிக்கையை நாம் கொண்டிருக்கிறோம்.

ஆளுநர் அவர்கள் உரையிலே 120 கோடி ரூபாய் செலவில் கனரக உலோகக் கலவை உருக்காலைத் தொழிற்சாலை திருச்சியிலே அமைக்க இருக்கிறது என்ற செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக மத்திய சர்க்காருக்கு இந்த நேரத்திலே நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல், பல கனரகத் தொழிற்சாலைகள், தமிழகத்தின் தேவையைக் கருதி,

[திரு. செ. செம்மலை] [1985 மார்ச் 11

தமிழக மக்களின் வேலைவாய்ப்பு நிலைமையைக் கருதி, இங்கே உருவாக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், சேலம் உருக்காலைத் திட்டம். இன்றைக்கு அது உருட்டாலை என்ற நிலைமையில் செயல்பட்டுக் கொண்டிருக் கிறது. எனவே, ஏற்கனவே திட்டமிட்டபடி சேலம் உருக் காலையை ஒரு முழு திறனுள்ள உருக்காலையாக அமைக்க வேண்டுமென்பது சேலம் மாவட்டத்து மக்களின் விருப்பம் மட்டுமல்ல; இந்த தமிழ்நாட்டு மக்களின் விருப்பமுமாகும். எனவே, இப்போது சேலத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற உருட்டாலை திட்டத்தை முழு வடிவமுள்ள உருக்காலையாக மாற்றுவதற்கு மத்திய சர்க்கார் முன்வர வேண்டும். இன்றைக்கு தொழில் அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு அமைச்சரவர்கள் அதிலே அதிக கவனம் செலுத்தி, அதை ஒரு உருக்காலையாகக் கொண்டு வர வேண்டும். அவர்தான் இந்தத் திட்டத்திற்கு அடிகோலியவர். அவர் கையாலேயே இந்தத் திட்டம் முடிக்கப் படுகின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. நம்முடைய தமிழகம் கனிவளம் மிக்க ஒன்றாக இருக்கிறது. எனவே, அதை ஒழுங்காக சர்வே செய்து, கனி வளம் நிறைந்திருக்கின்ற இடங்களைக் கண்டுபிடித்து, அந்த இடங்களில் தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு முன்வர வேண்டும். மத்திய அரசு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு ஏரியல் சர்வே செய்து, எந்தெந்த இடங்களில், எப்படிப்பட்ட கனி வளங்கள் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்து, ஆங்காங்கே தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு, பெரிய தொழிற் சாலைகள், நடுத்தர தொழிற்சாலைகள் அல்லது சிறிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு மத்திய அரசு முன்வர வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய ஆளுநர் அவர்கள் உரையிலே, இலங்கைப் பிரச்னையைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இலங்கைப் பிரச்னையைப் பொறுத்தவரையில், தயவுசெய்து



1985 மார்ச் 11] (திரு. செ. செம்மலை)

அரசியல் லாபம் கருதி, எந்த அரசியல் கட்சியும் அதை அரசியல் ஆக்க வேண்டாம் என்று மெத்த பணிவோடு கேட்டுக்கொள் கிறேன். இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில் நாம் அனைவருமே வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் இன்றைக்கு இலங்கை பிரச்சினைகளுக்காக, இலங்கை —தமிழக மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறவர்கள் அன்றைக்குப் பொறுப்பிலே இருந்த போது இது ஒரு உள்நாட்டுப் பிரச்சினை, அனுதாபம் காட்டுவதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது என்று சொன்னவர்கள் எல்லாம், இன்றைக்கு புரட்சித் தலைவர் ஆட்சியும், மத்திய அரசாங்கமும் இதிலே மெத்தனம் காட்டுகிறது என்று குற்றம் சாட்டிக் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நாம் பொறுப்பில் இருக்கிறோம். பொறுப்போடு பேசிக் கொண்டிருக்கிறோம். பொறுப்பிலே இல்லாதவர்கள், பொறுப்பற்ற தன்மையிலே பேசி வருகிறார்கள். தயவுசெய்து இதை அரசியலாக ஆக்கக் கூடாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. இது ஒரு உள்நாட்டுப் பிரச்சினை மட்டுமல்ல, அங்கே இருக்கிற மக்கள் இங்கே அகதிகளாக வந்து நமக்கு சுமையாக, நமது நாட்டிற்கு பிரச்சினையாக ஆக்கி யிருப்பதால், இது நம்முடைய நாட்டினுடைய உரிமைப் பிரச்சினை என்பதை முதலில் குரல் கொடுத்தவர் நமது புரட்சித் தலைவர் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல அந்த மக்களைப் பார்த்து அனுதாபம் மட்டுமல்ல, அக்கறையும் எங்களுக்கு உண்டு என்று சொல்லி மத்திய அரசினுடைய காதிலே இந்தப் பிரச்சினையைச் சொல்லிய, ஐ நா. மன்றத்திலே குரல் எழுப்பிய பெருமை நமது புரட்சித் தலைவர் அவர்களுக்கு உண்டு என்பதை இந்த அவை மறந்து விடாது. புகைந்துகொண்டு இருக்கின்ற அந்த நெருப்பை அணைப்பதற்கு, நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி, இங்கே வருகை தந்தபோது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய உடல்நிலையைக் கருதாமல் நடுநிசியிலே அவரைச் சந்தித்து, நாட்டுப் பிரச்சினையை, அந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசி, விரிவான நடவடிக்கை எடுத்து, அதற்குத் தீர்வு காண வேண்டுமென்று சொன்னார்கள். அதையும் இந்த நாட்டு மக்கள்

நிச்சயமாக மறந்துவிட மாட்டார்கள். இலங்கைப் பிரச்சினையை பொறுத்தவரையில், அரசியல தீர்வு காண இந்திய அரசு விரும்புகிறது. தீர்வு காண வேண்டுமென்று விரும்புகின்ற அதே நேரத்தில், ஜெயவர்த்தனே அரசு அதை ஒத்திப்போட்டுக் காலம் தாழ்த்திக் கொண்டு போகிறது. எனவே, இதை ஒரு வாய்ப்பாக இலங்கை ராணுவம் பயன்படுத்திக் கொண்டு, தமிழர்களை இன்றைக்குச் சுட்டு வீழ்த்திக் கொண்டிருக்கிறது. எனவே, தமிழர்கள் பகுதியில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்ற அந்த ராணுவ நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அதற்காக இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். அப்படி வற்புறுத்தினால்தான். இலங்கை அரசாங்கம், இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், இந்திய அரசாங்கத்தினுடைய யோசனைகளுக்கு இணங்கும், என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இந்திய அரசு முழு கவனம் செலுத்தி, சரியான முறையில் தீர்வு காண உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால் அதே நேரத்தில், இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், எதிர்க்கட்சிகள் உறுதுணையாகவும், ஆளும் கட்சியாக இருந்தால், நம்முடைய புரட்சித் தலைவர் அரசுக்கும், மத்திய அரசுக்கும் எவ்வளவு உறுதுணையாக இருக்க வேண்டுமோ, அந்த அளவுக்கு உறுதுணையாக நிச்சயமாக இருக்க வேண்டும். அப்போதுதான் நமக்குள்ளே ஒற்றுமையிருக்கிறது என்ற அந்த ஒரு நிலைமையை நாம் உருவாக்க முடியும். எனவே இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், தயவுசெய்து அரசியலாக்காமல், இந்த இரு அரசுகளுடன், மாற்றுக் கட்சிகளும், தலைவர்களும் ஒத்துப்போக வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன் ஒரு பழமொழியைச் சொல்வார்கள். "உழுதுகொண்டிருக்கும் மாட்டை நுகத்தடி இடிப்பதுபோல என்று". எனவே தாங்கிக் கொண்டிருக்கும் அரசு கண்மூடித்தனமாகத் தாக்குவது சரியல்ல. ஆளுங்கட்சியினரைத் தாக்கித்தான்

ஆக வேண்டுமென்றால், கண்மூடித்தனமாகத் தாக்குவது, எதிர்க்கட்சி வரிசையில் உள்ளவர்களுக்கு அழகல்ல. நல்லதல்ல என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன.

ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகள் தாக்கி, ஆளுங்கட்சி தாங்கிக் கொள்வதாக இருக்க வேண்டுமென்று சொன்னாலும், எதற்கெடுத்தாலும், கண்மூடித்தனமாக தாக்குவதைத் தவிர்க்க வேண்டும். வலிமை மிக்க இந்தியாவையும வளமை மிக்க தமிழகத்தையும் உருவாக்க வேண்டிய அரியதோர் பொறுப்பை ஆளுகின்ற கட்சியாகிய ஆளும் கட்சியின் தோளில் சுமத்தியிருக்கிறது, என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். எனவே இன்றைக்கு மிகப் பெரிய பொறுப்பு ஆளுகின்ற பொறுப்பிலே இருக்கின்ற கட்சிக்கு இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட பொறுப்பை சுமந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் எதிர்கட்சிகள் முடிந்தால் எங்களுக்கு நீங்கள் சுமைதாங்கியாக இருந்து தாங்குங்கள், அப்படி சுமைதாங்கியாக தாங்க முடியவில்லை என்று சொன்னாலும், தயவுசெய்து மேலும் சுமையாக இருந்துவிடக்கூடாது என்று நல்லெண்ணத்தோடு நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். புதிய உறுப்பினர்கள் பலர் வந்திருக்கிறார்கள். ஆகையால் இந்தக் கருத்தை நான் சொல்கிறேன். ஆளுகின்ற கட்சிக்கு எதிர்க்கட்சிகள் எதிராக செய்கின்ற ஒவ்வொரு காரியமும், இந்த ஆட்சிக்கு மட்டும் செய்யும் துரோகமாக இது அமையாது, ஒட்டு மொத்தமாக தமிழக மக்களுக்குச் செய்கிற துரோகமாக இது

(முற்பகல் 9.40)

அமைந்துவிடும். எனவே, இந்த மன்றத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிற நாம் ஒட்டுமொத்தமாக தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு இணைந்து செயல்பட வேண்டும். எதிர்க்கட்சியிலே அங்கம் வகிக்கிற தலைவர் ஆகட்டும், உறுப்பினர்கள் ஆகட்டும் நல்ல பல ஆலோசனைகளைச் சொல்லுகிற இடமாக இதை அமைத்துக்கொள்ள வேண்டுமே தவிர ஆத்திரத்தைக் கொட்டுகிற இடமாக இதை அமைத்துவிடக் கூடாது என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ. செம்மலை] [1985 மார்ச் 11

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆளுகின்ற இந்தக் காலம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழக மக்களைப் பொறுத்தவரையில் ஒரு பொற்காலமாகும். இந்த நாட்டுக்கு இனி தேய்பிறை கிடையாது என்ற நிலைமை நிச்சயமாக இருக்கும். கவிஞர்கள் சொல்லுவார்கள். நிலவுக்கு தேய்வு உண்டு நிலவும் ஒரு நாள் மறையும் என்று. ஆனால் சந்திரன் என்ற சொல்லை தம்முடைய பெயரிலே கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கின்ற வரை அவர்கள் இந்த நாட்டை ஆளுகின்ற பொறுப்பிலே இருக்கின்றவரை இந்த நாட்டுக்கு தேய்பிறை இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டு மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கை வேண்டும். அந்த நிம்மதியை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இன்றைக்கு அளித்துக் கொண்டிருக்கிறது. அரசு ஊழியர்களுக்கு ஆகட்டும், குறிப்பாக காவலர்களுக்கு ஆகட்டும் இன்றைக்கு வாரி வழங்கும் வள்ளலாக நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள். சமுதாயத்தின் எந்த பிரிவினராக இருந்தாலும் சரி அரசு அலுவலர்களாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த தரப்பினராக இருந்தாலும் சரி, திட்டங்களின் பலன்கள் அவர்களுக்கு எல்லாம் போய் சேரக் கூடிய வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் திட்டங்களை தீட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு குழந்தை தாயை எட்டி உதைத்தாலும் அப்படி உதைத்த காலை முத்தமிடுகிற தாயைப்போல அரசு ஊழியர்கள் குறிப்பாக காவலர்கள் எவ்வளவுதான் இந்த அரசுக்கு எதிராக தேர்தல் நேரத்தில் எவ்வளவோ தொந்தரவுகளைக் கொடுத்தாலும் வள்ளல் தன்மை வாய்ந்த நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இதயம் அவர்களுக்கும் வாரி வழங்கி ஆளுநர் உரையிலே பல சலுகைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன என்பதை நாம் பெருமையோடு எண்ணிப் பார்ப்பது மட்டும் அல்ல, அந்த பலனை அனுபவிக்கின்ற அரசு ஊழியர்கள் குறிப்பாக காவலர்கள்—குறிப்பிட்ட ஒரு குறளை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு".



1985 மார்ச் 11] [திரு. செ. செம்மலை]

இந்த அரசுக்கு விஸ்வாசமாக நடந்துகொள்ள வேண்டியது அவர்களுடைய கடமை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படி அவர்கள் இந்த ஆட்சிக்கு விஸ்வாசமாக செயல்படுவது இந்த நாட்டுக்காக நல்ல பல வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்காகத் தான் என்பதை அவர்கள் உணர்ந்து பார்க்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். " Womb to tomb என்று சொல்வார்கள். அதைப்போல கருவறையிலிருந்து கல்லறை வரை தனி மனிதன் ஆகட்டும் சமுதாயம் ஆகட்டும் தனி மனிதனுடைய வசதி வாய்ப்புகளையும் சமுதாயத்தினுடைய வசதி வாய்ப்புகளையும் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு அளித்து வருகிறது. இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகின்ற இந்த நல்ல ஆட்சியைப் பொறுத்தவரையில் மக்கள் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் தேர்தல் முடிவு நமக்குக் காட்டிக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக ஆளுநர் உரையைப் பொறுத்தவரையில் வளரும் தமிழகத்திற்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கக்கூடிய திட்டங்களை உள்ளடக்கிய ஒரு கருத்து கருவூலமாக அமைந்து இருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். சில தலைவர்கள் ஆளுநர் உரையைப் பற்றி கருத்துச் சொன்ன நேரத்திலே இந்த உரையில் சில கருத்துகளை விட்டிருக்கிறார்கள் என்று எல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். எல்லா கருத்துக்களையும் அல்லது எல்லா திட்டங்களையும் ஆளுநர் உரையில் சொல்லிவிட முடியாது. சினிமா பாட்டுப் புத்தகத்தில் கதையை சுருக்கமாக தந்துவிட்டு மீதியை வெண்திரையில் காண்க என்று போட்டிருப்பார்கள். அதைப்போல புரட்சித் தலைவர் அரசாங்கத்தினுடைய திட்டங்களில் சுருக்கத்தைத்தான் நாம் இந்த ஆளுநர் உரையிலே காண்கிறோம். எனவே மீதி திட்டங்களை விரிவாகவும் விளக்கமாகவும் நம்முடைய நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையிலே பார்த்துக்கொள்ளலாம் ஆளுநர் இந்த அவைக்கு அளித்த உரையிலே தெரிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள் பல

1985 மார்ச் 11] [திரு. செ. செம்மலை]

நிறைவை அளிப்பதாகவும், தமிழகத்திற்கு தமிழக மக்களுக்கு ஒரு விடிவெள்ளி தெரிவதைப் போல ஒரு நிலைமையை ஏற்படுத்துவதாகவும் அமைந்து இருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திட்டங்களினுடைய பலன்கள் நாட்டு மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்று சொன்னால் அதற்காக நாம் உழைத்தாக வேண்டும். அதற்கு எதிர்க்கட்சி இந்த ஆட்சிக்கு ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வேண்டுகோளை விடுக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசைப் பொறுத்த வரையில் எவ்வளவோ பெரிய சிறிய திட்டங்களைக் கொடுத்து அந்தத் திட்டங்களை நிறைவேற்றுகிற பணியில் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மீண்டும் இந்தப் பொறுப்பை ஏற்று தமிழகத்திற்கு வழிகாட்டுகிற ஒப்பற்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பது மீண்டும் முதல்வராக இருப்பது தமிழகத்திற்கு எல்லாப் பெருமையையும் கொடுத்து நமக்கு மிகுந்த பூரிப்பையும் மகிழ்ச்சியையும் அளித்து இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல நல்ல பல திட்டங்களை உள்ளடக்கிய இந்த ஆளுநர் உரையை வரவேற்று இந்த உரைக்கு நன்றி சொல்லுகிற தீர்மானத்தை முன்மொழிந்து இந்த அளவோடு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. ஆர். செங்கசாமி: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மேன்மைதங்கிய ஆளுநர் உரையின்மீது நான் சார்ந்துள்ள இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மேன்மைதங்கிய ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையிலே மதிப்பிற்குரிய திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கொடுமையான மரணம் அடைந்தது பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய முன்னாள் பிரதமரான திருமதி இந்திரா காந்தி அவர்கள் இந்த நாட்டின் பிரதமராக 15 ஆண்டுகளுக்கு மேலாக சிறந்த சேவை செய்திருக்கிறார்கள். உலக சமாதானத்திற்காக பாடுபட்டு உள்ளார்கள். இந்தியாவிலே



1985 மார்ச் 11] [திரு. ஆர். செங்கசாமி]

ஜனநாயகத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறார்கள். அவருடைய மறைவு நமக்கு பேரிழப்பாகும். இப்போது திரு. ராஜீவ் காந்தி அவர்கள் நம்முடைய நாட்டை ஆண்டு கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் நாட்டு மக்களுடைய நல்வாழ்வுக்காக பாடுபடுவார்கள் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடல்நலம் பெற்று இங்கே வந்திருக்கிறார்கள். அது நல்ல செய்தி. அவர்கள் உடல் நலம் பெற்று நல்ல மாதிரியாக இருந்து சேவை செய்ய ஆரம்பித்து இருக்கிறார்கள். இது மிகக மகிழ்ச்சியாக இருக்கிறது.

ஆளுநர் அவர்களது உரையிலே உப்பும் இல்லை காரமும் இல்லை சப்பென்று தான் இருக்கிறது, என்றாலும் கூட ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்கும், தாழ்த்தப்பட்டோரின் துயரங்களைத் துடைப்பதற்கும், வறுமையையும் வேலையின்மையையும் நீக்குவதற்கும் இந்த அரசு எடுத்துக்கொண்ட உறுதி மொழியைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்கு பாடுபடும் என்று கூறி இருப்பது வரவேற்கக்கூடிய அம்சமாகும். ஆனால் மேற்கொண்ட முயற்சியை அமல் நடத்துவதற்கு உருப்படியான திட்டங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. குறிப்பாக முதல்வர் அவர்கள் தெரிவித்த வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு திட்டம் என்ற நடைமுறை செயல்படுத்தப்படவில்லை. அதே மாதிரி வறுமையை ஒழிக்கும் திட்டம், வேலையில்லாத் தன்மையை போக்கும் திட்டம் எதுவும் இல்லை. நம்முடைய மக்கள் திரு. ராஜீவ் காந்தி அவர்கள்மீதும் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் மீதும் நம்பிக்கை கொண்டு வோட்டு போட்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கைக்கு பாத்திரமாக நாம் நடந்து கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழும் நிலம் இல்லாத ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழும் ரூபாய் 44.50 கோடி செலவிடப்பட்டிருக்கிறது, என்று ஆளுநர் அவர்கள் தமது

[திரு. ஆர். ரெங்கசாமி] [1985 மார்ச் 11]

உரையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். இது வரவேற்கக்கூடிய அம்சமாகும். ஆனால் அந்த பணம் எந்த அளவுக்கு பயன்படுத்தப் பட்டுள்ளது என்பது அரசு ஆய்வு செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் உண்மையான நிலைமை தெரியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல திட்டங்களின் மூலமாக சாலைகளை போடுகிறோம், பள்ளிக்கூடங்களை அமைக்கிறோம், கிணறுகளை தோண்டு கிறோம், அதன் மூலமாக கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தாலும் அது தற்காலிகமானதுதான். நிரந்தரமாக வேலைவாய்ப்பு கிடைக்கக் கூடிய முறையில் திட்டங்களைப் போட வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். முந்தைய ஆண்டைக் காட்டிலும் சென்ற ஆண்டு மின்சார உற்பத்தியும், மின்சார விநியோகமும் அதிகமாகி உள்ளது என்று ஆளுநர் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அது நல்ல விஷயம்தான். ஆனால் சென்ற 10, 15 ஆண்டு காலமாக மின்சாரம் பற்றாக்குறை மின்சாரப் பஞ்சம், மின்சார வெட்டு, என்ற நிலைமை தான் தொடர்ந்து இருந்து வருகிறது எனவே. இதை நாம் தெரிந்து கொண்டு இதற்கு நிரந்தரமான ஒரு தீர்வைக் காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு நிரந்தரமான தீர்வு காண்பது தான் நன்மை பயக்கும். இதிலே அரசாங்கம் போதிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9.30)

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் விவசாயி களுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் சப்ளை செய்யப்படும் என்று தெரிவித்தார்கள். ஆனால் கோவில்பட்டி பகுதியில் ஒரு நாளைக்கு மூன்று மணி நேரம்தான் பவர் வருகிறது. அதுவும் இரவில்தான் வருகிறது. இப்பொழுது அதுவும்கூடக் கிடைக்க வில்லை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூறியபடி விவசாயிகளுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



[1985 மார்ச் 11] [திரு. செ. செம்மலை]

அடுத்தபடியாக, நமது தமிழகத்தைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்தியபோது தமிழ்நாடு தொழில் துறையில் மூன்றாவது இடத்தை வகித்தது. ஆனால் இப் பொழுது அது எங்கே இருக்கிறது என்றே தெரியவில்லை. அந்த அளவிற்கு நாம் தொழில் துறையிலே போதிய முன்னேற்றம் காணவில்லை. எனக்குத் தெரிந்த வரையில் தமிழ்நாட்டிலுள்ள முதலாளிகள் அண்டை மாநிலங்களான கர்நாடகத்திற்குப் போகிறார்கள், ஆந்திராவிற்குப் போகிறார்கள், இன்னும் சொல் லப்போனால் மத்தியப் பிரதேசம், பஞ்சாப் போன்ற மாநிலங் களுக்கெல்லாம் போகிறார்கள். அவர்கள் கொடுக்கின்ற அள விற்கு இன்றைக்கு நம்முடைய தமிழக அரசு தொழில் துறையில் உற்சாகம் கொடுக்க முன்வரவில்லை. ஆகவே, நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம், மகாராஷ்டிரம், குஜராத் போன்ற மாநிலங்களிலுள்ள அரசுகள் மாதிரி தமிழக அரசும் முதலாளி களுக்குப் போதிய ஆர்வமும் ஆக்கமும் கொடுத்து தொழிற்சாலை களைத் துவங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன். மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு. இராசாராம் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் நல்ல அனுபவம் பெற்ற வர்கள். எனவே, அவர்கள் இந்தக் குறையைப் போக்கி, தமிழ் நாட்டில் தொழில் வளம் பெருகுவதற்கு வழிவகை செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டிலே கோவில்பட்டி பகுதி மிகவும் பின் தங்கிய பகுதியாகும். ஆனால் அரசாங்கம் அதை முன்னேறிய பகுதியாக அறிவித்திருக்கிறது. இது எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. இதுபோன்ற பேக்வேர்ட் ஏரியாவை டெவலப்ட் ஏரியா என்று அறிவித்திருப்பதால், மேனேஜ்மெண்டார் அங்கே தொழிற்சாலைகளைத் துவக்கு வதற்கு யோசிக்கிறார்கள். ஆகவே, நம்முடைய அரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், கோவில்பட்டி பகுதியை பின் தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டும், அப்பொழுதுதான் தொழில் துறையில் நன்கு முன்னேற்றம் அடைவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஆர். வெங்கசாமி] [1985 மார்ச் 11

அமெரிக்கா போன்ற நாடுகளிலேயெல்லாம் பர் கேப்பிட்டா இன்கம் ( Per capita income ) அதிகமாக இருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், அங்கெல்லாம் எல்லோரும் வேலை பார்க்கிறார்கள், அதனால் வருமானம் அதிகமாக இருக்கிறது; எனவே வறுமை கிடையாது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவைப் பொறுத்தவரையில் per capita income ) பர் கேப்பிட்டா இன்கம் குறைவாக இருக்கிறது. அதற்குக் காரணம் இங்கே வேலை கிடைப்பது என்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. அப்படியே ஒரு ஆளுக்கு வேலை கிடைத்தாலும் அதை வைத்துக் கொண்டு ஒன்பது பேர் சாப்பிடுகிறார்கள். ஆகவே இங்கே வறுமை இருக்கிறது. இதையெல்லாம் மனத்திற்கொண்டுதான் தொழிற்சாலைகளைப் பெருக்க வேண்டும். தொழில் துறையை வளர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமான அம்சமாகிய நிர்பாசனத்தைப் பொறுத்தவரையில் ஆளுநர் உரையில் ஒரு வார்த்தைக்கூடக் கிடையாது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் எத்தனையோ நிலப் பகுதிகளுக்குப் பாசனம் கிடையாது. எனவே, அதற்கான திட்டங்களை அரசாங்கம் வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோவில்பட்டி பகுதி மானம் பார்த்த பூமியாக இருக்கிறது. அங்கே தண்ணீரே கிடைக்காது. அதுபோலவே சங்கரன் கோவில் பகுதியிலும் இருக்கிறது. இராமநாதபுரம் ஜில்லாவிலேயும் அப்படித்தான் இருக்கிறது. அண்டை மாநிலமான கேரளத்தில் சீரியாறு என்ற ஒரு ஆறு ஓடுகின்றது. அந்த நீரைத் தமிழகத்திற்குத் திருப்பினால், அதன் மூலம் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்கும். காமராஜ் மாவட்டம், சங்கரன்கோவில் பகுதி, கோவில்பட்டி பகுதி ஆகிய இடங்களில் பாசனம் செய்ய முடியும். இது ரொம்ப காலமாக இருக்கிறது. ஆனால் இதைக் கவனிக்கவில்லை. ஆகவே, மீண்டும் கேட்க விரும்புகிறேன், சீரியாற்றுத் திட்டத்தை அரசாங்கம் பரிசீலனை செய்து பாசனத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

நம்முடைய ஆளுநர் உரையில், கிராம மக்களுக்கு உள்ள குடிநீர்ப் பிரச்னையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய அரசு இதில் எடுத்துக்கொண்டிருக்கின்ற முயற்சியை நான் பெரிதும் பாராட்டுகிறேன். என்றாலும்கூட, கோவில்பட்டி போன்ற, பகுதிகளைப் பற்றி ஒன்றைக் கூற விரும்புகிறேன். அங்கே எங்கு பார்த்தாலும் தண்ணீர் கிடையாது. அங்குள்ள மககளைக் கேட்டால் குடிதண்ணீருக்காக இரண்டு மூன்று மைல் தூரம் நடந்து செல்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்த அளவிற்கு குடிதண்ணீர்ப் பிரச்னை அங்கே இருக்கிறது. கோவில்பட்டி பகுதியில் கிணறு தோண்டினால் தண்ணீர் இருக்காது. அப்படியே இருந்தாலும் உப்பு நீராக மாறிப் போகிறது. எனவே, கிணறு தோண்டுவதன் மூலம் அங்கே உள்ள மக்களுக்குக் குடிதண்ணீர் கொடுக்க முடியாது. ஆகவே சீவலப்பேரி தண்ணீர் திட்டத்தின் மூலம் கோவில்பட்டி, எட்டையாபுரம் நகரங்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் சப்ளை செய்வது மாதிரி கோவில்பட்டி பகுதி கிராம மக்களுக்கு சீவலப்பேரியிலிருந்து குழாய்கள் மூலம் குடிதண்ணீரை சப்ளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சீவலப்பேரியில் தண்ணீர் நிறைய இருப்பதால் மற்றொரு பம்பிங் ஸ்டேஷன் போட்டு கிராமங்களுக்கு சப்ளை செய்யலாம்.

முதியோர் ஓய்வூதியத் திட்டத்தை நம்முடைய அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது. ஆனால் இன்றைக்கு மனுப்போட்டால் கிடைப்பதற்கு இரண்டாண்டுகள், மூன்றாண்டுகள் ஆகின்றன. அவர்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அதை மாற்றி மனுப் போட்டவுடனே அதாவது மூன்று மாதத்திற்குள்ளாகக் கொடுத்தால் அது அவர்களுக்கு உபயோகப்படுகின்ற வகையில் இருக்கும்.

இன்றைக்குப் பயிர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நெற்பயிர், பருத்தி போன்றவற்றிற்கு மட்டும் பாதுகாப்புக் கொடுத்திருக்கிறார்கள். அப்படியில்லாமல் எல்லா பயிர்களுக்கும் அதாவது கரும்பு, நவதானியங்கள், உளுந்து, பருப்பு போன்ற எல்லா பயிர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அப்போதுதான் உணவு உற்பத்தி பெருகும்.

[திரு. ஆர். ரெங்கசாமி] [1935 மார்ச் 11

அடுத்து, கிராமத்தில் உள்ள உழவர்களுக்கும், கிராமத் தொழிலாளர்களுக்கும் என்று ஒரு காப்பீட்டுத் திட்டம் அமைத்திருக்கிறார்கள். ஆனால் அந்தத் திட்டத்தின் பலன் ஒரு சிலருக்குத்தான் பொருந்தும் என்ற வகையில் இருக்கின்றது. அப்படிப்பட்ட நிலைமையை மாற்றி கிராமங்களில் உள்ள விவசாயிகள், கைவினைஞர்கள், கிராமத் தொழிலாளர்கள் போன்ற பலருக்கும் அதன் பலன் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய தமிழ்நாட்டில் எந்தத் திட்டத்தையும் நன்கு செயல்படுத்துவதற்கு அரசாங்க யந்திரமும், அரசாங்கத் தொழிலாளர்களும் ஒன்றாகச் செயல்படவேண்டும். அரசாங்க ஊழியர்களுக்கென்று நான்காவது ஊதியக் குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. அதை வரவேற்கிறோம். ஆனால் மத்திய அரசாங்கத்தில் உள்ள ஊழியர்களுக்கு என்ன ஊதியம் வழங்கப்படுகின்றதோ அதே ஊதியத்தை இவர்களுக்கும் தந்தால்தான் நல்லது.

"There is only one Government and are all part and parcel of that Government."

அந்த வகையில் மத்திய அரசில் உள்ளவர்களுக்கு என்ன ஊதியம், என்ன பஞ்சப்படி வழங்கப்படுகின்றதோ அதேமாதிரி ஊதியம் மாநில அரசு ஊழியர்கள், முனிசிபாலிட்டி, நகராட்சி, பஞ்சாயத்து யூனியன் போன்றவற்றில் பணிபுரியும் ஊழியர்கள் ஆகியோருக்கும் கொடுக்கப்படவேண்டும். அந்த வகையில் ஒரேமாதிரியான சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழிற்சங்கத்தின் தலைவன் என்ற முறையில் ஐ.என்.டி.யு.சி. தலைவன் என்ற முறையில் ஒன்றைக் கூற விரும்புகிறேன். இந்த ஆளுநர் உரையில் தொழிலாளர்கள் பற்றியோ, தொழிலாளர் நலன் பற்றியோ எதுவும் குறிப்பிடப் படவில்லை. நாம் எல்லாம் சொல்கிறோம்; இந்த முதலமைச்சரின் ஆட்சி தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டது என்றெல்லாம் பிரச்சாரம் பண்ணுகிறோம். அப்படியிருந்தும் ஆளுநர் உரையில் அதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் இப்போது புதிய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள்



1985 மார்ச் 11] [திரு. ஆர். ரெங்கசாமி]

வந்திருக்கிறார்கள். எனவே தொழிலாளர் நலன் பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடப்படவில்லை என்றாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டு செயலாற்றுவார்கள் என்று நான் கருதுகிறேன். இப்போது பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் திறந்து நல்ல முறையில் இயங்கச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மொத்தத்தில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நம்முடைய நண்பர் அவர்கள் சொன்னது மாதிரி நாங்கள் எதிர்க்கட்சி என்பதற்காக எதிர்க்கப் போவதில்லை. அரசாங்கம் நல்லது செய்தால் ஆதரிப்போம். தப்பு பண்ணினால் அதைச் சுட்டிக்காட்டித் திருத்துவோம் என்று கூறிக் கொள்கிறேன். அந்த அளவில் எங்களுடைய கட்சி ஆளும் கட்சிக்கு எல்லாவிதத்திலும் ஒத்துழைப்பு கொடுக்கும் என்று சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்,

* **திரு. கி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநருடைய உரைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை ஆதரித்துப் பேசுவதற்கு முன்பு தமிழ்ச் சந்ததி வாழ்வதற்காகத் தன்னைத் தந்து சரித்திர நாயகனாகி வங்கக் கடலோரம் நீங்காத் துயில் கொண்டிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு அஞ்சலியைச் செலுத்திவிட்டு, தமிழ்ச் சமுதாயத்தின் தளநாயகனாக சத்துணவு தந்து சரித்திர நாயகனாகத் தமிழகத்திலே வாழ்கின்ற, ஏழை எளியவர்களின் இதய சிம்மாசனத்திலே வீற்றிருக்கின்ற, முப்பிறவி கண்டு, மூன்றாம் முறையாகத் தமிழகத்தின் முதல்வர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கின்ற, எங்களை எல்லாம் வழிநடத்திச் செல்லும் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னை அதிகமான வாக்கு வித்தியாசத்திலே வெற்றி பெறச் செய்த நாட்றம்பள்ளி வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையைத் துவங்குகிறேன்.

[திரு. கி. அன்பழகன்] [1985 மார்ச் 11

(முற்பகல் 10.00)

நடந்து முடிந்த தமிழகச் சட்டமன்றத் தேர்தல்களில் தெளிவான, திட்டவட்டமான முறையில் நல்ல தீர்ப்பினைத் தமிழக மக்கள் வழங்கி இருக்கிறார்கள். அண்ணாவின் கொள்கைகளை, இலட்சியங்களை நிறைவேற்றுகின்ற அரசு புரட்சித் தலைவருடைய அரசு என்பதை உணர்ந்த காரணத்தால் மீண்டும் ஆட்சிப் பீடத்திலே அமர்த்தி இருக்கிறார்கள். 7 ஆண்டுக் கால ஆட்சியின் சாதனைகளையும் தமிழகத்து முதல்வராக மீண்டும் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். தான் வர வேண்டுமென்ற கோரிக்கையையும் ஏற்றுக் கொண்டு புரட்சித் தலைவர் அவர்கள் மருத்துவ மனையிலே இருந்தாலும், தமிழகத்து முதல்வராகப் புரட்சித் தலைவர் வரவேண்டுமென்பதிலே எந்தவித சந்தேகத்திற்கும் இடமின்றி, எங்களுக்கு வாக்கு அளித்து, இன்றைக்கு ஆட்சிப்பீடத்திலே எங்களை அமர்த்தி இருக்கிறார்கள். புரட்சித் தலைவருக்கு உணர்வில்லை, உயிரில்லை என்றெல்லாம் சொல்லி மாற்று முகாமிலே இருப்பவர்கள் வாக்காளர்களைச் சந்தித்தார்கள். புரட்சித் தலைவர் ஆட்சிப் பீடத்திலே ஏறினால், செம்மையாக ஆட்சியை நடத்த முடியாது, ஆட்சியை நடத்த எங்களுக்குத் தான் தனித் திறமை இருக்கிறது என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் மக்கள் அதை நம்பவில்லை. முகிலைக் கிழித்துக் கொண்டு வரும் முழுநிலவைப் போல 3 மாத இடைவெளிக்குப் பிறகு தாயகம் திரும்பினார் புரட்சித் தலைவர் அவர்கள். தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும். ஆனால் இறுதியிலே தர்மமே வெல்லும் என்பதற்கொப்ப இயற்கை சக்தியும், மருத்துவத்தின் சக்தியும் ஒன்று சேர்ந்த காரணத்தால் புரட்சித் தலைவர் மீண்டும் உடல்நலம் பெற்று தமிழகம் திரும்பியிருக்கிறார். எங்கள் தலைவர் உயிரை மீட்டுக் தருவதற்கு அல்லும் பகலும் கடுமையாக உழைத்த அனைத்து மருத்துவர்களுக்கும் அன்னை இந்திராவுக்கும் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1985 மார்ச் 11] [திரு. கி. அன்பழகன்]

மேதகு ஆளுநர் உரையில் இந்த அரசு திட்டங்களும் செயல்பாடுகளும் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற ஏழை எளிய மக்களின் வாழ்வை உயர்த்த வழியும், தமிழகத்தை வளம் கொழிக்கச் செய்யும் திட்டங்களும், தமிழக மக்கள் உள்ளத்திலும் இல்லத்திலும் ஒளி வீசச் செய்ய பல நல்ல அரிய திட்டங்களும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆளுநர் அவர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிற பல பிரச்சினைகள், இன்றைக்குத் தமிழக மக்கள் மிகக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிற பிரச்னைகளாக இருந்து கொண்டிருக்கின்றன என்பதை யாரும் மறந்துவிட முடியாது. 'எட்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகள், உண்மையில் தமிழ்நாட்டின் நிதிக் கோரிக்கைகளுக்கு முழு நியாயம் வழங்கவில்லை' என ஆளுநர் தமது உரையிலே குறிப்பிட்டிருப்பது மிக முக்கியமான அம்சமாகும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்ற நியாயமான கோரிக்கை எழுந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில் மத்திய அரசு இதிலே தனிக் கவனம் செலுத்தியாக வேண்டும்.

வளர்ந்து வருகிற சமுதாய மாற்றங்களுக்கு ஏற்ப, மாநில அரசின் சமுதாய நல திட்டங்களுக்கு ஏற்படுகின்ற செலவைப் பார்க்கும்போது, எப்படிப்பட்ட சூழ்நிலையிலே மாநில அரசுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டு விடுகிறது என்பது நன்கு தெரிகிறது. சமுதாய நல திட்டங்களை மாநில அரசு நிறைவேற்றும்போது, மத்திய அரசு அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். மாநில அரசு பல நல்ல திட்டங்களை மேற்கொள்ளும்போது மத்திய அரசு உதவுமானால் அந்தத் திட்டங்களைச் சீரோடும் சிறப்போடும் செய்வதற்கு அந்த உதவி உறுதுணையாக அமையும். உதாரணமாக மற்ற மாநில அரசுகள் எல்லாம் செய்ய முடியாத பல காரியங்களைப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு துணிந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. சத்துணவுத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு உறுதுணை புரிய வேண்டும். இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கு மத்திய அரசு உதவி அளிக்க வேண்டும். நிதி உதவியினைத் தாராளமாக அளிக்க வேண்டும்.

[திரு. கி. அன்பழகன்] [1985 மார்ச் 11

அதே நேரத்தில் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தை மற்ற மாநிலங்களைவிட நல்ல முறையில் செயல்படுத்துவது தமிழக அரசாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை இந்த அரசு சிறப்பாகச் செய்ததன் காரணமாக, மக்கள் தொகை வளர்ச்சி தமிழகத்திலே குறைகிறது. நபர்வாரி வருமானம் அதிகமுள்ள மாநிலங்கள் குறைந்த மத்திய நிதி உதவியைப் பெறுகின்ற நிலைமையை மாற்றி அமைக்க மத்திய அரசு உதவ வேண்டும். குடும்ப நலத் திட்டம் ஒரு நல்ல திட்டம்; அதனை அமுல் செய்கின்ற மாநிலத்திற்கு வருகின்ற நிதியைத் தட்டிப் பறிக்கின்ற நிலைமையிலே மத்திய அரசு இருக்கக் கூடாது என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எனவே, மத்திய அரசு தமிழகத்திற்கு உரிய நிதியைத் தந்து, நியாயத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கையிலே தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப் பட்டிருக்கிற பயங்கர வன்முறைச் சம்பவங்கள் நம்மையெல்லாம் கண்ணீர் விடச் செய்கின்றன. அங்கே நடக்கின்ற அக்கிரமச் செயல்களுக்குத் தமிழக அரசு கடுமையான விமர்சனத்தைச் செய்து, கண்டனம் கொடுத்து மத்திய அரசுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசும் சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தாலும் இந்தியப் பேரரசு தீவிர நடவடிக்கைகளை எடுக்கிற சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அனைத்துப் பிரச்னைகளுக்கும் தீர்வு காண தாமதம் ஏற்பட்டாலும் தமிழர்கள் வாழும் பகுதியிலே இருக்கிற சிங்கள இராணுவத்தை உடனடியாகத் திரும்பப் பெறவும் தமிழர்கள் வசிக்கின்ற பகுதிகளில் சிங்களர்களை குடியமர்த்த இலங்கை அரசு செய்யும் முயற்சியைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மின் துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்குத் தமிழகம் சோதனையான கால கட்டத்திலே இருந்து வருகிறது. நமது அரசு திட்டச் செலவிலே அதிகமான தொகையை மின் திட்டங்களுக்காகச் செலவழித்தாலும், வளர்ந்து வருகிற நிலைமைகளுக்கு ஏற்ப மின்சக்தி தேவை அதிகமாக இருக்கிற



1985 மார்ச் 11] [திரு. கி. அன்பழகன்]

காரணத்தாலும், மின் சக்தி பயன்பாட்டு அளவு அதிகமாக இருக்கிற காரணத்தாலும் இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நிலைமை ஏற்பட்டு வருகிறது.

தமிழக அரசு குடிசைக்கு இலவச மின்வசதி, விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கும் வசதி போன்ற சலுகைகளை ஏற்படுத்தித் தந்ததின் காரணமாக இன்றைக்கு இந்த அரசு நல்ல பல சமுதாயப் பணிகளைச் செய்துகொண்டிருக்கிறது. அதேநேரத்தில் மின்சாரத் துறைக்கு இதனால் ஒரு இக்கட்டான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையை சீர்செய்ய மத்திய அரசு நிதி உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்பாக்கம் மின் திட்டத்தில் கிடைக்கிற மின்சாரம் முழுவதையும் தமிழகத்திற்குத் தர மத்திய அரசு வாக்குறுதி அளித்திருந்தாலும் உடனடியாக அதைச் செயல்படுத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போன்று ஆந்திர மாநிலத்தில் இராமகுண்டம் திட்டத்திலிருந்து கிடைக்கிற மின்சாரத்தையும் தமிழகத்திற்கு வழங்க மத்திய அரசு முன்வர வேண்டும்; மின்சாரப் பற்றாக்குறை இருக்கிற மாநிலங்களுக்கு புதிய மின் திட்டங்களில் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசின் அனுமதியை எதிர் பார்த்து, தமிழகத்திலிருந்து மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிற புதிய திட்டங்களுக்கு உடனடியாக அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில், மத்திய அரசு மாநில அரசுக்கு அதிக அளவில் சலுகையும் உதவியும் அளிக்க வேண்டும்; மத்திய அரசின் முதலீடு அதிகரிக்க வேண்டும். 1967-க்குப் பிறகு தமிழகத்திலே மத்திய அரசின் முதலீடுகள் மிகக் குறைந்த அளவில்தான் இருக்கிறது என்பது மற்ற மாநிலங்க ளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தெரிகிறது. இந்த நிலைமையை மாற்றி, தமிழ்நாட்டில் தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்பட மத்திய அரசு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. தி. அன்பழகன்] [1985 மார்ச் 11

இன்னொரு முக்கியமான பிரச்சினை என்னவென்றால் மத்திய அரசைப் பொறுத்தவரையில், புதிய தொழில்களை ஆரம்பிப்பதில் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்றால் அந்தப் பகுதியில் வேறு தொழிற்சாலை ஏதுவும் இல்லை என்றால்தான் அனுமதி கிடைக்கிறது. அதனால் தமிழக மக்களுக்கு பெருத்த பாதிப்பு ஏற்படுகிறது. வட மாநிலங்களாக இருந்தாலும், பிற மாநிலங்களாக இருந்தாலும் சிறு சிறு மாவட்டங்களாக இருப்பதால் அங்கே அதிகமாக தொழிற்சாலைகள் தொடங்க அனுமதி கிடைக்கிறது. தமிழ் நாட்டில் பெரிய பெரிய மாவட்டங்களாக இருப்பதால் அந்த வாய்ப்பு கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகையால் தாலுகா அளவிலே அல்லது ஒன்றிய அளவிலே தொழிற்சாலைகளைத் தொடங்க மத்திய அரசு மாநில அரசுக்கு உதவி அளிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக வாக்காளர் பெருமக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற, அனைத்துத் தரப்பு மக்கள் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்ற, அரசு பல திட்டங்களை அறிவித்திருக்கிறது. ரூபாய் ஆயிரம் கோடி செலவில் தொழில் கல்வித் திட்டம், 8-வது வகுப்பு வரையிலும் தகுதியுள்ள பிள்ளைகள் அனைவருக்கும் இலவசமாகச் சீருடைகள் வழங்கும் திட்டம், அரசுப் பணியாளர்களுக்கான குடும்ப நல நிதி ரூ. 10,000-லிருந்து ரூ. 20,000-க்கு உயர்த்தும் திட்டம், சென்னையில் புதிதாக மருத்துவப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கும் திட்டம், கிராமப் பகுதிகளில் எல்லாம் குடிநீர் வசதியளிக்க சிறப்புத் திட்டம், பள்ளிக் கட்டடங்களைச் செப்பனிடும் திட்டம், பதுக்கல், கள்ளச் சந்தையை ஒழிக்க கடும் நடவடிக்கை எடுக்கும் திட்டம், ஆதி திராவிடர் மேம்பாட்டிற்கு விரிவான திட்டம் இப்படி பல்வேறு நல்ல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. சத்துணவுத் திட்டம், தன்னிறைவுத் திட்டம், இலவச மின்சாரம் வழங்கும் திட்டம், கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்யும் திட்டம் ஆகிய பல புரட்சிகரமான திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு நிறைவேற்றியிருக்கிறது.



1985 மார்ச் 11] [திரு. தி. அன்பழகன்]

அதைப்போன்று தமிழ்நாடு முழுவதிலும் அனைத்து ஆதிதிராவிட மக்களுக்கும் வீட்டுமனைகள் வழங்கப்பட வேண்டும். இலவசமாக வீடுகள் கட்டித் தரப்பட வேண்டும். பள்ளிக் கட்டடங்களை செப்பனிடும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருக்கிறது. ஆனால் உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்களைக் கட்ட நிதி பற்றாக்குறை இருப்பதன் காரணமாக பல கட்டடங்கள் பழுது பார்க்கப்படாமல், புதிய கட்டடங்கள் கட்ட வசதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே, தமிழக அரசு உலக வங்கியிடமிருந்து பணம் பெற்றாவது இந்தப் பணிகளை முழுமையாக, சிறப்பாகச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியாகிய நாட்ராம்பள்ளி தொழில் துறையில் மிகவும் பிற்பட்ட பகுதியாக இருப்பதால் அங்கே ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போன்று நீண்டகாலமாக நிலுவையில் இருக்கிற புல்லூர் நீர்த்தேக்கத் திட்டத்திற்கு ஆந்திர அரசின் அனுமதியைப் பெற்று, விரைவிலே அதை நிறைவேற்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, ஒரு ஆளுநர் உரை என்பது இந்த ஆண்டிலே முடிந்துவிடக்கூடிய ஒன்றல்ல. ஒரு அரசின் சாதனையை ஐந்து ஆண்டுகள் பார்க்க வேண்டும். இந்த ஆண்டு சில திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அடுத்த ஆண்டில் இன்னும் தீவிரமான திட்டங்கள் வரும். அதற்கு அடுத்த ஆண்டில் இன்னும் தீவிரமான திட்டங்கள் வரும். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு சொன்னதைச் செய்யும், சொல்லியதை நிறைவேற்றும்; தேவையான அனைத்துக் காரியங்களையும் இந்த அரசு நிறைவேற்றும் என்று சொல்லி, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

(முற்பகல் 10-10)

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூதறிஞர் ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா ஆகியோர் பங்கேற்ற இந்த

[திரு. ஏ. எஸ். ரவீந்திரன்] [1985 மார்ச் 11

அவையிலே நானும் ஒரு உறுப்பினராக பங்கேற்கும் வகையிலே தேர்தலிலே போட்டியிட வாய்ப்பளித்த என்னுடைய தலைவர்கள் திரு. கருப்பையா மூப்பனார், பழனியாண்டி ஆகியோர்களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றும் என்னுடைய வெற்றிக்காக பாடுபட்ட அனைத்துக் கூட்டணித் தோழர்களுக்கும், எனக்கு வாக்களித்து, இந்த அவையிலே பேச வாய்ப்பு அளித்த என்னுடைய தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

அன்னை இந்திரா காந்தியார் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து, அன்னை இந்திரா காந்தி அவர்களின் படத்தை இந்த அவையிலே வைப்பதாக அறிவித்தமைக்கு நான் நன்றி கூறுகிறேன். அதே நேரத்தில் 26—12—1980-லே எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. சுந்தரராஜ் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்தார்கள். இந்திய நாட்டின் ஜனநாயக சிற்பி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் திருவுருவப் படத்தை இந்த அவையிலே வைக்க வேண்டும் என்றும் அதை இந்த அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் படத்தை திறந்து வைக்கிற அதேநேரத்திலே, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் திருவுருவப் படத்தையும் இந்த அவையிலே திறந்து வைக்க வேண்டும் என்று நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே மீண்டும் வலியுறுத்துகிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூன்றாம் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்கு நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சத்துணவு தந்த சரித்திர நாயகன், காவிரி மணவிலும் நீண்ட நாள் வாழ்ந்து இந்த தமிழகத்திற்கும், தமிழினத்திற்கும் அரிய பல தொண்டுகளை ஆற்றவேண்டும் என்று என்னுடைய கட்சியின் சார்பிலே என் அவாவைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1985 மார்ச் 11] [திரு. ஏ. எஸ். ரவீந்திரன்]

ஆளுநர் உரை என்பது சாதாரணமாக அரசினுடைய கொள்கை விளக்கமாகவும், கொள்கை அறிவிப்பாகவுமே இருக்கும். ஆண்டுதோறும் ஆளுநர் உரையை நிகழ்த்தும் போது, முந்தைய ஆளுநர் உரையிலே கூறிய அறிவிப்புகள் என்ன, அவைகள் எந்த அளவிலே செயல்படுத்தப்பட்டு இருக்கின்றன என்பதையும் ஓரளவிற்கு கோடிட்டுக் காட்டினால் அது ஒரு ஆய்வாக அமையக்கூடும். எனவே வரும் ஆண்டுகளில் அத்தகைய முயற்சிகள் இடம் பெறவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் இந்தத் தீர்மானத்தின்மீது பேசுகின்ற நேரத்திலே நாங்கள் ஆளும் கட்சியோடு தேர்தல் கூட்டுறவு வைத்துக்கொண்டிருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் கூறியதைப் போன்று, நாங்கள் உண்மையான எதிர்க்கட்சியாக இருப்போமே தவிர, எதிரிக் கட்சியாக இருக்க மாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையான எதிர்க் கட்சியாக இருந்து, ஆளும் கட்சியின் நிறைகுறைகளை திடமுடனும், திட்டமிட்டும் சுட்டிக் காட்டி அவையிலே ஜனநாயகத்தைக் கட்டி காக்க வேண்டிய பொறுப்புடன் நாங்கள் செயல்படுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையைப் பற்றிக் கூறுகையில் சாதனை என்று சிலவற்றைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் 'சவலைக் குழந்தையைக கவனித்து திடகாத்திர குழந்தையை புறக்கணிப்பது போல இந்த மாநிலத்தை மத்திய அரசு நடத்துவதாக' குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஒன்றை மட்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஒரு தாய்க்கு எல்லாக் குழந்தைகளும், குழந்தைகள்தான். சவலைக் குழந்தையை மட்டும் பராமரிக்க வேண்டும், திடகாத்திரமாக உள்ள குழந்தையை பராமரிக்கக்கூடாது என்பதல்ல. ஒரு தாய் என்பவள் எந்த நேரத்திலே எந்தக் குழந்தையை எப்படி பாது காப்பது என்பது அவளுக்குத் தெரியும். ஆகவே மத்திய அரசின் மீது தாக்குதல்களை காட்டாமல், வீணாக குற்றச்

சாட்டுக்களைக் கூறாமல், மாநிலத்திற்கு நல்ல வகையிலே போராடி நல்லபல திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசின் துணையை நாட வேண்டும், அப்படிச் செய்தால்தான் அது நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இலங்கைப் பிரச்னைப் பற்றி, எங்கள் கட்சிக்கு அரசியல் ரீதியாக தீர்வு காண்பதிலே எந்தவித ஆட்சேபணையும் இல்லை. ஆனால் அதே நேரத்திலே இலங்கையிலிருந்து அகதிகளாக வரும் நம்முடைய சகோதரர்களுடைய மறுவாழ்வு பற்றி நல்லதொரு திட்டத்தைத் தீட்டி அதை செம்மைப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏன் என்றால், இன்று அகதிகளாக வருகின்ற நம்முடைய சகோதரர்கள் இடைத் தரகர்களாலும் அரசு அதிகாரிகளின் தொல்லைகளாலும் அவதிப்படுவதை நாம் காண்கிறோம். அந்த நிலை தொடர்ந்து நீடிப்பது நம் சகோதரர்களுக்கும் நமக்கும் அழகல்ல. எனவே, அதை ஆராய்ந்து இந்த அரசு கருத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து சாதனைப் பட்டியலிலே ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு திட்டத்திற்காக 44.5 கோடி ரூபாயை செலவிட்டதை, ஆளுநர் அவர்கள் தம் உரையிலே பெருமையுடன் குறிப்பிட்டிருக்கிறார்கள். வரவேற்கிறோம். ஆனால், அதேநேரத்தில் 44.5 கோடியிலே, எத்தனை கோடித் தொகை உண்மையிலேயே மக்களுக்கு போய் சேர்ந்தது என்பதை கண்காணிக்க வேண்டிய கடமை இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை யாரும் மறுத்து விட முடியாது. ஏனென்றால், பெரும்பாலான தொகை இடையிலே இருக்கிற ஒப்பந்தக்காரர்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும்தான் செல்கிறதே தவிர, உண்மையான முழுமையான பயன் மக்களுக்குப் போய்ச் சேரவில்லை. எனவே, இதில் தனிக் கவனம் செலுத்த வேண்டியது இந்த அரசினுடைய தலையாய கடமைகளில் ஒன்று என்பதை நினைவுறுத்த ஆசைப்படுகிறேன்.





அடுத்து முதியோர், விதவைகள் ஓய்வு ஊதியத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மிக நல்ல திட்டம், நாட்டிற்கு ஏற்ற திட்டம். பயன் உள்ள திட்டம். எல்லோருமே வரவேற்கப்படக் கூடிய திட்டம். ஆனால் அந்த திட்டத்தின்கீழ் 1984 ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே கொடுக்கப்பட்ட மனுக்கள் இன்று வரையில் பைசல் செய்யப்படாத நிலையில் இருக்கின்றன. அதிகாரிகளிடம் கேட்டால், எங்களிடம் நிதி வசதி இல்லை. இருந்தது தீர்ந்துவிட்டது என்று சொல்கிறார்கள். முதியோர்களும், விதவைகளும் நிதி மறுபடியும் வரும் வரையில் காத்திருக்கக்கூடிய நிலையிலா இருக்கிறார்கள் என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, நிதி ஒதுக்கீடு செய்யும் போது, தயவுசெய்து, எதிர்காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு, தேவைக்கு அதிகமாகவே ஒதுக்கீடு செய்து, திட்டம் தீட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொது வினியோகத் திட்டத்தின்கீழ் அரிசி வழங்குவதில் 20 கிலோ அதிகமாக உயர்த்தியிருப்பதைப் பற்றி பெருமையோடு வரவேற்றுக் குறிப்பிட்டிருக்கிறார்கள் ஆளுநர் அவர்கள். ஆனால், அதே நேரத்தில் வழங்குகிற அரிசியின் தரத்தையும் தயவுசெய்து உயர்த்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் நியாய விலைக் கடைகளைப் பொறுத்தமட்டில் இன்றைய நிலையில் அவைகள் அநியாய விலைக் கடைகளாகவே இருக்கின்றன. ஏனென்றால், ஊழலிற்கு முறையாக இருப்பதற்காகவும், வேலைப் பளுவைக் குறைப்பதற்காகவும், குறிப்பிட்ட கிழமைகளில், குறிப்பிட்ட கார்டுதாரர்களுக்கு உணவுப்பொருள்கள் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால், அந்தக் குறிப்பிட்ட தேதியில், குறிப்பிட்டவர்களுக்கு, குறிப்பிட்ட பொருள்கள் வழங்கப்படுவதே இல்லை. கேட்டால், இராமாயணத்தில் இராமன் கூறியதைப் போல 'இன்று போய் நாளை வா, என்று கடையில் உள்ளவர்கள் கூறி விடுகிறார்கள்.

மறுநாளோ அல்லது அவர்கள் குறிப்பிட்ட நாளிலோ போய் கேட்டால் ஏற்கெனவே கொடுத்தாகிவிட்டது. அதனால் தீர்ந்து விட்டது என்று கையை விரித்துவிடுகிறார்கள். குறிப்பாக சொல்ல வேண்டுமானால், நியாயவிலைக் கடைகளில் உள்ள பொருள்களில் பெரும் பகுதி ஓட்டல்காரர்களுக்கும், மளிகைக் கடைக்காரர்களுக்கும் தான் போய்ச் சேருகின்றனவே தவிர,

[திரு. ஏ. எஸ். ரவீந்திரன்] [1985 மார்ச் 11

உண்மையான ஏழை எளிய பாமர மக்களுக்குப் போய்ச் சேருவதில்லை என்கிற உண்மையை ஒத்துக்கொண்டுதான் தீர வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நியாய விலைக் கடைகள் எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேறுகிறதா என்று கண்காணிக்க வேண்டிய கடமை இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை நினைவூட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்து, மாவட்டங்களைப் பிரிப்பது சம்பந்தமாக எடுத்துக் கொண்டால், அது வரவேற்கத் தக்க முயற்சி. சீரான நிர்வாகத்திற்கும் திறமையான நிர்வாகத்திற்கும் மாவட்டங்களைப் பிரிப்பது அவசியம். அதே நேரத்தில் வட ஆற்காடு மாவட்டம் தான் இன்று இருப்பதிலேயே மிகப் பெரிய மாவட்டம். ஆகவே, அதைக் கருத்தில் கொண்டு, அடுத்து எடுக்க இருக்கிற இந்த நடவடிக்கைகளில் வட ஆற்காடு மாவட்ட பிரிவினைதான் முதன்மையாக இருக்க வேண்டும் என்று இந்த அரசை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

உணவு உற்பத்திப் பெருக்கத்தைப் பற்றியும் ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். வரவேற்கத் தக்க ஒன்று. ஆனால் அதே நேரத்தில் மத்திய கையிருப்புக்கு மாநிலங்கள் கொடுக்க வேண்டிய கொள்முதலை நம் மாநிலம் கொடுத்தால் நலமாக இருக்கும். இப்போது நமக்கு வாய்ப்பு வந்திருக்கிறது. ஏராளமாக உற்பத்தியாகியிருக்கிறது. எனவே, இப்பொழுது கொடுத்தோமானால், முன்பொருநாள் நமது மாண்புமிகு முதலமைச்சர் அதிக அரிசி கோரி அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்களே. அத்தகைய அவல நிலை இனிமேல் ஏற்படாமல் தவிர்க்க முடியும். அதேநேரத்தில் இத்தகைய மாநில உணவு கையிருப்புக் கூடங்கள் ஒழுங்காக செயல்படுகின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும். என்னுடைய தொகுதியான திருவண்ணாமலையிலே 24 லட்சத்திற்கும் மேற்பட்ட மதிப்புள்ள உணவுப் பொருள்கள் கையாடப்பட்டிருக்கின்றன. இதுவரையில் அதற்கான பழியை யார்மீது போடுவது என்று தெரியாமல் அதிகாரிகள் திகைத்துக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய நிலை தவிர்க்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 மார்ச் 11] [திரு. ஏ. எஸ். ரவீந்திரன்]

அடுத்து, கூட்டுறவு இயக்கத்தைப் பற்றியும் ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். கூட்டுறவு இயக்கம் என்பது இந்த நாட்டின் சொந்த இயக்கம். இந்த நாட்டின் முதுகெலும்பாகவே கூட்டுறவு இயக்கங்கள் விளங்கி வருகின்றன. இந்த இயக்கங்கள் செம்மையாகச் செயல்பட வேண்டுமானால், நிச்சயமாக அவற்றிற்கு தேர்தல்களை நடத்தி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அங்கம் வகிக்கச் செய்ய வேண்டும். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை. உள்ளாட்சி அமைப்புகளுக்கும், நகராட்சி அமைப்புகளுக்கும் தேர்தல்களை நடத்த முடியாமல், தள்ளிப் போடப்படுவதைப் போலவே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தேர்தல்கள் நடத்துவதை ஒத்திப் போட்டுக் கொண்டே வருகிறார்கள். அவற்றை உடனடியாக நடத்துவதன் மூலம் தான் கூட்டுறவு இயக்கத்தை மேம்படுத்த முடியுமே தவிர, வெறும் திட்டங்களை மட்டும் தீட்டிப் பயன் இல்லை என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10.20)

நாங்கள் ஆளும் கட்சியினுடைய கூட்டணியிலே அங்கம் வகிப்பவர்கள். கூட்டுறவு சங்கங்களுக்கு நியமனம் செய்யும் போது மக்களின் நலனில் யார் பங்கேற்பார்கள், மக்கள் நலனுக்கு யார் கடமையாற்றுவர்கள் என்பதை கருத்தில் கொண்டு தயவு செய்து கட்சி பேதம் இல்லாமல் மக்களின் உண்மையான பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க வேண்டும். அரசியல் கண்ணோட்டம் தவிர்க்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரத்தை பற்றிக் குறிப்பிட்டார்கள். சீரான மின்சாரம் வழங்கப்படுதல் வேண்டும். அதே நேரத்திலே முறைப்படி வழங்க வேண்டும். விவசாய பெருங்குடி மக்களுக்கு அது பேருதவியாக இருக்கும். இப்போது உள்ள நிலைமையிலே எந்த நேரத்திலே மின்சாரம் விநியோகிக்கப்படும் என்று தெரியாத நிலையில் விவசாய மக்கள் இருக்கிறார்கள். அதன் பலன் அவர்கள் 24 மணி நேரமும் விழித்துக்கொண்டிருக்கின்ற கட்டாயம் ஏற்பட்டு இருக்கிறது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அனல் மின் நிலையங்களில்

பராமரிக்க முயற்சி எடுத்துக்கொண்டால் இத்தகைய சிக்கல்கள் ஓரளவிற்கு குறையும். சீரான மின் அழுத்தம் இருந்தால் விவசாயிகளுக்கு அடிக்கடி காயல் போதல் என்ற பிரச்சனைகள் வராது. அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன். புதிய இணைப்புகளுக்கு முன்னுரிமை கொடுக்கும்போது கூட ஒரு அளவை வைத்து கொடுத்தால் பரவாயில்லை. கேட்பவர்களுக்கெல்லாம் கொடுத்துவிட்டு பின்னால் யாருக்குமே இல்லை என்று கூறுவதைக் காட்டிலும் இருப்பதை சீராக விநியோகிப்பது மக்களுக்கும் நல்லது இந்த அரசுக்கும் நல்லது என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து புதிய தொழிற்சாலைகளை பற்றி குறிப்பிட்டார்கள். புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும்போது வெளி மாநிலத்தவர் இங்கு வந்து, முதலீடு செய்து தொழிற்சாலைகளைத் துவங்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும், ஊக்கம் அளிக்க வேண்டும். ஆனால், பெரிய முதலாளிகள் வட நாட்டிலிருந்தும் அண்டை மாநிலங்களிலிருந்தும் வந்து கேட்கின்ற போது சரியான உதவி, ஊக்கம் அளிக்கப்படவில்லை. 200 ஏக்கர் நிலப்பரப்பு வேண்டும்; கையகப்படுத்திக்கொடுங்கள் என்றால் இயலாத நிலை என்று கூறுகிறார்கள். இது தவிர்க்கப்பட்டால்தான் பெரும் தொழில்கள் வெளி மாநிலத்தவர் முதலீடு செய்து துவங்கப்படும். அதன் மூலம் நம் மாநில மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திலிருந்து விடுபடுவர் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து கிராமப்புற பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். இது நல்ல திட்டம். ஆனால் அந்த திட்டம் செம்மையாகச் செயல்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். பெரும்பாலான கிராமங்களில் மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி இல்லாது. அப்படி தொட்டி அமைக்கப்பட்ட கிராமங்களில் அவை செவ்வனே செயல்படுவதில்லை. குடிநீர் வாரிய அதிகாரிகளைக் கேட்டால், பஞ்சாயத்து யூனியனைச் சார்ந்தது, எங்களுக்கு பொறுப்பில்லை என்கிறார்கள். பஞ்சாயத்து அதிகாரிகளைக் கேட்டால் குடிநீர் வடிகால் வாரியத்தைச்





சேர்ந்தது, நாங்கள் தலையிட முடியாது என்கிறார்கள். திட்டங்கள் செயல்படுவதால் சிறப்படையாது. செம்மையாக செயல்படத் தொடங்கினால்தான் சிறப்பு பெறும். எனவே, இந்த பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தைப் பொறுத்த மட்டில் அரசு அதிக கவனமும், அக்கறையும் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து ஆதி திராவிட நல மேம்பாட்டிற்கு ஒருங்கிணைந்த ஒரு திட்டத்தைப் பற்றி ஆளுநர் உரையிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. நான் பரிவுடன் கூறிக்கொள்கிறேன். ஆதி திராவிட மக்களின் மேம்பாட்டிற்காக விசேஷ திட்டம் வரையறுக்கப்படும் என்று 1980 ஆம் ஆண்டிலேயே, இன்னும் சொல்லப் போனால், 21—6—1980 அன்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஐந்தாண்டுகளுக்கு பின்னும் அதைப் பற்றி மீண்டும் குறிப்பிடுவது என்றால், இதற்குத் தான் குறிப்பிட்டேன், முந்தைய உரைகளை ஆய்வு செய்ய வேண்டியது அவசியம் என்று. எனவே, திரும்பத் திரும்ப ஆதி திராவிடர் திட்டம் வகுக்கப்படும் என்று சொல்வதில் பயன் இல்லை. இம்முறையாவது, அந்த திட்டத்தை ஒழுங்காக நிறைவேற்றி தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சம உரிமை வழங்கி அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடைய இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சி மேம்பாட்டு திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறீர்கள். இந்தப் பிரச்சனைகளுக்கெல்லாம் ஒரே தீர்வு நகராட்சி, உள்ளாட்சி, ஊராட்சி தேர்தல்களை நடத்துவது தான். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தாலே, நகராட்சிகள் நரகாட்சிகளாக இருக்கின்றன. திருவண்ணாமலையை எடுத்துக் கொண்டால், நிச்சயமாக சாலையிலே ஒரு கர்ப்பிணி பெண்ணும், கணவனும் சென்றால், அந்தச் சாலையைக் கடப்பதற்கு முன்னாலேயே, அந்தக் கர்ப்பிணிப் பெண் பிரசவித்து விடுவாள். இந்த நிலைதான் இருக்கிறது. வரி வசூலிப்பதில் குறை இல்லை. இன்னும் கேட்டால் முந்தைய ஆண்டைக் காட்டிலும் இப்பொழுது வரி வசூல் அதிகமாக இருக்கிறது. அந்தச் சாலைகள் போடப்படாமல், சரியாகப்

பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. ஆனால் சாலைகள் போடப்பட்டதாக நகராட்சிக் கணக்கில் இருக்கிறது. ஆனால் போடப்படுவதாக இருந்த சாலைகள் இன்னும் போடப்படாமல் இருக்கின்றன. இத்தகைய குறைகள் நீக்கப்பட வேண்டும். ஆகவே தயவுசெய்து இந்த அரசு உடனடியாக இந்தத் தேர்தல்களை நடத்த வேண்டும். காரணம் என்னவென்றால் பஞ்சாயத்துத் தலைவர்கள் சந்திக்க வேண்டிய பிரச்சினைகளையெல்லாம் நாங்கள் சந்திக்க வேண்டியிருக்கிறது. பஞ்சாயத்துத் தேர்தல்கள் முறையாக நடந்திருந்தால் அந்தத் தலைவர்களை மக்கள் கேட்பார்கள். என்னென்றால், பஞ்சாயத்துக்களில் இப்போது யாரும் இல்லாத காரணத்தால், ஊராட்சிப் பிரதிநிதிகளாக, நகராட்சிப் பிரதிநிதிகளாகச் செய்ய வேண்டிய சாதாரண காரியங்களையெல்லாம் மக்கள், சட்ட மன்ற உறுப்பினர்களைத் தேடி கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு வரக்கூடிய ஒரு அவல நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலை அந்த கிராம மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தயவுசெய்து இந்த அரசை மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். எந்தக் காரணத்தை முன்னிட்டும், எந்த சால்ஜாப்பும் சொல்லாமல், இன்றைக்கு ஊராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்குமான தேர்தல்களை ஒத்திப் போடாமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலம் மக்கள் நல்வாழ்வு வாழ வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் பணியாளர்கள் குடும்ப நல நிதித் திட்டத்தின் மூலம் ரூ. 10,000-லிருந்து ரூ. 20,000 ஆக உயர்த்தித் தருகின்ற திட்டத்தை எங்கள் கட்சி முழுமனதோடு வரவேற்கிறது. ஆனால் அதே நேரத்தில் இந்தத் திட்டத்தின் மூலம் உடனடியாகப் பணம் பட்டுவாடா செய்யப்படுவதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டும். அதேபோல், இந்தத் திட்டத்திற்காக, 1—4—1984 முதல் 'ரெட்ராஸ்பெக்டிவ்' என்ற முறையிலே சலுகை கொடுத்து இதை அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து வாழ்க்கைத் தொழிலகங்கள் திட்டத்தைப் பற்றி ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க திட்டம். அதை உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சத்துணவுத் திட்டத்தைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். சத்துணவுத் திட்டம் வரவேற்கப்படத்தக்க திட்டம் தான். இன்று மாண்புமிகு உறுப்பினர் செம்மலை குறிப்பிட்டதுபோல, மாற்றுக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டம் என்பதில் ஐயமில்லை. அதன் மூலம் வழங்கப்படுகின்ற சத்துணவின் தரத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது அளிக்கப்படுவது சத்துணவு என்று சொல்லப்படுகிறதே தவிர, அதில் சத்தே இல்லை. அது உண்மையான சத்துணவாக இல்லை. எனவே அதன் தரத்தை உயர்த்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இடையிலே வியாபாரிகள், அதிகாரிகள் புகுந்து கொள்ளை அடிப்பதைத் தடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சத்துணவு அமைப்பாளர்களை அரசுப் பணியாளர்கள்போல் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அவை முன் வைக்கிறேன்.

பள்ளிக் கட்டிடங்களைப் பொறுத்தவரையில், உள்ளபடியாக அது உடனடியாக கவனிக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டில், ஒரு கணிசமான தொகையை இதற்காக ஒதுக்கி, இடிந்து விழுகின்ற பள்ளிக் கட்டிடங்களைச் செம்மைப்படுத்த முயற்சிகளை மேற்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

என்னுடைய தொகுதியான திருவண்ணாமலைப் பகுதியில், குடிநீர்ப் பிரச்சினை ஒரு தீராத பிரச்சினையாக இருந்து வருகிறது. திருவண்ணாமலையில் 1971-லே மக்கட் தொகை 61,370 ; 1981-லே 90,400 ; 1985-லே 99,800. ஆனால் குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இரண்டு நீர்த் தேக்கத் தொட்டிகள் இருக்கின்றன. அவற்றின் மொத்த கொள்ளளவு 4½ இலட்சம் லிட்டர்தான். ஆனால் திருவண்ணாமலை

நகரத்தைப் பொறுத்தவரையில், 91 இலட்சம் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் ஒன்றை மட்டும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உங்கள் அமைச்சரவையைச் சார்ந்த யாவருமே உங்களுடைய பிரதிநிதிகள். நீங்கள் இந்த அரசின் பிரதிநிதி. உங்கள் அமைச்சர்களால் இந்த அவையிலோ அல்லது அவைக்கு வெளியிலோ அளிக்கப்படுகின்ற வாக்குறுதிகள், நீங்கள் அளித்ததாக அல்லது இந்த அரசு அளித்ததாக மக்கள் கருதப்படக் கூடியவை. முன்னாள் அமைச்சர், மாண்புமிகு குழந்தைவேலு 1982-ல் திருவண்ணாமலைக்கு விஜயம் செய்த போது, இன்னும் ஒரே வாரத்தில் திருவண்ணாமலைக்கு ஒரு ஜெனரேட்டரை அளிக்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். 1982-ம் கடந்து, 1985-ம் வந்துவிட்டது. ஆனால் இன்றுவரை ஜெனரேட்டர் வரவில்லை. ஆனால் மக்கட் தொகை மட்டும் உயர்ந்து கொண்டே போகிறது. மக்கட் தொகையை கட்டுப்படுத்த யாராலும் முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். தயவுசெய்து கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற, ஜெனரேட்டரைக் கொடுத்தால், மின்சாரத் தட்டுப்பாடு இருக்கின்ற சூழ்நிலையிலும், குடிநீர் வழங்கும் திட்டத்தை ஒழுங்காகச் செயல்படுத்த முடியும். எனவே தயவுசெய்து திருவண்ணாமலை நகரைப் பொறுத்தவரையில் உடனடியாக ஒரு ஜெனரேட்டர் வழங்க அரசும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் உத்திரவிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

(முற்பகல் 10.30)

அடுத்து, திருவண்ணாமலை நகராட்சியைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கிற பள்ளியின் நிலை மிகவும் வருந்தத் தக்க நிலை. 2,500 மாணவிகள் ஒரு நகராட்சிப் பள்ளியிலே படிக்கிறார்கள். அரசினுடைய ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கை 30 மாணவர்களுக்கு அல்லது மாணவியர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று இருக்கிறது. ஆனால், திருவண்ணாமலை நகராட்சி பள்ளியில் 100 மாணவிகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை இருக்கிறது. பௌதீக ஆசிரியை ஒரே ஒரு ஆசிரியை தான் இருக்கிறார். ஒரே ஆசிரியை 36 வகுப்புகளுக்குச் செல்ல





வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தயவுசெய்து இப்படிப் பட்ட நிலைமைகளை எல்லாம் உடனடியாக களைந்து அந்தப் பள்ளியை அரசே மேற்கொண்டு அந்த நகராட்சிப் பெண்கள் பள்ளியை இரண்டாகப் பிரித்து நல்ல முறையில் செயல்படச் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் ஒன்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இது என்னுடைய கன்னிப் பேச்சு. ஆகவே 5 நிமிடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சைத் தொடர்கிறேன்.

திருவண்ணாமலையில் பெண்களுக்கு என ஒரு கல்லூரி, ஒரு தொழில் நுட்பக் கல்லூரி அமைக்கப்பட வேண்டும். என்னுடைய தொகுதியில் உள்ள கிராமங்கள் உள்ள நிலை வருந்தத்தக்க நிலையாக, வெட்கப்படத்தக்க நிலையாக உள்ளது. சுதந்திரம் பெற்று 38 ஆண்டுகள் ஆன பின்பும், மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர் வசதி, சாலை வசதி, மின்விளக்கு வசதி ஆகிய இக்குறைகள் இருந்து கொண்டு இருக்கின்றன. இக்குறைகள் எல்லா கிராமங்களுக்கும், பொதுவாக தமிழ் நாட்டுக்கே ஒரு சாபக் கேடாக இருக்கின்றன. சுதந்திரம் பெற்று விட்டோம் என்று நாம் பெருமையாக பேசிக் கொள்ளுவதில் பயன் இல்லை. மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதில் அரசு ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேட்டவலத்திலே பள்ளிக்கு ஒரு விஞ்ஞான ஆய்வுக்கூடம் கட்டப்பட்டது. அந்தப் பள்ளிக்கும் அந்த விஞ்ஞான ஆய்வுக் கூடத்திற்கும் இடையே 1 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. ஆனால் பள்ளி மாணவர்கள் அந்த விஞ்ஞான ஆய்வுக் கூடத்திற்குச் சென்று விட்டு நேராக வீட்டுக்குத்தான் செல்ல முடியும். பள்ளிக்கூடத்திற்கு வர முடியாது என்ற நிலைமை இருக்கிறது. இப்போது விஞ்ஞான ஆய்வுக்கூடத்தை பள்ளிக்கூடத்திலேயே ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதன் காரணத்தால் விஞ்ஞான ஆய்வுக்கூடத்திற்காக கட்டப்பட்ட அந்தக் கட்டிடம் வீணாகக் கிடக்கிறது. வேட்டவலத்தைப் பொறுத்தவரையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் [illegible]

இல்லை. அப்படி தலையிட்டு உடனடியாக அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை அந்த இடத்திலேயே மாற்ற ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கன்னிப் பேச்சு என்று சொன்னாலும் கூட 20 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள். இங்கே இன்று பெரும்பான்மையான உறுப்பினர்கள் கன்னிப் பேச்சாகத் தான் தங்களுடைய பேச்சை பேசியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் நேரம் வேண்டும். விரைவில் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** கிராமங்களுக்கு, மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை அமைத்து அவைகளை ஒழுங்காக பராமரிக்க வேண்டும். நரிக்குறவர், ஆதி திராவிடர் மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் மூலம் பணிகள் ஒரு சில கிராமங்களில் தான் அமல் செய்யப்படுகின்றன. சில கிராமங்களில் நாங்களும் செய்தோம் என்ற முறையில் 10, 15 வீடுகளைத் தான் கட்டிக் கொடுத்து இருக்கிறார்கள். உடனடியாக தேவைப்படும் அளவுக்கு வீடுகளை கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசனக் காலனியைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய பிரச்சினை சுடுகாட்டுக்கு, இடுகாட்டுக்கு செல்லும் பாதை இல்லாததுதான். அதை அரசு உடனடியாகச் செய்ய வேண்டும். தனிப்பட்டவர்கள், நிலச்சுவாந்தார்கள், நிலத்தில் சென்றால் போராட்டங்களும், வீணான பூசல்களும் ஏற்படுகின்றன. எனவே, அரசே இடத்தைக் கையகப்படுத்தி, உடனடியாகப் பாதை வசதி செய்ய வேண்டும். அதேபோல் அலுமினியம், எவர்சில்வர், செம்பு ஆகியவற்றிற்கு ஒருமுனை விற்பனை வரி விதிப்பதால் வியாபாரிகளுக்கு தொல்லை குறைந்தும் வணிக பெருமக்களின் குறைகளை களைவதற்காக வணிக நல் வாரியம் ஒன்றை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கோயில் கடைகளுக்கு வீட்டு வசதி சட்டத்திலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதேநேரத்தில் ஒரு





சில ஊர்களைப் பொறுத்தவரையில் அந்த விலக்கை அங்கே இருக்கின்ற தக்கார்களும், அதிகாரிகளும் தவறான முறையில் பயன்படுத்தக் கூடிய நிலைமை இருக்கிறது. நியாயமான வாடகை கொடுத்துக் கொண்டு நேர்மையாக தொழில் நடத்துகின்றவர்களை நெருக்கிப் பிடித்து வெளியே தள்ளுகிறார்கள். அந்த கட்டத்திலே வாடகையை உயர்த்துவதற்கு ஒரு வரைமுறை இருக்க வேண்டும். 100 ரூபாய் வாடகை 500 ரூபாய் என்று உயர்த்தப்படுகிறது. இதைத் தனி மனிதர் செய்தால் வழக்கு மன்றத்திற்குச் செல்லலாம். ஆனால் கோயில் நிர்வாகம் அப்படிச் செய்தால் வழக்கு மன்றத்திற்குச் செல்ல முடியவில்லை. எனவே அரசு அதிகாரிகளுக்கு ஒரு தக்க அறிக்கையின் மூலம் எந்த அடிப்படையில் வாடகைகளை உயர்த்த வேண்டும் என்று சொல்ல வேண்டும். வழக்கறிஞர்களின் பிரச்சினைகளை உடனடியாக இந்த அரசு தீர்க்க வேண்டும். (மணியடிக்கப் பெற்றது).

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, பெரிய பொறுப்புக்கு வந்திருக்கிற உங்களுக்கு நல்வாழ்த்துக்களைச் சொல்லுகிறேன். ஆட்சி பொறுப்புக்கு வந்திருக்கிற அமைச்சர் பெருமக்களுக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும் நல்வாழ்த்துக்களைச் சொல்லுகிறேன். இங்கே ஆளுநர் உரையின் மீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நான் சார்ந்து இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆளுநர் உரை விவாதத்திலே கலந்து கொண்டு என்னுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த ஆளுநர் உரையைப் பொறுத்தவரையில் நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தல், பாராளுமன்ற தேர்தல் மூலம் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இடைவேளைக்குப் பிறகு மீண்டும் சினிமா ஆரம்பிப்பது போல் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சி ஆரம்பமாகியிருக்கிறது. ஆனால் இதில் முக்கியமான பிரச்சினை என்னவென்றால் இந்த ஆட்சி ஏற்பட்டதற்கு அடிப்படை காரணம் இந்த அரசினுடைய கொள்கைகளுக்கு மக்கள் ஆதரவு

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 11

கொடுத்த காரணத்தால் முதலமைச்சர் தலைமையை ஏற்றுக் கொண்ட காரணத்தால்தான் மக்கள் இந்தத் தீர்ப்பை வழங்கியிருப்பதாக ஆளுநர் அவர்கள் மூலம் சொல்ல வைத்து இருக்கிறார்கள். நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன், இந்த அரசுக்கு ஏதாவது கொள்கை இருக்கிறதா? முதலில் மதுவிலக்கை அமல்நடத்த வேண்டும் என்று சொன்னார்கள். மதுவிலக்கு அமல் நடத்தாமல் கள்ளுக்கடை, சாராயக்கடை திறந்ததால் எங்கள் வோட்டு உங்களுக்கு என்று அந்த கொள்கையை ஆதரித்து மக்கள் வோட்டு போட்டிருக்கிறார்களா? அல்லது விலைவாசியைக் கட்டுப்படுத்திவிட்டார்கள் என்பதற்காக மக்கள் ஆதரித்து அந்த வோட்டை உங்களுக்கு போட்டு இருக்கிறார்களா? அல்லது கிராம அதிகாரிகளைப் பதவி நீக்கம் செய்ததால் மக்கள் ஆதரவு கொடுத்து இருக்கிறார்களா? அல்லது சட்டம் ஒழுங்கு முறையைக் காப்பாற்றி இருக்கிறீர்கள், என்பதற்காக ஆதரவு கொடுத்திருக்கிறார்களா அல்லது மூடிக் கிடக்கின்ற தொழிற்சாலைகளை திறந்த பெருமைக்காக என்று ஆதரவு கொடுத்து இருக்கிறார்களா? அல்லது மத்திய அரசிடம் போராடி பல புதிய தொழிற்சாலைகளைப் பெற்று இருக்கிறீர்கள். காவேரி நீர் பிரச்சினையைத் தீர்த்து இருக்கிறீர்கள். சேலத்தில் தொடங்க இருந்த உருட்டு ஆலையை உருக்கு ஆலையாக மாற்ற முயற்சி செய்கிறீர்கள் என்பதற்காக மக்கள் உங்களுக்கு ஆதரவு கொடுத்து இருக்கிறார்களா? குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு கொடுத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்கினீர்கள் என்பதை ஆதரித்து மக்கள் ஆதரவு கொடுத்து இருக்கிறார்களா? அல்லது வறுமையை ஒழித்தீர்கள் என்பதற்காகவா? அல்லது கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரைக்கும் லஞ்சம் அற்ற ஒரு சர்க்காரை அமைத்துக் காட்டிய பெருமைக்காகவா? இல்லை. தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதற்காகவா? 5 கிலோ அரிசி வாங்கினால் ஒரு கிலோ அரிசி என்று நடைமுறைப் படுத்தியதற்காகவா? பிரசவமான தாய்மார்களுக்கு சத்துணவிற்கு 150 ரூபாய் என்பதற்காகவா? வறுமைக் கோட்டுக்கு கீழ் இருக்கின்றவர்களுக்கு எல்லாம் வேலை இல்லாமல் இருக்கின்றவர்களுக்கு தலைக்கு 100 ரூபாய் தந்து விட்டார்கள் என்பதற்காகவா? என்.ஜி.ஓ.க்களுக்கு போனஸ்



1985 மார்ச் 11] [திரு. அ. ரகுமான்கான்]

கொடுத்தீர்கள் என்பதற்காகவா? 10 ஆயிரம் போலீஸ்காரர்களை வேலைக்கு நியமித்தீர்கள் என்ற காரணத்திற்காகவா? எந்த கொள்கையின் அடிப்படையில் உங்களை தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள் என்றால் உண்மைக்கு புறம்பான தகவலைச் சொல்லுகிறீர்கள். ஆக இதை நான் இங்கே சொல்ல விரும்புவது கொள்கையின் அடிப்படையில இல்லை.

இன்னொரு வாதத்தை சொல்லியிருக்கிறீர்கள் முதலமைச்சர் அவர்கள் தலைமையை ஏற்றுக்கொண்டு காரணத்தாலே மக்கள் இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். நம்முடைய முதலமைச்சர் இந்த மன்றத்திலே 1980 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு இரண்டே இடம் அ.இ.அ.தி.மு.க. வுக்கு கிடைத்தபோது சொன்ன வாசகத்தை நினைவுப்படுத்த விரும்புகிறேன். முகமது அலி தலைசிறந்த மல்யுத்த வீரர், வெற்றி தோல்வி சகசம். இரவு பகலைப்போல, வெற்றி பெற்றவன் வெற்றிப் பெற்றுக்கொண்டேயும், தோல்வி அடைந்தவன் தோல்வி அடைந்துகொண்டேயும் இருக்கப் போவது இல்லை, என்று 1980 ஆம் ஆண்டு இதே சட்டசபையில் பாராளுமன்றத்திற்கு 2 இடம் கிடைத்தப்போது அவர் சொல்லிய வாசகத்தையே இப்போது நான் காணிக்கையாக்கு கிறேன்.

இன்னும் ஒன்று, அவருடைய தலைமையை எப்போதும் மக்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்ற வாதமும் உண்மை அல்ல. அண்ணா நகர் தொகுதியிலே உடல் நலத்தோடு அவர் இருந்த போதுதான் தோல்வியுறப்பட்டு இருக்கிறார். மயிலாடுதுறையில் உடல் நலத்தோடு இருந்தபோதுதான் தோல்வியுறப்பட்டு இருக்கிறார். பட்டதாரிகள் தொகுதியிலே அவர் உடல் நலத்தோடு இருந்தபோது தோல்வியுறப்பட்டு இருக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டு பாண்டிச்சேரியில் அவர் உடல் நலத்தோடு தெரு தெருவாக வோட்டு கேட்ட நேரத்தில்தான் ஒரு இடம் கூட இல்லாமல் 1980 ஆம் ஆண்டிலே போய் இருக்கிறார். இன்னும் சொல்லப் போனால் தி.மு.க.வில் இருந்தபோது அவர் வோட்டு கேட்டதற்குப் பிறகுதான் தர்மபுரியில் தோற்றோம். தி.மு.க. வில் அவர் இருந்தபோது அரியங்குப்பத்தில் வோட்டு கேட்டதற்குப் பிறகு தான் தோற்றோம், ஆக இந்த

தலைமை வெற்றி தோல்வியை வைத்து நிர்ணயிக்கப்படக் கூடிய காரியம் அல்ல.

(முற்பகல் 10.40)

கட்சியை கலைத்து விடுவார்களா? ஆகவே, நான் கேட்க மக்கள் நிராகரித்து விட்டார்களா? அப்படியானால் அண்ணா தோற்றுப் போனாரே, மக்கள் நிராகரித்து விட்டார்களா? காமராஜ் தோற்றுப் போனாரே, மக்கள் நிராகரித்து விட்டார்களா? இந்திராகாந்தி அம்மையார் தோற்றுப் போனாரே, மக்கள் நிராகரித்து விட்டார்களா? சிக்கிமிலே இந்திய காங்கிரஸ் கட்சிக்கு ஒரேயொரு இடம் தான் கிடைத்திருக்கிறதே, அதற்காக கட்சியையே கலைத்து விடுவார்களா? ஆகவே, நான் கேட்க விரும்புகிறேன். தேர்தலை அடிப்படையாக வைத்துக் கொண்டு மட்டும் முடிவிற்கு வரக் கூடாது. ஆட்சி என்ற யோகம் எங்களிடம் இல்லாமல் இருக்கலாம், அதற்காக விசயே இல்லை என்று சொல்லிவிட முடியுமா? வயலிலே பூச்சி அரித்து விளைச்சல் இல்லாமல் இருக்கலாம், அதற்காக அந்த நிலத்திலே விளைச்சலே வராது என்று சொல்லிவிட முடியுமா? 86 இலட்சம் மக்கள் தங்கள் வாக்குகளை எங்களுக்கு அளித்திருக்கிறார்கள். சீட்டுகள் குறைவாக இருக்கலாம். ஆனால் 86 இலட்சம் மக்கள், இந்த அரசாங்கத்தின் கொள்கை தவறு, முறையல்ல, இவர்கள் மீண்டும் வருவது சரியல்ல என்று ஓட்டுப் போட்டிருக்கிறார்கள் என்பதை மறந்து விடக் கூடாது. எனவே, அனுதாபத்தின் அடிப்படையில், பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் எதிர்பாராத விதமாகச் சுட்டுப் படுகொலை செய்யப் பட்டார்கள். அது ஒரு அனுதாபம். இரண்டாவதாக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உடல் நலம் இல்லாமல் இருந்த சூழ்நிலை. ஆகையினால் நடைபெற்ற முடிந்த தேர்தல் அந்த அடிப்படையிலே முடிந்திருக்கிறது.

இங்கே நம்முடைய அருமை நண்பர் திரு. சேர்மலை அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சொன்னார்கள். நாயாக இருப்பேன் என்று சொன்னவர்கள், செருப்பாக இருப்பேன் என்று சொன்னவர்கள், விறகாக இருப்பேன் என்று சொன்னவர்கள், அனுதாபத்தைப் பெற முடியவில்லை என்று





சொன்னார்கள். நான் சொல்ல விரும்புகிறேன், எங்களுடைய கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தலில் கிடைக்கின்ற வெற்றி தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாதவர்கள். இன்னும் சொல்லப் போனால், நாற்பதாண்டுக் காலமாக இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்காகத் தொண்டாற்றிக் கொண்டிருப்பவர்கள். இன்றைக்கு முதலமைச்சராக இருப்பவருக்கே ஒருகாலத்தில் தலைவராக இருந்தவர்கள். நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன், நாயாக இருப்பேன் என்று சொன்னால், இடம் பார்த்து ஓடுகின்ற தெரு ஓரத்து நாய் அல்ல, எப்படியாவது பிழைத்துப் போகின்ற சொறி நாய் அல்ல, வீட்டு நாயாக இருப்பேன், எஜமானன் என்னதான் அடித்தாலும் துரத்தினாலும் உதைத்தாலும் வீட்டை நன்றியுணர்ச்சியோடு பாதுகாக்கின்ற வீட்டு நாயைப் போல நன்றியுணர்ச்சியோடு இருப்பேன். தேர்தல் வெற்றி தோல்விகளைப் பற்றிக் கவலைப்பட மாட்டேன் என்ற கருத்திலேதான் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து மிகவும் முக்கியமான பிரச்னை. இருபது அம்சத் திட்டத்தைச் சரியான முறையில் நிறைவேற்றிக் கொண்டிருப்பதாக இந்த ஆளுநர் உரையின் மூலமாகச் சொல்கிறீர்கள். உண்மைக்குப் புறம்பான இந்தத் தகவலைத் தருகிறீர்கள். இருபது அம்சத் திட்டத்தில் உள்ள நான்காவது அம்சம் என்னவென்றால், நிலச் சீர்திருத்தம் பற்றியது. ஞாபகம் இருக்கிறதா, தமிழ்நாட்டிலே பலயிடங்களிலே பல முதலாளிகள், பல நிலச்சுவான்தார்கள் பினாமி நிலங்களை வைத்திருக்கிறார்கள், அவைகளை ஒழிக்க வேண்டுமென்று வீராவேசமாகப் பேசப்பட்டு, பினாமி நிலங்கள் ஒழிக்கப்பட வேண்டுமென்பதற்காக ஏகமனதாகத் தீர்மானம் போடப்பட்டு, நிறைவேற்றப் பட்டும், மத்திய அரசாங்கம் அங்கீகாரம் தரவில்லையே, அதைப் பற்றி இதிலே ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா? இதுவும் இருபது அம்சத் திட்டத்தின் கீழே வருவதுதானே. இதற்கு முன் நிகழ்த்தப் பெற்ற ஆளுநர் உரைகளிலே இருந்ததே, இப்பொழுது அது ஏன் சொல்லப்படவில்லை?

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 11

அது மட்டுமல்லாமல், காவிரி நீர்ப் பிரச்னை பற்றியும் இதிலே குறிப்பு இல்லை; ஒகேனக்கல் மின்சாரத் திட்டம் பற்றி இதிலே குறிப்பு இல்லை. நெய்வேலியில் மூன்றாவது சுரங்கம் வெட்டுவதைப் பற்றி இதிலே குறிப்பு இல்லை. கிருஷ்ணா நதி நீர் வரப் போவதாகத் தெரியவில்லை. காரணம், இன்னும் மத்திய அரசாங்கம் அனுமதி தரவில்லை.

அடுத்து, இந்தி ஆதிக்கத்தைப் பற்றி இந்த உரையில் ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா? இன்றைக்குக் கூட பத்திரிகைகளிலே பார்த்தேன். மெட்ராஸ் டி.வி.யில் தேசிய நிகழ்ச்சி என்பது இரவு 9.20 மணிக்குத்தான் இதுவரையில் ஒளிபரப்பி வந்தார்கள்; ஆனால் இப்பொழுதோ இரவு 8.30 மணிக்கே அதை ஆரம்பித்து விடுகிறார்கள். இதை யார் கேட்கப் போகிறார்கள்? இன்றைக்கு இந்தி எப்படித் திணிக்கப்படுகிறது? இரயில்வேக்கள், பேங்குகள் ஆகிய இடங்களில் வேலை பார்ப்பவர்களுக்கு இந்தி தெரிந்திருந்தால்தான் முடியும் என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இப்பொழுது டி.வி.யில் தேசிய நிகழ்ச்சி என்ற பெயரில் இந்தி திணிக்கப்படுகிறது. இந்த அரசாங்கம் ஏற்கனவே எதிர்ப்பு தெரிவித்தது: ஆனால், இப்பொழுது ஏன் வாய் மூடி மௌனியாக இருக்கிறது என்பது தெரியவில்லை. இந்த ஆளுநர் உரையில் இந்தி ஆதிக்கத்தைப் பற்றி எந்தக் கருத்தும் சொல்லப்படவில்லை. டி.வி.யில் இந்த நிகழ்ச்சியைக் கைவிடுவதற்கான முயற்சிகளை இந்தச் சர்க்கார் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்கின்ற அதே நேரத்தில், அப்படி உங்களால் மேற்கொள்ள முடியாது என்பதையும் நான் உணர்கிறேன். காரணம், பாசம், பந்தம், கூட்டணி என்ற கயிற்றால் பிணைக்கப்பட்டிருக்கின்றீர்கள். எனவே, அந்த சீட்டுகள்தான் முக்கியமாக இருக்கப் போகின்றனவே தவிர, இந்தக் கொள்கை உங்களுக்கு முக்கியமான பிரச்னையாக இருக்கப் போவதில்லை.

இப்பொழுது புதிய பிரதமராக வந்திருக்கின்ற ராஜிவ் காந்தி அவர்கள் இளைஞர், அவருக்கு நல்வாழ்த்துக்கள். ஆனால் அதே நேரத்திலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், மத்தியிலேயும் மாகாணங்களிலேயும் ஒரே கட்சியின் ஆட்சிதான்



1985 மார்ச் 11] [திரு. அ. ரகுமான்கான்]

இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படியானால் உங்கள் ஆட்சி இருக்கக் கூடாது என்றுதானே அர்த்தம். இந்தியா முழுவதும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆட்சிதான் இருக்க வேண்டுமென்ற முறையிலே ஏதோ மொகல பாதுஷா போலப் பேசியிருக்கிறார்கள். இதுதான் கூட்டாட்சி அடிப்படையா? இதுதான் ஜனநாயகத் தத்துவத்தின் அடிப்படையா? நான் கேட்கிறேன், மாகாணங்களிலேயும் மத்தியிலேயும் ஒரே கட்சியின் ஆட்சிதான் இருக்க வேண்டுமென்ற கொள்கையைக் கண்டித்திருக்கிறீர்களா? அண்ணாவின் உண்மையான வாரிசு என்று சொல்கின்றவர்கள் அதைப் பற்றி ஒரு வார்த்தை கூறியிருக்கிறார்களா என்றால் இல்லை. சீட்டுகளுக்காக இவ்வாறு சொல்லாமல் இருப்பது சரியா என்று கேட்கிறேன்.

நீங்கள் பலவிடங்களில் சொல்லியிருக்கிறீர்கள், பல தொழில்களுக்கு மத்திய அரசாங்கம் இங்கே முதலீட்டைக் குறைந்த அளவில்தான் செய்கிறார்கள். இந்தப் போக்கு கண்டிக்கத் தகுந்தது என்று முன்பெல்லாம் சொல்லியிருக்கிறீர்களே, அதைப் பற்றி இந்த ஆளுநர் உரையிலே ஏதாவது குறிப்பிட்டிருக்கிறார்களா? நான் கேட்க விரும்புகிறேன். இந்தக் கூட்டணிக்குப் பின்னாலே நிறைய முதலீடு வந்துவிட்டதா? அதுமட்டுமல்ல. எட்டாவது நிதிக் குழுவிலே நம்முடைய நிதியமைச்சர் இருக்கிறார்கள். தமிழகத்திற்குப் போதிய பங்கு கிடைக்கவில்லை என்று அரிச்சந்திரப் புராணத்திலே வருகின்ற சந்திரமதியைப் போல ஒப்பாரி வைப்பதாலே பிரயோசனம் இல்லை. வெஸ்ட் பெங்காலிலே அசோக் மித்ரா பைனான்ஸ் மினிஸ்டர். அவர் என்ன செய்தார்? மிகப் பெரிய ரேலியை பெங்கால் வீதிகளிலே நடத்துகிறார். ஒரு மிகப் பெரிய டெலிகேஷனை டெல்லிக்கு அனுப்புகிறார். 'இது அநியாயம், 2 ஆயிரம் கோடி ரூபாயை 22 மாநிலங்களுக்கு நிதிக் கமிஷன் கொடுக்காமல் நஷ்டத்தை உருவாக்கி இருக்கின்றது' என்று பேசியிருக்கிறார். '300 கோடி ரூபாயை இழந்துவிட்டோம்' என்று சொல்லியிருக்கிறார். ஆனால் நீங்கள் எவ்வளவு கேட்டீர்கள், அவர்கள் எவ்வளவு கொடுத்தார்கள் என்பதைச் சொல்வதற்குக் கூட நிதியமைச்சர் அவர்கள் வெட்கப்

படுகிறார்கள். ஆளுநர் உரையிலே சொல்ல வேண்டாமா? எட்டாவது நிதிக் குழுவிலே தமிழ்நாடு நல்ல திட்டங்களை நிறைவேற்ற முடியாத அளவுக்கு மத்திய சர்க்கார் புறக்கணித்து இருக்கின்றது. அதைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லப் பட்டிருந்தாலும் கூட அதுவும் ஒப்பாரி வைக்கின்ற போர்வையிலே தான் இருக்கின்றதே தவிர வேறல்ல. ஆந்திராவின் முதலமைச்சர் சொன்னாரே, ஏதோ பிச்சை எடுக்கின்ற பாத்திரத்தை ஏந்திக் கொண்டு டெல்லிக்கு வருகிறோர் என்பது போன்ற தொனியிலே பேசுகின்ற பிரதமர் அவர்கள் தனது பேச்சை அடக்கத்தோடு பேச வேண்டும் என்று சொல்லிவிட்டுச் சொன்னார்களே, எங்களுடைய உரிமையோடு கேட்கிறோம்; எங்களுக்குப் பிச்சை போடுபவர்கள் யார் என்று தேர்தல் கூட்டத்திலே கேட்டார்கள். அந்தப் பண்பு, மாநில உரிமை, மாநில சுயாட்சி, ஃபெடரலிசம், கூட்டாட்சித் தத்துவம் போன்ற தத்துவங்கள் எல்லாம் இன்றைக்கு இங்கே காற்றிலே பறக்க விடப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக இலங்கைப் பிரச்சினை பற்றி தந்தி அடித்திருக்கிறோம்; தபால்கள் போட்டிருக்கிறோம்; கூட்டுகிறோம்; கூட்டங்கள் கறுப்புச் சட்டைகள் போடுகிறோம் என்றெல்லாம் சொல்வதாலேயோ அல்லது நம்முடைய திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய ராஜதந்திர அணுகு முறையாலோ இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நீங்கள் நம்பிக் கொண்டிருப்பது இலங்கைவாழ் தமிழர்களுக்குச் செய்யக் கூடிய நல்ல காரியம் அல்ல. இதிலே அரசியலே கிடையாது. இனப் படுகொலையும், கற்பழிப்பும் நடக்கிறது. இன்னும் சொல்லப் போனால் அகதிகள் ஆயிரக்கணக்கில் வந்து கொண்டிருக்கிறார்கள். இராமேஸ்வரத்தில் மீனவர்கள் மீன் பிடிக்கப் போக முடியவில்லை. அந்த அளவுக்குச் சுட்டுக் கொல்கிறார்கள். இலங்கைப் பிரச்சினைக்காக மாநாடு நடத்தினோம். எதாவது பிரயோசனம் உண்டா? நான் கேட்க விரும்புகிறேன். ஈழந் தமிழ்நாடு கேட்பது தவறு என்று சொல்கிறார்கள். ஆனால் அங்கே ஈழம் அமையாமல் அங்கே அவர்களால் இருக்க முடியாது. அவர்களை எல்லாம்





வருத்துகிறார்கள். எந்தத் தமிழனும் உயிரோடு இருக்கக் கூடாது என்ற முடிவுக்கு அவர்கள் வந்துவிட்டதற்குப் பிறகு தான் ஈழம் கேட்கிறார்கள். எனவே அந்த விடுதலை வீரர்கள் பகத்சிங் போன்றவர்கள். பகத்சிங் போன்றவர்களுடைய தியாகத்தை எல்லாம் நாம் போற்றுகிறோம். எனவே அந்த பகத்சிங் போன்றோரை யாரும் சமூக விரோதி என்று சொல்வதில்லை. அப்படிப்பட்ட விடுதலைப் புலிகள் : விடுதலை வீரர்கள் இன்று அங்கே போராடிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே அக்கிரமங்கள் நடக்கின்றன. அந்த அக்கிரமங்களைக் கண்டித்துதான் அங்கே போராட்டம் நடத்துகிறார்கள். இன்றைக்கு வேறு வழியில்லாமல் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் அவர்கள் ஆரம்பத்தில் தமிழ் ஈழம் கேட்டவர்கள் அல்ல. ஆனால் இன்றைக்கு அவர்களால் அங்கே வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. என்பதை மண்டபம் முகாம் காட்டிக் கொண்டிருக்கின்றது.

ஆனால் மத்திய சர்க்கார் பாலஸ்தீனப் பிரச்சினையில் அக்கறை காட்டவில்லையா? ஐ.நா. மன்றத்திலே உறுப்பினராக இருக்கக்கூடிய நாடுதான் உள்ளே உட்கார முடியும். பாலஸ்தீனம் என்று ஒரு நாடே இல்லை. ஆனால் அராபத்துக்கு அங்கே சீட் இருக்கின்றது. ஐ.நா. மன்றத்திலே It is the seat of Arafat. என்று சொல்கிறார்கள். அந்த அராபத் பிரச்சினையிலே பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டார்கள். அதனை உள்நாட்டுப் பிரச்சினை என்று பார்த்தார்களா? நான் கேட்க விரும்புகிறேன், பங்களாதேஷ் பிரச்சினை பாகிஸ்தான் சம்பந்தப்பட்ட பிரச்சினை தானே? அதனை உள்நாட்டுப் பிரச்சினை என்று பார்த்தார்களா? தென் ஆப்பிரிக்கா பிரச்னை உள்நாட்டுப் பிரச்சினை என்று பார்த்தார்களா? இராஜீய உறவையே கத்தரித்திருக்கிறார்கள். ஐ.நா. மன்றத்திலும் அது குறித்துப் பேசியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய முதலமைச்சர் இங்கே இருக்கக் கூடிய எல்லோரையும் அழைத்துக் கொண்டு பிரதமர் இந்திரா காந்தியைப் பார்ப்பதற்காக மனு கொண்டு போனார்கள். ...லே என்ன சொன்னார்கள்? இந்தோ சைனாவிற்கு

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 11

செக்யூரிட்டி ஃபோர்ஸை அனுப்பியதைப்போல இலங்கைக்கும் அனுப்பவேண்டும் என்று அந்த மெமோரண்டத்திலே எழுதிக் கொண்டு போனார்கள். அதிலே கையெழுத்துப் போட்ட இந்திரா காங்கிரஸினுடைய அன்றைய தலைவர்—இன்றைய தலைவர் (தமிழ்நாடு கிளை) கையெழுத்துப் போட்டுவிட்டு சொன்னார்கள், ஐ.நா. மன்றத்திற்குப் போவதெல்லாம் பிரயோசனம் இல்லை என்று. பிறகு ஏன் கையெழுத்துப் போட்டார்கள். படிக்காமலே கையெழுத்துப் போட்டார்களா? அப்படிச் சொல்ல முடியாது. விவரம் தெரியாமல் கையெழுத்துப் போட்டிருப்பார்களோ என்றால் அப்படியும் சொல்ல முடியாது. அவர் தமிழனாகப் பிறந்தாலும் இங்கே தமிழகத்திலே இருந்தாலும் அவர்கள் நிலை அதுதான்.

ஐ.நா.விலே ஒருநாள் ஒருபொழுதாவது இந்தப் பிரச்சினை குறித்து பேசப்பட்டிருக்கிறதா என்று கேட்டால் இல்லை. அகதிகள் பிரச்சினை பற்றி பேசுகிறோம் என்று அந்த சப் கமிட்டி சொல்லிவிட்டு வந்துவிடுவதாலே பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. எனவே இராணுவத்தை அனுப்பக்கூடிய காரியத்தைச் செய்ய வேண்டும். ரொம்ப விவரம் தெரிந்தவர்கள், பெரியவர்கள் கேட்கிறார்கள், அப்படிச் செய்தால் உலக யுத்தம் வந்து விடாதா என்று. ஆப்கானிஸ்தானத்திலே சோவியத் ரஷ்யா இராணுவத்தை அனுப்பி நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அப்போது உலக யுத்தம் வந்துவிட்டதா? இதற்கு மேல் இதில் போகவில்லை. ஒன்றை நான் கேட்கிறேன்.

நாளைக்கு இராமேஸ்வரத்தை இலங்கைக்காரன் கைப்பற்றிக் கொண்டால், சீனாக்காரன் கல்கத்தாவைக் கைப்பற்றிக் கொண்டால், டெல்லியைப் பாகிஸ்தான்காரன் கைப்பற்றிக் கொண்டால் அப்போது உலக யுத்தம் வந்துவிடுமே என்று கருதி இந்தச் சர்க்கார் அமைதியாக இருக்குமா? ஆகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு திரு. அமிர்தலிங்கம் அவர்களே தெளிவாகச் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். அவர் சாந்தத்திற்குப் பேர் போனவர். இராணுவத்தை அனுப்புவதைத் தவிர வேறு வழியில்லை என்று அவரே சொல்லிக் கொண்டிருக்கிறார். தொண்டனாக இருந்து வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிற துர்பாக்கியமான நிலையில் தமிழ்ச்



1985 மார்ச் 11] [திரு. அ. ரகுமான்கான்]

சமுதாயத்தில் பிறந்த சிலர் தொண்டனாகவே இருந்து காலம் கடத்துகின்ற ஜீவன்களாக இருக்கின்றனர். அவர்களுடைய வாக்குகளைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. ஆகவே இந்த அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை சரியானதல்ல; மத்திய

(முற்பகல் 10.50)

சர்க்கார் அணுகு முறை சரியானதல்ல. இன்னும் தெளிவாகச் சொல்கிறேன், இராணுவத்தை அனுப்ப முடியாது, வெறும் பேச்சு வார்த்தையினாலே இந்தப் பிரச்னை தீரும் என்று சொன்னால், அதற்குள் தமிழர் சமுதாயமே அங்கே இருக்கப் போவதில்லை. எனவே ஒட்டுமொத்தமான முடிவை இந்த அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொன்று. இந்த ஆளுநர் உரையிலே வருத்தத்திற்குரியது, மாநகராட்சித் தேர்தல் பற்றி குறிப்பிடாதது. ஊராட்சித் தேர்தல், ஊராட்சி ஒன்றியத் தேர்தல், நகராட்சி, மாநகராட்சி தேர்தல்கள் பற்றிய குறிப்புகளே இல்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் இங்கே பேசினார். நல்லவேளை, புயலுக்குத் தப்பிய மாமாக, அனுதாபப் புயலுக்குத் தப்பிய மாமாக நான் இங்கே வந்து சேர்ந்திருக்கிறேன். எனவே ஞாபகத்தோடு அந்தப் பேச்சின் பகுதியைக் கொண்டு வந்திருக்கிறேன். நான் அதை வாசிக்க தாங்கள் அனுமதி கொடுப்பீர்கள் என்று நம்புகிறேன். முதலமைச்சர் பேசியதாவது; 'இட ஒதுக்கீட்டை எதிர்த்துத் தொடரப்பட்டுள்ள வழக்கில் உச்ச நீதிமன்றம் தேர்தலுக்குத் தடை விதித்தால், முன்பிருந்த நிலையின் அடிப்படையில் தேர்தலை நடத்துவோம்' என்று முதல்வர் புரட்சித் தலைவர் கூறினார். 'சட்டசபையில் இன்று தேர்தலைப் பற்றி ரகுமான் கான் கூறினார். அதற்கு முதலமைச்சர் சொல்லியிருக்கக்கூடிய பதில்' என்று அப்பொழுது பத்திரிகையில் வந்திருக்கிறது. இது கடந்த முறை சொன்னது. கடந்த முறை மட்டுமல்ல, 7 வருஷமாக, நாம் இந்தச் சட்டசபைக்கு எப்பொழுது வந்தோமோ, அப்போதிலிருந்தே சொல்லிக் கொண்டு வருகிறோம். அப்போது மதிப்பிற்குரிய அருமை நண்பர்

திரு. காளிமுத்து அவர்கள் அத்துறை அமைச்சராக இருந்தார். அதற்குப் பிறகு திரு. குழந்தைவேலு அமைச்சராக இருந்தார். இப்பொழுது திரு. சௌந்திரராஜன் அமைச்சராக இருக்கிறார். இங்கே பேசுவதற்கு நாங்கள் இருக்கிறோம். குறைகளைக் கேட்பதற்கு மாநகராட்சிக்குப் போகிறாராம். பேச வேண்டிய இடம் எது? சொல்லவேண்டிய இடம் எது? இவ்வளவு நாட்களும் குறைகளைக் கேட்பதற்கு மாநகராட்சியில் இருந்தார்களா? ஒரு நாளைக்கு மாலை 4 மணிக்கு வருகிறேன் என்று சொன்னார். என் தொகுதி பட்டாளத்தை அழைத்துக் கொண்டு போனேன். ஆளையே காணோம். இங்கே பேசுகிறோம், விவாதம் நடத்துகிறோம், குறைகளைக் கேட்க அங்கே போகிறாராம், அமைச்சர். மக்களுடைய குறைகளைக் கேட்க 3 மணிக்கு மாநகராட்சிக்கு வருகிறேன். 4 மணிக்கு மாநகராட்சிக்கு வருகிறேன் என்று சொல்கிறாரே அமைச்சர், இங்கே இருக்கிறாரா? ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு கருத்தைச் சொன்னார்கள். தற்போது விவசாய இலாகா அமைச்சராக இருக்கிற தமிழ் படித்த அமைச்சர் சொன்னார், மழைக் காலம், விவசாயிகள் ஓட்டுப் போட முடியாது என்று அடுத்து, நாகப்பட்டிணம் இடைத் தேர்தல், அது முடியட்டும், பார்க்கலாம் என்று சொன்னார்கள். அடுத்து மஸ்டர் ரோல் ஊழியர்கள் பேரில் வழக்கு இருக்கிறது, அது முடியட்டும் என்று சொன்னார்கள். அடுத்து 18 வயது ஆனவர்களுக்கு வாக்குரிமை கொடுக்க வேண்டும், கொஞ்சம் பொறுங்கள் என்றார்கள். பிறகு வார்டைப் பிரிக்க வேண்டும், கொஞ்சம் பொறுங்கள் என்றார்கள். பிறகு, பஞ்சாயத்து யூனியனை ரீ-கான்ஸ்டிடியூட் பண்ண வேண்டும், கொஞ்சம் பொறுங்கள் என்றார்கள். அடுத்து, ஆதி திராவிடர், மலைவாழ் ஜாதியினர், பெண்கள் ஆகியோருக்கு இட ஒதுக்கீடு செய்யவேண்டும், பொறுங்கள் என்றார்கள். பிறகு சுப்ரீம் கோர்ட்டிலே ஸ்டே, பிறகு கள்ள ஓட்டு போட்டு விட்டார்கள்—தி.மு.க. ஜெயித்து விட்டால் கள்ள ஓட்டாகி விடும்—கள்ள ஓட்டைத் தடுக்க அடையாள அட்டை கொடுக்கப் போகிறோம், போட்டோ எடுக்கப் போகிறோம் என்றார்கள். இந்த ஆளுநர் உரையிலே தேர்தல் நடத்துவதைப் பற்றி ஒரு வரி உண்டா? சென்ற முறை ஆளுநர் உரையிலே, தேர்தல் நடத்துவதைப்





பற்றி அறிவிப்பு வந்தபோது, அந்த அறிவிப்புக்கு என்னுடைய பாராட்டு என்று தினமணி பத்திரிகையில் திரு. சிவராமன் எழுதினார். இந்த முறை தேர்தலைப் பற்றி ஒரு வரி கூட ஆளுநர் உரையிலே இல்லை, அந்தப் பத்திரிகையில் அதுபற்றி ஏதாவது கேட்டார்களா? இந்துப் பத்திரிகையில் சொல்லப் பட்டிருக்கிறதா? ஆகவே, நான் சொல்ல விரும்புகிறேன். இவ்வளவு ஜாக்கிரதையாக இன்றைக்குக் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அது மட்டுமல்ல, நான் இன்னொன்றையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்: ஹெக்டே வாக்குறுதி கொடுத்தார், தேர்தலை நடத்த இருக்கிறார். இங்கே கொசு படுத்துகிற பாடு, சொல்ல முடியாது, குடும்பமே நடத்துகிறது. நம்முடைய முதல்வர் சொல்வார், இரத்தத்தின் இரத்தமே என்று. இரத்தத்தின் இரத்தம் நாமல்ல, கொசுதான் உண்மையில் இரத்தத்தின் இரத்தம். அது படுத்துகிற பாடு சொல்ல முடியாது. கொசு பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கு 400 பேர்களை அனுப்பி யிருக்கிறார்கள், கூவத்திற்கு; அவர்கள் இடைவிடாது வேலை செய்கிறார்களாம். நான் சொல்ல விரும்புவது, உங்களுடைய நடவடிக்கைகள். பஞ்சாயத்துக்கும் பஞ்சாயத்து யூனியனுக்கும் மாநகராட்சிக்கும் உடனடியாகத் தேர்தலை நடத்துவதாக இருக்க வேண்டும். சென்ற முறை ஆளுநர் உரையிலே சொன்னீர்கள், ஏப்ரல் 19 ஆம் தேதி, ஏப்ரல் 23 ஆம் தேதி என்று இரண்டு கட்டமாகத் தேர்தல் நடக்கும் என்று. மாநகராட்சி, நகராட்சித் தேர்தல்கள் 28 ஆம் தேதி நடக்கும் என்று தேதியைக் கூடச் சொன்னீர்கள். முதலில் வருஷத்தைச் சொன்னீர்கள்; அடுத்து மாதத்தைச் சொன்னீர்கள், அடுத்து தேதியைச் சொன்னீர்கள், அப்பொழுது நான் 'அடுத்து நேரத்தைச் சொல்லி ஏமாற்றுவீர்கள்' என்று சொன்னேன். ஏமாற்றி இருக்கிறீர்கள். என்ன காரணம்? எப்படி இருந்தால் என்ன? மக்கள் ஓட்டுப் போடுகிறார்கள், ஆட்சிக்கு வந்து விடுகிறோம். இலங்கைப் பிரச்னை இருக்கிறது. பேசுவதை இவர்கள் பேசட்டும். செய்வதை நாம் செய்வோம் என்ற நிலை இன்றைக்கு ஆட்சியாளர்களுக்கு வந்திருக்கிறது. அதுதான் உண்மை.

இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன், பஸ் கட்டணம் உயர்வு பாதகமானது. இன்னும் சொல்லப் போனால், பஸ்ஸிலே பயணம் செய்பவர்கள் டாட்டாக்கள், பிர்லாக்கள் அல்ல, ஏழை, எளிய, மத்தியதர, என்.ஜி.ஓக்கள்தான். உலக வங்கியின் நிர்பந்தத்திற்கு நீங்கள் பணியக் கூடாது. அதுவே முறையற்ற காரியம். கல்கத்தாவிற்கு உலக வங்கி கடன் கொடுத்திருக்கிறது. பம்பாய்க்கு உலக வங்கி கடன் கொடுத்திருக்கிறது. அவர்கள் பஸ் கட்டணத்தை உயர்த்தவில்லை. இன்னும் சொல்லப்போனால், பஸ் கட்டணத்தால் ஏற்படுகின்ற அந்த இழப்பை பட்ஜெட்டிலே ஒதுக்கீடு செய்து விடுகிறார்கள். ஆக பஸ் கட்டணத்தை உயர்த்துவது ஏழை எளிய மக்கள், அதிலும் குறிப்பாக சென்னை நகரத்தின் மக்கள் மீது வஞ்சம் தீர்ப்பது போன்று இருக்கும். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் மட்டும் நஷ்டம் என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. அழகிரி போக்குவரத்துக் கழகத்தில் மட்டும் நஷ்டம் என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. பாக்கி கழகங்களில் எல்லாம் இலாபம் வருகிறது. இதற்கு என்ன காரணம் என்று சொன்னால் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் கள்வர் குகை போல பல தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றைச் சரி செய்துவிட்டால் கட்டணத்தை உயர்த்த வேண்டிய அவசியம் இருக்காது.

அடுத்து இலவச மின்சாரம் கொடுப்பதாகப் பெருமையோடு சொன்னார்கள். நம்முடைய உறுப்பினர் திரு. செம்மலை, என்னுடைய அருமை நண்பர் பேசுகிறபோது, வெறும் கம்பங்களை மட்டும் போட்டார்கள் என்று சொன்னார்கள். அன்றைக்கு அமைச்சராக இருந்தவர் நம்முடைய மரியாதைக்குரிய பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள். அவர்களுடைய பாக்கியம் அன்றைக்கு மின்துறை அமைச்சராக இருந்தார். அவரைக் கேட்டால் அவரே சொல்வார். அன்றைக்குக் குந்தா இல்லையா? காடம்பாறை இல்லையா? கல்பாக்கம் அணுமின் நிலையம் கொண்டுவர முயற்சிகள் செய்யப்படவில்லையா? நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லையா? இன்னும் சொல்லப்





போனால் அன்றைக்கு டெல்லியை எதிர்த்து ஒரு மிகப்பெரிய எழுச்சி ஊர்வலம் நடைபெற்றது. மாநாட்டு கூட்டங்கள் எல்லாம் கூட அன்றைக்கு நடைபெற்று இருக்கின்றன. ஆனால் வெறும் கம்பங்களை மட்டும் போட்டார்கள் என்று இப்போது சொல்கிறார்கள். ஆதிதிராவிட காலனிகளில் மின்விளக்கு இல்லாத ஊரே இருக்கக்கூடாது என்று சொல்லப்பட்டு பல இடங்களில் அவைகள் போடப்பட்டன. 5½ லட்சம் பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்பு கலைஞர் அவர்கள் காலத்தில் கொடுக்கப்பட்டது. பல கிராமங்களுக்கும் அவை கொடுக்கப்பட்டிருக்கின்றன. கம்பங்களை மட்டும் கலைஞருடைய ஆட்சியிலே போட்டார்கள் என்று சொன்னால், அருமை சகோதரர் செம்மலை பிறப்பதற்கு முன்பே கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் அரசியலுக்கு வந்தவர்கள். அவரை நீங்கள் இங்கே சொன்னதைப் போல வெறும் கம்பங்களை மட்டும் போட்டார்கள் என்று சொல்வது கண்ணியமானதாக இருக்காது என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இலவச மின்சாரம் என்று சொல்லி இருக்கிறீர்கள். அதில் எவ்வளவு தவறுகளை செய்திருக்கிறீர்கள், பாருங்கள். ஒரு பக்கத்திலே மின்வெட்டு 50 சதவிகிதம்; அப்போது இலவச மின்சாரம் இருந்து என்ன செய்வது. கிராமங்களுக்குப் போனால் விவசாயத்திற்கு 6 மணி நேரம் பகலிலும், மதியத்திற்கு பின்னால் 6 மணி நேரம் என்று இருக்கிறது. எந்த ஊரிலேயாவது விவசாயி இரவிலே விவசாயம் செய்ய முடியுமா? நானே விவசாயக் குடும்பத்திலே பிறந்தவன்தான். விவசாயத்தைப் பற்றி ஓரளவிற்குத் தெரிந்தவன்தான். ஆகவே, இன்றைக்கு மின்வெட்டை ஏற்படுத்தி இருக்கிறீர்கள். தொழிற்சாலைகளில் மின்வெட்டு இருப்பதால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தெருவிலே நிற்கிறார்கள். விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல, இலவச மின்சாரம் என்று சொல்கிறீர்களே, அதற்கு என்ன நிபந்தனை வைத்திருக்கிறீர்கள் தெரியுமா? அதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதாவது இப்போது ஒருவர் விவசாயி என்று சொன்னால் அவர் ஒரு எருமை மாட்டை வைத்து பால் விற்று

பிழைத்தால் கூட அவருக்கு இலவச மின்சாரம் கிடையாது. விவசாயத்தைத் தவிர வேறு எந்தத் தொழிலையும் பார்க்கக் கூடாது. அப்படி செய்தால் இலவச மின்சாரம் அவருக்குக் கிடையாது. அதுமட்டுமல்ல 2½ ஏக்கர் நஞ்சை, 5 ஏக்கர் புஞ்சை என்று இருக்கிறது. அதிலே 1½ ஏக்கர் நஞ்சையாகவும், 3½ ஏக்கர் புஞ்சையாகவும் இருந்தாலும் இலவச மின்சாரம் கிடையாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுதந்திர நாள் கொடி ஏற்றுகிறபோது வறுமைக்கோட்டிற்கு கீழே இருப்பவர்களுக்கெல்லாம் இலவச மின்சாரம் என்று சொன்னார்கள். அப்போது கூட நாங்கள் கேட்டோம். வறுமைக் கோட்டிற்கு கீழே இருப்பவர்கள் எப்படி பம்ப் செட் வைத்திருக்க முடியும் என்று. கிராமங்களில் மாதம் 65 ரூபாய் அளவில் வருமானம் இருந்தால் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர் என்று இருக்கிறது. அவர் எப்படி பம்ப் செட் வைத்திருக்க முடியும்? இன்றைக்கு அதை மாற்றினீர்கள். அடுத்து 79 ரூபாய் ஆண்டிற்கு ப்ளாட் ரேட் என்று சொன்னார்கள். அதையும் நான்கு பேர்கள் பயன் படுத்துவார்கள்; 40 பேர்கள் பயன்படுத்தாமல் இருப்பார்கள். பயன்படுத்தாதவர்கள் கட்ட வேண்டிய நிலைமை ஏற்படும் என்று சொன்னபோது நம்முடைய அமைச்சர் அவர்கள் அதை மாற்றி இப்போது புதியதாக ஒன்றை அறிவித்து இருக்கிறார்கள். ஒரு ஹார்ஸ் பவருக்கு 25 ரூபாய் என்று அறிவித்து இருக்கிறார்கள். இந்த அறிவிப்புகள், பம்ப் செட்டுகள் எல்லாம் இருக்கட்டும், முதலில் மின்வெட்டை அகற்றுவதற்கு வேண்டிய பணிகளைச் செய்யுங்கள். கேட்டால் கிராமப்புறங்களில் பயாஸ்கோப் காட்டுவதைப் போல, குப்பையிலிருந்து மின்சாரம் எடுக்கப் போகிறோம், கடல் நீரிலிருந்து மின்சாரம் எடுக்கப் போகிறோம் என்று சொல்வதெல்லாம் வேண்டாம். இன்னும் சொல்லப் போனால் பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்திலே எவ்வளவு உற்பத்தி? தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் எவ்வளவு உற்பத்தி? இராமகுண்டாவிலிருந்து ஏன் பெறவில்லை? கேரளாவிலிருந்து ஏன் பெற முடியவில்லை? ஆகவே நான் கேட்கிறேன், இந்தச் சர்க்கார் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு என்ன மின்





உற்பத்தியை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்? நிலக்கரி கிடைக்கவில்லை என்று சொன்னால் எப்படிப் போராடி பெற்றிருக்கிறீர்கள்? இவற்றிற்கெல்லாம் என்ன ஏற்பாடுகளைச் செய்திருக்கிறீர்கள்? ஆகவே தொடர்ந்து மின்வெட்டு என்று சொல்லிக் கொண்டிருப்பது ஆட்சிப் பொறுப்பிற்கு வந்திருக்கக் கூடிய ஒரு சர்க்காருக்கு நல்லதல்ல.

அடுத்து குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்று சொன்னார்கள். கேட்டால் 315 கொத்தனார்களுக்கு வேலை கொடுக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். 315 கொத்தனார்களை அழைத்து 25 கொத்தனார்கள் வீதம் ஒரு இடத்தில் வைத்து தொழிற்பயிற்சி கொடுக்கிறார்களாம். கட்டுமானப் பணிகளுக்கு அனுப்புகிறார்களாம். அதற்கு வயது என்ன இருக்க வேண்டுமென்று கேட்டால் 30-க்கு கீழே வயது இருக்க வேண்டும். வேறு வருமானம் இருக்கக் கூடாது. வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்க வேண்டுமென்று கண்டிஷன்கள் இருக்கின்றன. நான் கேட்க விரும்புகிறேன், 315 கொத்தனார்களுக்குப் பயிற்சி கொடுக்கிறார்கள் என்றால் இதுதான் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கொடுக்கிற முறையா? இன்னும் சொல்லப் போனால் 14 லட்சம் பேர்கள் எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ்களில் வேலையில்லாமல் பதிந்து இருக்கிறார்கள். ஒரு கோடியே 20 லட்சம் குடும்ப கார்டுகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அப்படியென்றால் ஒரு கோடியே 20 லட்சம் குடும்பங்கள் இருக்கின்றன. இவர்களுக்கெல்லாம் வேலை உண்டா என்றால் கிடையாது.

(முற்பகல் 11-00)

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கே. அவர்கள் கூட முதலமைச்சர் பொறுப்புக்கு வந்தபிறகு வெண்மைப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது, பால் உற்பத்தி பெருகி இருக்கிறது என்று சொன்னார்கள். இதற்கு முன்னால் இப்படி இல்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். ரொம்ப சந்தோஷம். ஆனால் மாதவரம் பால் பண்ணைத் தொழிற்சாலையில் பணியாற்றிய தொழிலாளர்களை வெளியேற்றியபோது அவர்கள் கோர்ட்டுக்குச் சென்றார்கள். ஹை கோர்ட்டில் அவர்களுக்குச்

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 11

சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்பால் அக்கறை கொண்ட அமைச்சர் அவர்கள் அந்த தீர்ப்பை எதிர்த்து அப்பீல் என்ற முறையில் அந்தத் தொழிலாளர்கள் வயிற்றிலே அடிக்காமல், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை அளிக்கிறோம் என்று சொல்லுகின்ற நீங்கள், ஏற்கெனவே பணியில் இருந்த அந்தத் தொழிலாளர்களுக்கு மீண்டும் அந்தப் பணியில் அமரும் வாய்ப்பை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று அந்தத் தொழிலாளர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். ஆளுநர் உரையிலே எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு 50 ரூபாய், பி.யு.சி. படித்தவர்களுக்கு 75 ரூபாய், பட்டதாரிகளுக்கு 100 ரூபாய் உதவித் தொகையாகத் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது வறண்ட பூமிக்கு வளம் தருவதாகாது, வான் மழையாக இருக்காது; இது வறண்ட பூமிக்கு வர்ணம் காட்டுகிற வானமாகத்தான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உதாரணமாக அதற்கு சிலவற்றை எடுத்துக்காட்டுகிறேன். எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு 50 ரூபாய் உதவித்தொகை தருவார்களாம். எப்போது? எம்பிளாயிமெண்ட் ஆபீசில் பதிவு செய்து பத்து ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு 50 ரூபாய் வீதம் மூன்றாண்டுகளுக்கு மட்டும் உதவித் தொகை வழங்கப்படும். அதைப்போன்று பி.யு.சி. மற்றும் பட்டதாரிகளுக்கும் வழங்கப்படும் என்று இருக்கிறது. இந்த உதவித் தொகைப் பெறுகின்றவர் 50 ரூபாய்க்குமேல் வருமானம் உள்ளவராக இருக்கக்கூடாது. ஏதாவது ஒரு சிறு தொழில் செய்து, ஒரு தனியார் கம்பெனியில் அவருக்கு 50 ரூபாய் பாக்கெட் மணியாகக் கொடுத்தால்கூட அவர் இந்தத் தகுதியை இழந்துவிடுகிறார். இப்படிப்பட்ட நிலையில் எத்தனை பேருக்கு இந்த உதவித் தொகை கிடைக்கும்? எண்ணிப் பார்க்க வேண்டும்.



1985 மார்ச் 11] [திரு. அ. ரகுமான்கான்]

20 கிலோ அரிசி வாங்கினால் ஒரு கிலோ இனாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது சரியாக நிறைவேற்றப்படவில்லை. ஏற்கெனவே 5 கிலோ வாங்கினால் ஒரு கிலோ வழங்கப்படும் என்றிருந்தது. அப்படி என்றால் 20 கிலோ வாங்கினால் 4 கிலோ கொடுக்க வேண்டும்; அந்த ஏற்பாடு இல்லை.

அதைப்போல என்ஜி.ஓ.-க்களுக்கு போனஸ் என்று சொன்னார்கள். அதுவும் வழங்கப்படவில்லை. மேலும் என்.ஜி.ஓ.-க்களுக்கு இருவழிப் பாதை பயணச் சலுகை என்று சொன்னார்கள். இதுவரையில் தரப்படவில்லை. தொழிலாளர்களுக்கு தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதி பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. 4-வது பே கமிஷன் ரிப்போர்ட் வருவதற்குள் 300 ரூபாய் இடைக்கால நிவாரணம் என்று சொன்னார்கள். நாவலர் அவர்கள் இதை அறிவித்தார்கள். அதுவும் எல்லோருக்கும் 300 ரூபாய் கிடைக்காது. 350 ரூபாய்க்குமேல் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு 300 ரூபாய், அதற்குக் குறைவாக வாங்குகிறவர்களுக்கு 200 ரூபாய்தான். இது இலவசமாக வழங்கப்படவில்லை. நான்காவது பே கமிஷன் பரிந்துரை நடைமுறைக்கு வருகிறபோது கிடைக்கிற சம்பளத்திலிருந்து இந்தத் தொகை பிடித்துக் கொள்ளப்படும். இது என்.ஜி.ஓ.க்களுக்கு பெருத்த ஏமாற்றம், நீங்கள் அவர்களை ஏமாற்றியிருக்கிறீர்கள்.

போலீசார் சங்கம் அமைக்க உறுதி கொடுத்தீர்கள். அதற்கு ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தைப்பற்றி தொடர்ந்து இங்கே பேசிக்கொண்டிருக்கிறோம். அது முகமூடி கொள்ளை பற்றியது. இதுவரை முகமூடி கொள்ளையர்களைக் கண்டு பிடிக்க சரியான ஒரு நடவடிக்கை இல்லை. கடந்த 11-ந் தேதி கூட மதுரவாயல் என்ற இடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒரு போலீஸ் அதிகாரி இறந்துபோனார். அதனால் மக்கள் பதட்டமடைந்திருக்கிறார்கள். அதுபற்றி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் 'They live in constant fear of masked decoits.' என்று எழுதியிருக்கிறார்கள். எந்த நேரத்திலும் டெக்காயிட்ஸ்-அதாவது இந்த முகமூடி கொள்ளையர்கள் தங்களைத் தாக்கக்

கூடும் என்று பயந்து கொண்டிருக்கிறார்கள். பயந்து கொண்டிருக்கிற மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை. குறிப்பாக புறநகர் பகுதிகளிலே இருக்கிற மக்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. போலீஸ் கமிஷனரிடம் சொன்னால் அவர் சொல்கிறார், அமாவாசை அன்றுதான் இத்தகைய திருட்டு நடக்கிறது என்று. இதைச் சொல்வதற்கு போலீஸ் கமிஷனர் தேவையில்லை; ஐயர் போதும்.

இன்னொரு பிரச்சினை. வக்கீல்களை போலீசார் இன்றைய தினம் அடிக்கிற நிலைமை இருக்கிறது. இப்படி சாத்தூரில் ஒரு வக்கீல் தாக்கப்பட்டிருக்கிறார். அதைப்போன்று நாகர் கோவிலில் ஒருவர் அடிக்கப்பட்டு, 'ஹாண்ட் கஃப்' போட்டு இழுத்துச் செல்லப்பட்டிருக்கிறார். இதை ஹை கோர்ட் கண்டனம் செய்திருக்கிறது. இந்த நாட்டிலே சட்டம் ஒழுங்கு எந்த அளவுக்குக் கெட்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணம்.

அதைப்போன்று நெய்வேலியில் பத்திரிகை நிருபர்களை போலீசார் தாக்கியிருக்கிறார்கள்; எஸ்.பி. தாக்கியிருக்கிறார். இதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை. நேற்றுகூட ஆளுநர் குரானா அவர்கள் சொன்னார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து புகார் கொடுத்தால் போலீஸ் அதிகாரிகள் கண்ணியத்தோடு நடந்து கொள்ள வேண்டும்; நம்பிக்கையோடு காவல் துறை இருக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். நாங்குநேரி போலீஸ் நிலையத்திலே மங்கலதன்ராஜ் என்று ஒரு இன்ஸ்பெக்டர் இருக்கிறார். 1984 ஆம் வருடம் ஒரு சிவில் மேட்டர் சம்பந்தமாக பாதுகாப்பு கேட்டு புகார் கொடுக்கச்சென்ற ஒரு பெண்ணை அந்த போலீஸ் ஸ்டேசனிலே வைத்து, — பெயர் சுப்புலட்சுமி, மூலைக் கரைப்பட்டி, திருநெல்வேலி ஜில்லா — கற்பழித்திருக்கிறார்கள். அந்தப் பெண் எஸ்.பி. இடத்திலே புகார் கொடுத்து, சப்-கலெக்டர், சேரன்மாதேவி அவர்கள் விசாரித்து, ரிப்போர்ட் எல்லாம் வந்து விட்டது. ஆனால் சிலருடைய தலையீட்டின் காரணமாக, —





ஆளும் கட்சியிலே இருப்பவர்களின் தலையீட்டின் காரணமாகவோ, என்னவோ, எனக்குத் தெரியாது—நடவடிக்கை எடுக்காமல் குற்றவாளி தப்பித்துக் கொண்டிருக்கிறார். காவல் நிலையத்திலே புகார் கொடுக்கப் போன ஒரு பெண்ணை கற்பழிக்கின்ற காட்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டு இருக்கின்றன.

அதைப்போலவே இன்னும் ஒரு சம்பவத்தை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய போலீஸ் அதிகாரி, டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் மோகன்தாஸ், உங்களுக்குத் தெரியும். அவரை திடீரென மாற்றினார்கள். எதற்கு மாற்றினார்கள் என்று சொன்னால், தலைமைச் செயலகத்திலே, நிர்வாகப் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறைக்கு அவரை மாற்றினார்கள். அவரை மாற்றியது யார் என்று தெரியவில்லை. நிர்வாகக் காரணம் என்று சொல்லலாம். முதலமைச்சர் அமெரிக்காவில் இருந்த நேரம் அவருடைய அனுமதியோடு செய்யப்பட்டது என்று சொல்லலாம். ஆனால் வந்தவுடனே முதலமைச்சர் அவர் அந்த உத்தரவை ரத்து செய்கிறார். அவரைப்போல ராதாகிருஷ்ணன், டி.ஜி.பி. யாக இருந்தவர். அவர் டைரக்டர் ஆப் விஜிலன்சுக்கு மாற்றப் படுகிறார். ஆனால் அவரைப் பொறுத்தமட்டிலும் அவர் அப்படியே இருக்கிறார். ஆனால் மோகன்தாசைப் பொறுத்த மட்டிலும் உடனடியாக மாற்றப்படுகிறார். நான் கேட்க விரும்புகிறேன். மோகன்தாஸ் அவர்கள் டி.ஐ.ஜி. யாக இருந்தவர், ஐ.ஜி. ஆக இருந்தவர். பிறகு டி.ஜி.பி. யாக ஆனார். ஆகவே நான் கேட்க விரும்புகிறேன். இந்த உத்தரவு மாற்றம் ஏற்பட்டு இருக்கிறதே, இந்த மாற்றத்தைப் போட்டது யார்? இரண்டாவது, அவரை மாற்ற வேண்டிய அவசியம் என்ன? நிர்வாகக் காரணம் என்று சொன்னால் அது ஒரு முறையாக இருக்க வேண்டாமா? நான் கேட்கிறேன். ஏற்கனவே உத்தரவு போட்டும் இந்த அதிகாரி பழையபடி அந்த இடத்திற்கு வந்துவிட்டாரே. இப்போது உத்தரவு போட்ட அந்த மந்திரியை இந்த அதிகாரி மதிப்பாரா? அந்த மந்திரி முகத்திலே இவர் விழிக்க விரும்புவாரா? நான் கேட்க விரும்பு கிறேன். இந்த நிர்வாகக் கோளாறுகளுக்கு எல்லாம் காரணம் என்ன என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே நான் இன்னொரு முக்கியமான விஷயத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ராணிமேரி கல்லூரியிலே படிக்கின்ற 2 ஆயிரம் பெண்கள், அங்கே கழிப்பிட வசதியில்லை, நாற்காலியில்லை, மேஜையில்லை, குடிநீர் வசதியில்லை என்று சொல்லி, இன்றைய போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதை நீங்கள் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே இன்னொன்றையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ராஜராஜ சோழன் பற்றி அவமானமாகவும், கலைஞர், முன்னாள் பிரதமர் இந்திராவைப் பற்றி அவமானமாகவும் பாடிய கவிதை வரிகள்—இன்குலாப் என்ற ஒருவர் பாடியிருக்கிறார். அதைப் பாட புத்தகமாக வைத்திருக்கிறீர்கள். அதேபோல பூர்ணிமா–பாக்கியராஜ் திருமணத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுது என்று கல்லூரியிலே கேட்ட நிலைமைகள் எல்லாம் இருந்தது. அதை நாங்கள் கண்டிக்கச் சொன்னோம். கருத்துச் சுதந்திரம் இருக்கலாம். ஆனால் இங்கே சொல்லியிருக்கக் கூடிய முறை, மிகவும் அசிங்கமாகவும், ஆபாசமாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இல்லை. எனவே அமைச்சர் அவர்கள் அதை பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் உங்கள் அனுமதியோடு ஒன்று சொல்ல விரும்புகிறேன். அம்பாசங்கர் என்பவரை நீங்கள் பிற்பட்ட நலக் குழுவிற்குத் தலைவராகப் போட்டீர்கள். ரிப்போர்ட் வந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன். அந்த அறிக்கையிலே நான் கேள்விப் படுகிறேன். உங்களுக்கு எப்படித் தகவல் தெரியும் என்று கேட்டு, பால் கமிஷன் அறிக்கை எப்படி வந்தது என்று வழக்கு போட்டது போல, இதற்குப் போடமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு நான் சொல்ல விரும்புகிறேன். அவர் இந்து பத்திரிகையிலே ஒரு பேட்டி கொடுத்திருந்தார். அதைப் பார்த்தாலே தெரிகிறது. சோசியலி அன்ட் எஜுகேசனலி என்று சொல்லக்கூடிய அடிப்படையை விட்டுவிட்டு, பொருளாதார அடிப்படையிலேதான் பிற்பட்டவர்கள் என்று கணக்கெடுத்துக் கொண்டு—பழையபடி வேதாளம் முருங்கை மரத்திலே ஏறியது என்று சொல்வதைப் போல நிலைமை ஆகிவிடாமல்—இருப்பதாகத் தெரிகிறது. இன்றைக்கு இங்கே இருக்கக்





கூடியவர்களில் பல பேர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப் பட்டவர்கள். பலர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் சட்ட மன்ற உறுப்பினர்களாகவும், டாக்டர்களாகவும், எஞ்சினியர் களாகவும் கலெக்டர்களாகவும் இருக்கிறார்கள் என்று சொன்னால் அது தந்தை பெரியார் போட்ட பிச்சை. இன்னும் சொல்லப் போனால் நீதிக்கட்சி வழங்கிய நன்கொடை. எனவே இந்தச் சமுதாயம் பொருளாதாரத்திலே முன்னேறியிருந்தாலும், இன்றைக்கு சமுதாய ரீதியாக இன்னும் பிற்பட்ட நிலையிலே தான் இருக்கிறது. எனவே இந்தச் சமுதாயம் மேலும் உயர வேண்டுமானால், இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். வேலைவாய்ப்புகளிலும், கல்வி நிலையங்களிலும், எப்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கு இன்னும் இட ஒதுக்கீடு அவசியம் என்று கருதுகிறோமோ அதைப்போல, பிற்படுத்தப் பட்ட மக்களுக்கும் இது அவசியமாக இருக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆளுநர் உரையிலே விவசாயிகளைப் பற்றியும், மற்றும் உள்ள பிரச்சனைகளைப் பற்றியும். . . . . (மணியடிக்கப் பெற்றது.)

(முற்பகல் 11.10)

*திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு பேரவையின் அவைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 8 ஆம் நாள் தமிழக ஆளுநர் அவர்கள் இந்த அவையில் ஆற்றிய உரையின்மீது நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது வழிமொழிந்து உரையை நிகழ்த்தவும் வாய்ப்பு அளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே எனக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள், அவர்களுக்கே உரிய பாணியிலே சில கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். இங்கே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் கட்சியும் இணைந்த கூட்டிற்குக் கிடைத்த வெற்றிக்குக் காரணம், மதுவிலக்கா,

விலைவாசியா, சட்டம் ஒழுங்கா, மூடிய தொழிற்சாலைகளைத் திறந்ததா, லஞ்சம் ஊழல் அற்ற சர்க்காரா, என்.ஜி.ஓ. போனஸ் அறிவிப்பா, அல்லது போலீஸ் பிரச்சினைகளா எது என்று கேட்டார்கள்?

எங்கள் கட்சிக்குக் கிடைத்த வெற்றி, சத்தியத்திற்குக் கிடைத்த வெற்றியாக, நீதிக்குக் கிடைத்த வெற்றியாக, தர்மத்திற்குக் கிடைத்த வெற்றியாகவே, லட்சிய கட்டுறவிற்குக் கிடைத்த வெற்றியாகவே, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் போல் நாங்கள் ஆட்சி செய்ய மாட்டோம், மிக நல்ல ஆட்சி புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் மலரும் என்ற நம்பிக்கையில் எங்களுக்குக் கிடைத்த வெற்றியாகவே நாங்கள் கருதுகிறோம் என்று அவருக்கு நான் பணிவன்போடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். 2 இடங்களிலே பாராளுமன்றத்திலே வெற்றி பெற்ற நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத்தைச் சொன்னார்கள். இரண்டு இடங்களிலே பாராளுமன்றத்திலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இடத்தைப் பிடித்த நேரத்தில், நீங்கள் ராஜினாமா செய்ய வேண்டும் என்று அப்போது சொன்னார்கள். அதற்குப் பின்னாலே இடைத் தேர்தல் நடந்தபோது, அண்ணா நகரிலும், மயிலாடுதுறையிலும் நீங்கள் வெற்றி பெற்றீர்கள். உடனேயே சொன்னீர்கள். உங்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை. எங்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது என்று சொன்னீர்கள். ஆனால், இங்கே இப்போது நீங்கள் உரை நிகழ்த்திய நேரத்தில், 'இப்போது மக்கள் உங்கள் மீது நம்பிக்கையோடு கொடுத்த வாக்குகள் அல்ல இவை என்று சொன்னீர்கள்.' உடனே அடுத்தவர் சொன்னீர்கள் 80 லட்சம் வாக்குகள் எங்களுக்கு கிடைத்திருக்கின்றன. ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகமும் குறைந்தது அல்ல என்று கருத்திலே சொன்னீர்கள்





ஓட்டம் ஓடுகிற நேரத்தில், பெரிய விளையாட்டு மைதானத்திலே ஓட்டப் பந்தயம் வைப்பார்கள். அப்படி அதிலே முதலிலே ஓடி வெற்றி பெற்ற கட்சியாக எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு அடுத்தபடியான பொறுப்பை எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற காங்கிரஸ் கட்சி பொறுப்பேற்றிருக்கிறது. மூன்றாவதாக திராவிட முன்னேற்றக் கழகம் அந்தப் பொறுப்பிலே வந்திருக்கிறது. ஆனால் நீங்கள் சொல்கிற முறைப்படி பார்த்தால், ஓட்டப் பந்தயத்திலே முதலிலே வெற்றி பெற்றவன் முதல் பரிசையும், இரண்டாவதாக வெற்றி பெற்றவன் இரண்டாவது பரிசையும் பெறும்போது, 3, 4, 5 ஆவதாக வருபவர்களின் மொத்த பாயிண்ட்ஸையும், புள்ளிகளையும் கூட்டி, அவைகளையெல்லாம் சேர்த்து, எங்களுக்கும் மக்களின் ஆதரவு இருக்கிறது என்று சொல்வது உண்மையிலேயே கேலி கூத்தாக இருக்கிறது என்று நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, மக்கள் உங்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது நடைபெற்ற தேர்தலின் முடிவு நிச்சயமாக எடுத்துக் காட்டி விட்டது. மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் அப்போலோ மருத்துவமனையிலே இருந்து அமெரிக்கா சென்றிருந்தபோது, இங்கே எதை எதையோ மாற்றுக் கட்சியினர் பேசினார்கள். நான் மெத்த பணிவன்போடு சொல்வேன், மேடைகளிலும், அரசு விழாக்களிலும் கூட சில அரசியல்வாதிகள் தவறான கருத்துக்களை உருவாக்கி, ஒரு தலைவரின் மீது என்னென்ன தவறான கீழ்த்தரமான வார்த்தைகளைக் கூறலாமோ அவ்வளவும் கூறினார்கள். ஆனால், உலக வரலாற்றிலேயே இதுபோன்று, சுகவீனமான நிலையிலே படுத்துக் கொண்டு இருந்தும், மக்கள் மத்தியிலே, தேர்தலின் போது கூட தன் தொகுதிக்குச் செல்ல முடியாமல் இருந்தும், பல ஆயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதோடு, பெருவாரியான மெஜாரிட்டியோடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மீண்டும் 3 ஆவது முறையாக தேர்ந்தெடுக்கப் பெற்றது என்றால்,

அதற்குக் காரணம் புரட்சித் தலைவர் அவர்கள் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையும், பாசமும்தான் ஆகும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் மருத்துவ மனையிலே இருந்த நேரத்தில், இந்து சமுதாயத்தைச் சேர்ந்த மக்களும், கிறிஸ்துவ சமுதாயத்தைச் சேர்ந்த மக்களும், இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த மக்களும், அவரவர்கள் வகுத்துக் கொண்ட நெறிமுறையின் அடிப்படையில், இந்து சமுதாய மக்கள் பூஜைகள் நடத்தியும், இஸ்லாமிய சமுதாய மக்கள் தொழுகை நடத்தியும், கிறிஸ்தவ சமுதாய மக்கள் ஆலயங்களில் அவருக்காக ஜெபித்துக் கொண்டும் இருந்த காட்சியை யாரும் மறக்கவில்லை. ஆகவே, இந்த சம்பவத்தைப் பொறுத்த மட்டில் இதற்கு முன்னாலேயும், உலக அளவிலே பார்த்தாலும் கூட, இப்படிப்பட்ட மக்கள் ஆதரவு கொண்டத் தலைவர் வேறு யாரும் இருந்தது இல்லை. அவர்கள் அமெரிக்காவில் இருந்து வந்த நேரத்தில், அவர் கலந்து கொள்வதற்காக ஏற்பாடு செய்திருந்த திடலில், காலை 5 ½ மணி அளவிலேயே 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அங்கே கூடியிருந்தார்கள். முந்தைய நாள் மாலையில் இருந்தே சென்று அங்கேயே தங்கி அத்தனை மக்களும் தலைவரைக் காண வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு காத்திருந்தார்கள். ஆனால், மரியாதைக்குரிய ரகுமான்கான் அவர்கள் நம்முடைய மரியாதைக்குரிய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களைப் பற்றி இங்கே சில கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். அத்தோடு இலங்கைவாழ் தமிழர்கள் பிரச்னையிலே திரு. ராஜீவ் காந்தி அவர்கள் சரியான முடிவு எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், அதற்குப் பிறகு ராஜீவ் காந்தி பொறுப்பு ஏற்க வேண்டும் என்பதற்குப் பதிலாக தமிழக அரசு இதில் ஏன் தலையிடக் கூடாது என்றும் சொல்லியிருக்கிறார்கள். மரியாதைக்குரிய ரகுமான்கான் அவர்களிடத்திலே நான் ஒன்றைக் கேட்கிறேன். 1974 ஆம் ஆண்டு வேதாரணியத்திற்கு வந்த குட்டிமணியை பிடித்துக் கொடுத்த பெருமை உங்கள் தலைவர் கலைஞர்





கருணாநிதியைச் சாரும். அப்போது 1974-லே குட்டிமணியை பிடித்துக் கொடுத்துவிட்டு, இப்போது ராஜீவ் காந்தி இதில் ஏன் தலையிடக்கூடாது என்று கேட்கிறார்கள்.

அவருக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உங்கள் தலைவர் கருணாநிதி அவர்கள் 1974-75-லே 'பாரதப் பிரதமரின் முடிவிற்கு அதை நான் விட்டு விடுகிறேன்' என்ற கருத்தைச் சொன்னார்கள். அதை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 1984-லே இதே சட்டமன்றத்தில் பட்ஜெட் உரையின் போது எடுத்து வைத்து கூறினார்கள். இந்த அரசைப் பொறுத்தமட்டில் மக்கள் நம்பிக்கை உள்ள ஒரு அரசு. மாண்புமிகு உறுப்பினர் ரகுமான் கான் அவர்கள் பேசும்போது ஊராட்சி மன்ற தேர்தல்கள், ஊராட்சி ஒன்றிய தேர்தல்கள், நகரசபை தேர்தல்கள் பற்றி குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மூன்று, நான்கு முறையாக சென்னை கோட்டையில் முதலமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தையும், கம்யூனிஸ்ட் கட்சியையும், காங்கிரசை சேர்ந்த தலைவர்களையும் அழைத்து பேசியபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் புறக்கணித்தார்கள். அவ்வாறு புறக்கணித்து சென்று விட்டு இப்போது பேசுகிறீர்கள். ஆடு நனைகின்ற நேரத்திலே ஓநாய் கண்ணீர் விட்டதை போல மக்கள் மத்தியிலே கூற்றை எடுத்துக் கூறுகிறீர்கள். ஆனால் இன்று மக்கள் ஒவ்வொரு காரியத்தையும் பார்க்கின்றபோது, இந்த அரசு தகுதி வாய்ந்த அரசு, இந்த அரசு மக்களுக்கு நன்மை செய்கின்ற அரசு என்ற அடிப்படையில் அத்தனை காரியங்களையும் ஏற்றுக்கொண்டார்கள்.

20 அம்சத் திட்டத்தை பொறுத்தவரையில், மற்ற மாநிலங்கள் செயல்படுத்த முடியாத அளவில் இந்த அரசு சீரும் சிறப்புமாக நடைமுறைப்படுத்தி காட்டிய நேரத்தில், பாரதப் பிரதமர் அவர்களே பாராட்டினார்கள். ஆக, 20 அம்சத் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்திய அரசு, தமிழக அரசு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எட்டாவது நிதிக் கமிஷன் பரிந்துரைகளைப் பற்றி சொன்னார்கள். இங்கே ஆளுநர் உரையில் எடுத்துக் கூறப்பட்ட கருத்துக்களை எங்கள் மரியாதைக்குரிய நிதி அமைச்சர் அவர்கள் மக்களுக்குப் புரிவதற்காக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். தமிழ் நாட்டு மக்கள் இதை எண்ணிப் பார்க்க வேண்டும். யாரால் இந்தத் தவறு? தமிழக அரசால் எந்தவித தவறும் இல்லை என்பதையும், கமிஷன் தான் இந்நிலைமையை உருவாக்கியிருக்கிறது என்பதையும் எடுத்துச் சொன்னதற்காக நான் ஆளுநர் அவர்களை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இங்கே எதற்கெடுத்தாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையாலாகாத்தனம், கோழைத்தனம் என்று சொல்கின்ற மரியாதைக்குரிய ரகுமான்கான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1977-லே இந்த சட்டமன்றத்திலே எந்த இடத்திலே இருந்தீர்கள்? 1980 ஆம் ஆண்டிலே எந்த இடத்திலே இருந்தீர்கள். இன்று உங்கள் நிலைமை என்ன? மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறீர்கள். இன்று பிரதான எதிர்க்கட்சியாக காங்கிரஸ் கட்சி வந்திருக்கிறது. உங்களை மக்கள் நம்பவில்லை. இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை பொறுத்தவரையில் நல்ல திட்டங்களை, ஏழை எளியவர்களுக்கு சேரக்கூடிய திட்டங்களைச் சொன்னாலும், செய்தாலும் கடைபிடித்தாலும்கூட, சில தவறுகள் சில இடங்களிலே நடந்தாலும்கூட, எதிர்க் கட்சிகள் யாராக இருந்தாலும், எதிரி கட்சிகளாக இல்லாமல், எதிர்க்கட்சி என்ற முறையிலே அவற்றை ஆளும் கட்சியினருக்கு எடுத்துச் சொல்லவேண்டியது அவசியம் என்பதைச் சுட்டிகாட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசு கொண்டு வரும் எந்த திட்டமாலும், புரட்சித் தலைவர் அரசு அதனை ஏற்று நல்ல முறையிலே நடத்தி வருகிறது குறிப்பாக, ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு திட்டம்—இதிலே நிறைய பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி கொடுத்திருக்கிறது.





இங்கே திருவண்ணாமலை தொகுதியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது ஓய்வூதியத்தைப் பொறுத்தவரையில் சரியான முறையில் அவர்களுக்கு போய்ச் சேரவில்லை என்று சொன்னார்கள். இருக்கின்ற பொருளாதாரத்தின் அடிப்படையில் இந்த அரசு, கல்விக்காகவும், நீர்ப்பாசனத்திற்காகவும் மற்றும் உள்ள துறைகளுக்கும் கணிசமான அளவு ஒதுக்கிய பிறகு, ஏழை எளியவர்களும் பயன்பெறுகின்ற வகையில், இத்திட்டத்தின் மூலமாக கூடுதல் 31,771 பேர்கள் சேர்க்கப் படுகின்றனர். இதற்கு முந்தைய அரசைப் போல் அல்லாது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரையில் ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை 2,30,488 பேர் பயனடைகிறார்கள். இப்படிப்பட்டத் திட்டத்தினை படிப்படியாக நிறைவேற்றியிருக்கிறார்கள்.

இங்குள்ள காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மத்திய அரசுக்கு சொல்லக் கூடிய நேரத்தில் சொல்லி, மாநிலங்களுக்கு கணிசமான அளவினை ஒதுக்கக்கூடிய நிலைமையை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கு கவர்னர் உரையில் ஒரு கருத்தை பார்த்தேன். ஆதரவற்றோர் 15,000 பேருக்கு செவி மடுப்புக் கருவிகள், பெண்களுக்கு கழிப்பிட வசதிகள் என்று அழகாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னால் கூட 1982-83-லும், 1983-84-லிலும் எத்தனையோ கிராமங்களில், நகரப் பஞ்சாயத்துக்களில், நகரங்களில் சிறப்பான முறையில் வசதி செய்யப்பட்டது. நான் ஒன்றை வேண்டிக்கொள்கிறேன். அவ்வளவு செய்தாலும் கூட, மைனர் பஞ்சாயத்திலே உள்ள பெரிய கிராமங்கள், மேஜர் பஞ்சாயத்திலே உள்ள பெரிய கிராமங்களில் பெண்கள் கழிப்பதற்கு வசதி அற்ற நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட கிராமங்களை அரசு பரிசீலனை செய்து அதற்காக கணிசமான தொகையை ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டுமென்று மெத்த பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. மு. ஜான் வின்சென்ட்) [1985 மார்ச் 11

(முற்பகல் 11-20)

அடுத்து, உணவுப் பங்கீட்டு முறை பொது விநியோக முறையில், ரேஷனில் 600 குடும்ப அட்டைகளுக்கு ஒரு கடை வீதம் ஏற்படுத்தி விநியோக முறையை மிகச் சிறப்பாக நடத்தி வருவதை நான் வாழ்த்துகிறேன். பாராட்டுகிறேன். இதற்கு முன்னால் உள்ள அரசு செய்யாத சாதனையாக, நல்ல திட்டமாக, சிறப்பான திட்டமாக நான் பாராட்டுகிறேன்.

மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, 1977-க்கு பின்னால், மூன்று முறையாக எத்தனையோ கடைகளை அதிகமாக திறந்தார்கள். ஆனால் ஒரே ஒரு கருத்தை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 600 கார்டுகள் என்பதை 500-ஆகக் குறைத்து, ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குக் ஒரு கடை என்ற வீதத்தில் அமைப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில ஊர்களில் 400 கார்டுகள். சில ஊர்களில் 500 கார்டுகள் தான் இருக்கின்றன. 480 கார்டுகள் என்று இருந்தால், அவர்கள் 2 கிலோமீட்டர் தூரம் சென்று பொருள்களை வாங்குவதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. அன்றாடக் கூலி வாங்குகின்ற மக்கள் மாலையில் பக்கத்திலே இருக்கின்ற ஊர்களுக்குச் சென்று, இரண்டு கிலோ மீட்டர் நடந்து பொருள்களை வாங்குவதற்குச் சென்றால் உணவுப் பண்டங்களை வாங்க முடியாமல் கடைகள் அடைக்கப்படுகின்றன. எனவே கிராமங்களில் உள்ள கடைகள் வாரத்திற்கு இரு முறை திறந்திருக்க வேண்டும். அதற்கான வழிவகை செய்யப்பட வேண்டும்.

தமிழகத்தில் நெல் கொள்முதலைப் பொறுத்தவரையில் இந்த அரசு ஊக்கத் தொகையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 15 கொடுப்பதை நான் பாராட்டுகிறேன். பிற மாநிலங்களில் இல்லாத அளவிற்கு இந்த அரசு தமிழக மக்களுக்கு, குறிப்பாக விவசாய மக்களுக்கு, அத்தனை பேருக்கும் கொடுப்பதை பாராட்டுகிறார்கள். இதற்கு முன்னால் இருந்த எந்த ஆட்சியும் செய்யாத நல்ல பல திட்டங்களை, கிராம மக்களுக்கு, குறிப்பாக விவசாய மக்களுக்கு, விவசாய மக்களின் மீது அக்கறை கொண்டு இந்த





அரசு நல்ல திட்டங்களை நிறைவேற்றியது. நடைபெற்ற தேர்தலின் ஒரு வெற்றிச் சின்னமாக புரட்சித் தலைவர் அவர்களுக்குக் கிடைத்த வெற்றி என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், குடிசைகளுக்கு மின் ஒளி கொடுக்கின்ற திட்டங்கள். கிராம மக்கள், சாதாரண மக்கள் மத்தியிலே 6 இலட்சம் குடிசை வாழ் மக்கள் இன்று பயனடைகிறார்கள் என்றால், அதற்குக் காரணம், புரட்சித் தலைவர் ஆட்சி தான். மக்களோடு பழகி, மக்களுடைய குறைகளைப் புரிந்து, அவர்களுடன் தொடர்பு கொண்டு, ஏழையாகப் பிறந்து, ஏழையாக வளர்ந்து, ஏழையாகக் காட்சியளிக்கும், மக்களுக்காக உழைக்கும் ஒரே ஒரு தலைவர், மரியாதைக்குரிய புரட்சித் தலைவர், இதய தெய்வம் என்பதை பெருமையாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில், 10 இலட்சம் விவசாயிகள் பயனடைகின்ற திட்டம் பற்றி மரியாதைக்குரிய ரகுமான்கான் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். நான் ஒரு விவசாயி என்று அவர்கள் சொன்னார்கள். விவசாயிகளுக்காக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அந்த விவசாயிகளுக்கு 'மேக்சிமம், மினிமம்' என்ற அடிப்படையில் ரூ. 75 கொடுக்கப்படுகிறது. இதற்கு முன்னால் எந்த அரசும் செய்யாத ஒரு சாதனையை இந்த அரசு செய்திருக்கிறது. அதுமட்டுமல்ல. தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு விவசாயிக்கும் செய்யக்கூடிய நல்ல திட்டங்களைக் கொண்டு வருவதற்கு மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, விவசாயிகள் மீது அக்கறை கொண்ட ஒரே ஒரு அரசு தமிழகத்திலுள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. மக்கள் ஏற்றுக்கொண்டார்கள். இன்னும் ஏற்றுக்கொள்வார்கள்.

(திரு. மு. ஜான் வின்சென்ட்) [1985 மார்ச் 11

"5,000 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு பகுதியிலும் ஒரு சுகாதார துணை நிலையம் என்ற விதத்தில் தற்போது மொத்தம் 5,602 துணைச் சுகாதார நிலையங்கள் உள்ளன" என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டிருக்கிறது. இந்த நிலையங்கள் கிராம மக்கள் அடிப்படையில் கட்டப்பட்டிருக்கின்றன. இங்கே நாம் தூரத்தைக் கணக்கெடுக்க வேண்டும். சில சிறிய ஊர்களில் 5,000-க்கும் குறைவாகவும், அல்லது 3,000-க்கும் குறைவாகவும் மக்கள் இருக்கிறார்கள். அந்தப் பகுதிகளுக்கு மருத்துவ வசதி இல்லை. அதனை சீர்தூக்கிப் பார்த்து, அந்த தூரத்தை கணக்கில் எடுத்து, இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். குடிநீர்ப் பிரச்சினை பற்றி ஆளுநர் உரையில் அருமையாக ஒன்று கூறப்பட்டிருக்கிறது. புதிய கிணறுகளைப் பற்றியும், குழாய்களைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. 1977-லிருந்து இன்று வரை தமிழ் நாட்டில் நமது அரசு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, எத்தனையோ ஊர்களுக்கு போர்வெல் போட்டு, எத்தனையோ ஊர்களுக்கு எல்லாம் ஓவர்ஹெட் டாங்க் கட்டிக் கொடுத்தார்கள். ஆனால் போர்வெல் கட்டிக் கொடுக்கப்படுகின்ற இடங்களில் நல்ல தண்ணீர் உள்ளதாக இருக்க வேண்டும். போர் வெல்லில் கிடைக்கின்ற நீர், 3 மாதத்திற்குப் பிறகு, அல்லது 6 மாதத்திற்குப் பிறகு, அந்தத் தண்ணீர் எல்லாம் உப்பு நீராக மாறிவிட்டது. இது ஒரு கொடுமை. எனவே அப்படிப்பட்ட கிராமங்களுக்கு, 'ட்வார்ட் போர்டு' அதிகாரிகள் நேரடியாகச் சென்று, நல்ல நீர் கிடைப்பதற்கான உத்தரவாதம் அளிக்கும் வகையில், அதிகாரிகள் வழிவகை தேடிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்ல, குடிநீரைப் பொறுத்தவரையில் ஒரு ஊரில் உள்ள ஒரு பஞ்சாயத்தில் உள்ள இடத்தை தேர்ந்தெடுக்கிற போது என் ஊரிலிருந்து அடுத்த ஊருக்கு தண்ணீர் செல்லக் கூடாது என்று மக்கள் தடுக்கிறார்கள். ஒரு ஒன்றியத்திலிருந்து இன்னொரு ஒன்றியத்திற்கு தண்ணீர் செல்லக்கூடாது என்று மக்கள் தடை செய்கிறார்கள். குடிநீரைப் பொறுத்தவரையில் எங்கேயிருந்து தண்ணீர் எடுத்தாலும், தண்ணீர் எடுத்துச் சென்றாலும் அதை தடுக்கிறபோது உடனடியாக அரசு அதிகாரிகள் தலையிட்டு—இது மானப் பிரச்சினை



1985 மார்ச் 11] (திரு. மு. ஜான் வின்சென்ட்)

வயிற்றுப் பிரச்சினை—ஆகவே அங்கே போர் போடலாம், அந்தப் பகுதியிலே ஓவர் ஹெட் டாங்க் கட்டலாம் என்ற முறையிலே தண்ணீரை பயன்படுத்துவதற்கு அதிகாரிகள் திட்டங்கள் வரையறுத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் 23 ஊர்கள். கிராமப் பஞ்சாயத்துகளிலே உள்ள பெரிய ஊர்கள், நகரப் பஞ்சாயத்துகளிலே உள்ள பெரிய ஊர்கள் கிட்டத்தட்ட 3,000-க்கு மேற்பட்ட மக்கள் வாழக்கூடிய அந்தப் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இல்லை. இருக்கின்ற 'டுவார்டு' பம்புகளிலே வருகின்ற நீர் அத்தனையும் உப்பு நீர். அப்படிப்பட்ட இடங்களில் எந்த எந்த இடங்களிலே தண்ணீர் வசதி இருக்கிறதோ அங்கே பம்புகள் போட்டு, போர் வெல் போட்டு, ஓவர் ஹெட் டாங்க் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 1980 ஆம் ஆண்டுக்குப் பிறகு இரண்டு முறை வறட்சி ஏற்பட்டது. வறட்சியின் காரணத்தாலோ என்னவோ அங்கே அந்த நீர் உப்பு நீராக மாறிவிட்டது. அந்த 23 ஊர்களில் டோனாவூர், பெரும்பளை, மன்னார்புரம், பரப்பாடி, சிதம்பராபுரம், கண்டிகைப்பேரி போன்ற பல முக்கியமான ஊர்கள் தண்ணீருக்கு திண்டாடிக் கொண்டு இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. அரசு செலவு செய்தும் கூட பயன் அற்ற நிலை இருப்பதால் உடனடியாக அரசு தலையிட்டு அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு பின்னால் தாமிரபரணி பாசனத்தில் குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக ஒரு பெரிய ஸ்கீம் கொண்டு வரப்பட்டது. தாமிரபரணி பாசனத்தில் மூலைகரைப்பட்டியில் 15,000 மக்களுக்கு மேல் இருக்கின்ற அந்த நகரத்தில் குடிநீர் கொண்டு வருவதற்காக திட்டம் போடப்பட்டு நிறைவேற்றப் படவில்லை. கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதை உடனடியாக செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, இங்கே பேசுகின்ற நேரத்திலே மரியாதைக்குரிய உறுப்பினர் சொன்னார், அரசுக்கு எதிராக தேர்தலிலே அ.இ.அ.தி.மு. கழகத்தை போலீசார் எதிர்க்கக்கூடிய நிலைமையைப் பற்றி சொன்னார்கள் அதற்கு ஒரு குறளை வெகு அழகாக எடுத்துச் சொன்னார்கள். திரு. ரகுமான்கான் அவர்கள்

சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொன்னார்கள். அதற்கு யார் காரணம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தேர்தல் 24 ஆம் தேதி நடைபெற்றது. அரிசன மக்கள் வாழை 3 ஆயிரம் வாழை 23 ஆம் தேதி இரவு என் தொகுதியிலே வெட்டப்பட்டது. 3 ஆயிரம் வாழை அரிசன மக்கள் வாழை ராமமூர்த்தி கமிஷன் நடைபெற்ற சங்கனாங்குளத்திற்கு பக்கத்தில் உள்ள விஜயநாராயணம் பக்கத்தில் உள்ள ஐந்தாங்கால் வாழை. வெட்டியவர்கள் யார்? திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்லுகிறார்கள். காரணம் என்ன? 24 ஆம் தேதி தேர்தல் நடைபெற்றது. 1979-80-க்கு பின்னாலே பிரச்சினையை உருவாக்கி 82-ல் பார்வையிட்டு 1983 ஆம் ஆண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அரிசன மக்களை நேரடியாக பார்வையிட்டார்கள். சங்கனாங்குளத்தைப் பார்வையிட்ட பின்பு ராமமூர்த்தி கமிஷன் தீர்ப்பு கூறுகிறது. அரிசன மக்களுக்கு 60 லட்சம் ரூபாய் தொழில் நடத்துவதற்கு வாய்ப்பு தேடிக் கொடுக்கிறது. நடைபெற்றது என்ன? டிசம்பர் 23 ஆம் தேதி இரவு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் திசையன்விளை போலீஸ் சரகத்தைச் சேர்ந்தவர்கள், சங்கனாங்குளத்தைச் சேர்ந்தவர்கள், 3,000 வாழையை வெட்டினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். அ.இ.அ.தி.மு. கழகத்தைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட நிலைமை இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தார் வாழைகளை வெட்டினார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டை ஒரு நிகழ்ச்சியை இங்கே சொல்கிறார்கள். அப்படி திராவிட முன்னேற்றக் கழகத்தாரே அந்தக் காரியத்தை செய்ததாக இருந்தால் காவல் துறை நடவடிக்கை எடுத்து உரிய தண்டனையை அளித்திருப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருக்கலாம். அப்படி இருக்குமானால் அந்த விவரம் ஒருவேளை எங்களுக்குக் கூடத் தெரிந்து இருக்க முடியும். இங்கே ஒரு கட்சியின் பெயரைச் சொல்லி அவர்களை கிரிமினல் குற்றவாளிகளாக ஒரு சட்டமன்ற உறுப்பினர் நேரடியாக இங்கே சொல்வது சட்டமன்ற முறைக்கு உரிய ஒரு முறை அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. மு. ஜான் வின்சென்ட்: நான் அங்கே சென்றிருந்தேன். என்னோடு பல பேர்கள் வந்திருந்தார்கள். பல பேர்கள் வந்திருந்த நேரத்திலே அரிசன மக்கள் 300-க்கு மேற்பட்டவர்கள் என்னிடத்திலே வந்து சொன்னார்கள். ஐயா, சங்கனாங்குளத்தைச் சேர்ந்த ராமமூர்த்தி கமிஷன் சம்பந்தப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்குநேரி முன்னாள் ஒன்றிய செயலாளரும் * * * அதில் தலையிட்டார்கள். நாங்கள் போலீசுக்கு சொல்வோமானால் எங்களை கொன்று விடுவார்கள். ராமமூர்த்தி கமிஷனால் கூட எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று சொல்லி. . .

திரு. க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவருக்குத் தெரிந்த தகவல் என்றால் நம்பிக்கையிலே அவர் கூறலாம். ஆனால் இந்த அவையை அதற்கு அவர் பயன்படுத்துவது முறை தவறு. அதற்காக நடவடிக்கை எடுக்க உங்கள் அமைச்சர் இடத்திலே காவல் துறை இடத்திலே சொல்லி உரிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கலாம். ஆனால் சட்ட மன்றத்திலே காவல் நிலையத்திலே கூட பதிவாகாத எந்தக் குற்றச்சாட்டையும் இங்கே இடம் பெறாத திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் மீது நீங்கள் இங்கே சொல்லுவது நாட்டில் காவல் துறையே இல்லை என்றால் வேண்டுமானால் சொல்லலாமே தவிர உங்கள் ஆட்சியிலே காவல் துறை இன்னும் இருக்கிறது என்று நம்புகிற காரணத்தால் சட்ட மன்றத்தை இதற்கு பயன்படுத்துகிற முறை தவறு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

---

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(முற்பகல் 11.30)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது அவருடைய தொகுதியில் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றது என்று கூறட்டும், அதில் இவ்வளவு பேர் ஈடுபட்டார்கள் என்று எடுத்துச் சொல்லட்டும். அவர்கள் மீது வழக்கும் தொடுக்கட்டும், வழக்கு தொடுத்து தண்டனை கொடுக்கும்போது நாடும், உலகமும் யார், யார் என்று அறிந்து கொள்ளட்டும், பெயரை மட்டும் இங்கே சொல்ல வேண்டாம், நிகழ்ச்சிகளை எடுத்துச் சொல்வதில் எத்தகைய தவறும் இல்லை. குற்றச்சாட்டை சொல்ல வேண்டாம்.

**திரு. க. அன்பழகன் :** துணைத் தலைவர் அவர்களே, ஒரு குற்றச்சாட்டை, காவல் துறையிலே பதிவாகாமல் உள்ள ஒரு குற்றச்சாட்டை ஒரு கட்சியைப் பற்றி சொல்வது இந்த சட்ட மன்றத்தில் மேற்கொள்ள வேண்டிய முறைக்கு ஏற்றது அல்ல. அதைவிட ஒரு ஒன்றிய செயலாளர் பெயரை அவர் இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள். எனக்கு கூட அந்த பெயர் நினைவில் இல்லை. ஆகவே, அப்படி பெயரை குறிப்பிட்டு குற்றச்சாட்டைக் கூறுவது சட்டமன்ற முறையில் ஏற்கனவே காவல் துறையில் பதிவாகி நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்குமானால் அப்படிச் சொல்கிறபோது பொருந்தும். அப்படி இல்லாத நிலையில் அது பொருந்துமா என்பதை நீங்கள் சட்ட மன்ற நடைமுறைக்காக கவனித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்தப் பெயரை மட்டும் நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

**திரு. மு. ஜான் வின்சென்ட் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொல்லும்போது நாங்குநேரி தொகுதியில் மூலைக்கரைப்பட்டி போலீஸ் ஸ்டேஷனில் உள்ள மங்களாதனராஜ் என்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் சுப்புலட்சுமி என்பவளை கற்பழித்தார். அதிலே அரசு தலையிட்டு ஆளும்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பாதுகாப்பு கொடுத்ததாக சொன்னார்கள். நான் அதை மறுக்கிறேன். மூலைக்கரைப்பட்டி ஸ்டேஷன் அல்ல.





அவர் நாங்குநேரி இன்ஸ்பெக்டராக பணி புரிந்து அதற்கு பின்னால் எஸ்.பி. அவர்களை சஸ்பெண்டு செய்து அவர் கோர்ட்டுக்கு சென்றுவிட்டப்படியால் கோர்ட்டில் வழக்கு இருக்கும்போது அரசு தலையிடக் கூடாது என்பதை நான் தெளிவாக எடுத்து வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது அந்த கேஸ் கோர்ட்டில் இருக்கிறது என்பதை நான் அவர்களுக்கு தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே எஸ்.பி.க்கு கொடுத்த புகாரும், மெடிக்கல் சர்டிபிகேட்டில் கற்பழிக்கப்பட்டார் என்ற தகவல் அடங்கிய ரிப்போர்ட்டும் இருக்கிறது. கலெக்டர் இடத்திலே விசாரணைக்கு இருக்கிறது. மேல் மட்டத்திலே உள்ள சில முக்கிய நபர்கள் தலையிட்டு இருப்பதால் குற்றவாளிகள் தப்பிக்கும் நிலை இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, வழக்கு இருக்கிறது, தொடுத்து இருக்கிறார்கள், இன்ன இன்னார் தலையிட்டார்கள் என்று சொல்லும்போது தான் மோட்டிவ் வருகிறது. அதுதான் இல்லை என்கிறார் அவர்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட அம்மையார் என்னிடத்தில் மனு கொடுத்து இருக்கிறார்கள். அதிலே சப்-கலெக்டர் அவர்களும், எஸ்.பி. அவர்களும் எப்.ஐ.ஆர். பைல் செய்த பிறகு இன்னும் மெடிக்கல் சர்ட்டிபிகேட் வந்ததற்கு பிறகும் கூட அவர்கள் நியாயங்களை உணர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். ஆனால் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு மேல் மட்டத்திலே சில பேர்கள் தடையாக இருக்கிறார்கள் என்று பெயரை கூட என்னிடத்திலே சொன்னார்கள். நாகரிகம் கருதி, சபையைக் கருதி நான் சொல்ல விரும்பவில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆக சொல்லும் செய்திகளை எல்லாம் உண்மையாக நம்பி இந்த அவையில் சொல்லக் கூடாது என்பதுதான் முக்கியம். வழக்கு தொடுக்கட்டும், வழக்கு நடைபெறட்டும், பிறகு மேல் மட்டத்தில் தலையிட்டார்களா இல்லையா என்பதை வழக்கு மன்றம் முடிவு செய்யட்டும். இப்போது அதை மோட்டீவ் ஆக சொல்ல வேண்டாம் என்பது தான். வழக்குகள் நடக்கட்டும், தொடுக்கட்டும், அது எல்லாம் நடக்கட்டும்.

**திரு. க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலே இந்த வழக்கு நடைபெற முடியாமல் தடைப்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கிறது என்பதுதான் திரு. ரகுமான்கான் அவர்கள் சொல்லுவது. அரசின் சார்பில் முன்னவரோ அல்லது அதுபற்றி தெரிவிக்கக் கூடியவர்களோ வழக்கு நிச்சயமாக குற்றவாளிகள் மீது நடத்தப்படும் என்று சொல்வார்களானால் அதில் பிரச்சினை இல்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவர்கள் சொல்லுகின்ற பொழுது இப்பொழுது அதனுடைய முழு விவரமும் இந்த அவையிலே இருக்கிற அத்தனை பேருக்கும் முழுவதும் தெரியாது. ஆகவே, வழக்கு உள்ளபடியே தொடுக்கப்பட்டு, குற்றம் இருக்குமோயானால் முறைப்படி நடவடிக்கை எடுக்கப் படும். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இந்த அவையிலேயே அந்தக் குறிப்பைக் கொண்டு வந்துவிட்டதன் காரணமாக அதுபற்றி விசாரிக்கவோ, நீதி வழங்கவோ, முறை தவறாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அதன்படி நடைபெறும் என்பதை நான் சொல்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள் உறுதிமொழி கொடுத்தார்கள். அவை முன்னவர் விளக்கம் கொடுத்த பிறகு, நீங்களேகூட புகார்மாதிரி எழுதிக் கொடுக்கலாம் அவரிடத்தில். (குறுக்கீடு) அவை முன்னவர் ஒரு விளக்கம் கொடுத்த பிறகு, முறையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்ன பிறகு, மேற்கொண்டு அந்த விஷயத்தைப்பற்றிக் கூறுவதற்குக் காலத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம்.

**திரு. மு. ஜான் வின்சென்ட்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்தச் சம்பவம் ரிப்போர்ட் ஆகியவுடன் எஸ்.பி. சஸ்பென்ட் செய்தார்கள். சஸ்பென்ட் செய்து, அதற்குப் பின்னாலே அந்த சஸ்பென்ட் செய்யப்பட்ட சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கோர்ட்டிற்குச் சென்றுள்ளார் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஆகவே, கோர்ட்டிற்குச் சென்ற பின்பு அரசு இதிலே தலையிடக்கூடிய சூழ்நிலை இல்லை என்பதையும், அரசு அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்தார்கள் என்பதையும் நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்து, இங்கே கூறப்பட்ட ஆளுநர் உரையில், முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், 1984 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சில நண்பர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த சத்துணவுச் சாப்பிடு வதால் காக்காய் வலிப்பு வருகின்றது; இந்தச் சத்துணவை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை; அநேகம்பேர்களுக்கு வியாதி வருகிறது என்று சொன்னார்கள். ஆனால் தேர்தல் நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் சத்துணவு போடுவோம் என்று சொன்னார்கள். ஆனால் இங்கே திராவிட முன்னேற்றக் கழகம் இந்தச் சத்துணவுத் திட்டத்தைப் பற்றி விமர்சிக்கின்றபொழுது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள்

(திரு. மு. ஜான் வின்சென்ட்) [1985 மார்ச் 11

இந்தச் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தபொழுது, இது என்ன சத்துணவுத் திட்டம் என்று சொல்லி, இது பிச்சைக்காரர்கள் திட்டம் என்று சொன்னவர்கள், தேர்தல் நேரத்தில், அதை மக்கள் அங்கீகரிக்கவில்லை. 10 முதல் 15 வந்தால் உங்களுக்குச் சத்துணவு போடுவோம் என்று சொன்ன நேரத்தில், அதை மக்கள் அங்கீகரிக்கவில்லை. 10 முதல் 15 வயது வரையில் உள்ள 80 இலட்சம் குழந்தைகள் இந்தச் சத்துணவுத் திட்டத்தினால் பயனடைகின்றார்கள். இந்தத் திட்டத்தை இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களில் உள்ளவர்கள் பாராட்டுகிறார்கள். பிற தேசத்தில் உள்ளவர்கள் பாராட்டு கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்த மரியாதைக்குரிய எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்; வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கேட்டார்கள், எந்த இலட்சியத்தைக் காட்டி வெற்றி பெற்றீர்கள் என்று. இந்தச் சத்துணவுத் திட்டத்தை வைத்து நாங்கள் வெற்றி பெற்றோம் என்பதை உங்கள் முன்பாக எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீங்கள் தேர்தலைச் சந்திக்கும் நேரத்தில் ஒன்றைச் சொல்கிறீர்கள்; பிறகு இந்தச் சட்ட மன்றத்திலே ஒன்றைச் சொல்கிறீர்கள். இது என்ன சத்துணவு என்று கேட்கிறீர்கள். விவிலியத்திலே கூறப்படுகிறது. அரிசியும், மாக்கறியும்தான் சத்துணவு என்று கூறுகிறது. மற்றபடி மாமிசம், மது, முட்டை ஆகியவைகள் சத்துணவு என்று விவிலியம் கூறவில்லை. சத்துணவு என்னும்போது மரக்கறியைப் பற்றித்தான் சொல்கிறது. எனவே, இதுதான் சத்துணவு என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1 முதல் 8-வது வகுப்பு வரையில் உள்ள தகுதி படைத்தவர்களுக்குச் சீருடை கொடுக்கும் திட்டம் என்பதைப் பொறுத்த வரையில், பாரதத்தைப் பொறுத்தவரையில், தமிழக அரசின் சார்பாகக் கொண்டு வரப்பட்டிருப்பதாக மக்கள் பாராட்டுகிறார்கள்; பிற மாநிலங்களில் உள்ளவர்கள் பாராட்டுகிறார்கள்.



13634
600 008.

1985 மார்ச் 11] (திரு. மு. ஜான் வின்சென்ட்)

இப்படிப்பட்ட ஒரு திட்டத்தைக் கொண்டு வந்த மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் எங்கள் இதய தெய்வம் அவர்களை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1 முதல் 8-வது வகுப்பு வரையில் இலவச புத்தகங்கள் வழங்கும் திட்டம் இதுவரையில் எந்த மாநிலமும், எந்த முதலமைச்சரும் செய்யாத, செய்ய முடியாத ஒரு திட்டம். அப்படிப்பட்ட அருமையான திட்டத்தை நான் பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன்.

எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் குறைகளைச் சொல்வது கடமைதான் என்பதில் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. குறைகளைச் சொல்லத்தான் வேண்டும்; ஆனால் குறைகளைச் சொல்வதிலேயே காலத்தைக் கழிக்க வேண்டுமென்றால் அது மக்களுக்குச் செய்யக்கூடிய தீங்கு, துரோகம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற ஒரேயொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். 1973-ஆம் ஆண்டுக்குப் பிறகு மூன்று திட்டங்கள் வலியுறுத்தப்பட்டன; செயல்படுத்தப் பட்டன. நாங்குநேரி தொகுதியில், கொடுமுடி ஆற்று அணைத் திட்டத்திற்கு 30 இலட்சம் ரூபாய் செலவு செய்யப் பட்டது; ஆனால் அதற்குப் பிறகு அந்தத் திட்டம் செயல்படவில்லை. எனவே, அந்தக் கொடுமுடி ஆற்றுத் திட்டத்தை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-40)

அதுபோல் நம்பியாறு திட்டம். பல இலட்சக்கணக்கான விவசாயிகள் பயனடைகின்ற திட்டம் இந்த நம்பியாறு திட்டம். இந்த இரண்டு திட்டங்களாலும் விவசாயம் மட்டுமல்ல; தொழிலாளர்களுக்கான பிரச்சினைகள் தீர்க்கப்படும். அப்படிப்பட்ட திட்டங்கள் இந்த இரண்டு திட்டங்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விரண்டு திட்டங்கள் தவிர பச்சையாறு

[திரு. மு. ஜான் வின்சென்ட்] [1985 மார்ச் 11

திட்டம் என்பது ஒரு பெரிய திட்டமாகும். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலே அந்தத் திட்டத்தைச் செய்ய வேண்டும் என்று நினைத்தார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு திருமணத்திற்கு வந்த நேரத்திலே அங்கே ஒரு விழா எடுக்கச் சொன்னார்கள். அவ்வாறு சொன்னதற்காக அங்கே நாங்குனேரி முன்னாள் நண்பர் சட்டமன்ற உறுப்பினர் விழா எடுத்தார்கள். அப்படி விழா எடுத்தும் எந்தவித பயனும் இல்லை. அங்கே நோட்டீஸ் எல்லாம் அடித்தார்கள். அப்படி யெல்லாம் சொன்னதற்குப் பிறகு அங்கே ஒரு குத்துக்கல்லை நாட்டினார்கள். அதனையே அடிக்கல் என்று சொல்கிறார்கள். ஆனால் அந்தத் திட்டத்திற்கான எந்தவிதமான சர்வேயும் செய்யப்படவில்லை. அப்படி எந்த ஒரு காரியமும் நடைபெறாமல் வெறுமனே விளம்பரத்திற்காகத்தான் அந்தத்திட்டத்தைப் பற்றி அப்போது கூறினார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் காலத்திலே அடிக்கல் நாட்டப்பட்ட அந்தத் திட்டத்தை இந்த அரசு புறக்கணிக்கின்றது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சொல்கிறார்கள் அது உண்மைக்குப் புறம்பானது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டம் அங்கே வந்து அதற்குரிய அடிக்கல்லை கலைஞர் அவர்கள் நாட்டியபோது அதற்கான ரெக்கார்டு இல்லை, கோப்புகள் இல்லை. எனவே அந்தத் திட்டத்தை மீண்டும் செய்ய வேண்டும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மூன்று பெரிய திட்டங்களும் சீரிய திட்டங்களாகும். இந்தத் திட்டங்களை நிறைவேற்று வதன் மூலம் அந்தப் பகுதியிலே 170 குளங்கள் நிறைந்து அதன் மூலம் விவசாயிகள் பயனடைவார்கள். ஆகவே மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன். இந்த அரசு எத்தனையோ மக்களுக்கும், ஏழை விவசாயிகளுக்கும் நல்லதைச் செய்கின்ற அரசு, எனவே பச்சையாறுத் திட்டத்தையும், கொடுமுடியாறு திட்டத்தையும், நம்பியாறு திட்டத்தையும் விரைவிலே செய்து முடிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.



1985 மார்ச் 11]

*திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய உரையினைப் படித்த பிறகு மெத்த ஏமாற்றம் அடைந்தவர்களில் நானும் ஒருவன். ஆக்கபூர்வமான ஆலோசனைகளோ அல்லது தமிழகத்திலே உள்ள அரசியல் பொருளாதார நிலைமைகள் பற்றிய ஒரு நிதானமான ஆய்வையோ அதில் என்னால் பார்க்க முடியவில்லை. அதில் ஏதோ வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன; வாக்குறுதிகள் அள்ளி, அள்ளி வீசப்பட் டிருக்கின்றன. கடந்தகால அனுபவங்களைப் பரிசீலனை செய்கின்ற ஒரு அறிக்கையாகவும் அது இல்லை. எதிர்காலத்தில் தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்கு, ஆக்கபூர்வமான ஆலோசனைகளைச் சொல்லுகின்ற ஒரு அறிக்கையாகவும் அது அமையவில்லை என்பதை இங்கே கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தேர்தல் முடிந்ததற்குப் பிறகு இந்த ஆளுநர் உரையில் நடந்து முடிந்த தேர்தலைப் பற்றியும், தோல்வி பற்றியும் குறிப்பிடப்பட்டிருப்பதை நான் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகள் ஆளுகின்ற கட்சியினுடைய கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும் நடைமுறை களுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகள் என்று அதிலே குறிப்பிடப் படுவதை மார்க்ஸிஸ்ட் கட்சியைச் சார்ந்த நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதைப் பணிவோடு உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தேர்தல் நடந்த சூழ்நிலைகளையும் அனைத்து இந்தியாவிலும், தமிழகத்திலும் வாக்காளர்கள் எப்படி வாக்குச் சாவடிகளுக்குச் சென்றார்கள் என்பதையும் நிதானமாகப் பரிசீலிக்க வேண்டும். நான் பட்டிமன்றத்திலே பேசிப் பழக்கப்பட்டவன் அல்ல. நிதானமான பரிசீலனையைச் செய்தால் நான் சொல்வதை நிச்சயமாக நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கையோடுதான் பேசுகிறேன்.

உண்மையிலேயே 1984-ம் ஆண்டு—நான் விளக்கமாகச் சொல்லா விட்டாலும்—இந்தியாவினுடைய அரசுடைமைக்கும், இந்தியாவினுடைய இறையாண்மைக்கும் இந்திய நாட்டினுடைய ஒற்றுமைக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்ட ஒரு ஆண்டாகும். வெளிநாட்டு அச்சுறுத்தலை நான் குறிப்பிடுகிறேன். பிற்போக்கு வாதிகளும், பிரிவினைவாதிகளும் இந்தியாவிலே ஏற்படுத்திய, கடைப்பிடித்த நிகழ்ச்சிகளைப் பற்றி நான் குறிப்பிடுகிறேன். பஞ்சாப் மாநிலத்திலே நாம் பார்த்தோம்; அஸ்ஸாம் மாநிலத்திலே நாம் அதைப் பார்த்தோம்; காலிஸ்தான் கோஷத்திலே நாம் அதைப் பார்த்தோம். அன்னிய நாடுகளின், ஏகாதிபத்தியத்தின் தலையீட்டிலே நாம் அதைப் பார்த்தோம். இந்தச் சூழ்நிலையிலே இந்தியாவினுடைய ஒற்றுமை பாதுகாக்கப்பட வேண்டும்; இந்தியாவினுடைய அரசுடைமை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற தன்மைகளை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டதால் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்கெனவே கிடைத்ததைவிட அதிகப்படியான வாக்குகள் கிடைத்தன என்பது ஒரு உண்மை. நாட்டு மக்கள் உண்மையிலேயே அச்சப் பட்டுக்கொண்டிருந்த நேரம் அது. பாகிஸ்தானிலேயிருந்து படை எடுப்பு ஏற்படுமோ, இந்தியா மீண்டும் துண்டாடப்படுமோ என்ற அச்ச உணர்வை காங்கிரஸ் கட்சியும் நம்முடைய பிரதமரும் சாதுரியமாக, சாணக்கியத் தனத்தோடு பயன்படுத்தி, மக்களிடம் இந்த அச்சுறுத்தலையும் உண்மை நிலைமையையும் எடுத்துக்கூறி, அதன் விளைவாக வாக்குகளைப் பெற்றார்கள். ஆனால் யாருடைய கொள்கையினாலே இந்த நிலைமை ஏற்பட்டது என்பதற்கு விளக்கங்கள் எதிர்க்கட்சி வரிசையிலேயிருந்து போதுமான அளவிற்குச் சொல்லப்படாத காரணத்தினாலும் எதிர்க்கட்சிகளிடம் ஒன்றுபட்ட ஒருமைப்பாடு ஏற்படாத காரணத்தாலும் காங்கிரஸ் கட்சியும் அவர்களைச் சேர்ந்தவர்களும்

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இதை முழுக்கப் பயன்படுத்த முடிந்தது. ஆகவே ஒரு மகத்தான வெற்றியை அவர்கள் பெற்றார்கள். அந்த வெற்றியை ஏற்றுக்கொள்வதிலே எங்களுக்கு எந்தத் தயக்கமும் இல்லை. அது வெற்றியல்ல, அது மக்களுடைய வாக்கு அல்ல,





மக்கள் உங்களுக்கு ஆதரவு கொடுக்கவில்லை என்ற அர்த்தமற்ற வாதத்திற்கு நான் போக விரும்பவில்லை. ஆனால், நான் சுட்டிக் காட்டுவதெல்லாம், இந்த மக்கள் பண்டித நேருவுக்குக் கொடுக்காத வாக்குகளை, இந்திரா காந்திக்குக் கொடுக்காத சீட்டுகளை, காங்கிரஸ் கட்சிக்கும் உங்களுக்கும் அப்பொழுது அளித்தார்களே, அந்த மக்களுடைய மனோநிலையிலே ஏற்படுகிற மாற்றத்தை, தலைவர் அவர்களே, நீங்கள் கவனித்தீர்களானால், நான் சொல்கிற கருத்தை, மீண்டும் பெரும் அளவுக்கு விளக்கம் இல்லாமலேயே புரிந்துகொள்ளும் வாய்ப்பு உண்டு என்று கருதுகிறேன்.

ஒரு தேர்தல் முடிவு மட்டும் உங்களுடைய கொள்கைக்கு வெற்றி என்று சொன்னால், இப்பொழுது 11 மாநிலங்களிலும் தேர்தல் நடந்தது. நான் புள்ளி விவரத்திற்குள்ளேபோக விரும்பவில்லை; நேரத்தையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு சுருக்கமாகப் பேசுகிறேன். 11 மாநிலங்களிலும் 1 யூனியன் பிரதேசத்திலும் நடந்த தேர்தலைப் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்? யாருடைய கொள்கைக்கு அது வெற்றி என்று சொல்வீர்கள்? உறுப்பினர்களுடைய பதிலை நான் அறிய விரும்புகிறேன். பல மாநிலங்களுடைய தேர்தல் முடிவுகளுடைய விளக்கத்திற்கு நான் செல்லாவிட்டாலும் 1984-வது ஆண்டு பாராளுமன்றத்திற்குப் பதிவு செய்யப்பெற்ற வாக்குகளுக்கும் இப்பொழுது பதிவு செய்யப்பெற்ற வாக்குகளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. ஆய்வு செய்து எண்ணிப் பாருங்கள். உத்திரப் பிரதேசத்திலே 383 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய பாராளுமன்ற செக்மென்ட் தொகுதிகளிலே மகத்தான வெற்றி அடைந்த காங்கிரஸ் கட்சி, இப்பொழுது 271 சட்டமன்றத் தொகுதிகளில் தான் வெற்றி அடைய முடிந்தது. அதே முறையிலே சதவிகிதக் கணக்கை எடுத்துப் பார்த்தோமானால் என்றைக்கும் பார்க்காத ஒரு வீழ்ச்சியை இந்தச் சட்டமன்றத் தேர்தலிலே நாம் பார்க்கிறோம். சிக்கிம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் சஸ்காரம் பரிஷத் அடைந்த வெற்றியைப் பற்றி சிந்திக்கும்போது, அதை ஆராயும்போது, பந்தாரி அவர்கள் அடைந்த வெற்றியையும் கணக்கில் எடுத்துக் கொள்ளும்போது, 1984-வது ஆண்டினுடைய

வெற்றி உங்களுடைய கொள்கைக்குக் கிடைத்த வெற்றி என்று கூறுவதை எங்ஙனம் நியாயப்படுத்த முடியும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

ஆந்திர மாநிலத்திலே அடைந்த வெற்றியினுடைய புள்ளி விவரங்களுக்குள்ளே நான் போகவில்லை. இரண்டு ஆண்டுகளிலே 3 தடவை வாக்காளர்களைச் சந்தித்து, பாராளுமன்றத்திலே கிடைத்த வாக்குகளை விட காங்கிரஸ் கட்சிக்கு இம்முறை மிகக் கம்மியான வாக்குகள்தான் கிடைத்திருக்கின்றன.

ஆந்திர மாநிலத்தை விட்டு விடுங்கள், கர்நாடக மாநிலத்திற்கு நீங்கள் சென்றால், நம்முடைய பிரதமரும் ஆளும் கட்சியும் தங்களுடைய முழு பலத்தையும் கர்நாடக மாநிலத்திலே பயன்படுத்தினார்கள். மத்தியிலே எந்தக் கட்சி ஆளுகிறதோ அந்தக் கட்சிதான் அங்கேயும் ஆள வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். இந்த இரண்டு ஆண்டு ஹெக்டேயினுடைய ஆட்சி அராஜக ஆட்சி என்று வர்ணித்தார்கள். மத்திய அரசு முழு பலத்தையும் பயன்படுத்தி, 4 பாராளுமன்றத் தொகுதிகளிலே மட்டும் வெற்றி அடைந்த ஹெக்டேயைப் பார்த்து, உங்களுக்கு ஆட்சி நடத்துவதற்குத்தகுதி உண்டா என்று கேட்டார்கள். அந்த மாநில மக்களிடம் ஹெக்டே கொள்கையைச் சொன்னார்கள். இங்கே ஆளும்கட்சி அப்படிச் சொல்லவில்லை என்பது என்னுடைய விமர்சனம். டெல்லியிலே ஆளுகிற கட்சியும் சொல்லவில்லை, அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வும் தேர்தல் காலத்திலே கொள்கையைச் சொல்ல வில்லை. ஆனால் ஹெக்டே கொள்கையைச் சொன்னார்கள். டெல்லியிலே ஒரு ஆட்சி, இங்கேயும் அதே ஆட்சி வேண்டுமா, வாக்காளப் பெருங்குடி மக்களே நீங்கள் நிர்ணயித்துக் கூறுங்கள், நீங்கள் தீர்ப்பு கூறுங்கள் என்றுசொன்னார்கள். பிரதமர் அவர்கள் கூறுகிற கூற்றை ஒப்புக்கொள்வோமானால் பன்மொழி பேசும்படியான இந்த நாட்டிலே, பல மதங்களும், பல இனங்களும் பல கலாச்சாரங் களும் வாழ்கின்ற இந்த நாட்டிலே, ஒருமைப்பாடு எப்படிச்

(முற்பகல் 11.50)

சாத்தியம்? ஜனநாயக முறையை அமல்நடத்துகிற வழிவகைகளை செய்ய முடியுமா? ஒரு கட்சி தான் ஆட்சி





நடத்த வேண்டுமென்றுச் சொன்னால் டெல்லியிலே ஒரு கட்சி ஆட்சி நடத்துகிறதோ அந்தக் கட்சி தான் மாநிலங்களிலும் இருக்க வேண்டும். என்னுடைய ஒரு கையை பலப்படுத் தினீர்கள்; இப்போது என்னுடைய இடது கையையும் பலப்படுத் துங்கள் என்று அவருக்கே உரிய பாணியிலே பிரதமர் அவர்கள் பேசினார்கள். அதற்கு நேரடியாக ஹெக்டே அவர்களும், ஹெக்டே அவர்களுடன் சேர்ந்திருக்கிற கட்சிகளும் இந்தப் பிரச்னையை எழுப்பினார்கள். வாக்காளர்களுடைய தீர்ப்பு உங்களுக்கு தெரியாதது அல்ல. ஆகவே தான் நான் கேட்டுக் கொள்கிறேன், 1984 ஆம் ஆண்டினுடைய தீர்ப்பைப் பற்றி பெருமிதம் கொள்ளாதீர்கள். அது ஏற்பட்ட சூழ்நிலை ஒன்று. இன்றையதினம் நாட்டிலே உள்ள சூழ்நிலை வேறு. ஒருவேளை இன்றைக்கு மீண்டும் ஒரு தேர்தல் தமிழகத்திலே நடக்கு மேயானல் எத்தனை விவ்விவாக்கங்களும் எத்தனை பெரம்பூர்களும், எத்தனை எழும்பூர்களும் ஏற்படும் என்று உங்களால் சொல்ல முடியாது. அந்த ஹேஷ்யத்திற்கு நானும் செல்ல விரும்பவில்லை.

ஆகவே இந்திரா காந்தி அம்மையாருடைய கொடுமைக்குரிய கொலையையும், அதிலே ஏற்பட்ட அனுதாப உணர்ச்சியையும், இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைகளையும் பயன்படுத்தி அவர்கள் வெற்றி அடைந்தார்கள். ஆனால் சட்டமன்றத் தேர்தலில் காற்று மாறி வீசுகிறது. அரசியல் சிந்தனை ஓட்டங்களுக்கு ஒரு புதிய உருவம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்தத் தேர்தல் தெளிவு படுத்தியிருக்கிறது. இத்தகைய அலைகளை, அனுதாப அலையோ அல்லது அரசியல் அலையோ எத்தனையோ அலைகளை பார்த்தவர்கள் இந்திய மக்கள். பங்களாதேஷ் போராட்டத்தில் வெற்றி அடைந்ததற்குப் பிறகு இந்திரா காந்தி அம்மையார் வீராங்கனையாக காட்சியளித்து, 1984 ஆம் ஆண்டிலே என்.டி.ஆர். அரசு கவிழ்க்கப்பட்டபோது இமாலய மலை வெட்கித் தலை குனிகிற அளவிற்கு இந்திய நாட்டு மக்க ளுடைய அரசியல் எழுச்சியையும், உணர்ச்சியையும் கண்டதும்,

[1985 மார்ச் 11 (திரு. வி. பி. சிந்தன்)

இந்த நாட்டிலே அலை அடித்தது உங்களுக்குத் தெரியாதது அல்ல. அலைகள் வரும் போகும். இது நம்முடைய நாட்டினுடைய அரசியல் வரலாறு. அதை வைத்துக் கொண்டு சில அரசியல் கருத்துக்களை உருவாக்குவதற்கு இப்போது முயற்சிக்க வேண்டாமென்று நான் உங்களை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நான் எழுப்புகிற கேள்வியெல்லாம் இன்றைக்கு இந்தியாவிலே ஒரு போலீஸ் அரசு, ஒரு கட்சி, சர்வாதிகாரத்திற்கான முழுப் போக்குகளையும், முழு நடவடிக்கைகளையும் உருவாக்கிக் கொண்டிருக்கிற நேரத்திலே கவர்னர் உரையிலே எதையும் அதிலே குறிப்பிடவில்லை. ஆளும் கட்சியினுடைய கொள்கையை தானே கவர்னர் இங்கே எடுத்துரைக்கிறார்கள். அல்லது அரசினுடைய கொள்கையை கவர்னர் எடுத்துரைக்கிறார்கள். அரசு என்பது ஆளுகிற கட்சியினுடைய அமைப்பு. ஆளுகிற கட்சியினுடைய கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசை அவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

நான் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களைக் கேட்கிறேன். இந்தப் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களைக் கேட்கிறேன். இந்தப் போக்கை நீங்கள் பார்த்தீர்களா? என்னென்ன நிலைமைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன? ஒரு கட்சி சர்வாதிகாரத்தை நோக்கி செல்கிற போக்கு, ஒரு கட்சி தான் ஆட்சி நடத்த வேண்டுமென்று. என் கவர்னருடைய உரையிலே நம்முடைய முதலமைச்சரோ அல்லது ஆளுகிற கட்சியோ இந்தக் கருத்தைப் பற்றி குறிப்பிடவில்லை என்பதை சிந்தித்து சிந்தித்துப் பார்த்தாலும் ஒரு முடிவிற்குத்தான் என்னால் வர முடிந்தது. இன்றைக்கோ இந்தக் கொள்கைகளையெல்லாம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் காற்றிலே பறக்க விட்டிருக்கிறது என்ற ஒரு முடிவைத் தவிர, வேறு முடிவிற்கு வர முடியவில்லை. நான் மெத்த வருத்தத்தோடு பேசுகிறேன், வேதனையோடு பேசுகிறேன். எந்த மாநிலத்திலும் ஒரு கட்சி ஆட்சி என்பது இந்த நாட்டிற்கும், இந்த மண்ணிற்கும் உதவாது என்று இந்த மன்றத்திலே மரியாதைக்குரிய முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்கள் அடிக்கடி பேசுவதை அங்கேயிருந்து நான் கேட்டதுண்டு. பத்திரிகைகளிலே படித்ததுண்டு. இப்



1985 மார்ச் 11] (திரு. வி. பி. சிந்தன்)

போதும் அந்தக் குறிப்புகளை நான் எடுத்து படிக்கிறேன். ஒரு கட்சி ஆட்சி என்பது இந்தியாவிலே ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு பயன்படாது.

என்னுடைய கன்னிப்பேச்சை முதலமைச்சர் அவர்கள் கேட்கிற ஒரு நிலைமையில் இருப்பார்கள் என்று நான் எண்ணினேன். அவர்களுடைய உடல்நலத்தை வைத்து அவர்கள் இங்கே இல்லை. அவர்களை பார்த்து நான் கேட்க விரும்புகிற கேள்வி இதுதான். ஒரு கட்சி சர்வாதிகாரத்திற்கு முயற்சி செய்கிறது. அந்த கட்சியினுடன் உங்களுடைய உறவை எப்படி நீங்கள் நியாயப்படுத்துவீர்கள்? அந்த உறவுதான் எங்களுக்கு வெற்றியைத் தேடித்தந்தது என்று அரசியல் சந்தர்ப்பவாதத்திற்கு நீங்கள் செல்லக்கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள். அந்த வெற்றியை ஒரு பட்டிமன்றமாக நடத்தினால் ஒருசாரார் நிச்சயமாக எங்களால்தான் இந்த வெற்றி உங்களுக்கு கிடைத்தது என்றும், ஒருவேளை நீங்களே எங்களால்தான் அந்த வெற்றி உங்களுக்கு கிடைத்தது என்றும் விவாதிக்கக்கூடிய காட்சியை பார்க்கிற நிலைமை எங்களுக்கு இருக்கக்கூடும். அது இன்றைக்கு இல்லாவிட்டாலும் அதனுடைய அறிகுறி உண்டு. ஆனால் நாளையதினம் தமிழகத்தினுடைய அரசியல் மேடைகளில் அவை தோன்றும் என்பதில் எனக்கு சந்தேகமே இல்லை.

இன்றையதினம் 1985-ம் ஆண்டு தேர்தல் ஒரு மாற்றத்தை எடுத்துக் காட்டுகிறது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்டோம். இதிலே மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று பாராளுமன்றத்தில் எடுத்துரைத்த நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அண்ணா எங்கே, அண்ணாவின் திருவுருவப் படத்தை கொடியிலே போட்டு, அண்ணாவின் கொள்கை தான் எங்கள் கொள்கை என்று சொல்லுகின்ற ஆளும் கட்சி எங்கே என்று நான் கேட்க விரும்புகிறேன். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று நாம் கேட்பதற்கு பல்வேறு நிகழ்ச்சிகள் உண்டு. பல்வேறு அரசியல் நிகழ்ச்சிகள், பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கும் போது மத்திய மாநில உறவுகள் எவ்வாறு அமையும் என்பதை

நாம் சிந்திக்க வேண்டும். இதற்கு உங்களுடைய பதில், 8 ஆவது ஃபினான்ஸ் கமிஷன் பற்றி கூறப்பட்டிருக்கிறது. ஏழு பினான்ஸ் கமிஷன் பரிந்துரைகள் வந்த பிறகும், நான் அறிந்த அளவில், அந்த அந்த ஆண்டிலேயே கிடைக்க வேண்டிய தொகை கிடைக்கிற பழக்கம் உண்டு. ஆனால் இந்த ஆண்டு, டில்லி அரசு 1984 ஆம் ஆண்டுத் தொகை எந்த மாநிலத்திற்கும் கிடைக்காது, கொடுக்க முடியாது என்று திட்டவட்டமாக தெரிவித்த பிறகு, ஒவ்வொரு நாளும் நான் ஆவலோடு எதிர் பார்த்ததுண்டு, நம்முடைய ஆளும் கட்சித் தலைவர்கள் அல்லது அமைச்சர்கள் அதை கண்டித்துக் கேட்கமாட்டார்களா என்று.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நமக்கு வழங்கப்பட்ட தொகை, சென்ற ஆண்டு தலா வழங்கப்பட்ட தொகை 584 ரூபாய். இப்போது அது 500 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக் கிறது. இதற்கெல்லாம் ஒரு பின்னணி உண்டு என்பதை நீங்களும் அறிவீர்கள்; நானும் கவனித்து வருகிறேன். சென்ற முறை தேசீய அபிவிருத்தி கவுன்சில் கூட்டம் நடந்தபோது இதை ஒரு முக்கியமான மையமான பிரச்னையாக வைத்து, காரசாரமான விவாதம் நடந்தது திருமதி இந்திராகாந்தி அம்மையார் முன்னால் பலத்த கண்டனம் எழுப்பப்பட்டது. இந்தப் போக்கு ஒற்றுமையை வளர்க்காது என்று சொன் னார்கள். ஆனால் அந்த விவாதத்தின் மத்தியிலே நியாயமான பதில் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் பல்வேறு மாநிலங் களில் ஆளும் முதலமைச்சர்கள் வெளிநடப்புச் செய்தார்கள். அது என்ன புனித இடமா? வெளிநடப்புச் செய்தால் ஆகாயம் இடிந்து விழுந்துவிடுமோ? ஏன் வெளிநடப்புச் செய்யக் கூடாது? தமிழ்நாடு அமைச்சர் ஒருவர்தான் அந்த நிகழ்ச்சி யைக் கண்டித்து, ஒரு தீர்மானத்தை பிரேரேபித்து, முன்மொழிந் தார்.

நான் அரசியல் காழ்ப்பு உணர்ச்சியோடு இங்கே பேச வில்லை. நமக்கு வருகின்ற நன்மை, தீமைகளைப்பற்றி எண்ணிப் பார்க்காமல் கருத்துக்களை வெளியிடுகிறோம் என்பதற்காகச் சொல்கிறேன். இதிலே நம்முடைய அமைச்சர்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும். நான் நிறைய புள்ளி விவரங்களை





சேகரித்து வைத்திருக்கிறேன். நேரம் இல்லாத காரணத்தால் சுருக்கமாக சிலவற்றை மட்டும் சொல்கிறேன். நம்முடைய மாநிலத்திற்கு கிடைத்திருக்கிற நிதி ஒதுக்கீட்டைப் பார்க்கும் போது, தொழில் துறையில் எந்த அளவுக்கு நாம் புறக்கணிக்கப் பட்டிருக்கிறோம் என்பது தெரியும். நிதி நிறுவனச் செயலாள ராக இருந்த முன்னாள் செயலாளர் வெளியிட்ட ஒரு வெளியீடு என்னிடம் இருக்கிறது. "Per capita SDP in current price." என்பதில், அவர் கொடுக்கிற விளக்கத்தில், எக்கனாமிக் சர்வே 1980-81-லிருந்து கூறப்பட்டிருக்கிறது. 1960 ஆம் ஆண்டு 350 ரூபாய் தமிழ்நாட்டில் எஸ்.டி.பி. இன்றையதினம் 1,114 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அதிலே நாம் மகிழ்ச்சியடையலாம். அதேநேரத்தில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதற்கேற்ற முறையில் நம்முடைய மாநிலத்திலே இல்லை. நான் எந்தக் கட்சி, எந்த ஆட்சி என்று பார்க்கவில்லை, இருக்கின்ற நிலைமையை எடுத்துச் சொல்கிறேன்.

"பஞ்சாப் மாநிலத்தில் 374 ரூபாயாக இருந்தது இன்றையதினம் 2,088 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அதைப்போல இன்னும் பல புள்ளி விவரங்கள் கொடுக்க முடியும். எனவே நம்முடைய வளர்ச்சி மேதகு ஆளுநர் குறிப்பிட்டதைப்போல் எங்கே இருக்கிறது? கடந்த 6, 7 ஆண்டுகளாக தொடர்ந்து வீழ்ச்சிதான் வந்திருக்கிறது. வளர்ச்சி என்பது மிக மிக நாசியாக இருக்கிறது.

(நண்பகல் 12-00)

நான் இதையெல்லாம் எடுத்துக்கூறுவதற்குக் காரணம் இன்றைய நிலைமையை ஆழமாகப் பார்க்காமல், நாங்கள் வெற்றி அடைந்தோம், நீங்கள் தோற்றுவிட்டவர்கள் என்று ஆணவத்தின் அடிப்படையிலே இந்தப் பிரச்சனைகளை தயவுசெய்து பார்க்காதீர்கள். இங்கே ஆளுகிற கட்சி யார் என்பதல்ல. தமிழக மக்களுக்கு நியாயம் வழங்க முடியுமா? என்பதுதான் முக்கியமான பிரச்சினை. இந்த நிலைமை ஒருவேளை விகிதாசார பிரதிநிதித்துவம் என்ற அரிய ஜனநாயகக் கருத்தை நம்முடைய அரசியல் சட்டம் ஏற்றுக்கொண்டிருந்தால் உங்களில் இத்தனை பேர்கள் அந்தப் பக்கமும், இவ்வளவு கம்மியாக நாங்களும்,

இருக்கமாட்டோம். இந்தியாவிலும் இப்படிப்பட்ட நிலைமை இருக்கவே இருக்காது. ஆகவேதான் அரசியல் சட்டம் தயாரிக்கிற காலத்திலே அரசியல் நிர்ணய சபையிலே வீற்றிருந்த கம்யூனிஸ்ட்டுகள் இந்தக் கொள்கையை அன்றையதினம் வலியுறுத்தினார்கள். ஆளுகிற கட்சி அன்றைக்கு ஒதுக்கொள்ள வில்லை. பிறகு இதே மன்றத்திலே அண்ணா அவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள். அண்ணா தி.மு.கவும் ஆரம்பத்திலே வலியுறுத்திய கொள்கை அது. கவர்னருடைய உரையிலே இந்தக் கொள்கையைப் பற்றி ஏதாவது இருக்குமா என்று நான் பார்த்தேன். உண்மையிலே ஜனநாயகத்தைப் பாதுகாக்கிற அந்தக் கொள்கைக்கு இங்கே இடமில்லையே என்று நான் வருத்தப்பட்டேன்.

இன்று நான் அரசினுடைய பெர்மாமன்ஸ் பற்றி சொல்ல விரும்புகிறேன். நீண்ட நேரம் பேசாவிட்டாலும், தொழில் துறையிலே ஏற்பட்ட வீழ்ச்சி அன்-எம்ப்ளாய்மெண்ட், வேலை யில்லாத் திண்டாட்டத்திலே இந்தியாவினுடைய பல்வேறு மாநிலங்களிலே அதிகப்படியான வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிற மாநிலமாக நம்முடைய மாநிலம் இருக்கிறது. இப்படி கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகலிலே அதைப் பார்க்கலாம். இன்னும் மத்திய அரசு அல்லது பல்வேறு நிதி நிறுவனங்கள் வெளியிடுகிற அறிக்கையிலே எப்படி வேலையில்லாத் திண்டாட்டம், லேண்ட்லெஸ்னெஸ், வேலையில்லாத அவல நிலைமை, தமிழகத்திலே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அதைத் தடுப் பதற்கு, கவர்னருடைய உரையிலே என்ன இருக்கிறது? ஒருவேளை எனக்குப் பின்னாலே பேசுகிறவர்கள் சற்று வெளிச்சம் கொடுத்தால் ஒருவேளை என்னைப் போன்ற சாதாரண மக்களுக்கு அது பயனளிக்கும் என்று நான் கருது கிறேன்.

அதுமட்டுமல்ல. வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, வேலை கிடைக்காத காரணத்தால் தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம்





பரிசீலனை செய்யக்கூடிய ஒரு அறிக்கையாக இது அமையவில்லை என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. நம்முடைய பெர்மாமென்சிலே, தமிழக அரசினுடைய நிலைமைகளை, நடவடிக்கைகளை எடுத்துப் பார்த்தால், அது மின்வெட்டாகட்டும் அல்லது சுகாதாரமாகட்டும், 2 ஆயிரம் ஆண்டுகள் வரும்போது, அனைவருக்கும் மருந்தும், வழிகளும் ஆஸ்பத்திரிகளும் கிடைக்கும் என்று கவர்னர் உரையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். "It is a mere utopia." ஏதோ கற்பனையிலே பேசலாம். ஆனால் இன்றைய நிலைமை என்ன? மருத்துவ மனைகளைச் சென்று பார்த்தால் தெரியும், எத்தனை பேர்கள் அந்த வசதியைப் பெற முடிகிறது? குடிப்பதற்கு தண்ணீர் கிடைக்கவில்லை. நான் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதியிலே, இந்த சென்னை நகரத்துக்குப் பக்கத்திலே குடிக்கிற தண்ணீர் கிடைக்காத காரணத்தாலே, 5 கி.மீ., 8 கி.மீ. சென்று தண்ணீர் கொண்டுவரவேண்டிய நிலைமையிருக்கிறது. தெருக்கள் எல்லாம் விளக்குகள் பார்த்து 8 வருஷம் ஆகிறது. தெருவிலே நடந்து செல்ல முடியாத நிலைமைகள் உண்டு. நான் என்னுடைய தொகுதியைப் பற்றி இப்போது பேசவிரும்பவில்லை, பிறகு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் என்று காரணத்தால். ஆனால் நம்முடைய பெர்மாமன்ஸ் மிக கம்மியாக இருக்கிறது. மற்ற பல மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நம்முடைய நடவடிக்கைகளும், அரசினுடைய நடவடிக்கைகளும் மிகக் குறைவாக இருக்கின்றன, பலவீனமாக இருக்கின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆக இரண்டு பிரச்சனை களைப்பற்றியும் ஆளுநருடைய உரையிலே தெளிவான எந்தக் கருத்தும் இல்லை என்பதை நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒன்று தொழில் வளர்ச்சி. இந்து பத்திரிகை தலையங்கம் எழுதியிருக்கிறது. கவர்னருடைய உரையைப்பற்றி. அவர்கள் காணுகிற குறை இதுதான். தொழில் வளர்ச்சிக்கு என்ன திட்டம் என்று. மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பது பற்றி நாங்கள் கேட்க வேண்டும். ஆனால் இப்போது கேட்பது

(திரு. வி. பி. சிந்தன்) [1985 மார்ச் 11

எல்லாம் ஆயிரக்கணக்கான சிறுதொழில்கள் நிலக்கரி கிடைக்கவில்லை, மின்சாரம் கிடைக்கவில்லை, பிக் அயர்ன் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் மூடப்பட்டு கிடக்கின்றன. ஆனால் அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் எங்களைச் சாடும்போது, வேலை நிறுத்தத்தை தூண்டிவிடுபவர்கள், வேலை நிறுத்தத்தை உருவாக்குகிறவர்கள், உற்பத்திக்கு பங்கம் ஏற்படுத்தக்கூடியவர்கள் என்று ஆண்டுதோறும் பேசுகிற அமைச்சர்கள் இங்கே இருக்கிறார்கள். இவர்களை எல்லாம் பணிவன்போடு நான் வேண்டிக்கொள்கிறேன். இந்த 4, 5 ஆண்டுகளிலே வேலை நிறுத்தத்தாலே ஏற்பட்ட 'மேன்டேஸ் லாஸ்' அதாவது இழந்த மனிதவேலை நாட்கள் எவ்வளவு? ஆலைகள் மூடிய காரணத்தால், "இன்ஸ்டால்டு கெப்பாசிடி" யை உபயோகப்படுத்தாத காரணத்தால், பொருத்தப்பட்ட இயந்திரங்கள் யாரும் இன்று உபயோகப்படுத்த முடியாத ஒரு பொருளாதார நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அஜீரணம் பிடித்தவருடைய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. 3 ஷிப்டுகளும் ஓட்டுவதற்கு நாங்கள் தயார்.

எந்தத் தொழிற்சாலையையாவது நீங்கள் அப்படி ஓட்டுவீர்களா? பஞ்சாலையை அப்படி நீங்கள் ஓட்டுவீர்களா? அல்லது சிமெண்ட் உற்பத்தியில் அப்படிச் செய்வீர்களா? மங்கத்திலே இருக்கிற ஒரு சிமெண்ட் தொழிற்சாலை மூடிக் கிடக்கிறது. அது மட்டுமா? எத்தனை தொழிற்சாலைகள் மூடிக்கிடக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளினுடைய சீரழிவு பற்றி ஆலோசித்து, அதை புனருத்தாரணம் செய்வதற்குரிய வழி வகைகளைப் பற்றி இந்த ஆளுநர் உரையிலே ஏதேனும் குறிப்பிடப்பட்டிருக்கிறதா? இல்லை.

இரண்டாவதாக, நான் சார்ந்திருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கோணத்திலேயிருந்து நான் பேசுகிறேன், தொழிலாளர்களுடைய பிரச்னைகளைப் பற்றி, தொழிற்சங்கங்கள் எடுத்து வைக்கும் கொள்கைகளைப் பற்றி, அரசினுடைய அணுகு முறை என்ன என்பது இங்கே கூறப்படவேயில்லை. உங்களுக்கும், எங்களுக்கும் ஏராளமான மோதுதலை உருவாக்கிய ஒரு ஸ்பியர் அது. ஒரு பகுதி அது. அந்தப் பகுதியிலே உங்கள் கொள்கை



1985 மார்ச் 11] [திரு. வி. பி. சிந்தன்]

என்ன. பால்வள நிறுவனத் துறையிலேயே அதை நாம் பார்த்தோம். வேலை நிறுத்தங்கள் நடைபெறுகிற இடங்களிலேயெல்லாம் நாம் அதைப் பார்த்தோம். என்றைக்காவது நியாயங்களைக் கேட்கிற தொழிலாளர்களுடைய பக்கம் உங்களுடைய அரசு நின்றது உண்டா?

இதே சட்டமன்றத்திலே 'கேஷுவல்' தொழிலாளர்களுக்கு வேலை நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்று நல்ல எண்ணத்தோடு கொண்டு வரப்பட்டு சென்ற ஆண்டு நிறைவேற்றிய ஒரு சட்டத்தை, ஒரு திறமையான வழக்கறிஞர், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஒரு வழக்கறிஞர், அவர் பாராளுமன்ற உறுப்பினரும்கூட, அவர் ஒரு முதலாளிக்காக, உயர்நீதிமன்றத்திலே வாதாடி, அந்தச் சட்டம் செல்லுபடியாகாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்து வாரங்கள் பல ஆயிற்று. நான் அந்த லட்சக்கணக்கான கேஷுவல் தொழிலாளர்களுடைய சார்பிலே பேசுகிறேன். அவர்களுக்கு வேலையை நிரந்தரமாக்கக் கூடிய ஒரு சட்டத்தை, நீதிமன்றம் நிராகரித்தபோது, நீங்கள் அதை எதிர்த்து அப்பீலுக்கு சென்றீர்களா? அதிலுள்ள குறைகளைத் தீர்க்கும் வகையில், ஒரு ஆர்டினன்ஸைக் கொண்டு வராவது இந்தக் கவர்னருடைய அதிகாரத்தைப் பயன்படுத்தினீர்களா? இந்தப் பிரச்சினையிலே நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

மூடிய ஆலைகளைத் திறக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, இங்கே நடைபெற்ற ஒவ்வொரு போராட்டத்திலேயும் தொழிலாளர்கள் தங்களுடைய நியாயத்திற்காக போராடும்போது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு அந்தத் துறையிலே எந்த ஒருகொள்கையும் இருப்பதில்லை. இருக்கின்ற இந்தப் பிரச்னைகளை தீர்த்து வைப்பதற்கு என்று, தொழிற் தகராறுகளை தீர்த்து வைப்பதற்கு என்று ஒரு இலாக்கா உண்டு. தொழிலாளர் இலாக்கா. தொழிலாளர் நல இலாக்கா என்று நான் சொல்ல மாட்டேன். தொழிலாளர் இலாக்கா என்றுதான் சொல்வேன். அந்த இலாக்காவை என்றைக்காவது சுயேச்சையாக பணியாற்றும்படி நீங்கள் அனுமதித்தது உண்டா? உங்களுடைய விருப்பு வெறுப்பின் அடிப்படையிலே நீங்கள் சில சமயம் பிரச்னைகளில் தலையிடு

வீர்கள். இப்படித்தான் தீர்மானம் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்துவீர்கள். அதன் விளைவாக எத்தனை சிக்கல்களும் எத்தனை நஷ்டங்களும் ஏற்பட்டன? இன்றைக்கும் நாங்கள் சொல்கிறோம், இந்தப் பிரச்சனைகளை தீர்க்க வேண்டும் என்று. தொழிற் சங்க உரிமை என்பது ஜனநாயகத்தினுடைய இன்றியமையாத ஒரு பகுதி என்று அந்தப் பக்கத்திலேயிருந்து ஒரு அறிவிப்பு வரவேண்டும் என்று விரும்புகிறவன் நான். ஆனால், தொழிற் சங்கம் என்று சொன்னாலே அல்லது தொழிற் சங்கம் நியாயம் கேட்டால், தொழிலாளர்கள் நியாயம் கேட்டால், போலீஸ்காரர்கள் சங்கம் வைத்தால், என்.ஜி.ஓ.-க்கள் தங்களுடைய நியாயத்தைக் கேட்டால், அரசு ஊழியர்கள் நியாயத்தைக் கேட்டால், அதை ஏதோ ஒரு செடிஷன் போல, ராஜத் துரோகத்திற்கு ஈடுபட்டு குற்றம் செய்தவர்களைப் போலத்தான் அவர்களை ஆட்சியாளர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மின்சார வாரியத்திலே ஆயிரக்கணக்கானவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. கணவனையும், மனைவியையும் பிரிக்கக் கூடாது, அதுவும் குறிப்பாக அரசு பணியிலே ஈடுபட்டுள்ள கணவனையும் மனைவியையும் பிரிக்கக் கூடாது என்று அரசு ஆணை இருந்தும், ஆயிரக்கணக்கான ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இன்று போக்குவரத்துத் துறையிலே என்ன நியாயம் கடைபிடிக்கப்படுகிறது? எந்த ஒரு நியாயமாவது உண்டா? தொழிற் தகராறுகளை தீர்த்து வைப்பதற்கு ஐ.எல்.ஓ. சில முன்வழிமுறைகளை உருவாக்கியிருக்கிறது. எடுத்துக் கோடிட்டுக் காட்டியிருக்கிறது. அதை நீங்கள் கடைபிடிக்கிறீர்களா? நீதிமன்றங்கள் கொடுக்கிற தீர்ப்புகளுக்காவது நீங்கள் தலை வணங்குவது உண்டா? இந்த நேரத்திலே நான் அவைகளையெல்லாம் பட்டியல் போட்டு காட்டுவதை விட, அந்த கொள்கைகளிலே ஏதாவது மாற்றம் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். மாற்றம் உள்ளதாக கவர்னர் உரையிலே குறிப்பிடப்படவில்லை. அந்த மாற்றம்





இருக்க முடியுமா? இருக்குமா என்று தான் நான் கேட்க ஆசைப்படுகிறேன். அந்த மாற்றத்தை நான் விரும்புகிறேன். அந்த மாற்றம் உண்டாக வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ் இலாக்காவைப் பற்றி நான் கொஞ்சம் பேச வேண்டும். தமிழகத்திலே கடந்த 4 ஆண்டுகளாக, நாங்கள் நிதானமாக ஸ்டடியாக கவனித்துச் சொல்கிறோம், ஆளுகின்ற கட்சியினுடைய அலுவலகங்களாகத்தான் போலீஸ் நிலையங்கள் வேலை செய்கின்றனவே தவிர, ஏழை எளிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, உழைப்பாள பெருமக்களுக்கு, நியாயம் வழங்குகிற காவல் நிலையங்களாக போலீஸ் நிலையங்கள் தமிழகத்தில் இல்லை. லஞ்சத்தைப் பற்றி, ஊழலைப் பற்றி நான் பேசவில்லை. இருந்தாலும் கிளீன் அட்மினிஸ்ட்டிரேஷன் என்று கவர்னர் உரையில் சொல்லப் பட்டிருக்கிறதே, அது என்ன கிளீன் அட்மினிஸ்ட்டிரேஷன்?

ஒரு சாதாரண குடிமகன் போலீஸ் நிலையத்திற்கு சென்றால், அவனை உட்கார வைத்து, உங்களுக்கு என்ன சொல்ல வேண்டும் என்று பொறுமையோடு கேட்கிற நிலைமை இங்கே ஏற்படுமா? மிகப் பெரிய மெஜாரிட்டி கிடைத்திருக்கிறது. உதவி செய்வதற்கு இன்னும் ஒரு பெரிய சக்தி இங்கே இருக்கிறது என்ற ஆணவத்தின் அடிப்படையிலே இந்தப் பிரச்னைகளை நீங்கள் பார்க்க வேண்டாம் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இன்னும் ஒரு கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன். ஆளுகின்ற கட்சி பலமான கட்சி. ஆனால், முதலமைச்சர் அவர்கள் நோயால் படுத்திருந்தபோது அந்தக் கட்சியினுடைய லட்சணத்தை எல்லாம் நிர்வாணமாகப் பார்த்தவர்களாயிற்றே நாங்கள். 62 இங்கே இருக்கிறது—உங்களுடைய 62-ம் என்று பேரம் பேசப்பட்ட கட்சி. தமிழ் வார்த்தைகளிலே உபயோகப்படுத்தப்படக்கூடாத வார்த்தைகளையெல்லாம் பரஸ்பரம் அள்ளி அள்ளி வீசிய கட்சி. நீங்கள் பலத்தைப் பற்றி பேசுகிறீர்கள்.

(திரு. வி. பி. சிந்தன்) [1985 மார்ச் 11

(பிற்பகல் 12.10)

உங்களுடைய கொள்கைகளுக்கு தமிழகம் ஆதரவு கொடுத்ததாக நீங்கள் சொல்கிறீர்கள். என்னென்ன பேசப்பட்டது என்பது உங்களுக்கு தெரியாதது அல்ல. இந்த நெருக்கடியான நேரத்திலே, இந்தப் பிரச்சனைகளையெல்லாம் நாங்கள் கிளப்புவதற்கு காரணம் ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையில் தான் என்பதை சொல்லிக்கொள்கிறேன். இந்தியா முழுவதிலும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்றும், ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் பேசுகின்ற ஒரு நேரத்தில் அதை ஒத்து செல்கின்ற ஒரு அரசியல் கொள்கையை நீங்கள் வகுப்பீர்களா? ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பது 4 மாதமாக தமிழகத்திலே ஆட்சி நடத்துகின்ற அமைச்சர்கள் அல்ல. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள். கட்சியோ சீர்குலைந்து இருக்கிறது. அதுமட்டுமல்ல. இங்கே நடைபெற்ற அக்கிரமங்களை பட்டியலாக நான் சொல்லாவிட்டாலும், நான் சார்ந்திருக்கின்ற தொகுதியினுடைய கோரிக்கைகளை நான் எடுத்துக் கூறினேன். இந்த சென்னை நகரத்திலே, பஸ் கட்டண உயர்வுக்காக ஒரு முடிவினை அரசு எடுத்ததாக அறிவித்திருக்கிறது. நான் விவாதத்திற்கு செல்லவில்லை. அந்த அறிவிப்பிற்கு ஆட்சேபனை இருந்தால் தெரியப்படுத்துங்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் இரண்டரை இலட்சம் கையெழுத்துக்களை வாங்கி அதனை ஆட்சேபித்து முதலமைச்சர் அலுவலகத்திற்கும் கொடுத்தோம். அதற்கு பிறகு முதலமைச்சர் ஒரு கமிட்டியைக் கூட்டினார். உயர்வு தேவையா என்பது குறித்து, உயர்ந்த அதிகாரிகள் தலைமையிலே அந்த கமிட்டி இயங்கியது. திரு. டி. வி. வெங்கட்டராமன் அவர்கள் தலைமையிலே இயங்கியது. அந்தக் கமிட்டியினுடைய பரிந்துரை என்ன என்று அந்தக் கமிட்டியிலே விவாதித்து, கட்டண உயர்வு இல்லாமலேயே இதனை நியாயமாக, லாபகரமாக நடத்த முடியும் என்று வாதாடிய எங்களுக்கும், அந்தக் கமிட்டியினுடைய முடிவு என்ன என்று தெரியாது. இப்போது கட்டண உயர்வு பற்றி சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் கொள்கையை கடைபிடிக்க வேண்டிய அரசு இன்றைய தினம் கொள்கை இல்லாமல் ஓடிக் கொண்டிருக்கிறது. அதை



1985 மார்ச் 11] [திரு. அ. பாலுசாமி]

நியாயப்படுத்துவதற்கு தமிழகம் எங்கள் பக்கத்திலே உள்ளது என்று சொன்னால் மட்டும் அது நியாயம் ஆகாது. வேலை வேண்டும் என்று கேட்பவர்களுக்கு அது வேலை கொடுக்குமா? எங்களுடைய தெருவிலே விளக்கு இல்லை என்று சொல்கிறார்கள். பஞ்சாயத்துத் தேர்தலையும், நகராண்மைத் தேர்தலையும், கூட்டுறவு இயக்கங்களுக்கு உள்ள தேர்தலையும் நீங்கள் எப்போது நடத்தப் போகிறீர்கள்?

காலையிலே எழுந்தால் 5 மணி, 6 மணிக்கு டெலிபோன் பெல் அடிக்கிறது. என்னுடைய தெருவிலே விளக்கு எரியவில்லை என்று. இன்றைய தினம் குடிநீர் வரவில்லை. உங்களை தேர்ந்தெடுத்ததால் எங்களுக்கு குடிநீர் கிடைக்கவில்லை என்று சொல்கின்ற நிலைமையை நான் அங்கே பார்க்கிறேன். ஒரு கட்சியினுடைய ஆட்சியாக நடத்தாமல்—இன்று அப்படித்தான்—நடந்து கொண்டிருக்கிறது—ஜனநாயக ஆட்சியாக இந்த அரசு நடக்க வேண்டும் என்று வலியுறுத்தி, இல்லாவிட்டால் தமிழகத்திலே பல சீர்கேடுகள் அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செல்வாக்கு நிரந்தரமான செல்வாக்கு என்றும், முதலமைச்சருக்கு உள்ள செல்வாக்கு என்றும், இரு கட்சிகளுக்கும் சேர்ந்த செல்வாக்கு என்றும் தப்புக் கணக்கு போடாதீர்கள். நாட்டு மக்கள் நம்மை விட, வாக்காளர்கள் என்னை விட, உங்களை விட புத்திசாலிகள். அதனை புரிந்து செயலாற்ற வேண்டும், ஜனநாயக மரபுகளை கடைபிடிக்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. அ. பாலுசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் நாள் இந்த மாமன்றத்தில், ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது சட்டமன்ற உறுப்பினர் திரு. செம்மலை எடுத்து வைத்த கருத்தினை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்திலே வைப்பதற்கு முன்னால், தமிழகத்தின் தலைநாயகராக, மீண்டும் முதலமைச்சராக புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி பீடத்திலே அமர மாட்டார் என்ற பொய் வதந்திகளை கிளப்பியவர்கள் ஏமாற்றம் அடையத்தக்க வகையில், புரட்சித் தலைவர் அவர்கள் உயிரைக் காப்பாற்றிய மறைந்த திருமதி இந்திரா காந்தி

[திரு. அ. பாலுசாமி] [1985 மார்ச் 11

அம்மையாருக்கும், மருத்துவ நிபுணர்களுக்கும் என்னுடைய நன்றியை கூறுகின்ற நேரத்தில், மேலும் புரட்சித் தலைவர் நலமுடன் வாழ்வதற்கு தமிழகத்தில் வாழ்கின்ற ஏழை எளிய மக்களும், பெரியோர்களும் மற்றும் தாய்மார்களும் தங்கள் வீட்டுப் பிள்ளையாக அவரை பாவித்து அவரவர்கள் வணங்குகின்ற தெய்வங்களை வணங்கி, பூஜைகளை நடத்தியதன் விளைவாக புதிய நலத்துடன் புரட்சித் தலைவர் அவர்கள் மூன்றாவது முறையாக பிறவி எடுத்து, தமிழகத்தில் மூன்றாவது முறையாக தமிழக மேடையிலே தமிழக முடி சூடா மன்னராக அமர்த்தி பார்க்கும் தமிழக மக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, முழுவதுமாக பாராட்டி, எனது எண்ணத்தை எடுத்து வைக்க விரும்புகிறேன். தமிழக மக்கள் மீண்டும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் புரட்சித் தலைவரிடம் ஒப்படைத்துள்ளார்கள். ஆனால் மாற்று முகாமில் உள்ள மாற்றுக்கட்சித் தலைவர் கூறிய வாசகங்கள் தமிழகத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமர்வதற்கு இந்திராவின் இறப்பினா லும், புரட்சித் தலைவரின் நோயினாலும் அனுதாப அலைகள் ஏற்பட்டு, தமிழக மக்கள் வாக்களித்துள்ளார்கள் என்று மாற்றுக் கட்சித் தலைவர்கள் மக்கள் மன்றத்திலே வைத்தார்கள். ஆனால் மக்கள் இவர்களைப் பார்த்து, எரிகின்ற வீட்டில் கிடைப்பது ஆதாயம் என்று நினைப்பவர்களே தான் என்று பேசு கின்றார்கள், என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். நீங்கள் அப்படிப் பிரச்சாரம் செய்தும், மக்கள் தமிழகத்தின் கோட்டையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அமரச் செய்தார்கள் என்பதை உங்களுக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெரியகுளம் நாடாளுமன்ற இடைத் தேர்தலில் மறைந்த நாடாளுமன்ற நடராஜனின் போட்டோக்களை மாட்டியும், அவரது அருமை பெருமைகளைக் கூறியும் அனுதாப அலைகளால் வாக்குகள் பெற்றிட தேர்தல் களத்தில் இறங்கி னீர்களே! எப்படிப்பட்ட கணக்குகளையெல்லாம் போட்டீர்கள் என்பதை நாடு மறக்கவில்லை. எங்களது வேட்பாளரை தோற்கடித்துவிடலாம் என்று நீங்கள் தேர்தல் களத்திலே



1985 மார்ச் 11] [திரு. அ. பாலுசாமி]

வரிந்து கட்டிக்கொண்டு இறங்கினீர்களே, வெற்றி பெற முடிந்ததா என்பதைத் தாங்கள் சற்று சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்றுதான் திருச்செந்தூர் சட்டமன்ற இடைத் தேர்தலில் தானாக இறந்த சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் சடலத்தைக் காட்டி, அனுதாப அலைகளைத் திரட்ட கலைஞர் கருணாநிதி அவர்கள் மதுரையிலிருந்து திருச்செந்தூருக்கு நடைப்பயணம் செய்தார்கள். அந்த நடைப் பயணத்தின் அனுதாபத்தைக் காட்டி சட்டமன்ற இடைத் தேர்தலில் வெற்றிபெற நினைத்தீர்களே வெற்றி பெற முடிந்ததா என்பதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டுமென்று விரும்புகிறேன். ஆகவே மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு ஒன்று கூறிக்கொள்வேன். "அவல் என்று நினைத்து வெறும் உரலை இடித்ததுபோல்' எண்ணாது 1984 டிசம்பர் மாதத்தில் தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருக்கின்ற ஒப்பற்ற புரட்சித் தலைவர் அவர்களை, அண்ணாவின் கொள்கையின் வடிவமாக ஏழை எளிய மக்களின் ஏந்தலாக, அன்புள்ளம் கொண்ட தாய்மார்களின் தங்கள் வீட்டுப் பிள்ளையாக நினைத்து வெற்றி பெறச்செய்தார்கள் என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கூறிக்கொள்கின்றேன்.

மாற்றுக்கட்சிகள் இலங்கைப் பிரச்சினை பற்றியும் இலங்கைத் தமிழர்களை அழிக்கும் சிங்கள ராணுவத்தை கட்டவிழ்த்துவிட்ட, ஜெயவர்த்தனாவையும் கண்டித்து புரட்சித் தலைவர் அவர்கள் இந்த அறிக்கையின் மூலமாக வெட்டவெளிச்ச மாகக் கண்டித்து இருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள் மீது எந்த அளவிற்கு பற்றும், பாசமும் வைத்திருக்கிறார்கள் என்பதை இன்று உணருங்கள். மத்திய அரசு துணையோடும், நமது மாநில அரசு செய்து வருகின்ற நன்மைகளை, நாடு அறிந்து வருகின்றது. நாட்டு மக்கள் அறிகின்றார்கள். இலங்கையில் வாழ்கின்ற மக்கள் அறிகிறார்கள். அதுமட்டுமல்ல, சிங்கள ராணுவத்தைக் கட்டிக்கொட்டு, எதிர்த்துப் போராடும்

விடுதலைப் புலிகளும் இலங்கையில் இருக்கின்ற தலைவர்களும் புரட்சித் தலைவர் அவர்களையும் மத்திய அரசையும் பாராட்டு கிறது. ஆனால் இந்த இலங்கைப் பிரச்சினையை வைத்து அரசியல் லாபம் அடைந்துவிடலாம் என்று மாற்றுக் கட்சிக் காரர்கள் நம்பி அவதூறாகப் பேசும் நேரத்தில், உங்களை, திராவிட முன்னேற்றக் கழகத்தினரை ஏமாற்றத்தின் எல்லைக்கே தமிழக மக்கள் தள்ளியிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் நீங்கள் நன்கு அறிவீர்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் சற்றுப் பின்நோக்கி வந்தால்—1974 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த சம்பவத்திற்குத் தாங்கள் எடுத்த நடவடிக்கை என்ன என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அந்த நேரத்தில் குட்டிமணி இலங்கையிலிருந்து தமிழகத்திற்குத் தப்பித்து வந்தார்கள். ஆனால் குட்டிமணியை இலங்கைக்கு மீண்டும் பிடித்துக் கொடுத்தவர் கலைஞர் என்பதை இந்த நாடு மறுக்க முடியாது. இலங்கையில் தாய்மார்களின் கற்பை சூறையாடினார்கள். பத்திரிகை நிருபர்கள் கேட்டபோது, கலைஞர் கூறிய வாசகம் என்ன என்பதை திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அது உள்நாட்டுப் பிரச்சினை. அதைப்பற்றி நான் கூறுவதற்கு ஒன்றும் இல்லை, என்று கூறியதை மக்கள் மறந்துவிடவில்லை என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்த நேரத்தில் தான் இலங்கையில் ஒரு பகுதியான யாழ்ப்பாணத்திலே உலக புகழ் பெற்ற தமிழ் நூலகத்தை சிங்கள வெறியர்கள் தீ வைத்துக் கொளுத்தினார்கள். இதை அவர் தட்டிக் கேட்டது உண்டா? இந்த தமிழ் மண்ணுக்குச் சொந்தமான அதுவும், வீரம் நிறைந்த தென்பாண்டி மண்டலத்தின் மண்ணுக்குச் சொந்தமான இராமநாதபுரம் மாவட்டத்திற்குச் சொந்தமான கச்சத் தீவை மத்திய அரசு இலங்கைக்கு தாரை வார்க்க திட்டம் தீட்டிய நேரத்தில் ஆட்சிபீடத்தில் அமர்ந்து இருந்தது யார்? இப்போது எங்களது அரசை குறை கூறும் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஆட்சி பீடத்தில் அமர்ந்து இருந்தார்கள். தமிழ் இன





தளபதி, தமிழர்களுக்காக உயிரைக் கொடுப்போம் என்று வாய் கிழிய பேசுகின்றார்கள், அந்தத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் 1974-ல் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து இருந்தார்கள். அவர்கள் ஆட்சி சிம்மாதனத்தில் இருந்த நேரத்தில் மறுத்தது உண்டா? அல்லது ஏகமனதாக சட்டசபையில் ஒரு தீர்மானம் போட்டாவது மத்திய அரசுக்கு கண்டனக் குரல் கொடுத்தது உண்டா? அந்த நேரத்தில் கலைஞர் கருணாநிதி அவர்கள் மௌனம் சாதித்தது ஏன்? பல்லாண்டு காலம் அந்த ஆட்சி சிம்மாதனத்திலே ஆட்சி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தானே? மேலும் அந்த நேரத்தில் இலங்கையில் வாழ்கின்ற தாய்மார்கள் கற்பு சூறையாடப்பட்டது. தமிழர்களை கொன்று குவிக்க ஆணையிட்டு அழிக்க திட்டத்தை தீட்டிவிட்டு நமது நாட்டுக்கு வந்த திருமதி பண்டார நாயக அவர்களுக்கு இங்கே இருக்கிற விமான நிலையத்தில் கலைஞர் கருணாநிதி அவர்கள் மலர் தூவி, மாலை அணிவித்து நேசக் கரம் கொண்டு அந்த அம்மையாரை அழைத்து வந்தார் என்றால் தமிழ் மக்களை அழிக்க திட்டம் தீட்டிய கைக்கு தங்க வளையல் மாட்டியதைப் போல் தமிழர்களை எதிர்த்த காலுக்கு முத்தம் இட்டு வரவேற்றதைப் போல் கலைஞர் கருணாநிதி அவர்கள் அவரது ஆட்சிக் காலத்தில் செய்த தீமைகளை மக்கள் மறந்துவிடவில்லை என்பதைச் சற்றுக் கவனத்தில் கொண்டுவந்து நிறுத்தக் கடமைப் பட்டுள்ளேன்.

ஆனால் புரட்சித்தலைவர் அவர்கள், இலங்கைப் பிரச்சினைக் காக எப்போது கண்டனக் குரல் கொடுக்கவேண்டுமோ அப்போது கண்டனக் குரல் கொடுத்தார்கள். முடிவான முறையில் தீர்வு காண மத்திய அரசோடு கலந்து ஆலோசித்து நடவடிக்கை எடுத்து வருவதை நாட்டு மக்கள் நன்கு அறிந்து போற்றுகிறார்கள் என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். 1984ஆம் ஆண்டில் இந்த சட்டசபையில் புரட்சித் தலைவர் அவர்கள் இலங்கைத் தமிழர்களை அழிக்க நினைக்கிற சிங்கள வெறி பிடித்த அந்த தளபதிக்கு கண்டனக் குரல் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். இதை மக்கள் அறிந்து போற்றுகிற காரணத்தால் தான் மூன்றாம் முறையாக புரட்சித் தலைவர் அவர்களை நாட்டு மக்கள் இந்த கோட்டையில் முதல்வராக அமர வைத்து இருக்கிறார்கள் என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

[திரு. அ. பாலுசாமி] [1985 மார்ச் 11

தமிழ்நாட்டில் இப்போது கல்வித் தரம் எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சின்னஞ்சிறு வயதிலேயே தான் பட்ட கஷ்டத்தை உணர்ந்த புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளிய மக்கள் ஒரு வேளை சோற்றுக்கு வழியில்லாத காரணத்தால் பள்ளிக்குச் செல்ல முடியாத காரணத்தால் ஆயிரம் ஆயிரம் குழந்தைகள் இருக்கலாம். ஆகவே சத்துணவுத் திட்டத்தை கொண்டுவர வேண்டும் என்று கொண்டு வந்தார்கள். அந்த சத்துணவுத் திட்டத்தின் பயனாக இன்றைக்கு தமிழகத்தில் கல்வியின் தரம் உயர்ந்து இருக்கிறது. ஏழை எளிய மக்களின் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று வருகிறார்கள் என்பதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆளுநர் உரையின் மூலம் அறிவிப்புச் செய்து இருக்கிறார்கள். மேலும் 8 ஆம் வகுப்புவரை உள்ள குழந்தைகளுக்கு இலவச பாடப் புத்தகங்கள் வழங்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். அது மட்டும் அல்ல, புரட்சித் தலைவர் அவர்கள் 8ஆம் வகுப்பு வரை குழந்தைகளுக்கு சீர் உடை வழங்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். மேலும் பள்ளிக்கூடக் கட்டிடங்கள் எந்த எந்த ஊரில் இடிந்து இருக்கிறதோ அந்தப் பள்ளிகளுக்கு கட்டிடங்களை புதுப்பிப்பதற்கு திட்டங்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள். இந்த தமிழ் நாட்டில் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும், மற்ற மாநிலத்தை விட தமிழகம் கல்வி விகிதாசாரத்தில் முதன்மை அடைய வேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவர் அவர்கள் திட்டம் கொண்டு வந்து இருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இப்படி திட்டங்களை கொண்டுவருகிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை மக்கள் போற்றி புகழ்கிறார்கள். ஆனால் மாற்றுக் கட்சிக்காரர்கள் மாற்றுக் கருத்துக்களை அள்ளி வீசுகிறார்கள். அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன், நீங்கள் ஆட்சி செய்த நேரத்தில் — தமிழகத்தில் நீங்கள் எத்தனை ஆண்டு காலம் ஆட்சி செய்து இருக்கிறீர்கள் — ஒரு பல்கலைக் கழகமாவது கொண்டு வர முடிந்ததா? ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழை நன்கு படிக்க வேண்டும், கற்கவேண்டும் என்பதற்காக ஒரு தனி பல்கலைக் கழகத்தை தஞ்சையிலே ஆரம்பித்தார்கள் என்றால்



1985 மார்ச் 11] [திரு. அ. பாலுசாமி]

தமிழ் மக்கள் மீதும் தமிழ் மொழி மீதும் எப்படிப்பட்ட பற்றும் பாசமும் வைத்து இருக்கிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழை வளர்க்க தமிழன் தரத்தை உயர்த்திட மதுரையில் உலகத் தமிழ் மாநாட்டைக் கூட்டி உலகமே வியக்கத்தக்க வகையில் தமிழின் பெருமையை எடுத்து வைத்தார்கள் புரட்சித் தலைவர் என்பதை நான் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் புரட்சித் தலைவர் அவர்கள், தமிழ் கற்றவர்களுக்கு ஊதியமும் வழங்கிட புதிய திட்டத்தைத் தீட்டினார்கள். கடந்த 7 ஆண்டு காலத்தில் எத்தனை பல்கலைக் கழகங்களை உருவாக்கியிருக்கிறார்கள் என்றால்—பாரதிதாசன், பாரதியார் பெயரிலே ஒரு பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அன்னை தெரசா பெயரிலே ஒரு பெண்கள் பல்கலைக் கழகத்தை உருவாக்கினார்கள். அன்னை தெரசா அவர்கள் பெயரிலே ஒரு பெண்கள் பல்கலைக் கழகத்தை கொடைக்கானலில் உருவாக்கினார்கள். இதுபோன்று கல்வியை உயர்த்திட தமிழகத்தில் எண்ணற்ற பல திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சினிமாத் துறையில் நடித்துக்கொண்டிருக்கும் போது மலைக்கள்ளன் என்ற படத்தில் ஒரு பாடலைப் பாடினார். ஊரெங்கும் பள்ளிகள் கட்டுவோம், கல்வி இல்லாத ஊரே இல்லாமல் செய்வோம் என்று பாடியதைப் போல அந்த பாட்டுக்கு ஒப்பாக, அந்தக் கருத்துக்கு ஏற்ப மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இன்று கல்வியை தமிழகத்தில் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். பள்ளிக் கட்டிடங்களை தமிழகத்தில் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். பள்ளிக் கட்டிடங்களை தமிழகத்தில் உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்த ஆளுநர் உரையிலே எந்தவிதமான தன்மையும் இல்லை என்று கூறினார்கள். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சென்னையில் ஒரு மருத்துவ பல்கலைக்கழகத்தைத் துவக்க இந்த அறிக்கையில் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால், தமிழகத்தில் கல்வியை பெருக்கிட எவ்வளவு ஆர்வத்துடன் இருக்கிறார் என்பதை தமிழகம்

[திரு. அ. பாலுசாமி] [1985 மார்ச் 11

நன்றாக அறிந்ததுதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை மீண்டும் ஆட்சியில் அமர்த்தியிருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் இந்த நாட்டை ஆண்ட மாற்றுக் கட்சி நண்பர்களை, மாற்றுக் கட்சித் தலைவர்களை கேட்கிறேன் அப்படிப்பட்ட எண்ணம் உங்களுக்கு உருவானதா? இது அத்தனையும் எதற்காக சொல்கிறேன் என்றால் புரட்சித் தலைவர் அவர்கள். . . . .

**திரு. செ. ஆறுமுகம் :** மாற்றுக் கட்சிக்காரர்கள் என்றால் யார்?

**திரு. அ. பாலுசாமி :** தி.மு.க. என்றே வைத்துக்கொள்ளலாம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற பல்கலைக் கழகங்கள் திறந்தது உண்டா? ஆனால் தமிழகத்தின் தலைநகராகிய சென்னையிலே மருத்துவ பல்கலைக் கழகத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம் புரட்சித் தலைவர் அவர்களுக்குத்தான் இருந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை மீண்டும் அதனால் தான் மக்கள் ஆட்சி பீடத்தில் அமர்த்தினார்கள்.

இந்த ஆளுநர் உரையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளிய மக்களுக்கு எல்லாம் ஆளுக்கு ஒரு வீடு கட்டுகின்ற திட்டத்தையும் கொண்டு வந்திருக்கிறார்கள். அதே போன்ற குடிநீர் பிரச்சினை பல கிராமங்களில் இருப்பதை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். குடிநீர் பிரச்சினையே இல்லாத அளவுக்கு ஒரு திட்டத்தைக் கொண்டு வர ஒரு நல்ல எண்ணத்தோடு இந்த ஆளுநர் உரையிலே அறிவித்து இருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய சட்டமன்ற உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி மீது குறை கூறினார்கள். ஆனால் அவர்கள் கூறிய வார்த்தைகள் அத்தனையும் முழுப் பூசணிக் காயை சோற்றில் மறைப்பது போலாகும். 7 ஆண்டுகளாக லைட் எரியவில்லை, தண்ணீர் கிடைக்கவில்லை என்று கூறினார்கள். ஆனால் லைட் எரியாமல் தண்ணீர் கிடைக்காமல் இருந்தால் தமிழகத்தில் மீண்டும் ஏன் எதற்காக இந்த ஆட்சியை மீண்டும்



1985 மார்ச் 11] [திரு. அ. பாலுசாமி]

(பிற்பகல் 12.30)

அமர்த்தியிருக்கிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் வறட்சி நிலை ஏற்பட்டிருக்கிறது. காரணம்

(பிற்பகல் 12-30)

மழையின்மை. ஆகவே, வறட்சி நிவாரணம் தேடுவதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று அமைச்சர் பெருமக்களை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். மதுரை, இராமநாதபுரம் மாவட்ட மக்கள் மழையின்மையால் குடிநீர்ப் பிரச்னையில் கஷ்டப்படுகிறார்கள்; குறிப்பாக நிலக்கோட்டை தொகுதியில் உள்ள மக்கள் குடிநீர்ப் பிரச்னையால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அப்பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்து, வறட்சி நிவாரண வேலைகளை அங்கே பார்க்க வேண்டுமென்று உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதி மக்களுக்கு நமது புரட்சித் தலைவரவர்களும், அரசும் நன்மை பல செய்திட பல திட்டங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. வி. தங்கவேலு :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மற்றும் எனக்கு இப்படிப்பட்ட நல்லதொரு வாய்ப்பை அளித்த பால்பாறை தொகுதி மக்கள், உங்கள் அத்தனை பேர்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் கூறி, இங்கே எழுப்பப்பட்டிருக்கின்ற சில பிரச்னைகளைப் பற்றிப் பேசுவதற்காக நான் இங்கே வந்திருக்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இங்கே சில பிரச்னைகளைப் பற்றியும், கவர்னர் உரை மீதான சில குறைகளைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் இன்றைக்கு இந்த மன்றத்திலே புதிதாகப் பல கருத்துக்களை எடுத்துச் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் திறல் விருந்த கிராமபோன் ரிக்கார்டைப் போல, அரைத்த மாவையே அரைத்துவிட்டு, இலங்கைப் பிரச்னையைப் பற்றி இந்த நாட்டிலே ஏதோ

[திரு. வி. தங்கவேலு] [1985 மார்ச் 11

கொந்தளிப்பு உண்டாகியிருப்பதைப்போல கொட்டு முழக்கத்தோடு பேசிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். மாண்புமிகு ரகுமான்கான் அவர்களே, நீங்கள் சென்ற கவர்னர் உரையின் மீதும்கூட இதே கருத்தைப் பேசியிருப்பதை அந்த உரை நூல்களிலிருந்து நான் இங்கே படித்தேன். நான் அப்படிப் படிக்கின்றபொழுது பல தெளிவுகள் எனக்கு வெளிப்படையாகத் தெரிகின்றன.

மாண்புமிகு ரகுமான்கான் அவர்களே, நீங்கள் அமிர்தலிங்கம் சொல்லுகின்ற இலங்கை வாழ் தமிழர்களின் பிரச்னைகளைப் பற்றித்தான் வேகமாகவும், விரிவாகவும், ஆவேசமாகவும் எடுத்துச் சொல்கின்றீர்களே தவிர, அதே நேரத்தில் இலங்கையிலே இருக்கின்ற தொண்டமான் என்ற அந்தத் தலைவர் சொல்கின்ற கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்றீர்களா? இலங்கையிலே உள்ள கண்டியிலேயும், ஈழத்திலேயும் உள்ள தமிழர்கள் தேயிலைக் காடுகளிலே சிக்கித் தவித்துக் கிடக்கின்ற தமிழர்கள் என்று இப்படிப்பட்ட மூன்று வகைகளிலே அங்கேயுள்ள தமிழர்கள் ஒவ்வொருவரும் தலைவராக இருந்து கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையிலே உள்ள ஈழத் தமிழர்களின் பிரச்னைகளைப் பற்றிச் சொல்லுகின்ற அமிர்தலிங்கத்தினுடைய பிரச்சினையைப் பற்றி நீங்கள் ஆதாரமாகப் பேசுகின்ற நேரத்தில், தொண்டமான் கூறுகின்ற பிரச்னையை நீங்கள் ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை? தேயிலைக் காடுகளிலே இலங்கையில் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள், அரிசனங்கள் எரிசனங்களாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். அல்லோகல்லா எஸ்டேட் மக்கள் டிக்கோயா என்ற மாவட்டத்தில் உள்ள தேயிலைக் காடுகளில் அரிசனங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே உள்ள சிங்கள மக்களோடு அவர்கள் ஒட்டி, உறவாடி, மிங்கிள் வித் தி ரேஸ் என்று சொல்வார்களே, அதைப்போல புதிய சமுதாயத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அந்தத் தமிழர்களுக்கு எந்தவொரு பிரிப்பும் இல்லாத நேரத்தில், அந்த நிலைமைகளைப் பற்றி மாண்புமிகு ரகுமான்கான் அவர்களே, நீங்கள் ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்?



1985 மார்ச் 11] [திரு. வி. தங்கவேலு]

அமிர்தலிங்கம் சொல்லுகின்ற ஈழத் தமிழர்களைப்பற்றி இங்கே அடிக்கடி சொல்லி, அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிராமல், புதிதாக வந்திருக்கின்ற எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகம் பேசுவதற்கு எங்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் சொல்கின்றபொழுது, இந்த நாட்டிலே பாலும் தேனும் பெருகி ஓட இங்கே மத்திய அமைச்சர்களும், மாநில அமைச்சர்களும் எதுவும் செய்யவில்லை என்பதுபோல் எடுத்துச் சொன்னார்கள். மத்திய அரசும், மாநில அரசும் இந்த நாட்டுக்கு, இங்கே உள்ள ஏழை மக்களுக்கு நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொல்ல, நல்ல பல சமுதாயக் கருத்துக்களை, சட்டங்களை எடுத்துச் சொல்லத் தயாராகத்தான் இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே கடந்த காலத்தை எண்ணிப் பார்க்க வேண்டாமா? ஏழாண்டுக் காலம் இந்த நாட்டிலே அவர்கள் ஆட்சி செய்தபொழுது, இந்த மாமன்றத்திலே மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய, இந்த நாட்டிற்கு நீதியை, சட்டத்தை எழுதித் தந்த அண்ணல் அம்பேத்கார் அவர்களின் திருவுருவப் படத்தை வைக்கக்கூட அனுமதி கொடுக்காமல், அதைப்போல இங்கேயுள்ள சிறுபான்மை மக்களின் அன்பிற்குரியவராகத் திகழ்ந்த காயிதே மில்லத் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறக்காமல் இருந்தார்களே, அது ஏன்?

அதைப்போல ஏழை எளிய மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய மக்கள், அன்றாடம் தேய்ந்துக் கொண்டிருக்கக்கூடிய மக்கள் ஆகியோருடைய உணர்ச்சிக் கோப்புலங்களைக் கூட திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் புரிந்துகொள்ளாமல் அவர்களுடைய திருவுருவப் படத்தை வைப்பதற்குக் கூட நீங்கள் அனுமதிக்கவில்லை. ஆனால் இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள், நம்முடைய புரட்சித் தலைவர் பாரதப் பிரதமர். . . . (குறுக்கீடு). . புரட்சித் தலைவர் பாரதப் பிரதமர், வாலிப உருவில், தியாகத் தென்றல், திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய தலைமையிலே இன்றைக்கு நாங்கள் எல்லாம்

இங்கே வந்திருக்கிறோம். இந்த நாட்டிலே மறைந்த அன்னை இந்திரா காந்தி அவர்கள் புதிய 20 அம்சத் திட்டத்தினை எழுதிக் காட்டியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் யார் எழுதித் தந்த திட்டம் என்று சொல்வதற்கு முன்பு அந்தத் திட்டத்தின் உள்ளடக்கம் என்ன என்பதை நீங்கள் புரட்டிப் பார்த்தால் நம்முடைய தேசப் பிதா அண்ணல் காந்தி அவர்கள் வகுத்துத் தந்த அந்த சட்டங்களும், வகுத்துத் தந்திருக்கக்கூடிய அவர்களுடைய பொருளாதாரக் குறிக்கோள்களும் அதிலே உறைந்து கிடக்கின்றன.

அதற்கடுத்தாற்போல இந்த நாட்டினுடைய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு திரு. அம்பேத்கார் அவர்கள் எழுதித் தந்திருக்கக்கூடிய அந்தச் சட்ட உள்ளடக்கங்கள் அந்த 20 அம்சத் திட்டத்திலே உறைந்து உறங்கிக் கிடக்கின்றன. இப்படி அந்த இரண்டு பெரிய தத்தைகளின் கருத்து, உள்ளடக்கம் தான் இன்றைக்கு புரட்சிகரமான 20 அம்சத் திட்டங்களாக வந்திருக்கின்றன. அந்தத் திட்டங்கள் பற்றி ஆளுநர் உரையிலே ஒவ்வொன்றாகப் படிக்கப்பட்டு, ஏழை எளிய மக்களுக்காகப் பாடுபட வேண்டும் என்ற வகையில் அற்புதமான திட்டங்களாக கவர்னர் உரையிலே இங்கே தந்திருக்கிறார்கள். அதனை முழுக்க, முழுக்க வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழக்கூடிய மக்களாகிய நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

உதாரணமாக 20 அம்சத் திட்டத்திலே எடுத்துச் சொல்லப் பட்டிருக்கின்ற 7-வது அம்சத் திட்டத்திலே உணவு, உடை, உறையுள் என்று சொல்லக்கூடிய இந்த மூன்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாடிக்கொண்டிருக்கக்கூடிய ஏழை, எளிய சிறுபான்மை மக்களுக்கும், ஏழை தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கும் கிடைக்கவேண்டும் என்று ஒரு அருமையான திட்டத்தைத்தான் ஆளுநர் உரையிலே குடிக்க வசதி, இருக்க வசதி-வீட்டுவசதி, அடுத்தாற்போல இவர்களுக்கு வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்புத் திட்டம் என்று சொல்லக்கூடிய ஒரு புரட்சிகரமான கருத்தை அவர்கள் சொல்லிய பாங்கு அதையெல்லாம் எண்ணுகின்ற நேரத்தில் அதனை நடைமுறைப்படுத்துவதில் கொஞ்சம் காமதம் ஏற்பட்டிருக்





கின்றதே தவிர வேறல்ல. ஆனால் அந்தத் திட்டங்களை, அனைத்தும் பயன்படாமல் போகும் என்று எதிர்க்கட்சிக் காரர்கள் சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் பேசுகின்ற போது ஒன்றைச் சொன்னார்கள். பக்கத்திலே இருக்கக்கூடிய பெங்களூரைப் பற்றிச் சொன்னார்கள்; ஆந்திராவைப் பற்றிச் சொன்னார்கள்; வெளிநாடுகளைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு மார்க்ஸிஸ்ட் கட்சி காம்ரேட் அவர்கள் எப்போதுமே வெளிநாட்டுக்காரர்கள் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பெர்லின் நாட்டிலே இருப்பவரைப் பற்றியும், ஃப்ரெஞ்ச் நாட்டிலே இருப்பவரைப் பற்றியும், ரோம் நாட்டிலே இருப்பவர்களைப் பற்றியும்தான், வில்லிவாக்கத்திலே இருந்து வெற்றிபெற்று வந்த அருமைக் காம்ரேட் திரு. சிந்தன் அவர்கள் சிந்தித்துக்கொண்டிருக் கிறார்களே தவிர உள்நாட்டிலே வில்லிவாக்கத்திலே அவருக்கு ஓட்டுப்போட்ட வீரப்பனுக்காக வாதாடுகிறாரா என்று எண்ணுகின்ற போது, அடிப்படிப்பட்ட வாட்டம் அவர்களுக்கு எப்போதுமே உண்டாவது கிடையாது. அவர்கள் குறை கூறினார்கள். என்ன கொள்கை இருக்கிறது என்று சொன் னார்கள். எப்படிப்பட்ட கொள்கை இங்கே இருக்கின்றது என்று சொன்னார்கள். மத்திய அரசைக் குறை கூறினார்கள். மாநில அரசைக் குறை கூறினார்கள். பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களைப் பற்றிக் குறை கூறினார்கள். மறைந்த பிரதமர் அன்னை திருமதி இந்திரா காந்தி அவர்களைப் பற்றியும் குறை கூறினார்கள். குறை கூறுவதே அவருடைய கொள்கையாக இருப்பதால்தான் கொள்கை என்ன என்பது அவர்களுக்குப் புரியவில்லை. What is meant by egalitarion society. சமதர்ம, சகோதரத்துவ ஜனநாயக, சோஷியலிச முற்போக்குக் கூட்டணி என்பதுதான் இங்கே சொல்லக்கூடிய ஒரு வாதம். அந்த சமதர்ம ஜனநாயக, சோஷலிச முற்போக்குக் கூட்டணி என்று சொல்லக்கூடிய கூட்டணியை வைத்துத்தான் இங்கே இருக்கக்கூடிய மக்களின் ஏகோபித்த வாக்குகளைப் பெற்று

[திரு. வி. தங்கவேலு] [1985 மார்ச் 11

இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கிறோம். ஆட்சியை அமைத்திருக்கிறோம். எனவே கொள்கை எது என்று கேட்டால் இதுதான் கொள்கை.

(பிற்பகல் 12-40)

We want to form an egalitarian society, not only in Tamil Nadu but also in whole India. என்று சொல்லக்கூடிய கருத்தைதான் சுருங்கச் சொல்லி, விளங்க வைப்பதற்காகச் சொல்கிறேனே தவிர, வேறல்ல. அவர்கள் தொழிற்சாலைகளிலே கலவரம் என்றார்கள். அங்கே குழப்பங்கள் என்றார்கள். விளக்கு எரிவதில்லை என்று சொன்னார்கள். மதிப்பிற்குரிய மாண்புமிகு சிந்தன் அவர்கள் இவைகளைப் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் இந் தச் சட்ட மன்றத்திற்கு வருவதற்கு முன்பாகவே கேட்டிருக்கிறேன்; ஐந்து இலட்சம் அரிசன மலைஜாதி—நறிக் குறவர் மக்கள் தொழிற்சங்கத் தலைவன் என்ற முறையிலே நான் பல முறை அவரிடம் கேட்டிருக்கிறேன், நீங்கள் இந்தக் கருத்துக்களைச் சொல்கிறீர்களே, பப்ளிக் செக்டார், பிரைவேட் செக்டார் என்று சொல்லப்படுகிற பொதுத் துறை, தனியார் துறைகளிலே உங்களுக்கு வேலை வாய்ப்பு வேண்டுமென்று கேட்கிறீர்களே. தொழில் நகராறுகளை உருவாக்கித் தருகிறீர்களே, ஆனால் அதே நோக்கிலே இந்த நாட்டுக்காக, வறுமைக் கோட்டிலே இருக்கக்கூடிய மக்களுக்காக, Roaster method 18 per cent reservation policy என்று சொல்லக் கூடிய, இந்திய அரசியல் சட்டத்திலே கூறப்பட்டிருக்கிற இந்தக் கருத்துக்களை நீங்கள் எங்காவது எடுத்துச் சொல்லி யிருக்கிறீர்களா?

What is meant by 18 per cent reservation Policy?
What is meant by Roaster method?
What is meant by 100 per cent Roaster method?
What is meant by 40 per cent Roaster method?

தொழிற்சாலைகளிலே, பொது நிறுவனங்களிலே, தனியார் நிறுவனங்களிலே, இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு, ஜாதிர் அடிப்படையிலே 18 சதவீதம் இட ஒதுக்கீடு தரப்பட



1985 மார்ச் 11] [திரு. வி. தங்கவேலு]

வேண்டுமென்று அன்றைக்கு பாபா சாகேப் அம்பேத்கார் சொன்னாரே, அந்தக் கருத்துப்பட, ஜாதி அடிப்படையிலே 18 சதவீத இட ஒதுக்கீடு கேட்டீர்களா, என்று நான் அவரைக் கேட்டப் பொழுது, ஜாதியைப் பற்றிப் பேசாதீர்கள் என்று மாண்புமிகு சிந்தன் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்பதெல்லாம், இன்றைக்கு வேலைவாய்ப்பு இல்லாத தன்மை யாரிடம் அதிகமாக இருக்கிறது என்றால், சிறுபான்மை மக்கள், குறிப்பாக இஸ்லாமிய மக்கள் மத்தியிலேயும், இன்னும் அங்கே இருக்கக்கூடிய அரிசன மக்கள் மலைஜாதி மக்கள் மத்தியிலேயும்தான் என்பதை மெத்தப் பணிவன்போடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திருச்சி பி.எச்.இ.எல். என்ற பெரிய நிறுவனத்திலே பார்த் தால், அங்கே இருக்கக்கூடிய அத்தனை பேரும் நிரந்தரத் தொழிலாளர்கள். ஆனால் துப்புரவுத் தொழிலாளர்கள் என்ன நிலைமையில் இருக்கிறார்கள்? அன்றைக்குத் தேசத் தந்தை மதிப்பிற்குரிய அண்ணல் காந்தி அவர்கள் சொன்னார்கள்,

Why these Sanitary Workers are uncleaned?

They are uncleaned because they are cleaning the others.

என்று சொன்னார்கள்.

குறிப்பாக இந்தியாவிலே, துப்புறவுத் தொழிலாளர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள்? துப்புரவுத் தொழிலாளர்கள் துப்புரவாக எப்போதுமே இல்லை. முனிசிபாலிட்டியை எடுத்துக் கொண்டாலும், கார்ப்பரேஷனை எடுத்துக் கொண் டாலும், திருச்சி, ராணிப்பேட்டை பி.எச்.இ. எல்லை எடுத்துக் கொண்டாலும், வால்பாறையிலே இருக்கக்கூடிய மின்சார போர்டிலே பணியாற்றக் கூடிய துப்புரவுத் தொழிலாளர்களை எடுத்துக் கொண்டாலும், இன்னும் எந்த, எந்தத் துறை, எங்கெங்கு இருக்கிறதோ, அங்கே எல்லாம் சென்று பார்க்கும் போது, துப்புரவுத் தொழிலாளர்களைப் பற்றி யாராவது பேசுகி றார்களா? யாராவது அவர்களைப் பற்றி சிந்திக்கிறார்களா? மேலை நாடுகளிலே துப்புரவுத் தொழிலாளர்களுக்குக் கொடுக் கக்கூடிய நிரந்தரமான உத்தியோகம், ஊதிய உயர்வு கொடுக்கப் படுகிறதா? இந்தியாவில் கோடிக் கணக்கான மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படி ஈடுபட்டு வாழ்

கொண்டிருக்கிற அவர்களைப் பற்றி, அவர்களது பிரச்னைகள் பற்றி, காம்ரேடுகளோ, அல்லது மற்றவர்களோ பேசுகிறார்களா? இங்கே யாரும் அவர்களைப் பற்றி பேசவில்லை. ஆனால், மலம் அள்ளக் கூடிய அந்தகைய தொழிலாளர் பிரச்னை பற்றி திருமதி மரகதம் சந்திரசேகர் அவர்களும் அன்னை இந்திரா அவர்களும் கவனித்தார்கள். அன்னை இந்திரா காந்தி அவர்கள் வால்பாறை என்று சொல்லக்கூடிய அந்த உயரமான மலைப் பகுதிக்கு, டெல்லியிலே இருக்கிற எஸ்.சி., எஸ்.டி. ஹை லெவல் கமிட்டியை, மைனாரிட்டி மக்களுக்காக உள்ள அந்த உயர் மட்டகமிட்டியை, 19—4—1984 அன்று அனுப்பினார். இந்திரா காந்தியினுடைய பிரதிநிதியாக திருமதி மரகதம் சந்திரசேகர் அவர்கள் வந்து, கிட்டத்தட்ட 25 பிரச்னைகளை நேருக்கு நேராகக் கேட்டு, அந்தப் பிரச்னைகளை முடிவுக்குக் கொண்டு வந்தார்கள். அந்தப் பெருமை அன்னை இந்திராவையே சாரும்; மரகதம் சந்திரசேகரைச் சாரும். இந்த மேதகு ஆளுநர் உரை சாலச் சிறந்ததாக இருக்கிறது.

சத்துணவுத் திட்டமானது இந்த நாட்டிலே, இந்த உலகத்திலே ஏற்றுக் கொள்ளக்கூடிய மகத்தான திட்டமாகும். ஏன் அதைச் சொல்கிறேன் என்றால் இன்றைக்கு சத்துணவுத் திட்டத்தால் அதிகம் பயன்பெற்றுக் கொண்டிருப்பவர்கள் அரிசன குழந்தைகள்தான். காலையில் வாடிக்கிடக்கிற அந்தக் குழந்தைகளை வீட்டிலே விட்டுவிட்டு வயல்வெளிகளுக்குச் சென்று வேலை பார்த்து பெற்றோர்கள் தைரியமாக இரவில் வீடு திரும்புகிறார்கள். ஏனென்றால் மதிய நேரத்தில் அந்தக் குழந்தைகள் சத்துணவைச் சாப்பிட்டு பசியில்லாமல் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே சத்துணவைத் தந்த அன்னை இந்திரா அம்மையார் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் நன்றி தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைக்கு அந்தக் குழந்தைகள் எதிர்கால இந்தியாவிற்கு சத்தான குழந்தைகளாக வளமாக வளர்ந்து வளர்ந்து கொண்டிருக்கின்றன. அந்தக் குழந்தைகள் எதிர்காலத்தில் புகழ்மிக்க சரித்திர சம்பவங்களை ஏற்படுத்துவார்கள் என்பதை மெத்தப் பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன்.





என்னுடைய வால்பாறை தொகுதி 240 தன்மைகளை உள்ளடக்கிய முக்கியமான தொகுதியாக இருக்கிறது. — —

"Valparai has two hundred and forty features."

Indian social, economic and political conditions are determined with the help of this Valparai Constituency".

என்று மேலை நாட்டில் இருக்கக்கூடிய பெரிய ஞானி எழுதி இருக்கிறார். வால்பாறை தொகுதியில் தேயிலைக் காடுகள் அதிகம் இருக்கின்றன. அங்கு அரிசன மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். நான் பேசுகிறபோது அடிக்கடி சொல்வேன். அரிசன மக்களுக்கும், சிறுபான்மை மக்களுக்கும் ஆலய கதவுகள் மட்டும் திறந்தால் போதாது. வங்கிக் கதவுகளும் அவர்களின் வளமான வாழ்விற்கு வசதியாக திறக்கப்பட வேண்டும். இன்றைக்கு வால்பாறை பகுதியிலே மேலே தேயிலைக் காடுகளும், கீழே சமதளத்தில் மக்களும் இருக்கிறார்கள். ஆறு நீர் தேக்கங்கள் அங்கே இருக்கின்றன. மாண்புமிகு காமராசர் அவர்கள் வால்பாறைக்கு வருகை தந்தபோது யானை மீது ஏறி அந்தப் பகுதியை சுற்றிப் பார்த்துவிட்டு ஆளியாறு அணையை அங்கே கட்ட உத்தரவிட்டு, அங்கே இருப்பவர்களுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுத்தார்கள். அந்த மாபெரும் பெருமை கலம் காமராசர் அவர்களையே சாரும். அப்படிப்பட்ட வளமான பகுதியிலே மிருகங்கள் உல்லாசமாக இருக்கின்றன. ஆனால் என்னுடைய சமுதாயத்தைச் சார்ந்த மக்கள், சிறுபான்மை மக்கள், மிகவும் வாடிக் கிடக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான வாழ்க்கை வசதியும் இல்லாமல் இருக்கிறார்கள். தேயிலைக் காடுகளில் தினமும் 300 ரூபாய்க்கு தேயிலைக் கொழுந்துகளை கிள்ளித்தருகிற அவர்களுக்கு 30 ரூபாய் சம்பளம் வேண்டுமென்று ஐ.எல்.ஓ. நிறுவனத்திடமும், பேசியிருக்கிறேன். ஆனால், 15 ரூபாய் தான் ஆனைமலை அதிபர்கள் சங்கம் வால்பாறையில் தினச் சம்பளம் தருகிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஒரு நாளைக்கு 30 ரூபாய் சம்பளம் தரவேண்டுமென்று என்னுடைய தொகுதி நிலைமைகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி கூறி, மேன்மேலும் இதுபோன்று வாய்ப்புகளைத் தரவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

[1985 மார்ச் 11

* திரு. செ. தங்கராசு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களின் உரையில் நல்ல திட்டங்கள் இருக்கிற காரணத்தால் அந்தத் திட்டங்களுக்கு சிறப்பான வரவேற்பு மக்களிடத்தில் இருக்கிறது. சாதாரணமான என்னைப் போன்றவர்களை சட்டமன்ற உறுப்பினர்களாக்கி இந்த மாமன்றத்திலே பேசவைத்த எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, வாக்களித்த மங்களூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, என்னுடைய தொகுதியிலே இருக்கிற பிரச்னைகளை இந்த மன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

மத்திய அரசால் மிகவும் பிற்பட்ட பகுதி என்று தேர்ந்தெடுக்கப்பட்ட என்னுடைய மங்களூர் தொகுதியில் பொது நிறுவனம் அல்லது அரசு நிறுவனம் அல்லது தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த எந்த ஒரு தொழிற்சாலையும் ஏற்படுத்தப்படவில்லை.

மங்களூர் தொகுதியிலே தொழுதூர் வெள்ளாற்றிலிருந்து பிரித்து, கால்வாய் வெலிங்டன் நீர்த்தேக்கத்திற்கு செல்லாது. அந்த வெலிங்டன் நீர்த்தேக்கம் பிரிட்டிஷ் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. அப்போது அந்த நீர்த்தேக்கம் 5,000 ஏக்கர் நிலத்திற்கு பாசனம் அளிக்கக்கூடியதாக இருந்தது. ஆனால் இன்றைக்கு சுமார் 36,000 ஏக்கர் பாசன வசதி அளிக்கக்கூடிய அந்த நீர்த்தேக்கத்திலிருந்து 10,000 ஏக்கருக்குத்தான் தண்ணீர் பாய்கிறது. அதை ஆழப்படுத்தி, அதற்குச் செல்லக்கூடிய வாய்க்காலை அகலப்படுத்தி, தேவையான வசதிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பெரிய நகரம் திட்டக்குடி. அது வெள்ளாற்றங்கரை ஓரத்தில் இருப்பதால் அரிப்பைத் தடுக்க அதன் கரையில் தடுப்புச் சுவர் எழுப்ப வேண்டும்.



1985 மார்ச் 11] [திரு. செ. தங்கராசு]

மங்களூர் தொகுதியில் மேற்குப் பகுதி மிகவும் வறட்சியான பகுதி. அந்த வறட்சிப் பகுதியின் வளத்திற்காக தற்போது அரசின் பரிசீலனையில் இருக்கிற கூகையூர் அணைக்கட்டு திட்டத்தை உடனடியாக நிறைவேற்றினால் வறண்ட அந்தப் பகுதி நீர் வளம் பெற்று நன்செய் பயிர் விளைவதோடு புன்செய் பயிரும் விளைந்து அந்தப் பகுதி மக்களுக்கு பெரிதும் பயனுடையதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நாங்கள் எல்லாம் வெற்றி பெற்றதற்கு முதற் காரணம், மூலக் காரணம் என்னவென்றால் மாண்புமிகு புரட்சித் தலைவர்மேல் கிராம மக்கள் வைத்திருக்கிற மாசற்ற அன்பும், புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப்பீடம் ஏறிய பிறகு மாநில சட்டமன்றத்தில் ஆளுநர் அறிக்கைகளிலே கூறப்பட்ட நல்ல திட்டங்களும்தான். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் சத்துணவுத் திட்டம், இலவச மின் திட்டம், இலவசமாக சேலை, வேட்டி வழங்கும் திட்டம், தன்னிறைவுத் திட்டம் போன்ற திட்டங்களைச் சொல்லலாம். இந்தத் திட்டங்களை கிராம மக்கள் முழுமையாக ஏற்றுக்கொண்டு அதன் வாயிலாக புரட்சித் தலைவர்மேல் மிகுந்த பற்றும் பாசமும் வைத்திருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் இப்படி பெரும்பான்மை வாக்குகளை எங்களுக்கு அளித்து, இந்த மாமன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

அதைப்போன்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த ஆளுநர் உரையிலே அறிவித்திருக்கிற “ தகுதிக்கு உட்பட்ட அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் இலவச சீருடை அளிக்கப்படும்” என்ற திட்டத்தை கிராம மக்கள் மனமார, உளமார ஏற்றுக்கொண்டு, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் நல்ல நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னதற்கு பதில் கூற விரும்புகிறேன். அதாவது நாங்கள் கருணாநிதி அவர்களை தரக்குறைவாகப் பேசுவதாக நீங்கள் எண்ண வேண்டாம். மாண்புமிகு கருணாநிதி அவர்கள் "நான் வீட்டு நாய்" என்று தமிழ்நாட்டு மக்களிடம் சொன்னபோது எங்களுடைய பாசத்திற்குரிய அமைச்சர் அண்ணன் ஆர். எம். வீ. அவர்கள் மயிலை பொதுக் கூட்டத்தில் "தமிழக மக்கள் கருணாநிதியை வீட்டு நாயாக ஏற்றுக்கொண்டால் அவரை சட்ட மன்றத்திற்கு அனுப்பியிருப்பார்கள்; ஆனால் * * * ஏற்றுக்கொண்டதால் சட்ட மன்றத்திற்கு அனுப்பவில்லை" என்று கூறினார்கள். ஆக, நீங்கள் வீட்டு நாய் என்று சொன்னாலும் மக்கள் ஏற்றுக்கொள்வதாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. ஆறுமுகம்:** மாற்றுத் தலைவர்வர்களே, எங்கள் தலைவரைப் பற்றி இங்கே குறிப்பிடுகிறார்கள். பதில் சொல்வதற்கு அவர்கள் இங்கே இல்லை. அது மட்டுமல்லாமல் * * * என்ற சொற்கள் அவைக் குறிப்பில் இருக்க வேண்டுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசும்போது அந்தப் பேச்சை எடுத்து இருக்க வேண்டியது இல்லை. அவர்கள்தான் சொன்னார்கள். ஆகவே அதற்கு திருப்பி, ** என்று, இவர்கள், ஆகவே ** என்று சொன்னால், எப்படியாகிலும் அதை எஜமானன் காப்பாற்றுவார் என்ற நோக்கத்தோடு சொன்னார்கள். ஆகவே அதற்கு திருப்பி, * * என்று, இவர்கள், அது மாறுபட்ட ஒன்றல்ல என்று சொன்னாலும், அனைத்திந்திய அண்ணா தி.மு.க.விற்கு இருக்கிற பண்பாட்டின் காரணமாக அந்த வார்த்தையைச் சொல்ல வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. [illegible]):** ** என்று சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. செ. தங்கராசு:** அடுத்து, காவல் துறையைப் பற்றி சொல்கையில் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் தமிழகத்தின் காவல் துறை மிக மோசமான சூழ்நிலையில் செயல்பட்டு வருவதாகச் சொன்னார்கள். ஆனால் நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோதுதான் அவர்கள் கத்தியால் குத்தப்பட்டு, மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு மிகக் கேவலமான சூழ்நிலையில் நடத்தப்பட்டார்கள். ஆனால் இந்த ஆட்சியில் இப்போது, கடந்த 7 ஆண்டுக் காலமாக அவருக்கு ஏதாவது அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டதா? அல்லது அப்படிப்பட்ட தொந்திரவிலே அவர் இருந்தாரா? என்பதை நான் கேட்க விரும்புகிறேன். (கரவொலி) எங்களுடைய ஆட்சிக் காலத்திலே தொழிற் சங்கத் தலைவர்களுக்கு இப்படிப்பட்ட அவமரியாதைகள் ஏற்பட்டதா? தொழிற் சங்கத்தை நடத்துகிறவர்களுக்கு எந்தவிதமான அவமரியாதையும் இருக்காது. ஆனால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் இந்த மன்றத்திலே, எங்களுடைய புரட்சித் தலைவருடன் அன்பு கொண்டிருந்த போது அதிகமான எண்ணிக்கையிலே உட்கார்ந்திருந்தார்கள். சென்னையிலே நீங்கள் உண்மையான வாக்குகளைப் பெற்று வந்திருக்கிறீர்கள். நான் ஏன் இதை சொல்கிறேன் என்றால், நீங்கள் புரட்சித் தலைவர் ஆட்சியிலே காவல் துறை சரியாக செயல்படவில்லை என்று பொய்க் குற்றச்சாட்டை வேண்டுமென்றே சொல்லக்கூடாது என்பதற்காகத்தான்.

அதுமட்டுமல்லாமல் முன்னாள் அரிசன வீட்டு வசதி வாரியத் தலைவராக இருந்த மறைந்த எஸ். எம். துரைராஜ் அவர்கள் கருணாநிதிக்கு கறுப்புக் கொடி காட்டியபோது, அவருடைய மண்டை பிளக்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்

---

*** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

பட்டு, அவருடைய மனைவி கூட அவரைப் பார்க்க முடியாத நிலைமையில் அவர்கள் இருந்தார்கள் என்பதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதுதான் அப்போதைய காவல் துறையினரின் நிலைமை. ஆனால் புரட்சித் தலைவரின் ஆட்சியில் காவல் துறை மிகப் பெருமையோடு பாராட்டத்தக்க அளவிற்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, புரட்சித் தலைவர் அவர்கள் தொழிலாளர்களுக்கு விரோதமாக இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். டி.வி.எஸ் நிர்வாகத்திலே ஸ்ட்ரைக் நடந்த நேரத்திலே டி. வி. எஸ். நிர்வாகத்திற்கு பாதுகாப்பாக இருந்த காவல் துறையை வாபஸ் வாங்கினார் என்றால், இந்தியாவிலேயே புரட்சித் தலைவர்தான் அப்படிச் செய்தார்கள். (கரவொலி) நீங்கள் பல கம்பெனிகளிலே தொழிற் சங்கத் தலைவராக இருக்கிறீர்கள். பல கம்பெனிகளோடு ஒப்பந்தம் போட்டிருக்கிறீர்கள். இன்றைக்குக் கூட அசோக் லேலண்ட் கம்பெனியில் ஒப்பந்தம் தயாராக இருக்கிறது. விரிவான ஒப்பந்தம் போட வேண்டும் என்று விருப்பப்படுகிறோம். ஆனால் நீங்கள் எதற்கெடுத்தாலும் தொழிலாளர் விரோத அரசு என்று சொல்கிறீர்கள். எங்களுடைய முதலமைச்சரைக் கேட்டு தொழிலாளர் பிரச்சனைகள் தீர்க்க வேண்டும். நீங்கள் தொழிலாளர் பிரச்சனையை சிக்கலாக ஆக்கக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதை நான் ஒரு தொழிலாளி என்ற முறையில் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் உள்ள திட்டகுடியில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. என்னுடைய தொகுதி வறட்சியான தொகுதி. அந்தத் தொகுதியில் எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லாத காரணத்தால், அந்தத் தொகுதியில் உள்ள மக்கள், குறிப்பாக ஆதி திராவிட மக்களுக்கு, பிற்பட்ட மக்களுக்கு வேண்டிய வேலை வாய்ப்பையும், வீட்டு வசதிகளையும் செய்து தர



வேண்டும். நாங்கள் தேர்தல் காலத்தில் வாக்குறுதிகள் கொடுத்து, ஓட்டுக்களை வாங்கி வந்திருக்கிறோம். எனவே, சில திட்டங்களைச் செயல் திட்டங்களாக அறிவித்து சிறப்பாக செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு ஊழியர்கள் பல பிரச்சனைகளிலே தப்பாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கமும், நமது மாண்புமிகு முதல்வர் அவர்களும் அரசு ஊழியர்களுக்குப் பல நன்மைகள் செய்து கொண்டு வருகிறார்கள். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அள்ளி அள்ளி சலுகைகளை வழங்கிக் கொண்டு வருகிறார்கள் நம்முடைய

(பிற்பகல் 1-00)

அரசாங்கத்தினர். மேற்கு வங்காளத்திலே இருக்கிற மாநில அரசு, மைய அரசு அறிவித்திருக்கிற, அரசு ஊழியர்களுக்கான பஞ்சப் படியை இன்னும் ஒழுங்காக வழங்கவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால், நம்முடைய மாநில அரசு, இன்றைக்கு இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரியாக, மத்திய அரசு வழங்கிய பஞ்சப் படியின் விகிதாச்சாரப்படி, மாநில அரசு ஊழியர்களுக்கு பஞ்சப் படியை வழங்கிக் கொண்டிருக்கிறது.

அது மட்டும் அல்ல, இங்கே சமர்ப்பித்திருக்கிற ஆளுநர் உரையிலேயே அரசுப் பணியாளர்களுக்கான குடும்ப நல நிதியை ரூ. 10,000-லிருந்து 20,000-க்கு உயர்த்தியிருப்பதாக அறிவித்திருக்கிறது. இப்படி அள்ளி அள்ளிக் கொடுக்கும் அரசுக்கு அரசு ஊழியர்கள் விசுவாசமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு நிர்வாகச் செம்மைக்கு அரசு அதிகாரிகளைத்தான் நம்பியிருக்கிறது. என்னுடைய தொகுதியிலே உள்ள பல அரசு அதிகாரிகள் மெத்த மெத்தனத்தோடு காரியங்களைச் செயலாற்றுவதில் செயல் படுகிறார்கள். அவர்கள் எல்லாம் இன்னும் சற்று சிறப்பாக செயலாற்ற வேண்டும். புரட்சித் தலைவருக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த நேரத்திலே எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு, அவையின் தற்காலிகத் தலைவருக்கு நன்றி தெரிவித்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை வழிமொழிந்து உங்களிடம் இருந்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்

[1985 March 11

* Thiru T. VENKATA REDDY: Chairman Sir, I would like to place some of the ideas on the Governor's Address on behalf of the Congress Party.

When we go through the Governor's Address, I for one, who has been disappointed because no programme has been mentioned. It must be an address which should show the future programme and policy of the Government and it should also highlight some of the schemes. But in this Address, nothing has been highlighted about the future programme of the Government, except some of the beneficial acts for the poorer sections. We welcome such beneficial acts for the poorer sections. The Congress Party under the leadership of former Prime Minister, Mrs. Indira Gandhi and also under the leadership of Mr. Rajiv Gandhi, dedicated to uplift the poor men. I am glad that our Hon. Chief Minister is also of the same opinion and has been doing a lot to help all the poorer sections. But at the same time. I want to stress one point. Helping the poor is not the only work of the Government. The Government is one that should also govern well. It is like old Maharajas showering benefits to the poorer section in order to get their approbation and they have forgotten to uplift the income of the poorer sections. When I went through the Governor's Address, I got the impression that we are going back to the Maharajas days and their views. The Government is there not only to help the poor sections but also to increase their economic capacity, economic condition of the State, and also earning capacity of the State

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

The Government also should come forward to start new industries, to give impetus to agriculture and to make a man to stand on his own legs. The man has to eke out his own living. We know many people do not aspire for doles. The unemployed graduates and youths do not require doles, but they require employment opportunities. Mere giving of alms is an insult to them because they need work for their hands. What is that you have done in this direction in the Governor's Address. No new industry has been suggested and no impetus has been given to create more employment opportunities. No employment opportunities for the youths have been promised. These are the things which are necessary to increase the per capita income of an individual. I noted in one of the magazines that the per capita income in our State is on the decrease. When you compare it with the other States the per capita income in our State is less. It is because that after the advent of the other Party Government, the capital investment in our



1985 March 11] [Thiru T. Venkata Reddy]

State with regard to industrialisation has become less. When you compare it with Orissa, which was a very very poor State before, it has come up more than our State. It is because lot of industries have come up there. Lot of employment opportunities have been given to the people there. Agriculture has improved. But we have been boasting ourselves that Tamil Nadu is the best administered State. We have been boasting that we have been the pioneers in the co-operative field. We have been boasting ourselves that only in Tamil Nadu a large number of agricultural pump sets are there. But what is the net result? We do not get power for our pump sets. It is because of our wrong policies followed by the Government all these years. We know that there is deficiency in power. It is not there now. For the last 15 years this problem has been there. The power deficiency has to be solved by getting more thermal stations or hydro-electro power stations. During Congress regime when Thiru K. Kamaraj was the Chief Minister he had also thought of Hognekal Hydel project. But the connected paper has been pending with the Government and our Government has not taken any steps in this regard. In the last Assembly when we talked of this Hognekal Project the then Chief Minister of Karnataka Government said that "we are not agree". There the matter ended. I request the Hon. Chief Minister and also the Government to see that the Hognekal Project, for which the paper is pending with the Government for the last ten or fifteen years, is also expedited or revived so that the power generation can be stepped up in Tamil Nadu, to feed the pump sets and other industries.

The other aspect which I want to submit, is with regard to agriculturists. Lot of facilities have been given to the agriculturists in Karnataka Government and also in other States. But only this year our Government has announced that power will be supplied at Rs. 75 per H.P. Mere saying that power is supplied at Rs. 75 is not enough. It must be done in action. When we went round the villages many of the agriculturists have complained that the supply of power is very meagre. Only for six hours power is given, and that too, only during night time the supply is given. It is unfortunate that the agriculturists should be given the power during night time. I request the Hon. Electricity Minister to see that giving power to the agriculturists during night time is stopped because most of them have to water the gardens and they have to go to the fields after walking 2 or 3 kilometres. So during night time it is not possible for them to make use of the supply of power. To help the agriculturists the power supply has to be continuous. During day time they should be given.

The other aspect I want to submit is that in many villages tube lights have been put up but in many of the villages they are not burning. This is the sorry state of affairs that is existing in our Constituency. I think it is existing throughout the State. It is a universal fact. When we went round the villages after the election, many villagers have complained that lights are not burning and there is no power supply. I wrote to the Chairman of the Electricity Board.

(பிற்பகல் 1-10)

I have forgotten to bring the letter. Curiously the officials had replied in that letter. The reply was "your statement is wrong". I think the officials might not have gone to the village to see their conditions. I request the Government to instruct the officers again to see that proper lighting is provided for in the villages. Cities do not have this problem. Probably it may be due to the reason that Ministers and influential people live in cities. In villages where poor people live, the problem of proper light arrangements are not looked into properly. Their representations to the officers regarding their grievances are not taken cognizance of by the officials. They do not rectify the defects which the villagers point out. I am pressing this because not only the officials of the Electricity Department have become masters but also the officials of all other Departments. The officials are no more the servants of the people.

This state of affair is prevailing because we do not have elected Panchayat representatives. The election to the Panchayats should be conducted soon. I thought there would be a mention in the Governor's Address about the probable date of Panchayat Elections or atleast the period—say a year or six months—within which such elections would be held. But there is no such mention. Panchayat presidents and Chairman of Panchayat Unions are quite essential not only to improve the conditions of the villagers but also to implement the schemes announced by our government. The beneficial schemes of the government can be implemented properly only through an elected Panchayat. At present we have the Grama Sevaks to implement the beneficial schemes. All the beneficial schemes of the Government have to be mooted only through the Grama Sevaks. There are no Grama Sevaks now, available in the villages to hear the grievances of the villagers. In some villagers where I visited I asked about the Grama Sevaks. To my surprise many of the villagers had not even seen the Grama Sevaks. The Grama Sevaks live in towns which are far away from the villages. They also live far away from



the difficulties of the villagers. Grama Sevaks are the Sevaks for themselves. They only receive commission, sit in their offices and amass wealth. They are now the privileged class of the Government. So, I request the Government to obviate the difficulties of the villagers. To enable the poor villagers to get the benefits of the schemes anounced by our Chief Minister Panchayat elections will have to be conducted early. Otherwise the government will get a bad name.

Already we have the 'self-employment scheme'. Thirumathi Indira Gandhi has stated that unemployed youths will get Rs. 25,000 under the self-employment scheme. But while implementing this scheme a lot of malpractices had been committed by the government officials. The government brought this scheme to help the educated graduates and S.S.L.C. holders to start Industries to solve the unemployment problem. The idea is to solve the unemployment problem of youths, especially the educated rural youths. Such benefits were extended to cities also. But the rural youths are not getting these benefits promptly. The reaching of these benefits to the youths and their proper utilisation must be watched. There are some people who get the loan but misuse it. If such things are not watched unemployment will still remain. To avoid malpractices government must be watchful. To show that we are watchful the Ministers should go to the villages without giving any publicity and enquire the villagers about their problems in getting governmental aids. It is to be seen that a Minister goes *in cognito*. In previous years, we know some people in high positions used to go to villages *in cognito*. If Ministers or responsible officials go to villages without identifying themselves, the malpractices will be highlighted to them by poor innocent villagers. So, I am requesting the Government to avoid all these malpractices.

The panchayat elections have to be conducted soon. I also hope that the Honourable the Chief Minister will soon announce the dates for panchayat elections during this Session itself. The elections will be a boon to us also. My friend Tiruvannamalai M.L.A. Thiru Ravindrar has been saying that he is getting representations even in regard to basic amenities which have to be attended to by Village President, etc. So, now all these things have to be attended to by M.L.As. Even for a small thing, the villagers come and request the M.L.As. only. M.L.As. cannot look after all these things. But if any mishap or malpractice happens, the M.L.As. will be blamed. It is because we do not have village representatives. So, the panchayat elections have to be held soon.

[Thiru T. Venkata Reddy] [1985 March 11

In our area, there is Kaverapalli Dam. It has been under construction from 1967 to 1979. The Government have already spent nearly 3 crores on this dam construction. Unfortunately, a landlady has filed a suit in the High Court and the construction work of the dam was stopped, because of stay granted by the High Court in 1979. For the last five years, I have been requesting the Government and also through this Assembly, that the case might be expedited. But the Government do not care in expediting the case.

Hosur area is an industrial area under SIPCOT, and the dam has been constructed to augment the water supply for the industrial area. So, to augment the water supply the construction of the dam is an utter necessity. So, I now request the Government to look into the matter. The Honourable the Law Minister once said that he would bring forward an ordinance in this regard. But, the ordinance is not on the anvil. Even now, it is not late. I request the Government to expedite the case relating to the dam construction and I am sure the Government will succeed in the case. I do not know why the Government is feeling shy to proceed with the case. It is only in the larger interests of the people, I am saying. It is not going to benefit any particular individual. It is for the benefit of the poor people. It is going to help a backward area to develop, and also water supply will be augmented in the industrial SIPCOT area. Already three crores of rupees have been wasted in this dam construction work and another two crores of rupees would have been enough if it had been done before. Now it will cost more. As the old adage goes, " better late than never ", let us expedite the case and start the construction work soon.

(பிற்பகல் 1-20)

I would like to say a few words about the Hosur Cattle farm. As a policy, the Government has decided to have a Cattle Breeding Complex there. The Scheme is pending with the Government for the past 4 years. When I contacted the Hon. Minister for Animal Husbandry, the Hon. Minister has promised to expedite the project; but so far for the last 4 years, it is hanging fire. I have also contacted the Central Government to give clearance and the Central Government has also cleared the Project. Such being the case, I do not know why our Government for the reasons best known to them, is not taking up the project. The Complex has not come into force. We have appointed a Chairman for that complex and also appointed some members. They are all only on paper. Due to non-



1985 March 11] [Thiru T. Venkata Reddy]

working of the complex, the Hosur Livestock Research Station has been losing a lot of amount from the Government of Tamil Nadu and Government of India. In either way the cattle farm is thus losing the amount. If it is started, it will cater to the needs of 7 districts and popularise the latest animal husbandry techniques and scientific methods, which the American Government has adopted. It should be started for the benefit of the farmers of Tamil Nadu. I request the Hon Minister to expedite the project soon.

Another aspect is this. Already sumer has set in and there is acute water scarcity. There is water, water in the sea but no drop of water to drink. People in the villages are sufferring for want of water. I have also contacted the TWAD Board in this connection. As you all know, the TWAD is just like a big white elephant. They do not realise the difficulties of the villagers. They erect the pumpsets to their convenience and not to the benefits of the villagers. They are putting the hand pumpsets without consulting the local villagers and other officials. Non-availability of water all over the State has become a problem. If the Government does not take steps on a war-footing basis and if the Government does not put the rigs and pumpsets in the villages and instal pumpsets, there will not be water for the people to drink. It will lead to lot of agitation. The agitation has already started in some of the areas. I therefore request the Government to solve this water problem.

Another difficulty is with regard to pumpsets and overheads. Most of the tanks are put to disuse. Most of the pumpsets are not functioning. Only third-class pumpsets were installed because they do not go in for first-class pumpsets or engines. I have got a pumpset in my house. It is working there well for the last 10 years without difficulty. But the pumpsets and engines used in the overhead tanks will work for 4 or 5 months. There is break-down of the machine. When one machine is working well without any trouble for 10 years, why the machine in Government agency is working for 4 or 5 months ? There is something wrong in the selection of motors or machines by the officials. The mechanics to rectify the defects in the over-head tanks also are not easily available. Most of the fitters and mechanics do not go to the villages to rectify the defects. Even if you call him or inform him, they will not promptly rectify the defects. This is another aspect which the Government must look into. There is also vehicle problem. One vehicle which goes round 3 or 4 taluks. It will take a few months to repair them.

[Thiru T. Venkata Reddy] [1985 March 11

I would request the Government to put one mechanical van for each taluk. One vehicle should be provided for each taluk so that they could repair the machines when it goes out of order. If it is repaired properly and immediately, the people will not clamour for water.

The other aspect which I want to stress is about the Amudham Stores for distribution of essential commodities. Less said the better, because most of the supploes go to do outsiders, because the salesmen in Amudham Stores sell the commodities in the open market. There are many people rearly to buy them as they are sold at cheaper prices Distribution is not properly done as there is no supervision at all.

In Amudham Stores the Government have appointed an Advisory Committee. Most of the people are not aware of such an Advisory Committee. The officials in Amudham Stores do not disclose properly the names of members of the Advisory Committee, and do not indicate what for is the Advisory Committee functioning. They merely put some fictitious names. The Members do not advise the Salesmen. Therefore, the Advisory Committee must be effective and the distribution must also be effective so that the poor people, the weaker people, who are in need of the grains, can go to the shops easily and can purchase the essential commodities without any difficulty.

The other difficulty is, rice is given in one time, sugar in one time, wheat in another time and kerosene in some other time. So, every cardholder has to go to the shop a number of times to get each commodity. I have been requesting the officers concerned to see that the distribution of the essential commodities is done at a time so that a cardholder need not have to go to the shop a number of times. He can save time also, because he is a poor worker. I therefore request the Hon. Minister to see that these things are rectified.

The other thing I want to say is about the transport facilities in our area which is very much lacking, and it is a problem for us to go to Bangalore from Hosur. I have been requesting the Minister for Transport to put more number of buses on the road so that the people in that area can go to Bangalore and other places without difficulty. Further, in our area each bus carries nearly 400 passengers to go to Bangalore. In Cuddalore when there was a boat accident, there was a hue and cry. In Hosur each bus carries nearly 400 passengers and they are carried like sheeps. So, transport



[1985 மார்ச் 11]

facilities in our area have to be given top priority. Our area is also a backward area though we have got SIPCOT and an industrial complex there. Still transport facilities are poor. Though roads are there, bus facilities are very much lacking. I request the Government to see that more number of buses are put on the road in our area, so that the people need not have to walk a lot of distance.

I thank the Hon. Speaker for having given an opportunity to speak a few words. Thank you.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 12—3—1985 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 5. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

54. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 5—11—1982 ஆம் நாளிட்ட 779 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ் நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

55. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (சில்லறை விற்பனைக் கடைகள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 24—10—1983 ஆம் நாளிட்ட 899 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[1985 மார்ச் 11

56. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 10—2—1984 ஆம் நாளிட்ட 185 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

57. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 16—3—1984 ஆம் நாளிட்ட 334 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

58. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 31—1—1984 ஆம் நாளிட்ட 118 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

59. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 27—4—1984 ஆம் நாளிட்ட 514 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

60. பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளரமைப்பு—எம்) துறையின் எஸ்.ஆர்.ஓ.பி. 351/82, 16—8—1982 ஆம் நாளிட்ட அறிவிக்கையில் திருத்தம் ஒன்றுசெய்வது குறித்து பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளரமைப்பு—



1985 மார்ச் 11]

எம்.) துறையின் 26—11—1984 ஆம் நாளிட்ட 1175 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

61. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்கு முறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 29—11—1984 ஆம் நாளிட்ட 1199 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

62. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்கு முறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 26—11—1984 ஆம் நாளிட்ட 1176 ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பெற்ற அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

63. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்கு முறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 10—12—1984 ஆம் நாளிட்ட 1226 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

64. தமிழ்நாடு கைத்தறித் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

[1985 மார்ச் 11

65. தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் /1956) 619-பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

66. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் 1979-80 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1 /1956) 619-A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

24. 1984 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (ஐம்பத்தி மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவின் மீதான செய்தி குறித்து, மாநிலங்களவை செயலாளரிடமிருந்து வரப்பெற்ற கடித எண் 1/64/84-பி, தேதி 18—9—1984-ன் நகல்.

25. 1984 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (ஐம்பத்தி மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (மக்களவையில் அறிமுகப்படுத்தப் பெற்றவாறு)

26. 1984 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (ஐம்பத்தி மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப் பெற்றவாறு).

27. 1984 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (ஐம்பத்தி மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவின் மீதான மக்களவை நடவடிக்கைகள்.

28. 1984 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (ஐம்பத்தி மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவின் மீதான மாநிலங்களவை நடவடிக்கைகள்.



1985 March 11]

## இணைப்பு I

([113-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

*Honourable Members of the Legislature,*

I am happy to welcome all of you to the newly constituted Legislature. The people have reposed great confidence in you and I wish you all sucess in your endeavours to measure to their expectation Grief-stricken as we are, at the tragic death of Thirumathi Indira Gandhi, we however derive confidence and inspiration by the resilience which the country has demonstrated in effecting a smooth transition of power through the democratic process. Once again, India has proved its strength in surviving the vicissitudes of destiny and demonstrated to the world the deep roots which democracy has taken here.

2. The general elections in the State also went off peacefully and people turned out in large numbers to exercise their franchise. The massive mandate which this Government has received is a vindication of and reaffirmation of faith, not only in the policies of this Government, but also in the leadership of Dr. M. G. Ramachandran. The entire State celebrated its jubilation at the return of the Chief Minister, recovered and equipped to rededicate himself to the services of the people whom he loves and who have been returning his affection in abundant measure. I would like to take this opportunity to reiterate the pledge of this Government that they will continue to work for the upliftment of the poor, or the redressal of the grievances of the downtroden and the eradication of poverty and unemployment. The Government stands comitted to provide a clean and effective administration and I invite all of you to extend your active support to ensure that these objectives are achieved.

3. The year 1985 is an important landmark for this country. It has seen the peaceful transition of power at the Centre after the demise of Thirumathi Indira Gandhi who bestrode the national scene like a colossus. Thiru Rajiv Gandhi has taken over as the Prime Minister of this great nation at a time when the Seventh Five-Year

[1985 March 11

Plan is being formulated. The nation is poised for an era of faster progress and we fully endorse the emphasis of the Government of India in improving productivity and cleansing the administrative structure. Tamil Nadu had stood by the Government of India in implementing the 20 Point Programme in the fullest measure and we are not lagging behind in our dedication to the poverty eradication programmes.

4. Unfortunately, at the time when the aspirations of the people are rising and obligations of the States are becoming more onerous, we have to confront the inexorable constraints of resources availability. The recommendations of the Eighth Finance Commission have not really done full justice to the claims of Tamil Nadu. States like Tamil Nadu, known for their prudent financial management, were disappointed as instead of being rewarded they received lesser assistance. The entire thrust of the recommendations of the Finance Commission was to assist the States which were backward not only from the point of view of resources but also in resource mobilisation. We expect this imbalance to be rectified through the devolution of Plan assistance. It is in this light that Tamil Nadu has sought for a principle of Plan assistance which would be more rational and equitable than the one adopted till now. The State Government have been pleading for this change in various forums including the National Development Council. We are suggesting a system by which the devolution will take due account of the tax effort of the State *vis-a-vis* the taxable resources and would also not reduce the assistance to States which perform better on the Family Planning front. The right decision taken by Government of India to freeze the population of States at the 1971 level for purposes of deciding various types of assistance, which are related to the size of the population, should be logically carried forward in the matter of assistance that is given based on the per capita income of the States. States whose per capita income shows an increase entirely on account of lower population growth, should not receive lesser assistance. I hope a more equitable system both in the matter of Plan assistance and in the sharing of market borrowings will provide an adequate resource base for the State to launch comprehensive programmes in the Seventh Plan which will incorporate the developmental needs of various sectors. We expect that such a scheme will redress the anomally of the State having received one of the lowest per capita assistance among the States during the Sixth Plan.



1985 March 11]

5. The gruesome violence against the Tamils in Sri Lanka evoked great anguish in the minds of all Indians and particularly the people of Tamil Nadu. The Government of Tamil Nadu have raised this issue time and again with the Government of India for an early political settlement. The Chief Minister had also made an appeal on behalf of the people of Tamil Nadu and urged the Government of India to persuade the Government of Sri Lanka to stop the inhuman and indiscriminate attacks on Tamils in Sri Lanka.

The continued attack on the peaceful and unarmed Tamil fishermen on the Rameswaram coast and the recent killings of some of them by the Sri Lanka Navy evoked strong reaction among the people of Tamil Nadu. The Government of India strengthened the coast guard and introduced navy patrol boats for protecting the Tamil fishermen. We hope that the steps taken by the Government of India and the efforts initiated by the Prime Minister to settle the problem of Sri Lanka Tamils through diplomatic channels, will result in finding a permanent solution to this problem.

Consequent on the violence unleashed on the Tamils in Sri Lanka, there has been an increase in the influx of refugees which is likely to intensify further in future. This problem is causing considerable concern. The Government of Tamil Nadu have taken steps to strengthen the infrastructural facilities in the relief camps. Refugees, mostly belonging to fishermen community including women and children, have been pouring into the Rameswaram coastal areas by country boats and steam boats. During the short period from 5th February 1985 to 4th March 1985, a total of 3,023 refugee families consisting of 12,938 persons arrived at Rameswaram and Vedaranyam. The Collector of Ramanathapuram has already taken steps for receiving and accommodating them by constructing temporary houses in the Mandapam camp and also by despatching some families to other districts. Other Collectors have also been requested to make all arrangements on an emergency footing in co-ordination with the Collector of Ramanathapuram. A Commissioner for Sri Lanka Refugees' Rehabilitation has been appointed to co-ordinate and expedite the various arrangements being made for the succour of the arriving families.

6. I should like to briefly review the highlights of the performance of the Government in the last year before placing before you certain objectives and goals which this Government have set before them for the ensuing year.

7. As already mentioned, the poverty eradication programmes of Government of India were implemented last year with great dynamism in Tamil Nadu. Under Rural Landless Employment Guarantee Programme, we were the first State in the country to spend the targeted amount of Rs. 44.50 crores for the current year even before the full releases were received from the Government of India and the State had offered to absorb any additional amount that could be released by the Centre. This programme, along with National Rural Employment Programme, has not only provided a widespread base for employment in the rural areas but has been channelised by the State for the creation of durable assets and badly needed infrastructural facilities in the countryside.

8. In the course of last year, a number of schemes were announced and implemented by Government for the Welfare of the rural population and the low income groups. The old-age pension scheme has been made applicable to all deserving persons in the State without any fixed ceiling for each district as in the past. It is expected that this will benefit an additional 81,273 pensioners and the total number of old-age pensioners in the State now stands at 2,80,488. The intention of the Government is to see that eligible applicants are sanctioned old-age pension without any delay. Government sanctioned the setting up of 16 new orphanages at a cost of about Rs. 44.23 lakhs throughout the State so as to extend the facilities to all orphans. It has also been decided to supply hearing aids to 15,000 deaf persons and Committees have been appointed to conduct block-wise surveys for this purpose. The programme for creating sanitation facilities especially for women in rural areas, announced by the Chief Minister, is being implemented successfully. Around 11,200 villages have already been covered and the programme will be continued next year also.

9. Government have once again enhanced the ceiling for the quantity of rice to be supplied through public distribution system to 20 kilogrammes of rice per family and are today, discharging the responsibility of maintaining a massive distribution network through more than 20,000 fair price shops at the rate of approximately one per six hundred cards, distributing around 80,000 tonnes of rice per month. The operation is costing the exchequer around Rs. 90 crores by way of subsidy and other operational costs.



10. In the course of the last address, I had indicated the decision of Government to divide some of the existing districts into smaller districts with a view to increase the administrative efficiency and to bring the administration closer to the people. I am glad to inform this House that orders have already been issued for the trifurcation of Ramanathapuram district into Ramanathapuram, Kamarajar and Pasumpon Muthuramalingam districts, as the first phase. Government propose to pass orders on similar division of big districts in succeeding phases.

11. Though the last year was, by and large, free from the ravages of weather which devastated the State in the previous year, the State had to suffer localised damages caused by floods during 1983-84 also. The flooding of Thanjavur district in December, 1983 was followed by heavy rains in February and March, 1984. The recent cyclonic storm which crossed the South Andhra coast near Sriharikotta, left its trail of havoc in and around the city of Madras in November, 1984. We are grateful to the Government of India for the prompt adhoc assistance given and for having sanctioned a total sum of Rs. 18.76 crores to the State for relief measures. The State had already spent a sum of Rs. 15.68 crores from its own funds in anticipation of release from Government of India.

12. However, one silver lining against this background has been the comfortable food position this year. Last year, we had adequate rainfall and sufficient storage of water in Mettur reservoir. The total yield under Kuruvai has crossed 14 lakh tonnes and the procurement has also been an all-time high of 6.27 lakh tonnes. In view of this, we had promised to contribute one lakh tonnes of rice and one lakh tonnes of paddy to the Central pool. The samba harvest has also been satisfactory and the procurement during the season is expected to be of the order of 7 lakh tonnes. This has enabled us to meet the increasing demand on public distribution and face the future with confidence.

13. As an incentive for greater productivity, this Government continued the scheme of production incentive, to be given by way of input subsidy at the rate of Rs. 15 per quintal of paddy sold at the direct procurement centres, both for the kuruvai and samba seasons. The Government have also sanctioned Rs. 12 crores for this. The crop insurance scheme which was earlier confined to paddy has since been extended to groundnut crop also during 1983-84. The subsidy on the premium has also been increased from 50 per cent to 66 per cent.

14. Tamil Nadu has been one of the pioneers of the co-operative movement in India. Unfortunately, the movement, of late, has been losing its vitality because of the poor recoveries and excessive dependence on the Government for subsidy. It is, in order to revitalise this sector and retrieve the farmers from the accumulated burden of indebtedness, accentuated by the poor seasonal conditions, that this Government had, from time to time, introduced measures to give debt relief. In spite of such assistance, the overall recoveries in the co-operative sector continue to be low and unless there is whole-hearted co-operation from the beneficiaries to take advantage of the measures announced by the Government and unless they come forward to strengthen the co-operative set up, it may not be possible to maintain the increasing tempo which has characterised the lending in this sector. Recently, the Government had announced further waiver of overdue interest and penal interest for such of those farmers who pay up their dues in full and this concession has also been extended till 31st March 1985. I earnestly hope that the agriculturists will respond to this offer of the Government and come forward to clear their dues particularly since this year has been an year of excellent harvest.

15. The new Tamil Nadu Co-operative Act, 1983 has been enacted and the Government are finalising the rules so that the elections to the Boards of Co-operative Societies could be held under the new Act.

16. It is a well-acknowledged fact that electricity is a catalyst of development and industrial growth. During the year 1984-85, Government earmarked nearly 25 per cent of the Plan outlay for the Power sector and in the Seventh Plan also, this sector has to enjoy a premier position. Better capacity utilisation in the thermal stations under Tamil Nadu Electricity Board has been reflected in the improvement in power generations. As against 7,381 million units supplied during the period April-December, 1983, the power supplied during the same period in 1984, increased by 40 per cent to 10,374 million units. However it has to be remembered that the demand has also been on the increase and the liberal policy of giving new connections added 300 MWs to the connected load during this period. One of the major concessions recently announced by the State has been to provide electric power free of charge with effect from 15th September 1984 to hut dwellers availing supply under the one light for one hut' scheme and to the small farmers, depending solely on agriculture, for the use of pumpsets. Other farmers are also provi-



ded with the relief of a flat rate at Rs. 75 per horse power per year. Nearly 6 lakhs of hut dwellers and over 10 lakhs of farmers have been benefited by the above decisions. I am glad to inform the Members that the controversy about sharing of power from Atomic Power Station at Kalpakkam has been resolved in favour of the State Government. We are grateful for the renewed assurance given by the Central Government that the entire power from the first unit of 235 MWs and half of the power from the second unit of similar capacity will be available to the Tamil Nadu Electricity Board.

17. On the industrial front Tamil Nadu has been marching forward. Sanction of letters of intent and their conversion into industrial licences are being monitored closely. The State suffers a handicap in not having any "no industry district" inspite of there being industrially backward areas. We have been pressing for the concept of "no industry taluk" or "no industry block". We expect a favourable response from the Government of India. It has been a matter of pride for the State that Tamil Nadu has been standing first among all the States in the country in total sanctions under the Capital Subsidy Scheme of the Government of India.

18. The members may be aware that the State has been pressing the Government of India for adequate and equitable representation in the matter of Central investments. I am glad to inform that the expansion of Madras Refineries from a capacity of 2.8 to 5.6 million tonnes is in progress. The Government of India have also sanctioned the setting up of a Heavy Alloy Penetrator Factory at Tiruchirappalli at a cost of Rs. 170 crores. The State has offered land free of cost for this as well as for the expansion of the Heavy Vehicles Factory at Avadi. Government of India have also been offered land free of cost for setting up a second Railway Coach Factory at Tiruchirappalli and the response of Government of India is awaited. We hope that the Government of India will sanction this as well as the expansion of Madras Fertilisers at Manali and of Hindustan Photo Films at Ootacamund. We also expect that our longstanding demand for the expansion of the Salem Steels into a full-fledged Steel Plant will be conceded.

19. During my last address, I had told the Members about the setting up of the newsprint and paper project by the Tamil Nadu Newsprint and Papers Limited being promoted by the State Government. The project introduces a new technology of using the sugarcane bagasse as raw material for newsprint and writing paper. I am

[1985 March 11

happy to inform the Members that the project has commenced trial production during 1984. The Tiruttani Co-operative Sugar Mills, which has been set up at a cost of Rs. 10 crores also commenced production that year. Government have also takenover Madura-Sugars to protect the interest of the canegrowers and have taken action to modernise and expand the unit at a cost of Rs. 5 crores. A new sugar mill at Mailaduthurai in Thanjavur district is being set up at a cost of Rs. 10.8 crores.

20. The Government continue to work towards the objective of health for all by 2000 A.D. It is, therefore, proposed to establish health sub-centres for every 5,000 population and we have to-day, a total number of 5,602 sub-centres.

21. The Government are taking every possible step to increase the employment opportunities in rural areas by vigorously implementing the employment generation schemes like, NREP, RLEGP, etc. The Government have also extended the unemployment relief to the persons who have passed S.S.L.C. and P.U.C. The amount of the relief has also been increased substantially. The total full year commitment on acount of this for the next year will be of the order of Rs. 5 crores.

22. The Government are implementing a massive scheme under Social Forestry with assistance from the Swedish International Development Authority. A sum of Rs. 8.23 crores has been allotted for 1984-85. Up to the end of December 1984, 268 lakhs seedlings have been planted. Plantations have been raised in an extent of 16,251 hectares in addition to 1,260 kilometres of strip plantations.

23. As you are aware, provision of safe drinking water has been an item of high priority with the State Government. It is a measure of success in this field that by the end of the Sixth Plan period problem habitations numbering 17,193 would have been provided with at least one source of drinking water. The World Bank Project costing Rs. 149.42 crores and covering a total population of 38.96 lakhs in the major towns of Madurai, Coimbatore and Salem and 75 medium towns have been approved and work has commenced. A project to provide safe drinking water to 726 habitations benefiting four lakh persons in Periyar and Coimbatore districts has also been taken up with the assistance of E.E.C. at an estimated cost of Rs. 15.2 crores.



1985 March 11]

24. The emphasis in the field of agriculture has been on improving productivity. During 1984-85, we are likely to achieve a record rice production of about 60 lakh metric tonnes. During the coming year, it is proposed to build on these gains and ahieve an annual growth of 4 to 5 per cent by popularising high-yielding varieties and introducing modern scientific agronomic practices including better fertiliser management and integrated pest management systems. Water is a precious input in farming. Better water use through on farm development, activities which have been launched will be further intensified during 1985-86. To secure maximum returns, rotational water management methods popularly known as "warabandhi" have been tested in our major comands and in the ensuing year, the scope of these projects will be expanded.

25. Government are keenly conscious of their responsibility to the staff and their welfare. As you are aware, this Government had already announced a large number of staff welfare schemes of innovative nature, the latest of which had been the retirement benefit scheme announced last year. A number of welfare measures have been introduced by the Government for the Police force who face a difficult and arduous job. These include the provision of terry-cotton uniforms, sanction of rain-coats and boots and increase in the rate of subsidy for the supply of essential commodities. The Fourth Pay Commission was constituted as announced by the Government last year and they have reached the final stage of their deliberations Pending the receipt of their recomendations, the Government Voluntarily announced an interim relief to all employees numbering 8 lakhs which is one of the largest among the States in the country. Every employee drawing pay below Rs. 350 per month was given a lumpsum relief of Rs. 200 and others were given Rs. 300 of which, 50 per cent alone will be adjusted against the arrears to be paid on the basis of the Pay Commission's recommendations.

26. Thus, the Government have been fulfilling various promises made to the electorate and catering to the needs and aspirations of all sections of the population. However, the task of building up a prosperous State is a never ending one and I would like to outline

[1985 March 11

the areas in which this Government propose to initiate new programmes in the future. I have already mentioned the steps taken on the various announcements that the Chief Minister had made on the 15th of August 1984. These will be continued and the rest of the new programmes will also be initiated from now onwards.

(1) It is proposed to extend rural water-supply to include tap connections in all the rural areas where adequate source has been found.

(2) Comprehensive programmes will be drawn up for the welfare of Adi-Dravidar Community.

(3) Time bound programmes will be drawn up for the improvement of municipal areas.

(4) In order to devote special attention for the development of handlooms, the Industries department in the Secretariat will be bifurcated and a separate department for handlooms, textiles and khadi will be constituted.

(5) A plan for providing housing for handloom weavers on a time bound basis will be drawn up as a three year programme.

(6) The Family Benefit Fund payment to Government servants will be raised from Rs. 10,000 to Rs. 20,000 and appropriate scheme will be drawn up.

(7) The compensation under the Accident Relief Scheme announced last year for the benefit of the agricultural labourers, small and marginal farmers, village artisans and construction workers who meet with death during work, will be enhanced from Rs. 5,000 to Rs. 10,000.

(8) Under the scheme announced by the Chief Minister on August 15th, 1984, Insurance-*cum*-Retirement Benefit Scheme for agricultural labourers, craftsmen, small and marginal farmers and other workers, is to be implemented on a more comprehensive basis. Already 167 Special Tahsildars have been appointed for this purpose and members will be enrolled and subscription collected through the Village Administrative Officers for which the time-limit has been extended up to 31st March 1985.



1985 March 11]

(9) The co-operative societies for fishermen will be strengthened and expanded so that they serve as focal point for meeting their various needs.

(10) This Government have launched on a big scale programmes to tap non-conventional sources of energy. Incentives will be provided for industries manufacturing solar heating and other devices utilising solar energy.

(11) The programme launched by the Chief Minister for life-oriented education has made a beginning with the introduction of appropriate vocational courses in a number of schools. This scheme, which would cost around Rs. 1,000 crores, will be taken up in phases and the State Government propose to approach the World Bank through the Government of India for assistance in implementing this scheme.

(12) The Chief Minister's Nutritious Meal Programme was extended to include the children in the age group 10—15 years from 15th September 1984 and a total of about 80 lakh children are benefited today. A programme of this magnitude and coverage has been a matter of admiration and inspiration not only in this country but abroad and I am happy that the multifarious benefits of a scheme like this and its value in building up a healthy and strong future generation has been recognised all around. Tamil Nadu has been a fore-runner in this and we are proud to see the scheme being adopted by other States. The Nutritious Meal Programme has thus taken firm roots in this State. This Government propose to introduce another package of welfare measures catering to the various needs of the poorer children in the State which by themselves will constitute an Integrated Child Welfare Programme. It is therefore proposed to supply free set of clothes to all deserving children from Class I to Class VIII. It is also proposed to introduce a scheme from next year of supplying text-books free of cost to these children from Class I to Class VIII. The facilities for health care for the children will be further expanded and strengthened. 10,000 child welfare centres where noon meal is given have been ordered to be converted into pre-primary schools. It is proposed to convert the remaining centres also.

(13) A time-bound programme will also be drawn up for repairing the school buildings which are in bad shape and separate provision will also be made for constructing school buildings wherever

[1985 March 11

needed. It would be seen that, with the introduction of these schemes, the total welfare of the children will be taken care of by the State and the activities under these programmes will be organised in such a way that large-scale employment opportunities are also provided in the rural areas.

(14) The Government propose to start a Health Services University in Madras.

(15) Inspite of the various measures undertaken by the Government in increasing the production and intensifying public distribution, the economy suffers from the speculative activities such as hoarding and blackmarketeering. The Government propose to tighten the measures to control these activities and to punish the wrong-doers.

27. The Government have thus drawn up a comprehensive blueprint for increasing the tempo of development in the State and contributing to the welfare of the poorer and vulnerable sections. May I take this opportunity to invite all of you to join in this noble endeavour and extend your fullest co-operation for making these schemes a success. *Vanakkam.*



1985 மார்ச் 11]

## இணைப்பு II

(113 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர்களே,

புதிதாக அமைக்கப்பட்டுள்ள இச் சட்டமன்றத்திற்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். மக்கள் உங்களிடத்தில் மிகப் பெரும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணங்கள் நிறைவேற நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளில் வெற்றி பெற வாழ்த்துகிறேன். திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் கொடுமை மிகுந்த மரணத்தை முன்னிட்டு நாம் அனைவரும் மிகப் பெருங்கவலையில் ஆழ்ந்து கிடக்கையில், ஆளுகை அதிகாரத்தைச் சனநாயக முறைகளின் மூலம், அமைதியான முறையில் மாற்றிக்கொடுத்து, நாட்டைப் பழைய நிலைக்கு மீட்டுக் கொணர்ந்துள்ள சூழ்நிலை, நமக்கெல்லாம் தன்னம்பிக்கையையும், ஊக்கத்தையும் அளிப்பதாக இருக்கின்றது. இயற்கையின் சோதனைகளிலிருந்து விடுபட்டு இந்தியா மீண்டும் தன்னுடைய முழுவலிவையும் நிலைநாட்டியிருப்பதோடு மட்டுமல்லாமல் இங்கு குடியாட்சி முறையானது மிக ஆழமாக வேரூன்றி நிற்கிறது என்பதை உலகுக்குத் தெளிவுபடுத்திக் காட்டியும் விட்டது.

2. இம் மாநிலத்தில் பொதுத் தேர்தல்கள் மிக அமைதியான முறையில் நடந்தேறியிருக்கின்றன. பெருவாரியான மக்களும் முன் வந்து தங்கள் வாக்குரிமையை முறைப்படி பயன்படுத்தியுள்ளனர். மக்கள் வழங்கிய மாபெரும் தீர்ப்பை இந்த அரசு பெற்றிருக்கிறது என்றால், அதற்குக் காரணம், அரசு மேற்கொண்ட பல்வேறு கொள்கைகளின்பால், மக்கள் கொண்டிருக்கும் உறுதியான ஆதரவும் மறுபடியும் நிலைநாட்டும் நம்பிக்கையும் ஆகும். மக்கள் அளித்துள்ள தீர்ப்பு, அரசின் கொள்கைகளிடத்தே மட்டுமல்லாமல் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் தலைமையிடத்திலும் மக்கள் எவ்வளவு நம்பிக்கையைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை

மீண்டும் நிலை நாட்டும் தன்மையதாகும். பேரன்பையும், அளப்பரிய பெரும்பற்றையும் பெற்ற பொதுமக்களுக்குத் தொண்டு புரியத் தம்மை மறுபடியும் ஒப்படைக்கின்ற தன்மையோடும், உடல்நலத்தோடும் திரும்பி வந்த முதலமைச்சரை, இந்த மாநிலம் முழுவதுமே, விழாக் கோலத்தோடு, பெருமகிழ்ச்சியுடன் வரவேற்று நின்றது. ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்கும், தாழ்த்தப்பட்டோரின் துயரங்களைத் துடைப்பதற்கும், வறுமையையும் வேலையின்மையையும் நீக்குவதற்கும், இந்த அரசு எடுத்துக்கொண்ட உறுதி மொழியைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்கு பாடுபடும் என்பதை இந்த வாய்ப்பிலே நான் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். தூய்மையும் திறமையும் வாய்ந்த நிருவாகத்தை அளிக்க வேண்டும் என்பதில் இந்த அரசு முனைப்புள்ளத்தோடு இருந்து வருகிறது. இந்த நோக்கங்களெல்லாம் சிறப்புற நிறைவேற நீங்கள் அனைவரும் உங்களுடைய ஆதரவைத் தீவிரமாக அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3. இந் நாட்டைப் பொறுத்தவரையில், 1985 ஆம் ஆண்டு, குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாகும். இந்த நாட்டின் மாபெரும் சக்தியாக, மிகப்பெருந்தலைவியாக விளங்கிய திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் மறைவுக்குப் பின்னர் மத்தியில் அமைதியாக ஆட்சி மாற்றம் கண்டது இந்த ஆண்டு தான். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டு வருகின்ற இந்த நேரத்தில் இந்தப் பெரிய நாட்டின் பிரதமர் பொறுப்பை, திரு. இராஜீவ் காந்தி அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார். விரைந்து முன்னேறும் கால கட்டத்தை நோக்கி இந்த நாடு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. நாட்டின் உற்பத்தியைப் பெருக்கவும், நிர்வாகத்தைத் தூய்மைப்படுத்தவும் மத்திய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு நாம் நம்முடைய மன நிறைவான ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறோம். இருபது அம்சத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு தன் முழுமையான ஒத்துழைப்பைக் கொடுத்துக் கொண்டுவருகிறது. வறுமை ஒழிப்புத்திட்டங்களைச் செயற்படுத்துவதில் நாம் என்றும் எந்தவகையிலும் பின்னடைந்துவிடவில்லை.



4. தற்போது மக்களின் விருப்பங்கள் பெருகிய வண்ணம் இருக்கின்றன; அதேநேரத்தில் அவற்றை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளும் அரசுக்கு மேலும் கூடிக்கொண்டே இருக்கின்றன. நிதிஆதாரங்கள் கிடைப்பதில் ஏற்படும் சற்றுங் குறையாத தடைகள் பலவற்றை நாம் சந்திக்க வேண்டி இருக்கிறது. எட்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகள், உண்மையில் தமிழ்நாட்டின் நிதிக் கோரிக்கைகளுக்கு முழு நியாயம் வழங்கவில்லை. இதனால் திறமையான நிதி நிர்வாகத்திற்குப் பெயர் பெற்ற தமிழ் நாடு போன்ற மாநிலங்கள் அதிக நிதி உதவி பெறுவதற்குப் பதிலாக, மிகவும் குறைந்த நிதி உதவி மட்டுமே பெற்றுப்பெரிதும் ஏமாற்றமடைய நேரிட்டது. நிதி ஆதாரங்களில் மட்டுமல்லாமல் நிதி திரட்டுவதிலும் பின்தங்கியுள்ள மாநிலங்களுக்கு உதவுவதையே நிதிக் குழு தன் பரிந்துரைகளின் அழுத்தந்திருத்தமான நோக்கமாகக் கொண்டிருந்தது. திட்டத்தின் மூலமாகப் போதிய நிதி உதவி வழங்குவதன் வாயிலாக இந்த இழப்பு ஈடுசெய்யப்படும் என நாம் எதிர்பார்க்கிறோம். இதுவரையில் திட்ட நிதி உதவி அளிப்பதில் பின்பற்றிய முறையைவிட இனி நியாயமான அளவிலும் சரியான அடிப்படையிலும் திட்ட நிதி உதவி கிடைப்பதற்கான முறையைப்பின்பற்ற வேண்டும் என்ற அடிப்படையில் தான் தமிழ்நாடு திட்ட நிதி உதவி கோரியுள்ளது. நிதி உதவி ஏற்பாடுகளில் தேசிய வளர்ச்சி மன்றம் உட்பட பல்வேறு மன்றங்களில் இப்படிப்பட்ட மாற்றம் ஏற்பட வேண்டுமென்று இம் மாநில அரசு வாதிட்டு வந்துள்ளது. மாநிலங்கள் வரி வாயில்களையொட்டி, வரி திரட்டும் முயற்சிகளைக் கருத்தில் கொண்டு, நிதிப் பங்கீட்டு அளவு அமைய வேண்டுமென்றும், குடும்ப நலத்திட்டத் துறையில் சிறந்த சாதனை புரிந்துவரும் மாநிலங்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவி எக்காரணங் கொண்டும் குறைந்துவிடும் நிலை ஏற்படக்கூடாது என்றும், இவற்றுக்கேற்றவகையில் மத்திய நிதிப் பங்கீட்டு ஏற்பாடு அமைய வேண்டுமென்றும் நாம் கருதுகிறோம். மக்கள் தொகை அடிப்படையில் நிதி உதவிகளை நிர்ணயிக்கும்போது, 1971-ம் ஆண்டு மாநிலங்களில் நிலவிய மக்கள் தொகையைத்தான் அடிப்படையாகக் கொள்ள வேண்டு[illegible] மைய அரசு எடுத்துள்ள சரியான முடிவு, நபர்வாரி [illegible] நிதி உதவிகளுக்கும்

பொருந்துமாறு செய்ய வேண்டும். குடும்ப நலத் திட்டத்தின் காரணமாக மக்கள் தொகை வளர்ச்சி குறைந்து நபர்வாரி வருமானம் உயர்ந்துள்ள மாநிலங்கள் குறைந்த நிதி உதவி பெறுகின்ற நிலை உருவாகக்கூடாது. திட்ட நிதி உதவியையும் பொதுமக்கள், வங்கிகள் ஆகியோரிடமிருந்து திரட்டப்படும் கடன்களையும் நடுநிலையான அடிப்படையில் பங்கிட்டுக்கொள்ளும் நிதி ஏற்பாட்டின் மூலமாக, ஏழாவது திட்டப் பணிகளை மேற்கொள்வதற்கான போதிய நிதி ஆதாரம் நமக்குக் கிடைக்கும் என நம்புவதோடு, அதன்மூலம் பல்வேறு துறைகளில் மேம்பாட்டுத் தேவைகளை நிறைவேற்ற முடியும் என்றும் நான் கருதுகிறேன். இத்தகைய நிதிப் பங்கீட்டு ஏற்பாட்டு முறையினால் நபர்வாரி அடிப்படையில் ஆறாவது திட்டக் காலத்தில் மற்ற மாநிலங்களைவிட இம் மாநிலத்திற்கு மிகக் குறைந்த நிதி உதவி கிடைக்கப்பெற்ற முரண்பாடான நிலை நீங்குமென்று நாம் எதிர்பார்க்கிறோம்.

5. இலங்கையில் தமிழர்கள்மீது கட்டவிழ்த்துவிடப் பட்டுள்ள பயங்கரமான வன்முறை தாக்குதல்கள் இந்தியர்களிடையே, குறிப்பாக, தமிழ்நாட்டு மக்களிடையே பெருந்துயரை ஏற்படுத்தியுள்ளன. இதற்கு விரைவில் அரசியல்வழி தீர்வு காண வேண்டுமென்று இந்தியப் பேரரசிடம் தமிழ்நாடு அரசு பலமுறை எடுத்துக் கூறி வந்துள்ளது. தமிழ்நாட்டு மக்கள் சார்பில் முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பேரரசுக்கு வேண்டுகோள் விடுத்து, இலங்கையில் தமிழர்களை மனிதாபிமானமற்ற முறையிலும், கண்மூடித்தனமாகவும் தாக்கி வருவதை அறவே நிறுத்துமாறு இலங்கை அரசை இந்தியப் பேரரசு வற்புறுத்த வேண்டுமென்று வலியுறுத்தி வந்துள்ளார்.

இராமேசுவரம் கடற்கரையில் அமைதியாகவும் நிராயுத பாணியாகவும் மீன் பிடித்து வரும் தமிழக மீனவர்கள்மீது இலங்கை தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதும், மீனவர் சிலரைச் சுட்டுக் கொன்றதும் தமிழ்நாட்டு மக்களிடையே கடும் எதிர்ப்பையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளன. தமிழ் நாட்டு மீனவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், மத்திய அரசு பாதுகாவல் படையை வலுப்படுத்தி இருப்பதோடு கப்பல் படையைச் சார்ந்த ரோந்துப் படகுகளையும் அனுப்பிவைத் துள்ளது. இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண [illegible]





இராஜதந்திர வழிகளில் மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளும், இந்தியப் பிரதமர் மேற்கொண்டுள்ள முயற்சிகளும் இப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு காண வழி வகுக்கும் என்று நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இலங்கைத் தமிழர்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைத் தாக்குதல்களைத் தொடர்ந்து அகதிகளின் வருகை பெருகிக் கொண்டே இருக்கிறது. இனி, எதிர்காலத்தில் இந்த வருகை மேலும் தீவிரமாகக் கூடும். இந்தப் பிரச்சினை நமக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது. அகதிகளின் முகாம்களில் அடிப்படைத் தேவைக்கான வசதிகளை அதிகப்படுத்த தமிழ்நாடு அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மகளிர், குழந்தைகள் உட்பட அகதிகள் பெரும்பாலானோர் மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். அவர்கள் நாட்டுப் படகுகளிலும், நீராவிப் படகுகளிலும் இராமேசுவரம் கடற்கரைப் பகுதிகளை நோக்கி வந்த வண்ணம் இருக்கின்றனர். 5—2—1985-லிருந்து 4—3—1985 வரையிலான குறுகிய கால அளவில், 12,938 நபர்களைக் கொண்ட 3,023 அகதிக் குடும்பங்கள் இராமேசுவரம்மற்றும் வேதாரண்யம் வந்தடைந்துள்ளனர். இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களை வரவேற்றும், மண்டபம் முகாமில் தற்காலிக வீடுகள் கட்டிக் கொடுத்து அவர்களுக்கு வசதியளித்தும், சில குடும்பங்களை ஏனைய மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்தும் பல்வேறு நடவடிக்கைகளை ஏற்கெனவே எடுத்துள்ளார். இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒத்துழைப்போடு, அவசரகால நடவடிக்கை முறையில் அனைத்து வகை ஏற்பாடுகளையும் செய்து கொடுக்குமாறு மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர். இலங்கையிலிருந்து வந்து கொண்டிருக்கும் ஆதரவற்ற தமிழர்களின் துயர்துடைப்புப் பணிகளை ஒருங்கிணைத்து விரைவுபடுத்தி நிறைவேற்றுவதற்காக இலங்கை அகதிகள் மறுவாழ்வு ஆணையர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்.

6. வரும் ஆண்டில், அரசு நிறைவேற்றக் கருதியுள்ள திட்டங்கள், பணிகள் சிலவற்றைப் பற்றிய செய்திகளை உங்கள்முன் வைப்பதற்கு முன், சென்ற ஆண்டில் அரசு எய்திய சாதனைகள் சிலவற்றின் சிறப்புகள் குறித்துச் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

[1985 மார்ச் 11

7. ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளதைப்போல வறுமையை ஒழிப்பதற்காக மத்திய அரசு வகுத்துள்ள திட்டங்கள் பலவும் சென்ற ஆண்டில், மிகத் தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டன. ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின்கீழ், மத்திய அரசு, நடப்பு ஆண்டிற்காக இம் மாநிலத்திற்கு ஒதுக்கிய தொகையை முழுமையாக வழங்குவதற்கு முன்னரே, இலக்கிடப் பட்ட தொகையான ரூ. 44.50 கோடியை, இந்தியாவிலேயே, முதலாவதாகச் செலவிட்ட மாநிலம், நமது மாநிலமாகும்; மேலும், மேற்குறிப்பிட்ட திட்டத்திற்காக, மத்திய அரசு கூடுதலாக எவ்வளவு நிதியை வழங்கக் கருதினாலும் அத்தொகையை ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பதாக இம் மாநில அரசு தெரிவித்துள்ளது. இத் திட்டம், தேசிய கிராமப் பகுதி வேலைவாய்ப்புத் திட்டத்துடன் இணைத்து கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்பு வசதியைப் பரவலாக ஏற்படுத்து வதற்கான அடிப்படையை அமைத்துள்ளதோடு, கிராமப் பகுதிகளில் நிலையான சொத்துக்கள், மிகவும் இன்றியமையாத அடிப்படை வசதிகள் ஆகியவை இம் மாநில அரசு மூலம் ஏற்படவும் வழி வகுத்தது.

8. கிராம மக்கள் குறைந்த வருமானத் தொகுதியினர் ஆகியோர் நலன் கருதி கடந்த ஆண்டில் அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்து அவற்றை நடைமுறைப்படுத்தியுள்ளது. முன்பு இருந்ததைப்போல் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உச்சவரம்பு என்று எந்த அளவையும் நிர்ணயம் செய்யாமல், இம் மாநிலத்தில் தகுதி வாய்ந்த நபர்கள் அனைவருக்கும் முதியோர் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் மூலம் கூடுதலாக 81,273 முதியோர் பயனடைவர் என்று எதிர்பார்க்கப் படுகிறது. மேலும், தற்போது இம் மாநிலத்தில் முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்களின் மொத்த எண்ணிக்கை 2,80,488 ஆகும். ஓய்வூதியம் பெற விண்ணப்பிக்கத் தகுதியுடையோர் அனைவரும் அதனைக் காலத் தாழ்வுக்கு இடமில்லாமல் உடனடியாகப் பெறவேண்டுமென்பதே அரசின் நோக்கமாகும். ஆதரவற்ற குழந்தைகள் அனைவருக்கும் வசதிகளை விரிவு படுத்தும் வகையில், இம் மாநிலம் முழுவதிலும் சுமார் ரூ. 44 இலட்சம் செலவில் 16 புதிய ஆதரவற்றோர் இல்லங்களை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியது. காது கேளாத 15,000



1985 மார்ச் 11]

பேருக்கு செவிமடுப்புக் கருவிகள் வழங்கவும் முடிவு செய்து அதற்காக ஊராட்சி ஒன்றியவாரியாக கணக்கெடுப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. கிராமப் பகுதிகளில் குறிப்பாக, பெண்களுக்குக் கழிப்பிடம் போன்ற துப்புரவு வசதிகளைச் செய்து கொடுக்க முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டம் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 11,200 கிராமங்களில் இத் திட்டம் ஏற்கெனவே செயற்படுத்தப் பட்டு விட்டது. வருமாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயற்படுத் தப்படும்.

9. பொது விநியோக ஏற்பாட்டின் மூலம் வழங்கப்படுகின்ற அரிசியின் உச்சவரம்பு அளவை மீண்டும் குடும்பம் ஒன்றுக்கு 20 கிலோவாக அரசு உயர்த்தியுள்ளது. சுமார் 600 குடும்ப அட்டைகளுக்கு ஒரு கடை என்கிற விகிதத்தில் 20,000-க்கும் மேற்பட்ட நியாயவிலைக் கடைகளின் மூலம் திங்களொன்றுக்கு 80,000 டன் அரிசி விநியோகம் செய்து பொது விநியோக முறையை மிகச் சிறப்பாக நடத்திவரும் பொறுப்பினை அரசு மேற்கொண்டுள்ளது. பொது விநியோக முறையில் சலுகைகள் அளித்தல், அதன் நிர்வாகச் செலவுகளை ஏற்றல் போன்ற வகையில் சுமார் ரூ. 90 கோடி அளவுக்குச் செலவினை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

10. நிர்வாகத் திறனை உயர்த்தும் நோக்குடனும், நிர்வாகத்தை மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டு வரும் நோக்குடனும் தற்போதுள்ள பெரிய மாவட்டங்கள் சிலவற்றைச் சிறிய மாவட்டங்களாகப் பிரிக்க அரசு முடிவு எடுத்ததை என்னுடைய கடந்த உரையின் போது நான் குறிப்பிட்டிருந்தேன். முதல் கட்டமாக, இராமநாதபுரம் மாவட்டத்தை இராமநாதபுரம் மாவட்டம், காமராஜர் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் எனப்பிரிக்க ஏற்கெனவே ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன என்ற விவரத்தை இந்த அவையில் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இதைப்போன்றே ஏனைய பெரிய மாவட்டங்களையும் படிப்படியாகப் பிரிக்க அரசு தக்க ஆணைகளைப் பிறப்பிக்கும்.

11. கடந்தாண்டிக்கு முந்தைய ஆண்டில் பருவமழை பொய்த்ததால், மாநிலத்திற்கு வெகுவான பாதிப்பு ஏற்பட்டிருந்த போதிலும், கடந்தாண்டு அத்தகைய பாதிப்பிலிருந்து மாநிலம்

பெருமளவுக்கும் விடுபட்டிருந்தது என்றாலும், 1983-84 ஆம் ஆண்டில் இம் மாநிலத்தில் சில பகுதிகள் வெள்ளத்தால் சேதமுற்றன. பெருமழையின் காரணமாக, 1983 டிசம்பரிலும், அதைத் தொடர்ந்து 1984 பிப்ரவரி, மார்ச் திங்களிலும் தஞ்சாவூர் மாவட்டத்தில் பெரும் வெள்ளச் சேதம் ஏற்பட்டது. 1984 நவம்பரில் ஸ்ரீஹரிகோட்டா அருகே தென் ஆந்திரக் கடற்கரையைக் கடந்த புயல்காற்று, சென்னை மாநகரின் ஒரு பகுதியையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் பெரிதும் பாதித்தது. மத்திய அரசு உரிய நேரத்தில், இதற்காக அளித்த நிதியுதவிக்கும், நிவாரண நடவடிக்கைகளுக்காக இம்மாநிலத்திற்கு மொத்தம் ரூ. 18.76 கோடி அளவில் அனுமதி வழங்கியதற்கும் மத்திய அரசுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். மத்திய அரசு வழங்கும் தொகையை எதிர்பார்த்து, மாநில அரசும் சொந்த நிதியிலிருந்து ரூ. 15.68 கோடி அளவுக்கு ஏற்கெனவே செலவிட்டு உள்ளது.

12. எனினும், இவ்வாண்டில் அமைந்துள்ள திருப்திகரமான உணவு நிலைமை, மிகுந்த நம்பிக்கை அளிப்பதாக உள்ளது. கடந்த ஆண்டு நமது மாநிலத்தில் போதிய அளவு மழை பெய்து மேட்டூர் நீர்த்தேக்கத்தில் போதிய அளவு நீர் தேங்கியிருந்தது. மொத்தக் குறுவை விளைச்சல் 14 இலட்சம் டன் அளவைத் தாண்டியுள்ளது; எப்போதும் இல்லாத அளவுக்கு 6.27 இலட்சம் டன் அளவுக்குக் கொள்முதல் செய்யப்பட்டது. இதன் காரணமாக, மத்திய தொகுப்பிற்கு ஒரு இலட்சம் டன் அரிசியையும் ஒரு இலட்சம் டன் நெல்லையும் கொடுக்க நாம் உறுதி அளித்தோம். சம்பா அறுவடையும் மனநிறைவு அளிப்பதாய் உள்ளது. 7 இலட்சம் டன் அளவிற்குக் கொள்முதல் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், பொது விநியோக முறையின்கீழ் பெருகிவரும் தேவையை நிறைவேற்றி எதிர்காலத்தை நம்பிக்கையுடன் நாம் சந்திக்க வகை செய்திருக்கிறது.

13. உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஊக்கமளிக்கும் வகையில், இவ்வரசு, உற்பத்தி ஊக்கத் தொகையாக, குறுவை, சம்பா பருவக் காலங்களில் நேரடிக் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு குவிண்டால் நெல்லுக்கும்



ரூ. 15 என்ற வீதத்தில் ஊக்கத் தொகையை இடுபொருள் உதவித் தொகையாக வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயற்படுத்தி வருகிறது. இதற்கென்று அரசு ரூ. 12 கோடி அனுமதி வழங்கியுள்ளது. ஏற்கெனவே, நெற்பயிருக்கு மட்டுமே அளிக்கப்பட்டு வந்த பயிர்க் காப்புறுதித் திட்டம் 1983-84 முதல் நிலக்கடலைப் பயிருக்கும் நீட்டிக்கப்பட்டது. தவணைத் தொகைக்காக வழங்கப்பட்டு வந்த உதவித் தொகையும் 50 விழுக்காட்டிலிருந்து 66 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.

14. இந்தியாவில், கூட்டுறவு இயக்கத்தைச் செயற்படுத்துவதில் முன்னோடியாக விளங்கும் சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். துரதிருஷ்டவசமாக, கடன் வசூலின் அளவு மிகக் குறைவாக உள்ளதாலும், உதவித் தொகைக்காக அரசை மட்டுமே பெரும்பான்மையாக நம்பியிருப்பதாலும் இவ்வியக்கம், அதன் உயிரோட்டத்தை இழந்து வருகிறது. இத்துறைக்குப் புத்துயிரளிக்கவும், மோசமான பருவ கால நிலைகளின் காரணமாக உழவர்களின் கடன் சுமை அதிகரித்து வருவதைத் தவிர்க்கும் வகையிலும், இவ்வரசு, அவர்களுக்குக் கடனிலிருந்து நிவாரணம் அளிக்கும் பொருட்டு, அவ்வப்போது, தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேற்சொன்ன நிதி உதவி வசதிகள் செய்திருந்தபோதிலும், கூட்டுறவுத் துறைகளில் வசூல் தொடர்ந்து மோசமாகவே உள்ளது; அரசு அறிவிக்கும் திட்டங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் பயனடைவோர் முழு மனதுடன் ஒத்துழைப்பு நல்கி, கூட்டுறவு அமைப்பு முறையை வலுப்படுத்த முனைந்தாலொழிய, இத்துறையின் கடன் வழங்கும் நோக்கத்தை முனைப்பாகத் தொடர்ந்து செயற்படுத்த இயலாது. தாங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை முழுவதையும் செலுத்தும் உழவர்களுக்கு அவர்கள் செலுத்த வேண்டிய நீண்ட கால நிலுவை மீதான வட்டித் தொகை, அபராத வட்டித் தொகை ஆகியவற்றிற்கு விலக்களிக்கும் சலுகையை அரசு அண்மையில் அறிவித்துள்ளதோடு, இச்சலுகையை 31—3—1985 ஆம் நாள் வரை நீட்டித்துள்ளது. அரசு அளித்துள்ள இச்சலுகையை விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்படுத்திக் கொள்வர் என்றும், குறிப்பாக, அமோக விளைச்சல் ஏற்பட்டுள்ள இவ்வாண்டில் நிலுவைத் தொகைகள் முழுவதையும் செலுத்த முன்வருவர் என்றும் நான் உளமார நம்புகிறேன்.

15. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டம் என்னும் புதிய சட்டம் இயற்றப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கக் குழுக்களுக்கான தேர்தல்கள் நடைபெறுவதற்கு வகைசெய்யும் பொருட்டு இப்புதிய சட்டத்தின் கீழ் விதிகளை அரசு இயற்றி வருகிறது.

16. தொழில் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் மின்சக்தி இன்றியமையாத தூண்டுகோலாகும் என்பதை யாவரும் ஒப்புக் கொள்வர். 1984-85 ஆம் ஆண்டில், திட்டச் செலவில் 25 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட தொகையை அரசு மின்சக்தி உற்பத்திக்காக ஒதுக்கியது: ஏழாவது திட்டத்திலும் நிதி ஒதுக்கப் பெறுவதில் இத்துறை முதன்மையான முன்னுரிமைப் பெறும் நிலையில் உள்ளது. தமிழ்நாடு மின் வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அனல்மின் நிலையங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டதன் பலனாக மின்சக்தி உற்பத்திப் பெருமளவு உயர்ந்துள்ளது. 1983-ல் ஏப்ரல் முதல் டிசம்பர் திங்கள் வரையில் 7,381 மில்லியன் யூனிட்டுகள் மின்சக்தி வழங்கப் பட்டது: இது 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் திங்கள் வரையில் 40 சதவீதம், அதாவது 10,374 மில்லியன் யூனிட்டுகளாக உயர்ந்துள்ளது. ஆயினும், மின்சக்தி தேவை அதிகரித்துள்ளதாலும், மின் இணைப்புக்களை வழங்குவதில் தாராளமான கொள்கை பின்பற்றப்பட்ட காலத்தில் கொடுக்கப் பட்ட இணைப்புக்களால், மின்சக்தி பயன்பாட்டு அளவு மேலும் 300 மெகாவாட் அதிகரித்துள்ளது. இம்மாநில அரசு அண்மையில் அளித்துள்ள சலுகைகளில் மிக முக்கியமான சலுகை யாதெனில், 'ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு' திட்டத்தின் கீழ், குடிசைவாழ் மக்களுக்கு 15—9—1984 முதல் மின்னொளி இலவசமாக வழங்குதல், விவசாயத்திற்கு நீரேற்றும் பொறிகளை (பம்ப் செட்டுகளை) மட்டுமே முழுமையாக நம்பியுள்ள சிறு உழவர்களுக்கு மின்சக்தியை இலவசமாக வழங்குதல் ஆகியவையாகும். ஒரு குதிரைத் திறன் கொண்ட நீரேற்றும் பொறிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 75 மட்டுமே செலுத்த வேண்டும் என்ற ஒரே படித்தான கட்டண விதச் சலுகை ஏனைய உழவர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. அரசின் மேற்சொன்ன முடிவுகளின் காரணமாக, சுமார் 6 இலட்சம் குடிசைவாழ் மக்களும் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட உழவர்களும்



பயனடைந்துள்ளனர். கல்பாக்கம் அணுமின் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியைப் பகிர்ந்து கொள்வதில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு, இம்மாநிலத்திற்குச் சாதகமாகவே முடிந்தது என்பதையும் நான் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். முதல் பிரிவில் உற்பத்தி செய்யப்படும் முழு மின்சக்தி 235 மெகா வாட்டும், இதே திறனுள்ள இரண்டாம் பிரிவில் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தி அளவில் ஒரு பாதியும் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு வழங்கப்படும் என்று மத்திய அரசு தற்போது உறுதி அளித்துள்ளது.

17. தொழில் துறையில் தமிழ்நாடு மாநிலம் சீராக முன்னேறி வருகிறது. தொழில் தொடங்குவதற்கான அனுமதிக் கடிதங்கள் வழங்குதல், அத்தகைய அனுமதிகளைத் தொழில் தொடங்கு வதற்கான உரிமங்களாக மாற்றுதல் ஆகியவை தொடர்பான நடவடிக்கைகள் குறித்து உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இம்மாநிலம் தொழில் துறையில் பின்தங்கியுள்ள பகுதிகளைக் கொண்டுள்ள போதிலும் 'தொழிற்சாலை யில்லாத மாவட்டம்' என்று அறிவிப்பு இல்லாத குறை உள்ளது. 'தொழிற்சாலையில்லாத வளர்ச்சி வட்டாரத்தை' அறிவிக்க வேண்டுமென்ற கொள்கையை நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். இதற்கு மத்திய அரசிடமிருந்து ஆதரவான பதிலை எதிர்பார்க்கின்றோம். மத்திய அரசின் மூலதன உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் மற்ற மாநிலங்களைவிட அதிகமான அனுமதிகள் வழங்கி தமிழ்நாடு மாநிலம் முதலிடம் பெற்றுள்ளது நமக்குப் பெருமை தருவதாகும்.

18. மத்திய அரசின் முதலீடுகளைப் பொறுத்தமட்டில், போதிய நியாயமான அளவிற்கு இம்மாநிலத்தில் முதலீடு செய்ய வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசினை வலியுறுத்தி வருகின்றதென்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் திறனளவை 2.8 மில்லியன் டன்னிலிருந்து 5.6 மில்லியன் டன்னாக உயர்த்தும் பணி நடைபெற்று வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், திருச்சிராப்பள்ளியில் ரூ. 170 கோடி செலவில் கனரக உலோகக் கலவை ஊடுருவித் தொழிற்சாலை (Heavy Alloy Penetrator

Factory) ஒன்றினை அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்காகவும், ஆவடியிலுள்ள கனரக வண்டிகள் தொழிற்சாலையினை விரிவுபடுத்துவதற்காகவும் மாநில அரசு இலவசமாக நிலம் வழங்கியுள்ளது. திருச்சிராப்பள்ளியில் இரண்டாவது இரயில் பெட்டித் தொழிற்சாலை அமைக்க மத்திய அரசுக்கு இலவசமாக நிலம் வழங்கவும் மாநில அரசு முன்வந்துள்ளது. இதற்கு மத்திய அரசிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு அனுமதி வழங்குவதுடன், மணலியிலுள்ள சென்னை இரசாயன உரத் தொழிற்சாலைக்கும், உதகமண்டலத்திலுள்ள 'இந்துஸ்தான் ஃபோட்டோ ஃபிலிம்' தொழிற்சாலையினை விரிவுபடுத்துவதற்கும் மத்திய அரசு அனுமதி வழங்குமென்று நாம் எதிர்பார்க்கிறோம். சேலம் உருக்காலையினை முழு அளவிலான உருக்காலையாக மாற்ற வேண்டுமென்னும் நீண்ட நாள் கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படுமென்று எதிர்பார்க்கிறோம்.

19. எனது கடந்த உரையில், தமிழ்நாடு பத்திரிகைத்தாள்—காகித உற்பத்தியை மாநில அரசு தொடங்கியதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களிடம் தெரிவித்திருந்தேன். பத்திரிகைக் காகிதம், எழுதுதாள் தயாரிப்பில் கரும்புச் சக்கையினைப் பயன்படுத்தும் புதிய தொழில் நுட்ப முறையினை இத்திட்டம் அறிமுகம் செய்துள்ளது. இத்திட்டம் 1984 ஆம் ஆண்டில் சோதனை உற்பத்தியினைத் தொடங்கியுள்ளதென்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ரூ. 10 கோடி செலவில் அமைக்கப்பட்ட திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை கடந்த ஆண்டு உற்பத்தியினைத் தொடங்கியுள்ளது. கரும்பு உற்பத்தியாளர்களின் நலன்களைக் காக்கும் பொருட்டு "மதுரா சுகர்ஸ்" நிறுவனத்தை அரசு தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டுள்ளதுடன் அதனை ரூ. 5 கோடி செலவில் நவீனப்படுத்தி விரிவுபடுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளது. ரூ. 10.8 கோடி செலவில் தஞ்சாவூர் மாவட்டம் மயிலாடுதுறையில் புதிய சர்க்கரை ஆலை ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

20. "கி.பி. 2000-க்குள் அனைவருக்கும் ஆரோக்கிய வாழ்வு" அளிக்கும் நோக்கத்தினை எய்த அரசு தொடர்ந்து பணியாற்றி வருகின்றது. 5,000 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு பகுதியிலும் ஒரு சுகாதார துணை நிலையம் என்ற விதத்தில்





தற்போது மொத்தம் 5,602 துணைச் சுகாதார நிலையங்கள் உள்ளன.

21. தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புறுதித் திட்டம் முதலான வேலைவாய்ப்புப் பெருக்கத் திட்டங்களைத் தீவிரமாகச் செயற்படுத்துவதன் மூலம் கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்புகளைப் பெருக்க இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் அரசு மேற்கொண்டு வருகிறது. அத்துடன், எஸ்.எஸ்.எல்.சி., பி.யு.சி. தேறியுள்ளவர்களுக்கும் வேலைவாய்ப்பின்மை உதவித்தொகை வழங்கும் திட்டத்தை நீட்டித்துள்ளது. உதவித் தொகையின் அளவும் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு அடுத்த ஆண்டு முழுவதற்குமாகும் மொத்தச் செலவு ரூ. 5 கோடி அளவில் அமையும்.

22. இந்த அரசு, சமூகக் காடு வளர்ப்பின்கீழ், சுவீடன் நாட்டு நிதி உதவியுடன் ஒரு பெரிய திட்டத்தைத் தமிழ்நாட்டில் செயற்படுத்தி வருகிறது. இத் திட்டத்திற்கென 1984-85-ல் ரூ. 8.23 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1984 டிசம்பர் திங்கள் முடிய 268 இலட்சம் நாற்றுக்கள் நடப்பட்டு, 16,251 எக்டேர் பரப்பில் தோட்டமும் 1,260 கிலோ மீட்டர் நீளத்திற்குத் துண்டு நிலத் தோட்டங்களும் வளர்க்கப்பட்டுள்ளன.

23. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது மாநில அரசின் திட்டங்களில் உயரிய முதலிடம் பெறுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள், பிரச்சினைக்குரிய குடியிருப்புகளில் 17,193 குடியிருப்புகளுக்குக் குறைந்தது ஒரு குடிநீர் வாயில் கிடைக்குமாறு செய்யப்படும். உலக வங்கித் திட்டத்தின்கீழ் ரூ. 149.42 கோடி செலவில் மதுரை, கோயம்புத்தூர், சேலம் போன்ற பெரு நகரங்களிலும், 75 நடுத்தர நகரங்களிலும் உள்ள 38.96 இலட்சம் மக்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணி தொடங்கியுள்ளது. ரூ. 15.2 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஐரோப்பிய பொருளாதார சமுதாய அமைப்பின் உதவியுடன் பெரியார், கோயம்புத்தூர் மாவட்டங்களில் 4 இலட்சம் பேர் பயன்பெறும் வகையில் 726 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[1985 மார்ச் 11

24. வேளாண்மைத் துறையில் உற்பத்தியினை மேம்படுத்து வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் அநேகமாக 60 இலட்சம் மெட்ரிக் டன் என்ற சாதனை உற்பத்தி அளவை எய்துவோம் என்று எதிர்பார்க்கலாம். இனி வரும் ஆண்டில், இந்த ஆதாரத்தின் அடிப்படையில் மிகுபயன் தரும் உயர் ரகங்களை மக்களிடையே பரவச் செய்தல், திறமையாக உரத்தைக் கையாளுதல், ஒருங்கிணைந்த பயிர்ப் பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகள உட்பட நவீன அறிவியல் வேளாண் பொருளாதார தொழில் நுட்பமுறைகளை அறிமுகம் செய்தல் ஆகியவற்றின் மூலம் ஆண்டிற்கு 4 முதல் 5 சதவீதம் வளர்ச்சி காணவும் கருதப்பட்டுள்ளது. வேளாண்மையில், தண்ணீர் கிடைத்தற்குரிய, மிக முக்கியமான இடுபொருளாகும். அண்மையில் தொடங்கிய வேளாண்மை வளர்ச்சி நடவடிக்கை களில் நன்முறையில் சிக்கனமாகத் தண்ணீரைப் பயன்படுத்தும் முறை 1985—86 ஆம் ஆண்டில் மேலும் தீவிரப்படுத்தப்படும். உயர்ந்த அளவில் பயன் பெறுவதற்கு "வாரபந்தி" எனப்படுகிற சுழல்முறை நீர்ப்பாசன வழிமுறைகள் பற்றி நம்முடைய பெரிய பாசனப் பகுதிகளில் ஆய்வுகள் நடத்தப் பட்டுள்ளன; வருமாண்டில் இத் திட்டங்களின் வாய்ப்பளவு மேலும் விரிவு படுத்தபபடும்.

25. அரசுப் பணியாளர்கள் நலனில் தமக்குள்ள பொறுப்பை அரசு நன்கு உணர்ந்துள்ளது. புதுவகையான பணியாளர் நலத் திட்டங்கள் பலவற்றை இவ்வரசு ஏற்கெனவே அறிவித்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். அத்தகைய திட்டங்களில் அண்மையில் அறிவிக்கப்பட்ட ஓய்வுகால நன்மைத் திட்டமும் ஒன்றாகும். கடினமாக அயராது பணியாற்றும் பொறுப்புள்ள காவல் படையினருக்கு நலத் திட்டங்கள் பலவற்றை அரசு தொடங்கி யுள்ளது. 'டெரிகாட்டன்' சீருடைகள் அளிப்பது, மழைக் கோட்டுகளும், காலணிகளும் வழங்குவது, இன்றியமையாப் பொருட்கள் வழங்கலுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையின் அளவை உயர்த்துவது ஆகியவை இத் திட்டங்களில் அடங்கும். கடந்த ஆண்டு அரசு அறிவித்தது போல நான்காம் சம்பளக் குழு அமைக்கப்பட்டது; அக்குழு, தனது ஆய்வுகளை இறுதியாக்கும் கட்டத்தை அடைந்துள்ளது. அக்குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப் பெறுகின்ற வரையில், அதற்கு முன்னதாக அரசுப்



1985 மார்ச் 11]

பணியாளர்களுக்கு இடைக்கால நிவாரணம் அளிப்பது குறித்து அரசு தானாகவே முன்வந்து அறிவிப்பு வெளியிட்டது. இந்நாட்டிலுள்ள பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், ஒரு பெரிய எண்ணிக்கையில் வழங்கப்பட்டது என்று சொல்லக்கூடிய அளவுக்கு 8 இலட்சம் அரசுப் பணியாளர்களுக்கு இடைக்கால நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. அரசுப் பணியாளர்களில் திங்களொன்றுக்கு ரூ. 350-ம் அதற்குக் குறைவாகவும் சம்பளம் பெறுவோர் ஒவ்வொருவருக்கும் ரூ. 200-ம் ஏனையோருக்கு ரூ. 300-ம் ஒருமொத்த நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது. இதில் 50 விழுக்காடு மட்டும் சம்பளக் குழுப் பரிந்துரைகளின் அடிப்படையில் வழங்கப்படவிருக்கிற நிலுவைத் தொகையில் சரிக்கட்டப்படும்.

26. ஆக, இவ்வரசு, வாக்காளப் பெருமக்களுக்கு அளித்த பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றி வருவதுடன், மக்கள் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரின் தேவைகளையும் விருப்பங்களையும நிறைவேற்றி வருகிறது. இருப்பினும், வளங்கொழு அரசுதனை உருவாக்கிவரும் பணி, முடிவிலாத தொடர் பணியாகும். இனி இவ்வரசு எதிர்காலத்தில் மேலும் தொடங்கக் கருதியுள்ள புதிய திட்டங்கள் பற்றிய விவரங்களை உங்கள் முன் எடுத்துக்கூற விரும்புகிறேன். நமது முதலமைச்சர் 1984 ஆகஸ்டு 15-ம நாள் அறிவித்திருந்த பல்வேறு உறுதிமொழிகள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்பற்றி உங்களுக்கு நான் ஏற்கெனவே கூறியுள்ளேன். இப்பணிகள் தொடர்வதோடு, புதிய திட்டங்கள் பலவும் இனி தொடர்ந்து மேற்கொள்ளப்படும்:—

(1) போதிய குடிநீர் ஆதாரம் உள்ள கிராமப்பகுதிகள் அனைத்திலும் குடிநீர்க் குழாய் இணைப்புகள் உள்ளிட்ட கிராமக் குடிநீர் வழங்கல் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தக் கருதப்பட்டுள்ளது.

(2) ஆதி திராவிடர் நல மேம்பாட்டிற்காக விரிவான திட்டங்கள் தயாரிக்கப்படும்.

(3) நகராட்சிப் பகுதிகள் மேம்பாட்டிற்காக காலவரையோடு கூடிய திட்டம் தயாரிக்கப்படும்.

(4) கைத்தறி வளர்ச்சிக்கு மேலும் முக்கிய கவனம் செலுத்தும் பொருட்டு, தலைமைச் செயலகத்தில், தொழில் துறை இரண்டாகப் பிரிக்கப்பட்டு, கைத்தறி, நெசவு, கதர் இவற்றிற்கென்று தனித் துறை அமைக்கப்படும்.

(5) கைத்தறி நெசவாளர்களின் வீட்டு வசதிக்காக மூன்றாண்டுக் கால அளவில் முடிப்பதென்ற காலவரையோடுகூடிய திட்டம் தயாரிக்கப்படும்.

(6) அரசுப் பணியாளர்களுக்கான குடும்ப நல நிதி ரூ. 10,000-லிருந்து ரூ. 20,000-க்கு உயர்த்தப்படும். இதற்குத் தக்கவாறு திட்டம் தயாரிக்கப்படும்.

(7) கடந்த ஆண்டில் உழவுத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் ஆகியோரது நலனுக்காக அறிவிக்கப்பட்ட இழப்பு ஈட்டுத் திட்டத்தின்படி அத்தொழிலாளர்கள் பணியில் ஈடுபடும்போது இறக்க நேரிட்டால் அளிக்கப்படும் இழப்பு ஈட்டுத் தொகை ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000-மாக உயர்த்தப்படும்.

(8) 1984 ஆகஸ்டு 15 ஆம் நாள் நமது முதலமைச்சர் அறிவித்தபடி, உழவுத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், ஏனைய தொழிலாளர்கள் ஆகியோருக்கான காப்புறுதி-ஓய்வுகால நலத் திட்டம் விரிவான அடிப்படையில் செயற்படுத்தப்படும். ஏற்கெனவே இதற்கென்று, 167 தனி வட்டாட்சியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இத் திட்டத்தில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு கிராம நிர்வாக அலுவலர்கள் மூலமாக சந்தாத் தொகை வசூலிக்கப்படும். இதற்கென கால வரம்பு 31-3-1985 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

(9) மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மீனவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மைய அமைப்புகளாகப் பணியாற்றும் வகையில் வலுப்படுத்தப்பட்டு விரிவுபடுத்தப்படும்.

(10) மரபு சாரா புதிய வகை எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்தும் திட்டத்தைப் பெரிய அளவில் இவ்வரசு தொடங்கியுள்ளது. சூரிய வெப்ப சக்தி ஆற்றலுடைய சாதனங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு ஊக்கத் தொகை அளிக்கப்படும்.



(11) முதலமைச்சர் தொடங்கிய வாழ்க்கைத் தொழில் அடிப்படையிலான கல்வித் திட்டம், பொருத்தமான வாழ்க்கைத் தொழில் பாடமுறைகளோடு பல பள்ளிகளில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. ரூ. 1,000 கோடி அளவில் செலவாகும் இத் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படும். இத் திட்டத்தினை நிறைவேற்ற மத்திய அரசு மூலம் உதவி பெற இவ்வரசு உலக வங்கியை அணுகுவதென்று கருதியுள்ளது.

(12) முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் 10 முதல் 15 வயது பிள்ளைகளும் பயன்பெறும் வகையில் 15—9—1984-லிருந்து நீட்டிக்கப்பட்டது; இதன் மூலம் இன்று சுமார் 80 இலட்சம் பிள்ளைகள் பயனடைந்து வருகின்றனர். விரிவான அளவில் மேற்கொண்ட இம் மாபெருந் திட்டம் இந்நாட்டில் மட்டுமல்லாது வெளி நாட்டிலும் பாராட்டைப் பெற்றுள்ளது. இத்தகையதொரு திட்டத்தின் பலதரப்பட்ட நன்மைகளும் ஆரோக்கியமான, வலுவுள்ள எதிர்கால சந்ததியினரை உருவாக்கும் சிறப்புந்தன்மையும் அனைவராலும் பாராட்டப் பட்டுள்ளது என்பதையறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இவ்வகையில் முன்னோடியாக விளங்கும் தமிழ்நாட்டை அனுசரித்து பிற மாநிலங்களும் இத்திட்டத்தைப் பின்பற்றி வருவது நமக்குப் பெருமிதமளிக்கிறது. இவ்வாறாக, சத்துணவுத் திட்டம் இம்மாநிலத்தில் உறுதியாக வேரூன்றியுள்ளது. மாநிலத்தின் வறிய குழந்தைகளின் பல்வேறு தேவைகளை நிறைவு செய்யக்கூடிய நலத் திட்டங்களின் மற்றொரு தொகுப்பை வெளியிடுவதன் மூலம் குழந்தைகளின் ஒருங் கிணைந்த நல வாழ்விற்கு வகை செய்யும் திட்டங்களை நிறைவேற்ற இந்த அரசு கருதுகிறது. ஆகவே, 1 ஆம் வகுப்பு முதல் VIII ஆம் வகுப்பு வரையிலும் தகுதியுள்ள பிள்ளைகள் அனைவருக்கும் இலவசமாகச் சீருடைகள் வழங்கக் கருதப் பட்டுள்ளது. மேலும், இனி வருமாண்டிலிருந்து I ஆம் வகுப்பு VIII ஆம் வகுப்பு வரையிலும் தகுதியுள்ள பிள்ளைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டமொன்றைத் தொடங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. குழந்தைகள் உடல் நலப் பராமரிப்பு வசதிகள் மேற்கொண்டும் விரிவுபடுத்தப் பட்டு பெருக்கப்படும். மதிய உணவு வழங்கப்படும் 10,000 குழந்தை

[1985 மார்ச் 11

நல நிலையங்கள் பாலர் தொடக்கப் பள்ளிகளாக மாற்றப்பட உத்தரவிடப்பட்டுள்ளது. எஞ்சிய நிலையங்களும் இவ்வாறே மாற்றப்படும்.

(13) பழுதுபட்ட நிலையிலுள்ள பள்ளிக் கட்டிடங்களைச் செப்பனிட காலவரையோடு கூடிய திட்டமொன்று வகுக்கப்படும். அவசியமான இடங்களிலெல்லாம் பள்ளிக் கட்டிடங்களைக் கட்டத் தனியே நிதி ஒதுக்கம் செய்யப்படும். இத் திட்டங்கள் தொடங்குவதன் மூலமாகக் குழந்தைகளின் ஒட்டு மொத்த நலனை அரசே கவனித்துக்கொள்கிறது என்பதையும், இத் திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் கிராமப் பகுதிகளில் பெருமளவு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் நன்கு திட்டமிட்டுச் செயற்படுத்தப்படும் என்பதையும் காணலாம்.

(14) சென்னையில் மருத்துவப் பல்கலைக் கழகம் ஒன்றினைத் தொடங்க அரசு கருதியுள்ளது.

(15) உற்பத்தியைப் பெருக்கவும் பொது விநியோக முறையை மும்முரமாகச் செயற்படுத்தவும் அரசு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்ட போதிலும், பதுக்கல், கள்ளச் சந்தை போன்ற ஊக வணிக நடவடிக்கை காரணமாக பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. இத்தகைய செயல்களைத் தடுக்கும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவும் தவறிழைப்போருக்குக் கடுந்தண்டனை விதிக்கவும் அரசு கருதியுள்ளது.

27. இவ்வாறு அரசு, இம் மாநில நல்வாழ்வுக்கான வளர்ச்சி வேகத்தை மேலும் பெருக்கி, சமுதாயத்தில் வறிய, நலிவுற்ற பிரிவினரின் நலனுக்கு இயன்ற அனைத்தையும் செய்ய விரிவான ஆக்கபூர்வமான திட்டங்கள் பலவற்றைத் தயாரித்துள்ளது. உயர்ந்த இலட்சியமுடைய இத்தகைய திட்டப்பணிகளில், நீங்கள் ஒருங்கிணைந்து, முழு ஒத்துழைப்பைத் தந்து அவை வெற்றிபெற உறுதுணையாக இருக்க வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் அனைவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கம்.

---

**உள்ளடக்கம்.**

1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள்.


பக்கங்கள்.

1. இரங்கல் குறிப்பு—
முன்னாள் உறுப்பினர் திரு. [illegible] முனிரெட்டி மறைவு — 283—284

2. இரங்கல் தீர்மானம்—
சோவியத் ஒன்றியக் குடியரசுத் தலைவர் திரு. கான்ஸ்டான்டன் செர்னன்கோ மறைவு— 284—305
மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் 284—291
திருமதி டி. யசோதா 291—293
திரு. மு. இராமநாதன் 293—294
திரு. கு. ரமணி 294—298
திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் 298—299
திரு. பொ. உத்திராபதி 299—301
திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் 301
திரு. குமரி அனந்தன் 301—304
மாண்புமிகு பேரவைத் தலைவர் 304—305

3. ஒழுங்குப் பிரச்னைகள்—
(அ) வினா-விடைகளுக்கான நேரம் முடிந்தபின் வினாக்களை எடுத்துக்கொள்ளுதல் 305—307
(ஆ) மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் பேரவை நடந்து கொண்டிருக்கும்போது கூட்டப் பெறுவது. 307—309

4. வினாக்கள்-விடைகள்—
உடுக்குறியிட்ட வினாக்கள் 309—319

5. தகவல் கோரல்—
உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டைகள் 320—322

6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)— 322—421
திருமதி பா. வளர்மதி 322—326
திரு. ஆர். எஸ். ஆறுமுகம் 326—332

| | பக்கங்கள் |
|---|---|
| 6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)— | |
| திரு. வே. இரா. ஜெயராமன் | 332—340 |
| திரு. மா. மணிமாறன் | 340—354 |
| திரு. ஏ. தங்கராசு | 354—358 |
| திரு. கு. சுப்பராயன் | 358—371 |
| திரு. மா. சின்னராசு | 371—388 |
| திரு. டி. ஆர். வேங்கடரமணன் | 388—399 |
| திரு. க. சோலைராசு | 399—411 |
| திரு. ஜி. கே. ஜெ. பாரதி | 413—421 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 422—423 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

**1985 மார்ச் 12, செவ்வாய்க்கிழமை.**

**மாசி 29, ரக்தாட்சி—திருவள்ளுவர் ஆண்டு 2016.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி. எச். பாண்டியன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு".

உடம்போடு உயிர்க்கு உள்ள உறவு, தான் இருந்த கூடு தனியே இருக்க அதைவிட்டு வேறிடத்திற்குப் பறவை பறந்தாற் போன்றது.

### இரங்கல் குறிப்பு.

### முன்னாள் உறுப்பினர் திரு. எம். முனிரெட்டி மறைவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. எம். முனிரெட்டி அவர்கள் 9—3—1985 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். முனிரெட்டி அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து, 1957-ஆம் ஆண்டு வரையிலும், மற்றும் 1957-ஆம் ஆண்டிலிருந்து 1962-ஆம் ஆண்டு வரையிலும் இருமுறை, முறையே ஹோசூர் மற்றும் உத்தனப்பள்ளி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்று நல்லமுறையில் பணியாற்றியுள்ளார். 1937-ஆம் ஆண்டு முதலே அரசியலில் ஈடுபட்ட இவர், 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் தீவிர பங்கு கொண்டு அதன் காரணமாய், லக்னோவில் சிறை வைக்கப்பட்டார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர். [1985 மார்ச் 12

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்).

## 1. இரங்கல் குறிப்பு.

### சோவியத் ஒன்றிய குடியரசுத் தலைவர் திரு. கான்ஸ்டான்டன் செர்னன்கோ மறைவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சோவியத் அதிபர் திரு. கான்ஸ்டான்டன் செர்னன்கோ அவர்கள் நேற்று 10—3—1985 அன்று மரணம் அடைந்த செய்தியை இந்தப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானத்தை மொழிவார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"சோவியத் நாட்டின் புகழ்பெற்ற தலைவரும், கம்யூனிஸ்ட் கட்சிக் கொள்கையில் பற்று உறுதியும், ஆட்சியில் நிர்வாகத் திறனும், இந்திய சோவியத் நட்புறவு வளர்வதிலும், விரிவுபடுத்துவதிலும் ஆர்வம் காட்டியவரும், உலக சமாதானத்திற்கு அரும்பாடுபட்டவரும். உழைப்பால் உயர்ந்தவரும், தாய்நாட்டு சேவைக்காக பல பட்டங்களையும், பரிசுகளையும் பெற்றவரும், 1984-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ஆம் தேதியிலிருந்து சோவியத் நாட்டு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைக் குழுவின் பொதுச் செயலாளராகவும், சோவியத் நாட்டின் அதிபராகவும் விளங்கிய திரு. கான்ஸ்டான்டன் செர்னன்கோ அவர்கள் இம்மாதம் 10 ஆம் தேதி இயற்கை எய்திய செய்தியைக் கேட்டு இந்த அவை பேரதிர்ச்சியையும், பெரும் துயரத்தையும் அடைகிறது.



2819

1985 மார்ச் 12] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஆற்றொணா துயரத்திலும், துக்கத்திலும் ஆழ்ந்து இருக்கும் அவர் குடும்பத்தினருக்கும், சோவியத் நாட்டு மக்களுக்கும் இந்த அவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும், பரிவையும் தெரிவித்துக் கொள்கிறது."

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பொதுச் செயலாளராகவும் அதன் காரணமாக சோவியத் நாட்டினுடைய அதிபராகவும் பொறுப்பேற்று ஆண்டுவந்த திரு. செர்னன்கோ அவர்கள் எதிர்பாராத வகையில் திடீரென்று மறைவு எய்தியது உள்ளபடியே நமக்கெல்லாம் ஆற்றொணாத் துயரத்தையும், துக்கத்தையும் அளிக்கக்கூடிய ஒன்றாகும். மிகக் குறுகிய காலத்திலே இப்படிப்பட்ட ஒரு மரணத் தன்மையை அவர் எய்தியிருப்பது நமக்கெல்லாம் பெரும் வருத்தத்தை அளிப்பதாகும்.

திரு. செர்னன்கோ அவர்கள் பள்ளிப் பருவக் காலத்திலிருந்தே கம்யூனிஸ்ட் கொள்கைகளில் நல்ல பிடிப்புக் கொண்டு கொள்கைக்குப் பாடுபடுகின்ற அளவுக்குத் தன்மை படைத்து படிப்படியாக வளர்ந்து சோவியத் நாட்டு மக்களுடைய அன்பையும் அரவணைப்பையும் பெறுவதிலே மிகச் சிறந்து விளங்கினார்கள். அவர்கள் படிப்படியாக வளர்ந்து மிகப் பெரியதொரு பதவியைப் பெற்று ஏற்கெனவே ஆண்ட சோவியத் அதிபர் பிரஷ்னேவ் அவர்களுக்கு வலதுகரமாக விளங்கியவர் என்று எல்லோரும் சொல்லத்தக்க அளவுக்கு அவருடைய நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்று விளங்கியவர்கள் ஆவார்கள். சோவியத் நாட்டினுடைய கொள்கையை வளர்க்கின்ற பணியிலேயும் அதோடு சோவியத் நாட்டினுடைய ஆட்சிக்குத் தம்முடைய அறிவுத் திறன், ஆற்றல் திறன், உழைப்பு ஆகியவற்றின் மூலமாக, எந்த, எந்தப் பணிகளை, எப்படி, எப்படி செய்ய வேண்டுமென்பதிலே, ஆரவாரத்திற்கு இடம் இல்லாமல், படோடோபத்திற்கு இடம் இல்லாமல், பணிகளை மிக அமைதியாகவும், மிக அடக்கமாகவும், அதே நிலையில் உறுதியாகவும் ஊக்கந்தோடும் பணியாற்றி வந்தார்கள் என்பதை அவருடைய வாழ்க்கை வரலாறுகள் மிகத் தெளிவாக, தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றன.

பிரஷ்னேவ் அவர்கள் சோவியத் நாட்டினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்று, சோவியத் நாட்டினுடைய அயல் நாட்டுக் கொள்கைகளைப் பொறுத்தவரையிலும் எல்லோரையும், எல்லா நாடுகளையும் அரவணைத்துச் செல்லுகின்ற ஒரு சிறப்பான கொள்கையை மேற்கொண்டதற்கிணங்க, அவர்களுக்கு உறுதுணையாக இருந்து பாடுபட்டவர்களிலே செர்னன்கோ மிகமிக முக்கியமானவர் ஆவார்கள். பிரஷ்னேவ் அவர்கள் தலைமை தாங்கிய பின்னாலே, உலகத்திலே மாச்சரியங்கள் மிக மிகக் குறையவும் வல்லரசு நாடுகளிடையே சண்டை சச்சரவு அதிகம் வளராத அளவிற்கு அகில உலக அரசியலை மிகத் திறம்பட நடத்திச் செல்வதிலே பிரஷ்னேவ் அவர்கள் பல பணிகளை ஆற்றினார்கள். பிரஷ்னேவ் அப்படி நல்ல பல பணிகளை ஆற்றுவதற்கு உறுதுணையாக நின்றவர்களிலே மிக முக்கியமானவர் செர்னன்கோ என்று கருதப்பட்டவர். பிரஷ்னேவ் மறைந்ததற்குப் பிறகு கூட செர்னன்கோ தான் அந்த இடத்திற்கு வருவார் என்று உலகத்திலே இருக்கிற பலரும் எதிர்பார்த்த நிலையில் செர்னன்கோ மிகப் பெருந்தன்மையோடு தன்னை விட மிக ஆற்றல் மிக்கவர் என்று அவராலே கருதப்பட்ட யூரி ஆந்த்ரபோவ் அந்த அதிபர் பதவிக்கு வரலாம் என்று விட்டுக் கொடுத்து, தன்னை அதற்கடுத்தபடியாக வைத்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் தன்னைத் தானே வைத்துக் கொண்டிருந்தவர். யூரி ஆந்த்ரபோவ் நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கினார்கள் என்பதோடு மட்டுமல்லாமல், சோவியத் நாட்டிலே ஆங்காங்கு காணப்பட்ட சிலபல ஊழல் குறைபாடுகளையும் ஆங்காங்கு காணப்பட்ட சிலபல கள்ளச் சந்தைப் போன்றவைகளையும் எல்லாம் கூட மிகத் திறம்பட, மிக உறுதியோடு, மிக மும்முரமாக ஒழிப்பதிலே பாடுபட்டார். யாருடைய தயவுக்கும் தாட்சண்யத்திற்கும் கட்டுப்படாமல் பல உயர்தர அதிகாரிகளை எல்லாம் கூட உடனுக்குடன் நீக்கிவிட்டு பொருத்தமானவர்களை நியமிக்க வேண்டுமென்கிற நிலையில், பண்பு படைத்தவர்களை, அந்தந்தப் பகுதிகளிலே அவர்கள் அமர்த்தினார்கள் என்ற பெருமை ஆந்த்ரபோவ் அவர்களைப் பொருத்து மிகச் சிறப்பாக ஏற்பட்டது. ஆங்காங்கு ஏற்பட்ட சிறுசிறு குறைபாடுகள், மற்றவைகளை எல்லாம் கூட நீக்கி, சோவியத் நாட்டு மக்களுடைய முழு நம்பிக்கையையும் முழு மதிப்பையும் பெறத்தக்க அளவுக்கு அவர் ஆனார்.



உள்ளே பிறர்
அதோடு மட்டுமல்லாமல், சோவியத் நாட்டின் நாட்டினுடைய
மிகச் சுலபமாகச் செல்லமுடியாது. அந்த நிலைமைகள்
பணிகளை எல்லாம் காணமுடியாது என்று இருந்த காலத்திலும்
எல்லாம் பிரஷ்னேவ் காலத்திலும் சரி, ஆந்த்ரபோவ் இருக்கிற
சரி, பெருவாரியாகத் தளர்த்தப்பட்டு, உலகத்தில் சோவியத்
எந்த நாட்டைச் சேர்ந்த யார் ஆனாலும், அவர் நாட்டினுடைய
நாட்டினுடைய வளர்ச்சியையும் சோவியத் அவைகளையும்
அரசியல் அமைப்பையும், அங்கே நடைபெறுகின்றவைகளையும் அந்தக்
எல்லாம் கவனிக்கலாம் என்ற அளவுக்கு, மிக முக்கியமாக வந்து
கடுமையான விதிகளைக் கூடத் தளர்த்தி எல்லோரும் கருத்துக்களை
பார்த்து விட்டுச் சென்று தங்கள், தங்கள், ஆந்த்ரபோவ்,
வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்த, இருந்தனர்.
அதற்கு முன்னால் பிரஷ்னேவ் மிக முக்கியமாக அங்கே
நான் சோவியத் யூனியனுக்குப் போயிருந்தபொழுது கூட பார்க்கும்போது
வந்திருந்த டூரிஸ்டுகள் யார் என்று வந்திருந்
பெரும்பாலானவர்கள் அமெரிக்காவிலிருந்துதான் ஐரோப்பா
தார்கள். அதற்கு அடுத்தபடியாகத்தான் வந்திருந்தார்கள்.
நாட்டிலிருந்து சுற்றுலா பயணிகள் கிரிட்டிக்காக
அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் எப்பொழுதும் பற்றி
இருப்பவர்கள். அதுவும் சோவியத் யூனியனைப் பற்றி
கிரிட்டிக்காக இருப்பவர்கள். அப்படிப்பட்டவர்கள் கூட—யார்
வேண்டுமானாலும் வரலாம், எப்பொழுது வேண்டுமானாலும்
வரலாம் என்ற சூழ்நிலையை ஏற்படுத்தி உறுதியாக, திடமாக,
ஆட்சி அமைப்பிலே, மக்களுக்கு நன்மைகள் செய்கின்ற
வகையிலேயும் கவனம் செலுத்தி வந்தவர் ஆந்த்ரபோவ் அவர்கள்
ஆவார்கள். பிரஷ்னேவ் என்னென்ன முறைகளைக் கடைபிடித்து
வந்தார்களோ, அதையொட்டி ஆந்த்ரபோவ் என்னென்ன
முறைகளைக் கடைபிடித்து வந்தார்களோ. அவற்றை
வழியொற்றி, அடியொற்றி அதே பணிகளை ஆற்றுகின்ற
வகையில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு மிகச் சிறப்பான
முறையில் செர்னன்கோ அவர்கள் பணியாற்றி வந்தார்கள்
என்பது நமக்கெல்லாம் பெருமகிழ்ச்சி அளிப்பதாகும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 12

(முற்பகல் 9-10)

அது மட்டுமல்ல. இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இருக்கக்கூடிய உறவும் மேன்மேலும் வலுப்பெற வேண்டுமென்றும், உறுதிப்பட வேண்டுமென்றும் செர்னன்கோ அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் மிகப் பல, அவர்கள் பதவியில் இருந்தது 13 மாதங்கள் என்றாலும் அவர்கள் எடுத்துக் கொண்ட பல்வேறு நடவடிக்கைகளை கவனிக்கும்போது இந்திய நாட்டின் மீது அவர்கள் மிக அக்கறை காட்டினார்கள். மிக ஆர்வம் காட்டினார்கள்; அதற்கான வழிவகைகளை எல்லாம் செய்தார்கள். இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இருக்கிற கலாச்சார உறவும், தொடர்பும், நட்புறவும் அதிகமாவதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதற்கும் பொருளாதார உறவு எந்தெந்த வகையிலே வளரவேண்டும் என்பதற்கும் வெளிநாட்டுப் போக்குவரத்து, வெளிநாட்டுத் தொடர்பு அதிகமாவதற்கும் செர்னன்கோ அவர்கள் மிக மிக ஆர்வமும் அக்கறையும் காட்டி வந்தார்கள் என்பதை கடந்த 13 மாத காலமாக அவர்கள் ஆட்சியின் காலத்தில் எடுத்துக்கொண்ட பல்வேறு முயற்சிகள் காட்டுகின்றன.

அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அதிகமான ஆயுதங்களைக் கொடுத்து. அதன் மூலம் பாகிஸ்தானை வலுப்படுத்த எண்ணுகிறது; பாகிஸ்தான் இந்தியா மீது படையெடுக்கக் கூடும் என்ற நிலைமை வந்தபோது இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டாலும் கூட, அதைத் தடுத்து நிறுத்த, இந்தியாவுக்கு தேவையான உதவிகளைச் செய்ய சோவியத் யூனியன் தன்னுடைய முழு வலுவையும் ஆதரவையும் தரும் என்ற நம்பிக்கையை அளித்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

அமெரிக்க ஆயுதங்களை அதிகமாகப் பெற்று, சுலபமாக இந்தியா பலவீனம் அடையும்போது, குறிப்பாக பஞ்சாப் மாநில கலவரம். அஸ்ஸாம் கலவரம், காஷ்மீர் கலவரம், வேறு பல இடங்களில் ஏற்பட்ட கலவரங்கள் மூலம் ஏற்பட்ட பலவீனத்தைப் பயன்படுத்தி இந்தியாவைத் தாக்கலாம் என்று பாகிஸ்தான் எண்ணிக் கொண்டிருந்தபோது, அமெரிக்காவின் உதவியுடன் இந்தியாவைத் தாக்கலாம் என்று எண்ணியபோது, செர்னன்கோ அவர்கள் இந்தியாவுக்கு எங்களுடைய ஆதரவும் உதவியும் உண்டு



1985 மார்ச் 12] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்று திட்டவட்டமாக அறிவித்ததன் காரணமாக பாகிஸ்தானின் எண்ணம் தகர்ந்து நிறுத்தப்பட்டு, பின்னோக்கித் தள்ளப்பட்ட சூழ்நிலை உருவாகியது என்பதை நாம் எண்ணிப் பார்க்கும்போது இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இருந்த உறவு எத்தகையது என்பது மிகத் தெளிவாகத் தெரியும்.

அன்னை இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது சோவியத் யூனியனுக்கும் இந்தியாவுக்கும் எப்படிப்பட்ட நட்புறவு இருந்ததோ, எப்படிப்பட்ட ஆதரவு இருந்ததோ, அதே நட்புறவும் ஆதரவும் தொடர்ந்து அளிக்கப்படும் என்ற உறுதிமொழியை அளித்தது மட்டுமல்ல; புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள இராஜீவ் காந்தி அவர்களிடம் அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய மறைவின்போது, ஐந்து நிமிடம் இராஜீவ் காந்தியுடன் சோவியத் யூனியனிலிருந்து வந்து பேச்சு நடத்தியபோது, தொடர்ந்து எங்களுடைய ஆதரவு இந்தியாவுக்கு உண்டு என்ற உறுதிமொழியைத் தந்தார்கள். இப்படிப்பட்ட தன்மைகளை எல்லாம் எண்ணிப் பார்க்கும்போது செர்னன்கோ அவர்களுடைய மறைவு நமக்கு ஒரு பேரிழப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

உலகில் எத்தனையோ நாடுகள் இருந்தாலும், இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் ஏற்பட்டிருக்கிற தொடர்பு, அதனால் ஏற்பட்டிருக்கிற பலன், கிடைத்திருக்கிற பாதுகாப்பு, கலாச்சார வளர்ச்சி, பொருளாதாரத்தில் மேம்பாடு ஏற்படுவதற்கு உதவி ஆகிய அத்தனையையும் கவனிக்கும்போது செர்னன்கோ அவர்களின் மறைவு சம்பிரதாயத்திற்குச் சொல்லுகின்ற முறையில் அல்லாமல் உள்ளபடியே பெரும் இழப்பு என்று சொல்லக்கூடிய அளவுக்கு, நாம் கருதக்கூடிய அளவுக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட செர்னன்கோ அவர்கள் எதிர்பாராத விதமாக மறைந்தது இந்திய நாட்டிலே உள்ள அனைத்து மக்களுக்கு பெரும் துயரையும், துக்கத்தையும் அளிப்பதாகும். அந்த வகையிலே தமிழக மக்கள் அனைவரின் சார்பாக பிரதிநிதித்துவம் கொண்டு விளங்குகின்ற இந்தச் சட்டமன்றப் பேரவை அவர்களுடைய மறைவு குறித்து தன்னுடைய வருத்தத்தைத் தெரிவிக்கிறது, என்பது மட்டுமல்லாமல், தன்னுடைய துக்கத்தையும், துயரத்தையும் தெரிவிக்கிறது என்பது மட்டுமல்லாமல், தன்னுடைய இரங்கல் செய்தியையும் அந்த

நாட்டு மக்களுக்கு அளித்து, ஆறுதலை அந்த நாட்டு மக்களுக்கும், அவருடைய குடும்பத்திற்கும் அளிக்க வேண்டிய பெரும் பொறுப்பு நமக்கு இருப்பதன் காரணமாக, அந்த வகையிலேதான் இந்தப் பணிகளை நாம் மிகச் சிறப்பாகச் செய்கிறோம். ஆகவே அவர்கள் எடுத்துக் கொண்ட பணியை, செர்னன்கோ அவர்கள் ஆடாமல், அசையாமல், அதிலிருந்து பின்வாங்காமல், தளராமல் பணியாற்றக்கூடிய உறுதி படைத்தவர்கள். ஆகவே எடுத்த செயலை செய்து முடிப்பதிலே பெயர் பெற்றவர்கள். அந்த வகையிலே சோவியத் அரசின் சார்பாகவும் சரி, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகவும் சரி, அவர் மிகவும் மதிக்கப்பட்டார், மிகவும் போற்றப்பட்டார், மிகவும் வரவேற்கப்பட்டார். இதற்கு சான்றாக, அவர் " Heroes of the Social Labour " என்கிற பட்டத்தை 2 தடவை பெறுகின்ற வாய்ப்பினை செர்னன்கோ அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், 'லெனின் ஆர்டர்' என்கிற பட்டத்தைப் பெறுவது மிகச் சுலபமான ஒன்று அல்ல. ஒருசிலர்தான் அந்த லெனின் ஆர்டர் என்கிற மிகப் பெரிய பரிசுத் தகுதியைப் பெற முடியும். அப்படிப்பட்ட அந்த லெனின் ஆர்டர் என்ற பதவியை செர்னன்கோ அவர்கள் மட்டும் 4 தடவை பெற்று இருக்கிறார் என்று சொல்கிறபோது, ஒரு தடவை லெனின் ஆர்டர் பெறுவது என்பது மிகப் பெரிய செய்தி என்கிறபோது, செர்னன்கோ அவர்கள் 4 தடவை அந்தப் பதவியைப் பெற்றிருக்கிறார்கள். அதுமம்டுமல்லாமல், " Sickle and Hammer Gold Medal " என்பது அரிவாள் சுத்தி அமைந்த ஒரு தங்கப் பதக்கம். அதைப் பெறுவது என்பது அவ்வளவு சுலபமானது அல்ல. மிகச் சிறந்த, மிக திடமான, உறுதியான நன்மை பயக்கக்கூடிய அளவிற்கு கட்சிக்கும் ஆட்சிக்கும் உறுதுணையாக இருந்து பணியாற்று பவர்களுக்குத்தான் அது கிடைக்கும். அந்த வகையிலே கூட அவர்கள் இந்தப் பதக்கத்தை 3 தடவை பெற்றிருக்கிறார்கள். லெனின் ஆர்டரை 4 தடவை பெற்றிருக்கிறார்கள். 3 தடவை " Sickle and Hammer Gold Medal தங்கப் பதக்கத்தைப் பெற்றிருக்கிறார்கள். 3 தடவை அவர்கள்





Heroes of the Social Labour என்ற பட்டத்தைப் பெற்றிருக்கிறார்கள், என்று சொன்னால், அவருடைய பணிகள் எவ்வளவு சிறந்து விளங்கின என்பதையும், எப்படி அவர்கள் தன்னுடைய அறிவுத் திறன், ஆற்றல் திறன், பண்பாட்டுத் திறன், செயல்பாட்டுத் திறனோடு தன்னுடைய பணிகளை ஆற்றி வந்தார்கள் என்பதையும் நாம் நன்றாக அறிவோம். அப்படிப்பட்டவர்கள் மறைவு எய்தியது நமக்கு எல்லாம் பெரும் துக்கத்தையும், துயரத்தையும் அளிப்பதாகும். அந்த முறையிலேதான் இந்த அவையின் சார்பாக நாம் இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கிறோம். இந்த இரங்கல் ர்தீமானத்தை இந்த அவையின் சார்பாக நான் முன்மொழிகிறேன். மற்ற கட்சிகளுடைய தலைவர்கள் அதை வழிமொழிந்து, இந்த தீர்மானத்தை நிறைவேற்றி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவரான செர்னன்கோ அவர்கள் நேற்று இந்திய நேரப்படி 5.35 மணிக்கு காலமானார்கள் என்ற செய்தி உலகின் எல்லா பாகங்களிலும் இருப்பவர்கள் எந்த அளவிற்கு அந்த வேதனையை ஏற்றுக் கொண்டார்களோ, அதைவிட ஒரு படி அதிகமாகவே இந்திய மக்கள் அந்த துயரத்திலே பங்கேற்று இருக்கிறார்கள் என்பதை இங்கே குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை. காரணம் சோவியத் நாடு இந்தியாவினுடைய மிக நெருங்கிய நட்பு நாடாகவும், பாதுகாப்பு நாடாகவும் திகழ்ந்து வந்திருக்கிறது. அதற்குக் காரணம் அங்கேயிருந்த தலைவர்கள் இந்தியா என்கிற மிகப் பெரிய ஜனநாயக நாடு, எந்தக் கட்டத்திலேயும் ஏகாதிபத்திய நாடுகளாலே அழிக்கப்பட்டு விடக் கூடாது என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே அந்தப் பாதுகாவல் நமக்கு கொடுக்கப்பட்டது என்று சொன்னால் அது மிகையாகாது. அப்படிப்பட்ட தலைசிறந்த தலைவர், இன்றைக்கு நம்மைவிட்டு மறைந்து இருக்கிற முதுபெரும் தலைவர் செர்னன்கோ அவர்கள். சோவியத் நாட்டிலே மிகப் பெரிய பொறுப்புகளை எல்லாம் ஏற்றுக் கொண்டிருந்த அவர், அந்திரபோவ் அவர்களின் மறைவுக்குப் பின் பதவிப்பொறுப்பை

ஏற்றார்கள். ஆனால் அவர்கள் பதவி ஏற்ற நாளிலேயிருந்து உடல் நிலை சரியில்லாத காரணத்தினாலே பொது நிகழ்ச்சிகளிலே அவர்கள் கலந்து கொண்டது தவிர்க்கப்பட்டது. அதே நேரத்திலே அவர்களுடைய உடல் நிலைப் பற்றி பல வதந்திகள் வந்த நேரத்திலே அதைத் தவிர்ப்பதற்காக அவர்கள் தொலைக் காட்சியில் தோன்றி அந்த மக்களுக்கு ஆறுதலையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்திக் கொடுத்தார்கள் என்பதை மறந்துவிட முடியாது. இருந்தாலும் கூட, அவரைப் பொறுத்தமட்டில் நம்முடைய பாரதத்தின் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் பொறுப்பேற்ற நேரத்திலே, அன்னை இந்திரா காந்தி அவர்களுக்கு எந்தவிதமான ஆதரவை அளித்தார்களோ, அந்த ஆதரவினை அளிப்பதற்கு, அவர்கள் பொறுப்பேற்ற நேரத்திலேயே அன்னை இந்திரா மறைவுக்கு வந்த அவரின் பிரதிநிதிகள் டெல்லி மாநகருக்கு வந்தபோது தங்களுடைய அரசின் உத்திரவாதத்தினை தந்தார்கள் என்பதை நினைக்கின்றபோது, அந்த நல்லவரை அவருடைய திருநாட்டிலே போய் நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் சந்தித்து, மறுபடியும் ஒரு நல்ல வலுவான சூழ்நிலையை உருவாக்குவதற்கு முன்னதாக, அவர்கள் மறைந்தது உண்மையிலேயே நமக்குக் கிடைத்த மிகப் பெரிய இழப்பு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 9.20)

அமெரிக்காவிற்கு அனுப்பிய கலாச்சார தூதுக் குழு, சோவியத் நாட்டினுடைய தூதுக் குழு, இன்றைக்கு விரைவாக திரும்பி வந்திருக்கிறது என்று சொன்னால், அந்த அளவுக்கு விரோதமான நாடுகள் என்று சொன்னாலும் கூட, அந்த நாடுகளோடு மறுபடியும் நல்ல நிலைமையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதிலே மறைந்த தலைவர் செர்னன்கோ அவர்கள் எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் நினைவு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மிகப் பெரிய தலைவர் நமக்கெல்லாம் நல்லதொரு பாதுகாப்பாக இருக்கக்கூடிய சோவியத் நாட்டினுடைய முதுபெரும் தலைவர் இன்றைக்கு நம்மை விட்டு நீங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், நிச்சயமாக சோவியத் நாட்டிற்கு ஏற்பட்ட அந்த பேரிழப்பு நம்மையும் பெரும் அளவு பாதித்து இருக்கிறது என்பதை மீண்டும் வலியுறுத்தி, அவை





மறைந்த அந்த சோகத்திலே நாமும் பங்கேற்றுக் கொள்கிறோம். ஆகவே, அவருடைய இரங்கல் தீர்மானத்திலே எங்களுடைய காங்கிரஸ் கட்சியையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அவருடைய குடும்பத்திற்கும், சோவியத் அரசுக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டு இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து அமர்கிறேன்.

* **திரு. மு. இராமநாதன்**: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் முன்னவர் அவர்கள் முன்மொழிந்த அனுதாப தீர்மானத்தை வழிமொழிந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எங்களுடைய அனுதாபத்தையும் இந்த மாமன்றத்திலே தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திய நாட்டிற்கும், சோவியத் நாட்டிற்கும் நட்புறவின் சின்னமாகவும், உலகத்தை அரட்டிக் கொண்டிருக்கிற போர் வேகத்திலேயிருந்து உலக மக்களை காக்க வேண்டும் என்கிற நல்லெண்ணத்தோடும், மிகப் பெரிய ஒரு சர்வாதிகார அழிவுக்கு தன்னை ஆட்படுத்திக் கொண்ட சோவியத் மண்ணில் ஹிட்லருடைய பாசிசத்தை உலக அரங்கில் முறியடித்து, இரண்டு கோடிக்கும் மேற்பட்ட மக்களை பலி கொடுத்த மண் சோவியத் மண் என்பதையும், அந்த சோவியத் மண்ணில் உலக சமாதானத்தை நிலை நிறுத்துவதற்கு மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு உன்னத தலைமையின் சின்னமாக விளங்கியவர் மறைந்துவிட்ட செர்னன்கோ அவர்கள் என்பதையும் எடுத்துச் சொல்லி, நமது முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, பிரஷ்னேவிற்கு பிறகு ஆண்டிரபோவ்விற்குப் பிறகு, சோவியத் மண்ணில் இந்திய நாட்டு மக்களுக்கு ஒரு நல்ல நம்பிக்கையையும், உறுதியையும், நட்பையும் நிலைநிறுத்திக் கொள்ளும் வகையில், நமக்கு உற்ற உறுதுணையாக இருந்த ஒரு அதிபரை இந்திய நாட்டு மக்கள் இழந்து விட்டார்கள் என்பதைத்தான் நான் இந்த மாமன்றத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அப்படிப்பட்ட நம்பிக்கைக்கு உரிய ஒருவரை நாம் இழந்து விட்டோம். பல நேரங்களில் இந்தியமக்களுக்கு சோவியத் நாடு தன்னுடைய நல்லெண்ணத்தையும் நேசக் கரத்தையும் நீட்டிக்

[திரு. மு. இராமநாதன்] [1985 மார்ச் 12

காட்டியிருக்கிறது. இந்தியா போன்று நன்கு முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தோடு, உலக அரங்கத்தில் வாழ்ந்து வருகிற ஒரு நாட்டுக்கு சோவியத் நாடு என்றைக்கும் உறுதுணையாக இருந்திருக்கிறது. பல நெருக்கடியான கட்டங்களில் சோவியத் நாடு நாங்கள் உங்களுக்கு உறுதுணையாக இருக்கிறோம் என்ற நல்லெண்ணத்தை நிலைநாட்டிக் காட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சோவியத் நாட்டு அதிபரை நம்பிக்கையோடு, சோவியத் நாட்டு மக்களுக்கும் இங்கிருக்கக் ஈடு செய்ய முடியாததொரு நட்டமாகும் என்பதை நான் இந்த நேரத்தில் நினைவுபடுத்தி, அப்படிபபட்டதொரு நட்டத்தை, அப்படிப்பட்ட ஒரு நட்டத்தை ஈடு செய்யக்கூடிய நிலையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்களுடைய அனுதாபத்தைத் தெரிவிக்கிற அதே நேரத்தில், என்றென்றைக்கும் இந்தியாவிற்கும் சோவியத் நாட்டிற்கும் இருக்கிற நட்பும் நல்லெண்ணமும் மேலும நீடிக்கத்தக்க அளவிற்கு சோவியத் மக்கள் மற்றொரு தலைமையைத் தேர்நதெடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, சோவியத் நாட்டு மக்களுக்கும் இங்கிருக்கக் கூடிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்துள்ள அனுதாபத் தீர்மானத்தோடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் அனுதாபத்தையும் இந்த நேரத்தில் தெரிவித்து, எங்களுடைய ஆழ்ந்த இரங்கலை மீண்டும் நான் இந்த அவையில் தெரிவித்து, அவை முன்னவர் அவர்கள் மொழிந்துள்ள தீர்மானத்தை வழிமொழிந்து அமைகிறேன்.

* திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, செர்னன்கோ அவர்களின் மறைவு உலக சமாதானத்திற்கு ஏற்பட்டிருக்கும்படியான ஒரு பெரிய சோதனையாகும். சோவியத் யூனியன் உலக சமாதானத்தினுடைய பாதுகாவலன் என்பது உலகம் முழுவதிலும் உள்ள நாடுகள் அங்கீகரிக்கிற உண்மை. ஏகாதிபத்தியவாதிகள், நாடுகளில் மட்டுமல்ல ஆகாயத்திலேயும் அணு ஆயுதங்களைக் குவித்து 'ஸ்டார் வார்' போன்ற பயங்கரமான மனிதப் படுகொலைக்கு அணு ஆயுதத்தைப் பயன்படுத்திக் கொண்டிருப்பதை தடுத்து நிறுத்தியிருக்கக்கூடிய ஒரு பெரும் சக்தி உலகத்தில் உண்டு



1985 மார்ச் 12] [திரு. கு. ரமணி]

என்றால் அது சோவியத் யூனியன்தான். அப்படிப்பட்ட சோவியத் யூனியனில் கடந்த இரண்டு ஆண்டுக் காலத்திற்குள்ளே மூன்று மாபெரும் தலைவர்கள் காலமாகியுள்ளனர். முதலில் பிரஷ்னேவ் அவர்கள், பிறகு ஆண்ட்ரபோவ், அதற்குப் பிறகு இப்போது செர்னன்கோ. இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக மூன்று பெரும் தலைவர்கள் காலமாகி இவ்வளவு பெரிய நெருக்கடியான சூழ்நிலையில் தங்களுடைய புரட்சிகரமான ராஜதந்திரமும் உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக எடுத்துக் கொண்டுள்ள கடுமையான முயற்சிகளும் ஏகாதிபத்தியவாதிகளைத் தடுத்து நிறுத்தும் அளவிற்கு கொண்டு போய்ச் சேர்த்திருக்கிறது. அதனுடைய விளைவுதான் ஐரோப்பா கண்டம் முழுவதையும், நிமிடத்திலே நொடிப்பொழுதிலே சோவியத் நாட்டைத் தாக்கக் கூடிய, குறியிட்டுத் தாக்கக்கூடிய மிஸைல்ஸ்-ஐ ஸ்தாபித்திருந்தாலும் அதை எடுக்கும்படி நிர்ப்பந்தப்படுத்தப் பட்டு ஒடுக்காவிட்டால் அந்த ஏகாதிபத்தியவாதிகள் பேரில் உலகத்தையே அழிக்கப் புறப்பட்டுள்ள அணு ஆயுதத்தின் பளு முழுவதும் அவர்கள் தலையில் போய் விடியும் என்ற எச்சரிக்கையை அவர்களுக்குக் கொடுத்து இன்றைக்கு மறுபடியும் அதே ஏகாதிபத்தியத்தின் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி அணு ஆயுதத்தைக் கட்டுப்படுத்தும்படியான இடத்திற்குக் கொண்டு வந்து நிறுத்தியவர், அப்படிப்பட்ட மகத்தான சிறந்த புரட்சிகரமான ராஜதந்திரத்தை கையாண்ட பெரும் தலைவராக விளங்கியவர் திரு செர்னன்கோ அவர். இப்போது அந்த மகானால் பேச்சுவார்த்தைகள் ஜெனீவாவில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

(முற்பகல் 9-30)

இந்திய நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு அளித்தது சோவியத் யூனியன். இன்றைக்கு நேற்றைக்கல்ல. இந்திய நாடு உலகத்திலே இரண்டாவது பெரிய நாடு. அப்பேர்ப்பட்ட நாட்டிலே அறியாமைத்தனத்தை நீக்குவதற்கும், உலகத்தில் அடிமைத்தனத்தை ஒழித்துக் கட்டுவதற்கும் ஒரு மிகப் பெரிய சக்தியாக சோவியத் யூனியன் விளங்கியது. இந்தியா நாடு சுதந்திரம் பெற்று விளங்கினாலும், இந்திய நாட்டிலே 74 கோடி மக்கள் இன்றைக்கு இருக்கிறார்கள். என்றாலும், இந்த மாபெரும் இந்திய சமுதாயத்தின் மக்கள் நட்புறவோடு தங்களுடைய உலக சமாதானப் பணியிலும்

[திரு. கு. ரமணி] [1985 மார்ச் 12

பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சியிலும் அவைகளுக்கு பூரணமான ஆதரவு அளித்து, ஆற்றுமைப்படுத்தி உலகத்திலே அழிவு சக்திகளுக்கு எதிராக அணிவகுத்து நின்ற நாடுகளோடு, இந்திய நாட்டையும் சேர்த்துக்கொண்டு, தகுந்த நடவடிக்கைகளை கையாண்டு வந்தது சோவியத் யூனியன். இன்றைக்கு இந்திய நாட்டினுடைய மிக ஆழமான, தீர்க்க முடியாத பெரும் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதில், ஏகாதிபத்திய சுரண்டலைத் தடுப்பதில் எந்த அளவுக்கு பொருளாதாரத் துறையில் வளர்ச்சியடையச் செய்ய முடியுமோ, அந்த உதவிகள் முழுவதையும் சோவியத்யூனியன் செய்தது. அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், குறிப்பாக வர்த்தக வளர்ச்சியில் பல மடங்கு பெருகுவதற்கு சோவியத் யூனியன் இந்திய நாட்டின் ஒரு நல்ல நண்பனாக மட்டுமல்ல; நம்முடைய பொருளாதார சீரழிவு ஏற்படாமல் நமக்கு ஓரளவுக்காவது பாதுகாப்பு தரக் கூடிய வகையில் ஏகாதிபத்திய போட்டியை சமாளித்து நிற்கக் கூடிய பல உதவிகளைச் செய்து தந்தது சோவியத் யூனியன்.

அப்படிப்பட்ட கொள்கைகளை வரையறுத்துக் கொடுத்த முக்கியத் தலைவர்களில் கடைசித் தலைவர் செர்னன்கோ அவர்கள் ஆவார்கள். அப்பேர்ப்பட்டவர் காலமாகி விட்டார், என்றால், நமக்கு எவ்வளவு நஷ்டம், வேதனை ஏற்படுகிறதோ—இதை நாம் அனைவரும் மனதில் வைத்துக் கொள்ளும்போது சோவியத் யூனியனில் கடந்த இரண்டு ஆண்டுகளில் இப்படி மூன்று மாபெரும் தலைவர்கள் காலமாகி விட்டார்கள் என்றால், இது ஒரு மாபெரும் இழப்பு, ஈடுசெய்ய முடியாத ஒரு இழப்பு என்பதை நாம் அனைவரும் அறிவோம். அபாய சக்திகளால் சீரழிவு ஏற்பட்டு கொண்டு இருக்கின்ற வேளையில், ஆபத்து தலைதூக்கி நிற்கின்ற நேரத்தில், உலக சமாதானத்திற்கு மாபெரும் கோட்டையாக நிற்கக்கூடிய ஒரு நாட்டிற்கு இந்த இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒரு இழப்பு என்பதை யாவரும் எளிதில் புரிந்துகொள்ள முடியும். இந்த உலக சமாதான பாதுகாப்புக்கு உதவி வரும் பெரும் நடவடிக்கைகளில் சோவியத் யூனியனின் மற்றொரு முக்கியமான ஒரு நடவடிக்கையை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. உலகத்தில் அடிமைத்தனம் எங்கெங்கு இருக்கின்றதோ, அங்கெல்லாம் அந்த அடிமைத் தனத்தை ஒழிகின்ற வகையில் ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்தி, சுரண்டுகின்ற வகையில், ஏகாதிபத்திய சக்திகள் உலகத்தில் நிலைத்து நிற்கின்ற வரையில், உலகத்திலே யுத்த அபாயம் பரிபூரணமாக நீங்கிவிட்டது என்று சொல்லிவிட முடியாது. தங்கள் நாட்டு விடுதலைக்காகப் போராடும் மக்களுக் கெல்லாம் உறுதுணையாக, பக்க பலமாக இருந்து இன்றைக்கு ஆதரவு அளித்துக்கொண்டிருக்கிறது சோவியத் யூனியன். இது போன்ற விடுதலை பெற்றுள்ள நூற்றுக்கும் மேலான நாடு களுக்கு, அவைகளின் வளர்ச்சிக்காக, பொருளாதாரத் துறையி லும், பாதுகாப்புத் துறையிலும் மிக ஆக்கபூர்வமான உதவிகளை யும், ஒத்துழைப்பையும் செய்து வருகிறது சோவியத் யூனியன். இப்படிப்பட்ட கொள்கைகளை வகுக்கின்றவர்களில், முன்னணித் தலைவர்களில் கடைசியாக நின்றவர் செர்னென்கோ ஆவார்கள்.



1985 மார்ச் 12] [திரு. கு. ரமணி]

இந்திய நாட்டிற்கும், சோவியத் நாட்டிற்கும் இடையே ஒரு நட்புறவு ஒப்பந்தம், நீண்டகால நட்புறவு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான், ஏகாதிபத்திய நாடுகள் பல நாடுகளில் யுத்தகால நெருக்கடியை மேலும் மேலும் தூண்டிவிட்டு, இங்குள்ள பிளவு சக்திகளைத் தூண்டிவிட்டு, சீரழிவை ஏற்படுத்தும்போது, அந்த சகல நடவடிக்கைகளையும் எதிர்த்து நிற்கக்கூடிய உத்திரவாதத்தை இந்திய நாட்டிற்கு அளித்துள்ளது. இந்திய நாட்டின் பாது காப்புக்கு, இந்திய நாட்டிற்கு ஆபத்து ஏற்படுகின்ற எந்த நிமிஷத் திலும், அதற்கு பக்க உதவியாக இருந்து, சகவிதத்திலும் இந்தியாவிற்கு பாதுகாப்பு அளிக்கின்ற உத்திரவாதத்தை சோவியத் நாட்டினுடைய மத்திய கமிட்டியின் பொதுச் செயலா ளர், சோவியத் கட்சியினுடைய மத்திய கமிட்டியின் பொதுச் செயலாளர், அரசின் தலைவர் செர்னன்கோ அவர்கள், இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மறைந்த சமயத்திலும், நமக்கு கொடுத்த ஒரு வாக்குறுதியை நிறைவேற்றி, நமக்கு ஒரு பெரும் பாதுகாவலாக சோவியத் யூனியன் நிற்பதை நாம் அனுபவத்தில் பார்த்திருக்கிறோம். இப்படிப்பட்ட தன்மையில் அந்த சோவியத் நாட்டினுடைய அந்த மாபெரும் அதிபர் காலமானதில் உலக சமா தானத்தில், இந்திய நாட்டு மக்களுடைய வளர்ச்சிக்கும் நம்முடைய பாதுகாப்பிற்கும் நிச்சயமாக ஒரு பெரிய

பலவீனத்தை உண்டாக்கக்கூடிய பேரிழப்பு. சோவியத் யூனியன் தங்களுடைய சக்தியை முழுமையாக திரட்டி உலக சமாதானத்தை பாதுகாத்து நிற்பதில் தங்களைத் தாங்களே சமாளித்துக் கொள்ளக்கூடிய மாபெரும் சக்தி படைத்தவர்கள் என்றாலும் இந்த இழப்பு பேரிழப்புதான். ஆகவேதான் இந்த பெருந்தலைவர் மறைவுக்கு நாம் அத்தனை பேரும் மனப்பூர்வமான அஞ்சலி செலுத்துகிறோம் என்று கூறினார். முன்னவர் அவர்கள் சொல்லும்போது குறிப்பிட்டார்கள். இது மிகவும் வருத்தத் தக்கதோ அல்லது சம்பிரதாய பூர்வமாகச் சொல்லக்கூடியது அல்ல. மனப்பூர்வமாக இதயத்தின் அடித்தளத்திலிருந்து எடுத்துச் சொல்கிறோம். இந்த இழப்பு உலக சமாதானத்திற்கும், நாட்டிற்கும், சோவியத் மக்களுக்கும் பேரிழப்பு ஆகும். இப்படிப்பட்ட பேரிழப்பிற்கு ஆளான சோவியத் நாட்டிற்கும் அந்த நாட்டு மக்களுக்கும் அங்கே உள்ள சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் நாம் நமது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். இந்திய நாட்டு மக்களுடைய சமாதானத்திற்கு, சோவியத் நாட்டின் ஒத்துழைப்பு என்றென்றும் நீடித்து இருக்கக்கூடிய முறையிலேயும், நாம் இந்த இழப்பை ஈடு செய்யக் கூடிய முறையிலேயும், நாமும் பணிகளை தொடருவோம் என்பதை இன்றைக்கு உறுதியாக சொல்லிக்கொண்டு இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து அமர்கிறேன்.

*திரு. எ. எஸ். எ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், சோவியத் நாட்டின் அதிபர் செர்னன்கோ மறைவுக்கு கொண்டு வந்துள்ள அனுதாபத் தீர்மானத்தை வழிமொழிகின்றேன். பல இக்கட்டான பிரச்சனைகளில் இந்தியாவிற்கு உலக அரங்கில் ஆதரவு தந்த சோவியத் நாட்டின் அதிபர் என்ற முறையில் அவரை நான் பாராட்டுகிறேன். பெருந் தலைவர் காமராஜர் அவர்களுடைய கொள்கையைப் போல், தனது நாட்டினுடைய மக்களுக்கு உணவு, உறைவிடம், உடை ஆகிய மூன்றையும் கொடுக்கின்ற முறையில் திட்டங்களை நிறைவேற்றி வந்த அந்த நாட்டினுடைய அதிபரை நான் பாராட்டுகிறேன். அவருடைய எதிர்பாராத மறைவுக்கு ஜனதா கட்சி சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்





கிறேன். அவருடைய குடும்பத்திற்கும், அந்த நாட்டிற்கும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்து என்னுடைய வார்த்தையை நிறைவு செய்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பொதுச் செயலாளரும், சோவியத் அரசின் ஜனாதிபதியுமான மறைந்த தோழர் செர்னென்கோவினுடைய மறைவுக்கு நமது முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்ததை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வழிமொழிகிறேன். தோழர் செர்னென்கோ அவர்கள், சிறு வயதிலேயே சாதாரண ஒரு தொழிலாளியாக பணியாற்றி படிப்படியாக தான் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கொள்கையை அந்த நாட்டில் நிறைவேற்றுவதற்கும் உலக அரங்கில் அதனுடைய வளர்ச்சிக்காகவும் பாடுபட்டு படிப்படியாக தன்னுடைய உழைப்பால், லட்சியத்தால் உருவாக்கப்பட்டு, இறுதியாக அந்த நாட்டினுடைய உயர்ந்த பொறுப்பு வகித்தவர். மேலும் சோவியத் நாட்டு பிரஷ்னேவ், அவரை அடுத்து ஆன்ட்ரபோவை அடுத்து செர்னன்கோ வந்த ஒரு குறுகிய காலத்தில் உலகத்தில் ஏற்பட்ட யுத்த நெருக்கடி, ஆயுதங்கள் இவைகளையெல்லாம் முறியடித்து, உலகத்தில் சமாதானத்தை ஓங்கச் செய்து, உலகத்தில் மூன்றாவது உலக யுத்தம் வரக்கூடாது என்று அதை தடுப்பதற்கு உலக சமாதான சக்திகளையும், விடுதலை பெற்ற நாடுகளையும் இணைத்து உலகத்தில் மனித குலத்தை வாழ வைப்பதற்கு செர்னென்கோ அவர்கள் இறுதி வரையிலும் பாடுபட்டவர்கள். ஆனால் நம் நாட்டு பிரதமர் மறைந்த இந்திரா காந்தி அவர்கள் படுகொலையால் இறந்த சில நாட்களுக்குள்ளாகவே சோவியத் யூனியன் அதிபர் துணிச்சலாக சொன்னார்கள். இந்திய நாட்டு பிரதமர் படுகொலைக்கு காரணம் ஏகாதிபத்தியவாதிகள்தான் என்று அழுத்தமாக எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் சொல்லும்போது அந்த அளவிற்கு நாம் சிந்திக்காமல் இருந்தாலும், இன்றைக்குப் பிரதமராக வந்திருக்கக் கூடிய ராஜீவ் காந்தி அவர்கள் வந்தவுடன் பிரதமர் அலுவலகத்திலிருந்து வெளிநாட்டு உளவாளிகள் எப்படியெல்லாம் இருந்தார்கள் என்பதை இன்றைக்கு நாம் நிரூபணமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்

[திரு. பொ. உத்திராபதி] [1985 மார்ச் 12

படையில் இந்தியாவுக்குப் பொருளாதார வளர்ச்சி; அதே போல், இந்தியருடைய பாதுகாப்பு; வெளிநாட்டிலிருந்து அபாயங்கள் வரும்போதெல்லாம் பாகிஸ்தான் மூலமாக ஒரு படையெடுப்பு வருகிறபோது இந்திய நாட்டின் ஒரு நண்பர் என்ற அடிப்படையில் இந்திய நாட்டுக்கும் ஒரு பாதுகாப்பாக இருக்க வேண்டும். இந்திய நாட்டு மக்களுக்குத் தேவையான அடிப் படையில் இந்திய மக்களின் பொருளாதார வளர்ச்சி வளர வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு ஓடோடி வந்து நமது நாட்டிற்குப் பாதுகாப்பு அளித்தார்கள்.

(முற்பகல் 9-40)

அதையொட்டித்தான் சமீபத்தில்கூட, நமது நாட்டு பாதுகாப்பு அமைச்சர் அவர்கள் பாதுகாப்பு பற்றி பேசுவதற்கு விரைவில் சோவியத் யூனியன் செல்ல இருக்கிறார்கள். அந்த நேரத்தில், தோழர் செர்னன்கோ அவர்கள் மறைந்தது நமது நாட்டிற்கு மேலும் ஒரு பேரிழப்பை உருவாக்கியிருக்கிறது. இருந்தாலும் இன்றைக்கு உலகத்தில் ஒரு சமாதான இயக்கத்தை உருவாக்கு வதற்கும், உலக மனித குல வாழ்விற்கும், சோவியத் யூனியன் நாட்டு மக்கள் எல்லாம் நலம் பெற்று வளர்ச்சி பெறவும், சோவியத் நாட்டின் தலைவர் செர்னன்கோ அவர்கள் முயற்சித்து, அதில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள். அப்பேற்பட்ட மறைந்த சோவியத் நாட்டினுடைய அதிபரான செர்னன்கோ, இந்திய கம்யூனிஸ்டு கட்சிப் பொதுச் செயலாளர், அந்த நாட்டினுடைய ஜனாதிபதியுமான செர்னன்கோ அவர்கள் மறைந்திருப்பது உண்மையிலேயே உலக சமாதான சக்திகளுக்கும், இந்தியா போன்ற விடுதலை பெற்ற நாடுகளுக்கெல்லாம் ஒரு பெரிய நட்டம் ஏற்பட்டிருக்கிறது. இப்பேற்பட்ட துக்கத்தில் இந்திய நாட்டு மக்களின் சார்பாக, நேரடியாக அனுதாபத்தையும், அஞ்சலியையும் செலுத்துவதற்கு நமது நாட்டுப் பிரதமர் அவர்கள்கூட உடனே சோவியத் நாட்டுக்குச் சென்று செர்னன்கோ அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப் போவதை நாம் இன்றைக்குப் பத்திரிகையில் படித்திருக்கிறோம்.

அந்த அடிப்படையில் நமது நாட்டுப் பிரதமர் நேரடியாகச் சென்று அனுதாபத்தையும், அஞ்சலியையும் செலுத்தினாலும், நமது தமிழக மக்களின் சார்பாக, தமிழக சட்டமன்றத்திலே, ஒரு நெஞ்சு உறுதியுடன், நல்ல பண்புடன், உலக சமாதானத்



1985 மார்ச் 12] [திரு. பொ. உத்திராபதி]

திற்காகப் பாடுபட்ட ஒரு தலைவருக்கு எப்படி நாம் அனுதாபத்தைக் காட்ட வேண்டுமோ, அந்த அளவிற்கு நமது தமிழக சட்டமன்றத்தில் நமது அவை முன்னவர் அவர்கள் சோவியத் நாட்டு மக்களுக்கும், ஒரு மாபெருந் தலைவரை இழந்திருக்கின்ற சோவியத் நாட்டு கம்யூனிஸ்டு கட்சிக்கும், ஆழ்ந்த அனுதாபத்தையும், அஞ்சலியையும் தெரிவிக்கும் வகையில், இரங்கல் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த அனுதாபத் தீர்மானத்தோடு, இன்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக இந்தத் தீர்மானத்தை நானும் வழிமொழிந்து அமர்கிறேன்.

* **திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மிக மூத்த தலைவரும், சோவியத் நாட்டின் அதிபருமான சர்னன்கோ அவர்கள் மறைவு குறித்து, பேரவையின் முன்னவர் அவர்கள் மொழிந்த இரங்கல் தீர்மானத்தை நானும் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக வழிமொழிகிறேன். மறைந்த பெருந்தலைவர், தமது முழு வாழ் நாளையும், பொதுவுடைமை தத்துவம் தழைக்க பாடுபட்டவர். நடந்த உலகப் போர் இரண்டிலும் பங்குபெற்று, ஒரு மாபெரும் வீரராக அவர்கள் விளங்கினார்கள். அவர் பிறந்த நாட்டிற்காக ஆற்றிய சேவை அளப்பரியதாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக நம் தாய்நாட்டை எதிர்நோக்கி யுள்ள ஆபத்தான ஒரு சூழ்நிலையில் நமக்கு ஆதரவாக நேசக் கரம் நீட்டியவர் மறைந்துவிட்டார் என நினைக்கும்போது, நமக்கு துக்கம் அதிகமாகிறது. சோவியத் யூனியன் அதிபர் மறைவு, இந்தியாவின் உண்மையான நண்பருடைய மறைவு, இந்தியாவுக்கு ஈடில்லா இழப்பு என்ற முறையில் என் கட்சியின் சார்பாக அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானத்தை வழிமொழிந்து அமர்கிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபையின் நாயகர் அவர்களே, சோவியத் யூனியனுடைய தனிப்பெரும் தலைவராக வாழ்ந்த அந்நாட்டினுடைய அதிபர் என்ற ஆசனத்தை அலங் கரித்து இன்று இப்பூவுலகத்திலிருந்து மறைந்து இருக்கிற அந்த மாபெரும் வீரருக்கு காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில்

அவை முன்னவர் அவர்கள் மொழிந்த உணர்வுகளோடு எங்களுடைய உணர்வுகளையும் இணைத்து அஞ்சலி செலுத்துவதற்கு இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக்கொள்கிறேன்.

உலக சமாதான புறாவாக இந்தியாவினுடைய நேரு இருந்து தொடர்ந்து இந்தியாவினுடைய இன்னமாக அது இருந்து வருகிற போது அந்த இந்தியாவுக்கு மிகச் சிறந்த நட்பு நாடாக இருந்தது சோவியத் யூனியன். மறைந்த ஜனாதிபதி திரு. கான்ஸ்டான்டின் செர்னென்கோ அவர்கள் அந்தப் பதவியினை அடைவதற்கு முன்னால் என்ன என்ன பயிற்சிகள் உண்டோ அத்தனை பயிற்சிகளையும் பெற்றிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட்டு கட்சியினுடைய இளைஞர் பிரிவு தலைவராக இருந்திருக்கிறார். பிரச்சார பிரிவின் தலைவராக இருந்து இருக்கிறார், போர்களத்தில் வீரராக சண்டையிட்டு இருக்கிறார், அந்த கட்சியினுடைய எல்லா பகுதிகளிலும், பிரிவுகளிலும் அவர் உழைத்த காரணத்தால் "உழைப்பு வீரர்" என்ற பட்டத்தையும் பெற்றிருக்கிறார், மிகச் சிறந்த பரிசாகிய லெனின் பரிசையும் அவர் பெற்றிருக்கிறார், இத்தனை படிக்கட்டுகளை ஏறி ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்த அவர் உடல் நலம் குன்றியபோது கூட அந்த நாட்டில் இருக்கின்ற மக்களும் பிற தலைவர்களும் அவருடைய உழைப்பை உணர்ந்து மதித்து எவ்வாறு நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பது உலகத்திற்கு இன்று ஒரு எடுத்துக்காட்டாக அமைந்து இருக்கிறது. ஓடி ஆடி பணிபுரிந்தாரா என்று பார்க்காமல் அவர் ஓடி ஆடி பணிபுரிந்ததால் சோவியத் யூனியன் உயர்நிலையில் இருக்கிறது என்பதை உணர்ந்ததும் அவரைச் சுற்றியிருக்கிறவர்கள் எல்லாம் அவரை மதித்ததும் அவருடைய எண்ணத்தை நிறைவேற்றுவதுதான் தம்முடைய கடமை என்று அதற்கு ஏற்ப செயல்புரிந்ததும் உலக நாடுகளில் இருக்கின்ற தலைவர்களுக்கும், உலக நாடுகளிலே இருக்கின்ற தலைவர்களை பின்பற்றுகின்றவர்களுக்கும் வழிகாட்டியாக அமைந்து இருக்கிறது. அந்தத் தலைவர் தான் வாழ்ந்து





கொண்டிருந்த நேரத்திலே உலக சமாதானத்திற்கு என்ன என்ன சொன்னார் என்பதையே ஒருவேத புத்தகமாக அச்சிட்டு வெளியிடக்கூடியதாக இருக்கிறது.

ஆப்பிரிக்காவிலே, அமெரிக்காவிலே, இலத்தீன் அமெரிக்காவிலே அங்கே எல்லாம் உள்நாட்டு குழப்பத்தை உண்டாக்குவதற்கு முயற்சி செய்கின்ற ஏகாதிபத்தியவாதிகளை நோக்கி அவர் பார்த்த பார்வை சுட்டு எரிக்கின்ற பார்வையாக இருந்தது. அவர் சொன்ன சொற்கள் எல்லாம் அவர்களை நல்வழி திருப்ப வேண்டும் என்ற வகையில் குத்திக்காட்டுவதாக இருந்தது. எத்தியோப்பியா போன்ற பகுதிகளில் எல்லாம் மக்கள் உணவு இன்றி செத்துக்கொண்டு இருக்கிற நேரத்திலே வல்லரசுகளாக இருக்கின்ற சில, ஆயுதங்களை செய்து செய்து குவிப்பதா என்ற கேள்வியை எழுப்பி அதற்காக அமெரிக்க ஐக்கிய நாடுகளோடு பேச்சு வார்த்தை நடத்த தயார். ஏன் உலகத்திலே இருக்கிற எந்த நாட்டு தலைவர்களோடும் பேச்சு வார்த்தை நடத்த தயார், சமாதானம் தான் முக்கியம், ஏன் என்றால் இந்த பூமி நாம் அனைவரும் குடியிருக்கின்ற வீடு, இந்த வீட்டுக்குள் எவ்வளவு வெடி மருந்துகளை தான் சேகரித்து வைத்து இருப்பீர்கள் என்று ஒரு பேட்டியிலே பதில் அளித்து இருக்கிறார். நாம் குடியிருக்கின்ற வீட்டிலே வெடி மருந்துகளையா நாம் குவித்து வைப்போம்? பிளானெட் என்று சொல்லப்படுகிற இந்த பூமிப்பந்திலே அத்தனை பேரும் அதை வீடாக பாவித்துக்கொண்டு இருக்கிற நேரத்திலே அணு ஆயுதங்களையா குவிப்பது என்று கேள்வி கேட்டு அணு ஆயுதத்தை குறைக்க வேண்டும் என்பதில் அவர் காட்டிய ஆர்வம் விண்வெளியை ராணுவ போட்டி பீடமாக ஆக்கிவிடக்கூடாது என்பதில் அவர் காட்டிய ஆர்வம் இவைகளை எல்லாம் பார்க்கிறபோது விண்ணிலே இருந்தும், மண்ணிலே இருந்தும் எந்த மனிதனுடைய எண்ணத்திலே இருந்தும் கூட யுத்தத்திற்கான அபாயமும், அறிகுறிகளும் வந்துவிடக்கூடாது என்று உலகத்திலே உரத்த குரல் எழுப்பி பேசிக்கொண்டு இருந்த அந்த மாமனிதர் இன்று நம்மிடமிருந்து மறைந்து இருக்கிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியாவினுடைய ஒப்பற்ற நண்பர்கள் நாங்கள் என்று சொல்லி எந்த நேரமும் நேசக்கரம் நீட்டி நீட்டி பாச உணர்வோடு நடந்து கொண்ட மாபெரும் தலைவரை நாம் இழந்து நிற்கிறோம். பொருளாதார துறையி

[திரு. குமரி அனந்தன்] [1985 மார்ச் 12

எடுத்துக்கொண்டாலும் சரி, சமூகத் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி இந்தியா நல்ல வகையிலே முன்னேற வேண்டும் என்ற நற்சிந்தனையோடு இருந்த மாபெரும கம்யூனிஸ்ட்டு தலைவரை இழந்து இருக்கிறோம். இந்தத் தலைவர் சொன்னதை எல்லாம் நமக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்ற வகையிலே இந்திய சோவியத் நட்புறவு என்றென்றும் தழைத்து மேன் மேலும் செழித்து ஓங்க வேண்டும் என்றும் சோவியத் யூனியனுடைய தலைவர் எப்படி உலக சமாதானத்தை விரும்பினாரோ அதேபோல் மற்றவர்களும் விரும்பி அமைதிப் பூங்காவான ஒரு உலகத்தை படைப்பதற்கு அவருடைய பெயரிலே நாம் சபதம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது தான் அவருக்கு நாம் செய்யும் அஞ்சலி என்று சொல்லி அவரை இழந்து நிற்கின்ற கம்யூனிஸ்ட்டு அகிலத்திற்கு காந்தி—காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பிலே அனுதாபத்தை தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் மற்ற கட்சித் தலைவர்களும் தெரிவித்த இரங்கல் கருத்துக்களுடன் என் இரங்கலையும் இணைத்துக் கொள்ள விரும்புகிறேன்.

சோவியத் அதிபர் அவர்கள் மிகக் குறுகிய காலமே பதவியில் இருந்தாலும், இந்திய நட்புறவிற்கும் உலக சமாதானத்திற்காகவே அந்த நாட்களை அவர் பயன்படுத்தினார். அவரது மறைவு சோவியத் நாட்டிற்கு ஒரு பெரும் இழப்பாகும். சோவியத் நாட்டு மக்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)



1985 மார்ச் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறைந்த திரு. கான்ஸ்டான்டின் செர்னன்கோ அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய அலுவல்கள் இப்போது ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை இப்போது ஒத்திவைக்கப்பெற்று முற்பகல் 10-00 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 9-51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

* *

(முற்பகல் 10-00)

முற்பகல் 10-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 3. ஒழுங்குப் பிரச்னைகள்

### (அ) வினா-விடைகளுக்கான நேரம் முடிந்தபின் வினாக்களை எடுத்துக்கொள்ளுதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுகிய கால வினா என். . . .

**திரு. ப. பொன்னுரங்கம்:** பாயின்ட் ஆப் ஆர்டர், சார். விதி தெளிவாக இருக்கிறது. ரூல் 31-ஐச் சொல்கிறேன். முதல் ஒரு மணி நேரம்தான் கேள்வி நேரம். அதை ஒத்தி வைக்கக்கூட அவையின் கன்சன்ட் (consent) வாங்கப்பட வேண்டும். கண்டலன்ஸ் தீர்மானம் டேபிளில் வைக்கப்படவில்லை. திடீரென்று எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதில் எல்லோரும் பேசியாகிவிட்டது. அமைதியாக முடித்திருக்கிறோம். காலை 9 மணியிலிருந்து 10 மணி வரையில் கேள்வி நேரம் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இன்றைக்கு எதிர்பாராதவிதமாக கன்டலென்ஸ் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. அவருக்கு மரியாதை தெரிவிப்பதற்காக உடனே கொண்டு வர வேண்டியிருந்தது. கேள்வி நேரத்தை முதலில் எடுத்துக்கொண்டுவிட்டு இரண்டாவதாக கன்டலென்ஸ் தீர்மானத்தைக் கொண்டு வருவதா? கன்டலென்ஸ் தீர்மானத்தைத்தான் முதலில் கொண்டு வர வேண்டும்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** ஃபர்ஸ்ட் கேள்வி தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ரெகுலர் அஜன்டாபடி வரும்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** அப்படி யென்றால் கேள்வி நேரத்தை ஒத்திவைப்பதற்காகத் தீர்மானம் கொண்டுவர வேண்டாமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கேள்வி நேரம் என்பது 9 மணி முதல் 10 மணி வரையில் நடைபெற வேண்டும். அது 10 மணியைத் தாண்டுகின்ற நிலைமை ஏற்பட்டால் அவையின் அனுமதியோடு அந்தக் கேள்வி நேரத்தை நீட்டிக்கலாம் என்று இருக்கிறது. இன்றைக்கு அந்த ஒரு மணி நேரம் என்பதை எடுத்துக் கொண்டால், திரு. செர்னென்கோ அவர்களின் மறைவிற்கு இரங்கல் தீர்மானம் கொண்டுவரப்பட்டு பிறகு ஒத்தி வைக்கப் பட்டது. அவையின் அனுமதியைப் பெற்று அந்தக் கேள்வி நேரத்தைத் தாங்கள் நீட்டிக்கலாம்; இல்லாவிட்டால் விட்டு விடலாம். கேள்வி நேரம் என்பது 10 மணியோடு முடிவடைந்து விடும் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதும் சரிதான். ஆனால், அவையின் அனுமதியைப் பெற, கேள்வி நேரத்தைத் தொடரலாமா என்று கேட்கலாம். அவை அனுமதி தந்தால் தொடரலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரூல் கிளியராக இருக்கிறது. எக்ஸ்டென்ட் செய்யலாம்.

Thiru P. PONNURANGAM: The Rule regarding question hour says " The question hour may be extended with the consent of the House ".

Mr. SPEAKER: The Rule clearly says " The Speaker may in his discretion extend the time for questions ". I extend the question hour at my discretion. The Rule clearly says " The Speaker may in his discretion extend the time for questions ". I extend the question hour at my discretion. The expression "I", includes everybody in the House.

அடுத்து, குறுகிய கால வினா எண் . . .

**திரு. ப. பொன்னுரங்கம்:** இப்படி நீங்கள் தொடர்வதன் மூலம் இந்தச் சபையை அவமதிக்கிறீர்களா?



**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவரவர்களே, இப்பொழுது அவையின் அனுமதி வாங்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரூலிலே கிளியராக இருக்கிறது.

### 4. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

குறுகிய கால வினா எண் 1

### கோயில் குளங்கள் சீரமைப்பு.

*வினா எண் 216—**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை பெருமாள் கோயிலுக்கு சொந்தமான திருக்குளத்தையும், மேற்கு மாம்பலம் கோதண்ட ராமசாமி கோயிலுக்குச் சொந்தமான பெரிய குளத்தையும் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். **வீரப்பன்:** (அ) & (ஆ) சைதை பெருமாள் கோயில் எனப்படும் அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருக் குளத்தில் தூர் வாருதல், படிக்கட்டுகளைச் சீர் செய்தல் மற்றும் இதர பணிகள் செய்யப்பட வேண்டியது அவசியமாக உள்ளது. இந்தத் திருக்குள திருப்பணியை வடபழனி ஆண்டவர் திருக் கோயிலிலிருந்து உபரி நிதி மாற்றம் பெற்று உடனடியாக செய்து முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேற்கு மாம்பலம் அருள்மிகு கோதண்டராமசாமி கோயிலுக்குப் பின்புறம் உள்ள பெரியகுளம் இத்திருக் கோயிலுக்குச் சொந்தமானதல்ல. எனவே, இக்குளத்தைச் சீரமைக்கும் கேள்வி எழவில்லை.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, சைதையிலுள்ள இரண்டு குளங்களைத் தூர் வாருகின்ற பணி அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் அளித்த பதிலில், பெருமாள் கோயில் குளத்தினுடைய திருக்குளத்தைத் தூர் வாருகின்ற பணி பரிசீலனையில் உள்ளது என்று சொன்னதற்கு நன்றி.

[1985 மார்ச் 12

அந்தப் பணி நடப்பு நிதியாண்டில் துவங்கப்படுமா? அப்படி என்றால் அதற்கான நிதி ஒதுக்கீடு எவ்வளவு? கோதண்டராமசாமி ஆலயத்திற்குச் சொந்தமான அந்த திருக்குளம் அந்த ஆலயத்தினுடைய பொறுப்பில் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் அந்த ஆலயத்திற்கு அருகாமையில் இருக்கின்ற அந்த மிகப்பெரிய குளம் ஆலயத் திருப்பணி நடைபெறுவதற்காகத்தான் காலந்தொட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அப்படிப்பட்ட ஒரு குளத்தை ஆலய நிர்வாகப் பொறுப்பில் இல்லை என்று சொல்லிக்கொண்டு அந்த நிர்வாகத்தில் இருந்து வருகின்ற பரம்பரை நிர்வாகிகள் சரியான முறையில் சொத்துக்களைப் பராமரிக்காமல் இருப்பதால் பல்வேறு புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. எனவே அப்படிப்பட்டவர்கள் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெங்கடேசப்பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருக்குளத்தைத் திருப்பணி செய்வதற்கு வடபழனி ஆண்டவர் திருக்கோவிலிலிருந்து 10 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. உடனடியாக அந்த சுத்தம் செய்கின்ற, திருப்பணி செய்கின்ற வேலைகள் தொடங்கப்படும். கோதண்டராமசாமி திருக்கோயிலுக்குச் சொந்தமானது என்று கருதப்படுகின்ற அந்த திருக்குளம் அந்தக் கோயிலுக்குச் சொந்தமானது அல்ல என்று நீதிமன்றத்தில் வழக்கு போடப்பட்டு தீர்ப்பையும் பெற்றிருக்கிறார்கள். அதிலே ஆண்டுதோறும் தெப்ப உற்சவம் நடத்துவதற்கு மாத்திரம் ஆலயத்திற்கு உரிமை இருக்கின்றது. அந்தத் திருக்குளம் சுத்தமாக வைக்கப்படவில்லை; பேணப்படவில்லை என்று அறநிலையத்துறையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உதவி செய்தால் அந்தப் பகுதியிலே வாழ்கின்ற பொதுமக்களுடைய துணையோடு அந்த ஆலயத்தினுடைய நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற பரம்பரை அறங்காவலர்களிடத்திலே அந்தத் திருக்குளத்தைத் திருப்பணி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள அறநிலையத்துறை நடவடிக்கை எடுக்கும்.



1985 மார்ச் 12]

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கோயில் என்றால் குளமும் உண்டு என்று உணரப்பட்டிருக்கின்றது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தக் குளங்கள் போக தமிழ் நாட்டில் கோயில்களை ஒட்டியிருக்கக்கூடிய எத்தனையோ குளங்கள் தூர் எடுக்கப்படாமல் நீர் இல்லாமல் இன்று கழிவோடைகளாகக் காட்சி தந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியில் பார்த்தசாரதி கோயில் திருக்குளம் நீண்ட நாட்களாக தூர் எடுக்கப்படாத காரணத்தால் ஊற்றுக் கண்கள் அடைபட்டு சீர்பட்டு கழிவோடைகளாகக் காட்சி தரக்கூடிய நிலையில் இருப்பதை மாற்றியமைக்கும் விதத்தில் தக்க முறையில் தூர் எடுத்து நீர் நிரப்பி முந்தைய காலத்தில் இருந்ததுபோல ஆயிரம் ஆயிரம் அல்லி மலர்கள் அந்தக் கேணியில் பூத்துக் குலுங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பி இருக்கின்ற திருவல்லிக்கேணி பார்த்தசாரதி திருக்கோயில் குளத்தைப் பற்றிய விவரங்கள் என்னிடத்திலே இல்லை என்றாலும் தமிழகம் முழுவதும் உள்ள அற நிலையங்களுக்குச் சொந்தமான திருக்குளங்களைத் திருப்பணி செய்வது என்பது ஆலயத்திற்காக மாத்திரமன்றி சமுதாயத் தேவைகளுக்காகவும் அவற்றைத் திருப்பணி செய்து பாதுகாப்பாக வைக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. ஆகவே அறநிலையத் துறையின் மூலம் திருப்பணிகள் என்ற பட்டியலில் திருக்குளங்களைத் திருப்பணி செய்கின்ற அந்த வகையிலும், தூர் எடுத்தால் அதற்குக் கரை கட்டுதல், படிகள் அமைத்தல் என்ற அந்தத் திருப்பணிகளையும் செய்து பொது மக்களுடைய பயனுக்கு உரிய வகையில் அதைச் சிறந்த முறையில் பாதுகாக்க வேண்டும் என்ற திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து சென்ற ஆண்டு 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. அதைப்போல பல்வேறு வசதி மிக்க ஆலயங்களிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து தமிழகத்திலுள்ள திருக்குளங்களை முடிந்தவரையில் முன்னுரிமை தந்து திருப்பணி செய்து அந்தக் குளங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டிருக்கின்றது.

[1985 மார்ச் 12

குறிப்பாக நம்முடைய பார்த்தசாரதி கோயிலைப் பொறுத்தவரை அந்தத் திருக்குளத்தைப் பொறுத்தவரை தண்ணீர் வருகின்ற அந்தக் கண்கள் எல்லாம் அடைக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அதைப் பற்றிய ஒரு கருத்தை இந்த அவையில் சொல்வதன் மூலம் அந்தத் திருக்குளங்கள் எப்படிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்கு பொது மக்களிடத்திலும் நல்ல உணர்வு ஏற்படுத்துவதற்கு வசதியாக இருக்கும். சமுதாயத்தினுடைய பயனுக்காக உருவாக்கப்பட்டிருக்கின்ற அந்தக் குளங்களைச் சுற்றி, தண்ணீர் வருகின்ற பகுதிகளில் எல்லாம் தண்ணீர் தேங்குகின்ற பகுதிகளில் எல்லாம் கூட வீடுகளைக் கட்டி அந்தத் தண்ணீர் வருகின்ற வழிகளை எல்லாம் அடைக்கின்ற காரியங்கள் இன்றைக்கு வளர்ந்து கொண்டு வருகின்ற மக்கள் தொகை காரணமாக வேகமாக நடைபெற்று வருகின்றன. அதனாலே அந்தத் திருக்குளங்களுக்குத் தண்ணீர் வருவதோ அல்லது அதிகமாக தண்ணீர் அங்கே நிரம்பினால் அது வெளியிலே போவதோ இன்றைக்கு முடியாமல் தேங்குகின்ற குட்டைகளாக, வற்றிப் போனதற்குப் பிறகு தண்ணீர் அங்கே இல்லாமல் இருக்கிற நிலைமை எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, சென்னை போன்ற நகரங்களில் அதிகமான கட்டிடங்கள் உருவாக்கப்படுகின்ற காரணத்தினால் திருக்குளங்கள் பாதிக்கப்படுகின்றன. அப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிற திருக்குளங்களிலே ஒன்றுதான் பார்த்தசாரதி திருக்கோயிலினுடைய தெப்பக்குளமும். ஆகவே, எப்படியாவது அதைத் தூர் எடுத்து அதிலே தண்ணீரை நிரப்புவதற்காக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று சுமார் 1½ இலட்சம் ரூபாயிலே திட்டம் இடப்பட்டிருக்கிறது. அதிலே திருக்கோயிலின் சார்பிலே 75,000 ரூபாயும், அரசின் சார்பிலே 75,000 ரூபாயும் வழங்க வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அது அறநிலையத் துறையின் பரிசீலனையில் இருக்கிறது.

(முற்பகல் 10.10)

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோதண்டராமசாமி கோயிலுக்குச் சொந்தமான அந்தக் குளம் ஆலயத்திற்குச் சொந்தமானது இல்லை, வழக்கு



1985 மார்ச் 12]

மன்றத்திலே இருக்கிறது என்று சொன்னார்கள். ஆலயப் பணிக்காகவும், அந்தப் பகுதிவாழ் மக்களுடைய சுகாதாரச் சீர்கேட்டை முன்னிட்டும் அந்த ஆலயத்தினுடைய நற்பணிக்காக அந்தக் குளத்தை கையகப்படுத்துவதற்கு அரசு துரிதமான நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1956 ஆம் வருஷத்தில் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி இந்தத் திருக்குளத்திலே தெப்பம் நடத்துவதற்கு மாத்திரமே அந்த ஆலயத்திற்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த ஆலயத்திற்கு முழு உரிமை பெற்று திருக்குளமாக மாற்றுகிற நடவடிக்கையைச் சட்டப்படி எடுப்பதற்கு அறநிலையத் துறை முயற்சி செய்யும்.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு மன்றத்திலே நடைபெற்ற வழக்கைப் பற்றி குறிப்பிட்டார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அந்தக் குளம் யாருக்குச் சொந்தம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆகவே, சொந்தக்காரரைக் கொண்டு குளம் செம்மையாக இருக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், பார்த்தசாரதி கோயிலைப் பொறுத்தமட்டில் கட்டிடங்கள் கட்டப்படுவது, என்றால் மாநகராட்சி அதிகாரிகள் அனுமதியில்லாமல் கட்டிடங்கள் கட்டப்பட வாய்ப்பில்லை. எனவே, மாநகராட்சி அதிகாரிகள் கட்டிடம் கட்டுவதை தடுக்காததற்குக் காரணம் என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு காலத்திலே இந்தத் திருக்குளங்கள் எல்லாம் தோற்றுவிக்கப்பட்ட பொழுது இவைகள் எல்லாம் கிராமப் பகுதிகளாக அன்றைக்கு இருந்து வந்தன. ஆகவே, குளங்களைச் சுற்றி 4 புறம் கரைகளும் கரைகளைச் சுற்றி குறிப்பிட்ட அளவிலே வீடுகளும் இருந்தன. அவைகள் எல்லாம் இப்பொழுது நகரங்களாக மாறி நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான வீடுகள் எழுப்பப்பட்டு வருகின்றன. ஏந்தப் பகுதியிலே தண்ணீர் விழுந்து அந்தக் குளத்திற்கு தண்ணீர் வர

[1985 மார்ச் 12

வேண்டுமோ, அந்தப் பகுதிகள் எல்லாம் காலி இடங்களாக வைக்கப்பட முடியாத சூழ்நிலையில் கட்டிடப் பகுதிகளாக மாற்றப்பட்டு விட்டன. இதிலே மாநகராட்சி தலையிட்டு, அதைத் தடுத்து நிறுத்துவது என்பது இயலாத காரியம்.

**வடபழனி கோயில் நில ஒதுக்கீடு.**

குறுகிய கால வினா எண். 2

* **வினா எண் 217—திரு. சா. துரைசாமி :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதைக் கூட்டுறவு வீட்டுமனைச் சங்க உறுப்பினர்களுக்கு அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை ஒதுக்கீடு செய்யும் செயற்குறிப்பு, அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) & (ஆ) அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை சைதைக் கூட்டுறவு வீட்டு மனைச் சங்கத்திற்கு விற்பனை செய்வதற்காக இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அவர்களால் 1982 பிப்ரவரியில் ஆட்சேபணைகள் கோரி அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த உத்தேச விற்பனை திருக்கோயிலின் நலனுக்கு ஏற்றதல்ல என்று அறிவிக்கக் கோரி சென்னை சிட்டி சிவில் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. இவ்வழக்கு முடிவடைந்த பிறகே இந்த நில விற்பனை பற்றி பரிசீலிக்க முடியும்.

**திரு. சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் ஆளுக்கொரு வீடு கொடுப்போம் என்று வீட்டு வசதி வாரிய அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட இந்தக் காலகட்டத்தில் மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அந்த வழக்கைத் துரிதப்படுத்தி, சமுதாயத்தின் நலிந்த பிரிவினராக இருக்கிற, விளங்கிக் கொண்டிருக்கிற, "எக்கனாமிக்கல்லி வீக்கர் செக்‌ஷன்" என்று கருதப்படுகிற



1985 மார்ச் 12]

நெசவாளர்களுக்கு, அந்த இடத்தை வழங்க, வழக்கு முடிந்த பிறகு, வழங்க, அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் அனுமதியோடு அறநிலையத் துறை ஆணையர் அவர்கள் மூலமாக இதை கிரவுண்ட் ஒன்றிற்கு 20 ஆயிரம் ரூபாய் என்று, மாவட்ட ஆட்சித் தலைவர் ரூபாய் 18,900 என்று மதிப்பு செய்யப்பட்ட அந்தச் சூழ்நிலையில் 20 ஆயிரத்திற்கு விற்கலாமென்று ஒப்புதல் அளிக்கப்பட்டு அதற்கு பிறகு தான் அந்த ஆட்சேபணை அறிவிப்பு கோரி நோட்டீஸ் வெளியிடப்பட்டது. ஆனால் என்ன காரணத்தாலோ யாரோ ஒருவர் வழக்கு மன்றத்திற்குச் சென்று தனக்கு இந்த ஆலயத்தினுடைய நலனில் அக்கறை இருப்பதாகச் சொல்லி அவர் இந்த விற்பனையை தடுத்து நிறுத்தி இருக்கிறார். வழக்கை சீக்கிரம் முடிக்க வேண்டிய பொறுப்பு வழக்கு மன்றத்தினுடைய பொறுப்பிலே இருப்பவர்களுக்கு இருக்கிறது. அங்கே சீக்கிரமாக முடிக்க வேண்டுமென்று வழக்கு மன்றத்திற்கு ஆணை போடுவதற்கு நம்மாலே முடியாது. ஆகவே வழக்கு முடிந்தவுடனே அந்த முடிவை ஒட்டி ஆலய நன்மையை மனதிலே கொண்டு, அதேநேரத்தில் நலிந்த பிரிவினர்களுக்கு வீடுகள் வழங்குகிறத் திட்டத்தை நிறைவேற்றுகிற அந்த இலட்சியத்தை செயல்படுத்த முறையோடு அந்த இடங்களை அவர்களுக்கு உரிமையாக்குகிற, செயப்படுத்துகிற முயற்சியிலே அறநிலையத் துறை ஈடுபடும்.

**திரு. சா. துரைசாமி :** தலைவர் அவர்களே, தனி நபர் நலன் முக்கியமா அல்லது சமுதாய நலன் முக்கியமா என்ற அடிப்படையில் பார்க்க வேண்டும். இன்றைக்கு இந்த வழக்கை தொடுத்திருப்பவர் ஒரு தனியார். இந்து சமய அறநிலையத் துறையோ அல்லது ஆலய நிர்வாகமோ அல்ல. எனவே அப்படி இருக்கையில் வழக்கைப் பொறுத்தவரையில் யார் வேண்டுமானாலும் போடலாம் என்ற அடிப்படையில் போடப்பட்ட வழக்கே தவிர, கோவில் நலன் கருதியோ அல்லது சமுதாய நலன் கருதியோ போடப்பட்ட வழக்கு அல்ல.

[1985 மார்ச் 12

என்பதைக் கருத்தில் கொண்டு, அதிகத் தொகை நிர்ணயம் செய்திருக்கிற அந்த அடிப்படையில் அரசு மனைகளை ஒதுக்கீடு செய்ய முன்வருமா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்கு வழக்கு மன்றத்திலே போகிறவர்கள் எல்லாம் சமுதாய நலன் கருதிதான் போகிறார்கள் என்று நாம் கூறமுடியாத சூழ்நிலை வளர்ந்து கொண்டு வருகிறது. ஒரு சமுதாய முற்போக்குத் திட்டத்தை தடுத்து நிறுத்துவதற்கு ஒரு தனியார் நீதிமன்றத்திலே சென்று தடையாணை பெற்று விட முடியும் என்ற நிலை இருக்கிறது. இந்த வழக்கைப் பொறுத்தவரையில் நீதிமன்றம் தடையெதுவும் விதிக்கவில்லை யென்றாலும் இதை ஒரு பிரச்னையாகக் கொண்டு போய்விட்ட காரணத்தினால் இதிலே தடையில்லை என்றாலும், நாம் இந்த விற்பனையை ஒருவேளை நடத்தி முடித்துவிட்டால் இந்த விற்பனைக்கு பாதகமாக நீதிமன்றம் தீர்ப்பு அளிக்குமேயானால் 'ட்ரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்ட்' என்ற சட்டத்தின்படி இந்த விற்பனை செல்லாது என்கிற சூழ்நிலை உருவாக்கப்படுகிற வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட சங்கடங்களை ஏற்படுத்த வேண்டாமென்று தான் அறநிலையத் துறை இந்த விற்பனையை நிறுத்தி வைத்திருக்கிறது. ஆகவே வழக்கு மன்றத்திலே இந்த விசாரணை முடிவுற்றதற்குப் பிறகு விற்பனை நடத்துவதுதான் இரு சாராருக்கும் நல்லது.

**திரு. டி. ஆர். வேங்கடராமனன் :** தலைவர் அவர்களே, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிலே சர்க்காரியா கமிஷனில் விசாரணையின்போது அரசியல் காரணங்களுக்காகவும், பொருளாதார காரணங்களுக்காகவும் தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளதாக வர்ணிக்கப்பட்டுள்ள "தமிழ்நாடு சிட்டி டெனண்ட்ஸ் புரடக்‌ஷன் ஆக்ட்" என்ற சட்டத்தின் கீழ் நம்முடைய கோவில்களின் நிலங்களிலும், ஏழை மக்களின் நிலங்களிலும் குடியிருந்து கொண்டிருக்கக்கூடிய நபர்களிடமிருந்தும் அந்த நிலங்களை கைப்பற்றுவதற்காக ஏதாவது திட்டம் அரசிடத்தில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.



1985 மார்ச் 12]

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, தனியாக கேள்வி போட்டால் விரிவாக பதில் அளிக்க இயலும்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** தலைவர் அவர்களே, இந்த ஆலயத்திற்குச் சொந்தமான நிலம் இரண்டு பிரிவாக உள்ளதாகவும், 116 கிரவுண்ட், 116 கிரவுண்ட் என்று இருப்பதாகவும் எனக்குத் தகவல். அது மட்டுமல்லாமல் இதை பல பொது நிறுவனங்கள் கேட்டதாகவும் தகவல். பல்லவன் போக்குவரத்துக் கழகம் தன்னுடைய ஊழியர்களுக்கு வீடு கட்ட கேட்டு மறுக்கப்பட்டிருக்கிறது. அந்த கோவிலில் பணியாற்றுகிற ஊழியர்கள் தங்களுக்கு கேட்டதாகவும் எனக்குத் தகவல். அதுமட்டுமல்லாமல் ஒரு தனவந்தர் சொற்ப அளவில் சிகிச்சை அளிப்பதற்கு மருத்துவமனை கட்டுவதற்காகவும் கேட்டதாகவும் தகவல். ஆகவே இப்படியெல்லாம் கேட்டு மறுக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் 20 ஆயிரம் ரூபாய் நிர்ணயித்து விற்பனைக்கு என்று ஆணையரிடம் செல்கிறபோது ஆணையரே மறுத்ததாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே வழக்குமன்றத்தில் வழக்கு இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. 20 ஆயிரம் ரூபாய் நிர்ணயித்து இருக்கிற அந்த நிலம் வெளியே போதுவிலே விற்றால் 1½ லட்சம் ரூபாய், 2 லட்சம் ரூபாய் விற்கும் என்று அந்தப் பகுதியிலே இருக்கிறவர்கள் எனக்கு தகவல் கொடுத்து இருக்கிறார்கள். எனவே வழக்கு முடிந்த பிறகு இந்த விலையில் நிர்ணயிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.20)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை அடிப்படையாக வைத்துக்கொண்டு பல ஐயப்பாடுகளை எழுப்பியிருக்கிறார்கள். உங்கள் அனுமதியோடு அதற்கு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். இங்கே இருப்பது 16 ஏக்கர் அல்லது 32 ஏக்கர் நிலம் சம்பந்தப்பட்ட கேள்வி அல்ல; சர்வேக்களில் 6 ஏக்கர் 22 சென்ட் நிலத்தைப் பற்றிய விவரங்கள்தான். ஒருவேளை வேறு நிலங்கள் பற்றிய அப்படிப்

பட்ட பிரச்சினை இருக்குமா என்ற தகவல் தற்போது என்னிடத்தில் இல்லை. இந்த நிலங்களைப் பொறுத்தவரையில், சைதாப்பேட்டை வீடு கட்டிக் கொடுக்கிற கூட்டுறவுச் சங்கம் என்பது நெசவாளர்களுக்காக உருவாக்கப்பட்டது. காமராஜர் காலத்தில் மனைகள் எல்லாம் ஒதுக்கி, வீடு கட்டி, குறைந்த வருமானம் உடையவர்கள், நெசவாளர்களுக்கு கொடுக்கிற ஒரு கூட்டுறவுச் சங்கம் இது. ஆகவே அந்தச் சங்கத்திற்கு நியாயமான விலையில் அரசு நிர்ணயிக்கிற விலையில் இந்த நிலங்களை எடுத்துக்கொள்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் 18,900 ரூபாய் என்று மதிப்பீடு செய்திருக்கிறார்கள். ஆகவே, ஆணையர் அவர்கள் 20,000 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இந்த நிலத்தை கொடுக்க ஆணையர் மறுக்கவில்லை. நிலத்தைக் கொடுப்பதற்கு முன்னால் மறுப்பு தெரிவிப்பவர்கள் இருக்கிறார்களா என்பதைத் தெரிந்துகொள்ள 'அப்ஜெக்ஷன் கால்ஃபார் நோட்டீஸ்' கேட்க வேண்டும். அதற்காக நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். அப்போது ஒருவர் வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிறார்.

பொது ஏலத்தில் விட்டால் அல்லது பணக்காரர்களுக்குக் கொடுத்தால் இது ஒரு இலட்சம் அல்லது ஒன்றரை இலட்சம் ரூபாய்க்குப் போகலாம். நான் இந்த அவையின் மூலம் கேட்டுக் கொள்ள விரும்புவது, இப்படி இருக்கிற இடங்களை எல்லாம் 2 இலட்சம் ரூபாய், 3 இலட்சம் ரூபாய் என்று நிர்ணயம் செய்து பணக்காரர்களுக்கு விற்பனை செய்ய முடிவு செய்கிறோமா அல்லது சென்னை மாநகரில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக மிக விலை உயர்ந்த இடங்களை எல்லாம் எடுத்து, குறைந்த விலைக்கு, நியாயமான விலைக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறோமா என்பது. சென்னை மாநகரில் ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களை குடிசை மாற்று வாரியத்திற்கு நியாயமான விலைக்குக் கொடுத்து, வீடு கட்டிக் கொடுக்க அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி, மனை ஒன்றுக்கு 7,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். ஆனால் இன்னும் பணம் வரவில்லை. அப்படி 7,000 ரூபாய்க்கு எடுத்து வீடு கட்டினாலே 10 ரூபாய்



வாடகை கட்ட முடியாமல் இருக்கிறார்கள். இன்னும் அதிக விலைக்கு இந்த நிலங்களை எடுத்து, பணக்காரர்களுக்கு, வியாபாரிகளுக்கு கொடுத்தால் இலட்சக்கணக்கான ரூபாய் சம்பாதிக்கலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் யாரும் அப்படிச் செய்ய விரும்பமாட்டார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, கஷ்டப்பட்டு, துன்பப்பட்டு வாழ்க்கையில் இருக்க இடம் இல்லாமல் நாள்தோறும் பாடுபட்டு வருகின்ற நெசவாளர்களுக்கு இந்த நிலங்களை வழங்குகிற ஒரு திட்டமாக இது இருக்கிறது. இந்த நிலங்களை ஏலம் விட்டு, பணக்காரர்கள் எடுத்து, கொள்ளை இலாபம் அடிக்க அனுமதிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவரவர்களே, அருள்மிகு வடபழனி ஆண்டவர் ஆலயத்திற்குச் சொந்தமானது இந்த நிலம். இந்த நிலத்தைப் பயன்படுத்துவதாக இருந்தால் இந்து சமயப் பணிகளுக்குத்தான் பயன்படுத்த வேண்டும் அல்லது முக்கியமான பொதுப் பணிகளுக்குப் பயன்படுத்த வேண்டும். அப்படி இல்லாமல் கோவில் நிலத்தை தனியாருக்குக் கொடுப்பது சரியாக இருக்காது. இப்படிச் செய்வது ஒரு தவறான முன்மாதிரி ஆகாதா? எதிர்காலத்தில் இம்மாதிரியான நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு அரசின் நடவடிக்கை என்ன என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவரவர்களே, நான் முன்னாலே சொன்னதைப் போல ஒரு காலத்தில் சென்னை மாநகரம் பல்வேறு கிராமப் பகுதிகளாக இருந்தபோது இந்த நிலங்கள் அந்த ஆலயத்திற்கு எழுதி வைக்கப்பட்டன. இன்றைக்கு 40 இலட்சம், 50 இலட்சம் மக்களாகப் பெருகி, வளர்ந்து வருகின்ற ஒரு மாநகரமாக இருக்கிறபோது அந்த இடங்கள் எல்லாம் அப்படியே இருக்க வேண்டும், கோவிலுக்கு மட்டுமே பயன்பட வேண்டும் என்று எண்ணுவது நடக்காத காரியம். அது இந்த காலத்திற்கு ஏற்ற கருத்தும் அல்ல. நாம் ஆலயம் அல்லது இறைவன் என்பது சமுதாயத்திற்கு, மக்களுக்கு என்றுதான் இன்றைக்கு எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால்

[1985 மார்ச் 12

ஆலயத்திற்கு இருக்கிற நிலங்கள் தவறாகப் பயன்படுத்தப்படக் கூடாது என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதேநேரத்தில் சமுதாயத்தில் நலிவுற்றிருக்கிற ஏழை எளிய மக்களுக்கு அந்த நிலங்களைப் பயன்படுத்தக்கூடாது என்பதை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நாமும் ஏற்றுக்கொள்ள முடியாது; இறைவனும் ஏற்றுக்கொள்ள மாட்டார். "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு". அந்த அடிப்படையில் காரியங்கள் நடைபெறுகின்றன. இந்த நிலங்களிலே கூட ஒரு பகுதியை அங்கே இருக்கிற ஆலயப் பணியாளர்கள் தங்களுக்கு ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கும் அறநிலையத் துறை அனுமதி தந்திருக்கிறது. ஆகவே ஆலயத்திற்குத் தேவைப்படுகிற நேரத்தில் ஆலயப் பணிக்களுக்காக தேவைப் படுகிற ஒரு நிலத்தை வேறு காரியங்களுக்கு ஒதுக்கீடு செய்வது என்பதை அரசு தடுத்திருக்கிறது. அறநிலையத்துறை தடுத்திருக்கிறது. ஆனால் இப்படி எங்கெங்கோகிடந்து யார் யாரோ குடிசைகளைப் போட்டுக் கொண்டு அதை அசிங்கப்படுத்தி, அந்த இடத்தை சுத்தமாக வைத்துக்கொள்ளாமல் ஆலயத்திற்கும் பயன்படாமல், சமுதாயத்திற்கும் பயன்படாமல் இருக்கிற நிலங்களை இப்படி விற்பனை செய்து, சாதாரண ஏழை எளியவர்களுக்கு பயன்படுத்துவது தான் இறைவனுக்கும் ஏற்ற காரியம், நமக்கும் ஏற்ற காரியம்.

**திரு. வி. பி. சிந்தன்:** தலைவர் அவர்களே, கோயில் நிலங்களும் மடத்திற்குச் சொந்தமான நிலங்களும் ஏராளமான, லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உண்டு. அதைஎல்லாம் எடுத்து, ஏழை எளிய மக்களுக்கு, இதே பாணியில் வினியோகம் செய்வதற்கான ஒரு திட்டத்தை அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்களா? அரசு அத்தகைய கொள்கையைக் கொண்டிருக்கிறதா என்பதை விளக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நிலங்கள் என்று பேசப்படுகின்ற நிலங்களிலே இருவகை உண்டு. வீடுகட்டுகின்ற மனைகள், விவசாய நிலங்கள். இப்போது நாம் பேசுவது வீடு கட்டுகின்ற மனைகளைப் பொறுத்தவரைதான். வீடு கட்டுகின்ற மனைகள்



1985 மார்ச் 12]

இதுபோன்ற வளர்ந்து வருகிற நகரங்களிலே ஆலயங்களுக்குச் சொந்தமானதாக இருக்கிறபோது, அது கேட்பாரற்று யார் யாரோ அதைக் கையகப்படுத்திக்கொண்டு, ஆலயத்திற்கும் பயன் கிடைக்காமல், நியாயமாக கிடைக்கவேண்டிய ஏழை எளியவர்களுக்கும் கிடைக்காமல் போய்விடுகிறது. அடாவடிக்காரர்கள் கையிலேகூட போய் சிக்கிக்கொள்கிறது. நான் முன்னாலே கேள்விக்கு பதில் அளித்ததைப்போல, சில பேர்கள் திருக்குளங்களைத் தங்களுக்குச் சொந்தம் என்றும், அதிலே ஆலயம் தலையிடக் கூடாது என்றும் வழக்குமன்றத்தில் கூட ஆணை பெற்றுவிடுகிறார்கள். ஆகவே இந்தக் கேள்விக்கு நான் அளித்துக்கொண்டிருக்கிற பதில், நகர்ப்புறத்திலே இருக்கிற மனைக்கட்டு இடங்கள், அந்த இடங்களைப் பொறுத்தவரையிலும் காலியாக, ஆலயத்திற்குத் தேவையில்லாமல், ஆலயப் பணிகளுக்குப் பயன்படாமல், அதற்கு என்று ஒதுக்கப்படாத நிலங்களாக இருந்தால் அவைகளை பொது ஏலத்திலோ அல்லது நீண்ட காலமாக அவைகளை அனுபவித்துக்கொண்டு இருப்பவர்களே விரும்பினால், அவர்களுக்கு கிரயம் செய்து கொடுக்கலாம், அல்லது குடிசைவாழ் மக்கள், அல்லது தாழ்த்தப்பட்ட மக்கள், கஷ்டப்படுகிறவர்களுக்கு வீடு கட்டுவதற்கு அதை பயன்படுத்தலாம் என்பது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்து இருக்கிற கொள்கையாகும்.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது, வழக்குமன்றத்தில் இருக்கிற வழக்குகளை துரிதப்படுத்த உத்தரவு போட முடியாது, அல்லது இப்படித்தான் நடத்த வேண்டும் என்று உத்தரவு போட முடியாது என்று சொன்னார்கள். இந்தச் சமுதாயத்தில் உள்ள மக்களின் நலன் கருதி, வழக்கு மன்றத்தில் உள்ள அந்த வழக்குகளை சீக்கிரமாக நடத்த வேண்டும் என்று ஒரு மனு போட்டு அந்த வழக்குகளை நடத்த முடியும் என்பதை நான் ஒரு வழக்கறிஞன் என்ற முறையில் சொல்கிறேன். அதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1985 மார்ச் 12

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வழக்கறிஞர் என்பதால், 'எக்ஸ்படைட் பெட்டிசன்' போடலாம் என்று சொல்கிறார்கள். நாங்கள் எக்ஸ்படைட் பெட்டிசன் போட்டால், அதற்கு இன்னொரு வழக்கறிஞர் வந்து வாய்தா வாங்கிக் கொண்டிருக் கிறார். இதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 3. ஒழுங்குப் பிரச்சனைகள்—தொடர்ச்சி.

**(ஆ) மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் பேரவை நடந்து கொண்டிருக்கும்போது கூட்டப்பெறுவது.**

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து ஒரு தந்தி எனக்கு வந்திருக்கிறது. இன்றையதினம் காலை 10 மணிக்கு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் நடக்கிறது. அதில் நீங்கள் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும் என்று எனக்கு தந்தி வந்திருக்கிறது. எனவே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. வேண்டுமானால் எழுதிக் கொடுங்கள்.

### 5. தகவல் கோரல்

**உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டைகள்.**

**திரு. ப. பொன்னுரங்கம் :** தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக நான் அவை முன்னவர் அவர்களிடமிருந்து ஒரு தகவலைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதாவது

Issue of identity cards to Members is not in order according to law



1985 மார்ச் 12] [திரு. ப. பொன்னுரங்கம்]

ஆகையினாலே ஒரு விளக்கத்தைத் தெரிந்து கொள்ள விரும்பு கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கடந்த திங்கள் 25-ஆம் தேதிதான் ஐடென்டிபிகேஷன் கார்ட் வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் அவை நடவடிக்கை யைப் பொறுத்தமட்டில் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கலாம்.

It is an official work; it does not involve any legislative work.

இதைப்பற்றி என்னுடைய அறையில் வந்து நீங்கள் தெரிந்து கொள்ளலாம். (குறுக்கீடு)

(முற்பகல் 10-30)

**திரு. ப. பொன்னுரங்கம் :** நீங்கள் சொல்லுவது சரியல்ல, என்னுடைய உரிமையைப் பறிக்கிறீர்கள். இது நல்லது அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிமையைப் பறிக்க வில்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதெல்லாம் அவையிலே நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளின் தொடர்பாகத்தான் எழுப்பப்பட வேண்டும். நீங்கள் சொல்வது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது . . . .

**திரு. ப. பொன்னுரங்கம் :** இந்த ஐடென்டிபிகேஷன் கார்டுகள் ஆர்டராக இல்லாததால்தான் பாயின்ட் ஆப் ஆர்டர் வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் தீர்ப்பு சொல்லு கிறேன். இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று. நீங்கள் மறுத்தால், வேண்டுமானால் உரிமைப் பிரச்னையை எழுதிக் கொடுங்கள்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** இதிலே கொடுக்க முடியாது. இதிலே புரொவிஷன் கிடையாது என்று எனக்குத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி பேசுங்கள். அதற்குப் பிறகு மறுபடியும் நான் தீர்ப்புச் சொல்கிறேன்.**

**திரு. ப. பொன்னுரங்கம்:** இந்த ஐடென்டிட்டி கார்டுகளை பிப்ரவரி 25 ஆம் தேதி அன்றுதான் கொடுத்தார்கள். இந்த ஐடென்டிட்டி கார்டிலே கூட பிரசன்ட் செக்ரட்டரியின் கையெழுத்து இல்லை. திரு. அழகர்சாமி அவர்களின் கையெழுத்துத் தான் இருக்கிறது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவைகள் எல்லாம் அபீஷியல் ரொட்டீன். பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது என்று நான் முன்பே சொல்லிவிட்டேன்...

**திரு. ப. பொன்னுரங்கம்:** இதிலே டேட்டே கிடையாது ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்னையைப் பற்றி வேண்டுமானால் அறையிலே வந்து கேளுங்கள். இப்போது உட்காருங்கள். திருமதி பா. வளர்மதி.

### 6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி).

***திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு முன்னால், என்னை வளர்த்து ஆளாக்கி, இந்த மாமன்றத்தில் ஒரு அங்கமாக இருப்பதற்கு காரணமாக இருந்த என்னுடைய வழிபடு கடவுள் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்த மயிலாப்பூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதற்கு இணங்க புரட்சித் தலைவர் தமிழகத்தில் இல்லாத நேரத்திலும், மக்களின் ஒட்டுமொத்தமான ஆதரவு புரட்சித் தலைவர் அவர்களுக்கு, கிடைத்திருக்கிறது என்றால், மக்கள் மீது புரட்சித் தலைவர் அவர்கள் வைத்திருக்கிற நம்பிக்கையையும், புரட்சித் தலைவர் அவர்கள் மீது மக்கள் வைத்திருக்கிற நம்பிக்கையும் தான் காரணமே தவிர வேறு இல்லை என்பதை இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். ஆனால் தமிழகத்திலே இருக்கிற பல்வேறு அரசியல் கட்சிகள், புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்திலே பெற்றிருக்கிற மகத்தான வெற்றிக்கு, அனுதாபம் தான்





காரணம் என்கிற கருத்தை மாறி மாறி இந்த அவையிலேயேகூட சொல்லி வருகிறார்கள். ஒரு வகையிலே அனுதாபத்தால் பெற்ற வெற்றி என்றால், எங்களுடைய கட்சியின் தலைவர் புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயரைச் சொல்லி, அவருடைய திருமுகப் படத்தைக் காட்டித்தான், நாங்கள் வெற்றி பெற்றிருக்கிறோமே தவிர, இன்னொரு அரசியல் கட்சித் தலைவரின் படத்தைக் காட்டி, அனுதாபத்தைப் பெற்று வெற்றி பெற முயற்சி செய்யவில்லை என்பதை இந்த அவையிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் அவர்கள் தங்களுடைய உரையிலே அறிவித்துள்ளது போல், ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களின் துன்ப துயரங்களைத் தீர்ப்பதற்கு இந்த அரசு பல்வேறு நல்ல திட்டங்களை நிறைவேற்றி வந்த காரணத்தால், மக்கள் நன்றிக் கடன் பட்டு, மூன்றாவது தடவையாகவும் புரட்சித் தலைவர் அவர்களை முதலமைச்சர் பீடத்திலே அமர்த்தி வைத்திருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் நோயினால் படுக்கையிலே படுத்தார்கள் என்ற உடனேயே பள்ளிக்கூடங்கள் பிரார்த்தனைக் கூடங்கள் ஆயின. திரை அரங்குகள் கூட, தியான மண்டபங்கள் ஆயின. தனி ஒரு மனிதருக்காக தமிழகமே தவம் கிடந்தது என்றால், அது இந்தியத் துணைக் கண்ட வரலாற்றிலேயே புரட்சித் தலைவர் அவர்கள் ஒருவருக்குத் தான் என்பதை, இந்த நாடே நன்றாகத் தெரிந்திருக்கிறது.

ஆளுநர் அவர்கள் உரையைப் பொறுத்தவரை, அது ஒரு உப்புச் சப்பில்லாத உரை என்று சில மாற்றுக் கட்சிக்காரர்கள் விமர்சித்துப் பேசுகிறார்கள். ஆனால் உண்மையிலேயே ஆளுநர் உரை, மத்திய அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டிய நேரத்தில் பாராட்டி, தன்னைக் கேட்க வேண்டிய நேரத்தில் தட்டிக் கேட்கிற விதத்தில்தான் இருக்கிறதே தவிர, தனிப்பட்ட உரையாக இல்லவே இல்லை என்பதை நான் இந்த மாமன்றத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எட்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலே தமிழகத்திற்கு அதிக நிதி உதவி கிடைக்கப் பெற்று இருக்க வேண்டும். ஆனால் மிகக் குறைந்த அளவே நிதி உதவி நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும்.

பின்தங்கிய மாநிலமான தமிழகத்திற்கு அதிக நிதி வழங்கப்பட வேண்டும் என்று தான் கவர்னர் உரையானது மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய உரையாக அமைந்திருக்கிறது. அது மட்டும் அல்ல. இந்தியாவிலேயே குடும்ப நல திட்டத்தைச் சிறப்பாக நடைமுறைப்படுத்துகின்ற மாநிலங்களில் நம்முடைய தமிழ்நாடும் ஒன்று என்பது அறிந்ததுதான். இதனால் மக்கள் தொகை குறைகிறது. தனி நபர் வருமானம் அதிகரிக்கின்றது. தனி நபர் வருமானம் அதிகரிக்கிறது என்ற காரணத்தால், ஒரு நல்ல திட்டத்தை அமல்படுத்துகின்ற காரணத்தினாலே நம்முடைய தமிழ்நாடு முன்னேறிய மாநிலமாக கருதப்பட்டு விட முடியாது என்பதையும் ஆளுநர் அவர்கள் சுட்டிக்காட்டி நம்முடைய மாநிலத்திற்கு அதிக நிதி தேவை என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

உலகத்தின் எந்த மூலையிலே தமிழன் கண்ணீர் சிந்தினாலும் தன்னுடைய இதயத்திலிருந்து ரத்தம் வடிக்கின்ற இதயத்திற்கு சொந்தக்காரர் தான் தமிழக புரட்சித் தலைவர் என்பது இந்த நாடு அறிந்த ஒன்றாகும். ஈழத் தமிழர்கள் ஆதரவற்றவர்கள், அநாதைகள் அல்ல. அவர்களுக்கு குரல் கொடுக்க, குறையை ஒழிப்பதற்கு மட்டும் அல்ல அவர்களுடைய விழி நீரை துடைப்பதற்கும் இந்த அரசு தயங்காது என்பதையும் ஆளுநர் அவர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

முதியோருக்கு ஓய்வூதியம் அளிக்கும் திட்டத்தை ஒரு மாவட்டத்திற்கு இத்தனை பேர் என்று கணக்கிடாமல், தகுதி வாய்ந்து இருக்கின்ற எல்லோருக்குமே ஓய்வூதியம் வழங்கக் கூடிய திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருப்பதை பாராட்டி ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். வயோதிகர்கள் வயிற்றிலே பால் வார்க்கக்கூடிய அற்புதமான திட்டம் என்று பாராட்டி இருக்கிறார்கள். அதைப்போலவே முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை தகுதி உள்ள மாணவர்களுக்கு இலவச சீருடையும், இலவச பாடப் புத்தகங்களையும் வழங்க முன்வந்திருப்பது மிகச் சிறப்பான திட்டமாகும்.





அரசு ஊழியர்களை பொறுத்தவரை நான்காவது சம்பளக் குழு தங்களுடைய பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கு முன்னால், அரசு தானாகவே முன்வந்து ஏறக்குறைய எட்டு இலட்சம் அரசு பணியாளர்களுக்கு இடைக்கால நிவாரணத் தொகையை வழங்கியிருப்பது, இந்த அரசை, அரசு ஊழியர்கள் பாராட்டக்கூடிய செயல் ஆகும். அதைப்போலவே அரசு பணியாளர்களின் குடும்ப நல நிதி ரூ. 10,000-ஐ ரூ. 20,000 ஆக உயர்த்தி இருப்பதை, நெஞ்சம் உள்ள அரசு ஊழியர்கள் நிச்சயமாக பாராட்டுவார்கள், வரவேற்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் மைலாப்பூர் தொகுதியை பொறுத்தவரை என்னுடைய சில கோரிக்கைகளை நான் இந்த மாமன்றத்திலே வைப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே பிறந்து, உலக பொதுமறையை தந்து இருக்கின்ற திருவள்ளுவர் அவர்களுக்கு, அவர் பிறந்து இருக்கின்ற மயிலாப்பூரில் கோவில் கட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கோவில் சரியான முறையிலே விளம்பரப்படுத்தப்படாமல் இருக்கிறது. உலகமே வியக்கக் கூடிய, பாராட்டக்கூடிய திருக்குறளை தந்திருக்கின்ற திருவள்ளுவருக்கு கட்டப்பட்டு இருக்கின்ற கோவிலுக்கு சரியான விளம்பரம் இல்லை. அந்தக் கோவில் சரியானபடி விளம்பரப் படுத்தப்பட்டு, வெளிநாட்டவர்களும், நம் நாட்டவர்களும் வந்து கண்டு களிக்கக்கூடிய ஒரு சுற்றுலா மையமாக ஆக்குவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் என்பதை இந்த மன்றத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே கூடூர்குப்பத்திலிருந்து அன்னை வேளாங்கன்னி கோவில் வரைக்கும் உள்ள பகுதி எலியட்ஸ் பீச். இந்த எலியட்ஸ் பீச் வெகு நாட்களுக்கு முன்னால் சுற்றுலா மையமாக வெளிநாட்டவர்கள் கண்டு களிக்கக்கூடிய இடமாக அமைந்து இருந்தது. அது இப்போது சரியாக பாமரிக்கப் படாமல் இருக்கிறது. மெரினா கடற்கரையை போன்று அந்த பீச்சை அழகுபடுத்துவதற்கு, பல இலட்சம் செலவானாலும் கூட, அந்த எலியட்ஸ் பீச் இன்னொரு சிறந்த பீச் என்ற

வகையில் உருவாக்குவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் என்பதை இந்த நேரத்தில் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10.40)

மற்றொரு கோரிக்கையையும் இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன். பட்டினப்பாக்கத்திற்கு அருகில் உள்ள சீனிவாசபுரத்தையும், அடையாறையும் இணைப்பதற்காக இதற்கு முன்பு இருந்த இணைப்பு பாலம் தற்போது இடிந்து விழுந்திருக்கிறது. அந்த பாலம் இடிந்து பாழடைந்து காணப்படுவதால் அந்தப் பகுதியில் வசிக்கக்கூடிய மீனவ மக்கள், இணைப்பு பாலம் இல்லாத காரணத்தால் சுமார் 10 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று வந்து தங்களுடைய வியாபாரத்தை பெருக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். அந்த இணைப்புப் பாலத்தை சீர்படுத்த மீனவ மக்கள் மட்டுமின்றி, அடையாறு பெசண்ட் நகர்ப் பகுதியிலே வாழக்கூடிய பொதுமக்கள் தங்களுடைய போக்குவரத்து நெரிசலைக் கருதி, அவர்கள் சுருக்கமான வழியில், தங்களுக்கு ஏற்படக் கூடிய இழப்பை மிச்சப்படுத்தக்கூடிய வகையில், இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் பணிவன்போடு இந்த மாமன்றத்திலே கேட்டு, மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிந்து அமைகிறேன்.

*** திரு. ஆர். எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டப்பிடாரம் தொகுதியில் நான் தேர்தல் வேலையை ஆரம்பிக்கும்போதே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உடல்நலம் பெற இறைவனை வேண்டினேன். மக்களும் வேண்டினார்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடல்நலம் பெற்று, முதல்வராகவே இங்கு வீற்றிருப்பது பற்றி மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். நான் தெய்வ பக்தியும், தெய்வ நம்பிக்கையும் உள்ளவன். அந்த ஆண்டவனை மீண்டும் வணங்குகிறேன்.

பாரத நாட்டின் மாபெரும் தலைவியாக விளங்கிய அன்னை இந்திரா காந்தி அம்மையாரின் கொடுமை மிகுந்த மரணம்





அனைவருக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. அந்த அம்மையாரின் திருஉருவப் படத்தை இந்தச் சட்டமன்றத்தில் வைப்பதற்கு இசைவு தந்த சபையின் முன்னவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மத்திய அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்து வருவதற்கும், 20 அம்சத் திட்டத்திற்கு முழு ஒத்துழைப்பையும் தருவதாக வாக்களித்து இருப்பதற்கும் தமிழக அரசை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

இலங்கையிலிருந்து அகதிகள் வருகை பெருகிக்கொண்டே இருக்கிறது. அது இந்த நாட்டிற்கு ஏற்படக்கூடிய ஆபத்தாகும். இதற்கு முடிவு அரசுதான் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நான் இரண்டு முறை நாடாளுமன்றத்திலும் 1952-லும், 1962-லும் சட்டசபையிலும் உறுப்பினராக இருந்திருக்கிறேன். 1952-ல் என்னோடு இருந்தவர்கள் யாரும் எனக்குத் தென்படவில்லை. 1957-ல் பாராளுமன்றத்திலும், 1962-ல் சட்டசபையிலும் என்னுடன் இருந்த மாண்புமிகு உறுப்பினர்களில் சிலர், இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர்களாக இருப்பதைக் கண்டு நான் பெருமைப்படுகிறேன். மகிழ்ச்சியடைகிறேன்.

"வானம் பொழிகிறது, பூமி விளைகிறது, யாருக்கு நான் தீர்வை கட்ட வேண்டும்" என்று ஆங்கிலேயனை எதிர்த்து முதல் வீர முழக்கம் செய்தானே, வீரபாண்டிய கட்டபொம்மன், அவன் பிறந்த பாஞ்சாலங்குறிச்சியும், வீரபாண்டியனைத் தூக்கிலிட்ட கயத்தாறும், இந்த நாட்டின் விடுதலைக்காக சிறையிலே சித்திரவதைக்குள்ளாகி செக்கிழுத்தானே சிதம்பரனார் பிறந்த ஊரான ஓட்டப்பிடாரமும் சேர்ந்தது தான் என்னுடைய தொகுதி. அந்த ஓட்டப்பிடாரம் தொகுதி மக்கள் எனக்கு வாக்களித்தார்கள், அவர்களுக்கும், எனக்காக பாடுபட்ட நண்பர்களுக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பழம் பெருமை பேசுவதை விட அங்குள்ள மக்களின் நிலைமையையும், அந்தத் தொகுதியின் நிலைமையையும் நான் தெரிவிக்காவிட்டால், என் கடமையிலிருந்து தவறியவனாவேன்.

அந்தத் தொகுதியில் நல்ல சாலைகள் கிடையாது. 75 சதவீதத்திற்கு மேற்பட்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகளே கிடையாது. கட்டபொம்மன் பெயரில் ஓடுகின்ற பஸ்கள் மற்ற எல்லா இடங்களிலுள்ள கிராமங்களுக்குச் செல்கிறது. ஆனால்

[திரு. ஆர். எஸ். ஆறுமுகம்] [1985 மார்ச் 12

அந்தக் கட்டபொம்மன் பிறந்த என்னுடைய தொகுதியில் கட்டபொம்மன் பஸ்கள் தென்படவில்லை. இரயிலைப் பார்க்காதவர்கள் முன்பு இருந்தார்கள். அந்தத் தொகுதியிலே பஸ்களைப் பார்க்காதவர்கள் இருக்கிறார்கள். எனக்குத் தேர்தலில் அனுபவம் உண்டு. தேர்தல் பிரச்சாரத்திற்குக் காலங்கரைப்பட்டி—அரிசன காலனி, வேப்பங்குளம், லக்கமாதேவி, சொக்கநாதபுரம் போன்ற கிராமங்களுக்கு நான் செல்ல முடியவில்லை. நான் செல்லாதது அகம்பாவத்தால் அல்ல; செல்ல முடியவில்லை. அந்தக் கிராமங்களுக்கு 4 அல்லது 5 மைல்கள் நடக்க வேண்டும். அதற்கு அரை நாள் ஆகும். நான் வைத்திருப்பதோ வாடகைக் கார், ரூ. 250 வாடகை கொடுக்க வேண்டும். ஆனால் அந்த மக்கள் அத்தனை பேரும் 5 மைல் நடந்து வந்து வோட்டுப் போட்டிருக்கிறார்கள். அவர்கள் தமிழக முதல்வர் அவர்களை நம்பினார்கள். என்னையும் நம்பினார்கள். எப்படியாவது அவர்களுக்கு நன்மை கிடைக்கும் என்று நானும் நம்புகிறேன். இந்தப் புண்ணிய பூமியில் சாலை இல்லாத, பஸ் செல்லாத கிராமங்கள் இருக்கக் கூடாது. பஸ்களை விடுவதற்கும் யாரும் இப்போது முன்வருவது இல்லை, பாதைகள் மேடு பள்ளமாக இருக்கின்ற காரணத்தால் பஸ் விட்டால் நஷ்டம் ஏற்படும் என்று யாரும் முன் வருவதில்லை. இதற்கு நான் கீழ் இறங்கிப் பேசுவது சட்டசபை உறுப்பினர் என்ற முறையில் அழகல்ல என்பதைத் தலைவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிப்பதற்குத் தண்ணீர் வசதியாவது இருக்கிறதா "தண்ணீர் தண்ணீர்" என்ற சினிமா பார்த்தவர்கள் சொல்வது போல் இருக்கிறது. ஒட்டப்பிடாரத்திற்குப் பக்கத்திலே எங்கு கிணறுகள் தோண்டினாலும் உப்புத் தண்ணீர்தான் கிடைக்கிறது. நான் சங்கம்பட்டி, முரமண் என்ற கிராமங்களுக்குப் போயிருந்த போது ஒரு இளைஞர் என்னைப் பார்த்து, என் கதர் சட்டையைப் பார்த்துவிட்டு நான் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவன் என்று, என்னங்க இதற்காகவா சிதம்பரனார் செக்கு இழுத்தார், சுதந்திரம் வாங்கித் தந்தார், குடிப்பதற்குத் தண்ணீர் எடுக்க ஐந்து மைல் நாங்கள் நடக்க வேண்டியிருக்கிறது என்று சொன்னார். அதைக் கேட்டதும் நான் பெரும் அதிர்ச்சி அடைந்தேன். இப்போது அந்த மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். எத்தனையோ திட்டங்களை வெளியிட்டு இருக்கிறீர்கள்.



1985 மார்ச் 12] [திரு. ஆர். எஸ். ஆறுமுகம்]

அதைக் கேட்டதும் நான் பெரும் அதிர்ச்சி அடைந்தேன். இப்போது அந்த மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். எத்தனையோ திட்டங்களை வெளியிட்டு இருக்கிறீர்கள். ஆளுநர் உரையிலே 149.42 கோடி என்றும் 15.2 கோடி என்றும் நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள். அதில் சில லட்சங்களை மட்டும் ஒதுக்கினால் சிறிது தூரத்தில் அமைந்துள்ள தாமிரபரணி ஆற்றில் குழாய் வைத்து தண்ணீர் கொண்டு வந்துவிட முடியும். அந்தக் காரியத்தை செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். குடிதண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்குத் தனித் திட்டம் தயாரித்து நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கயத்தாறு ஒரு சிறிய நகர பஞ்சாயத்து. அதன் வழியாக தாமிரபரணி ஆற்றிலிருந்து 50 மைல்களுக்கு அப்பால் குடிதண்ணீர் குழாய் மூலம் எடுத்துச் செல்லப்படுகிறது. ஆனால் கயத்தாறு மக்களுக்குக் குடிதண்ணீர் கிடையாது. கயத்தாறு பொதுமக்கள் போராட்டம் நடத்தினார்கள். உண்ணாவிரதம் இருந்தார்கள். அமைச்சர் அவர்களுக்கு மனு கொடுத்து இருக்கிறார்கள். அமைச்சரும் செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். கயத்தாறு வழியாக செல்கின்ற குழாயிலிருந்து நீர் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க வேண்டும் என்றும் கேட்டு இருக்கிறார்கள். இதை முடித்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். தெற்கு கழுகு மலை, சிதம்பரப்பட்டி ஆகிய இடங்களில் நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டியிருக்கிறார்கள். கட்டி 4 ஆண்டுகள் ஆகின்றன. நான் உங்களுடைய தோழமைக் கட்சிக்காரன். அதைத் திறந்து வைப்பதற்கு எந்தக் கஷ்டமும் இருப்பதாகத் தெரியவில்லை. அதை உடனடியாகத் திறந்து வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கனரக தொழில்களைப் பற்றி ஆளுநர் உரையிலே அழகாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆயிரம் அல்ல, கோடிக்கணக்கான ரூபாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் 10 பேருக்கு மேல் வேலை செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலை கிடையாது. தொழிற்சாலையை அங்கே ஏற்படுத்துவதற்கு அதிகப் பணம் தேவையில்லை, 5 ஆயிரம் ரூபாய்க்கு பத்து எக்கர் நிலம் வாங்கலாம். நிலம் இருக்கிறது. ஆட்களுக்கு வேலை இல்லை. நஞ்சை நிலம் கிடையாது. அத்தனையும் புஞ்சை நிலம். அரை வயிறும் குறை

வயிறுமாக சாப்பிடுகிற மக்கள்தான் அந்த மக்கள். அவர்கள் ஸ்டிரைக் செய்ய மாட்டார்கள். வேலை இல்லை, வேலை இல்லை என்று மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். எட்டயபுரத்திலே தேசிய தலைவர் பாரதியாரின் பெயரால் ஒரு கூட்டுறவு நூற்பாலை வைத்திருக்கிறார்கள். அதற்காக நான் பெருமைப்படுகிறேன்.

(முற்பகல் 10.50)

கட்டபொம்மன் பெயரிலே ஒரு பாடி கட்டும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் இருந்ததாம். அதைக் கைவிட்டு விட்டார்களாம். இப்போது என்ன நிலைமை என்று எனக்குத் தெரியவில்லை. ஒட்டப்பிடாரத்தில் எங்காவது கட்டபொம்மன் பெயரிலே ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும். சிதம்பரனார் இந்த நாட்டிலே தனக்கு என்ன இருக்கிறது என்று எண்ணாமல் இந்த நாட்டு சுதந்திரத்திற்காகப் போராடினார். அவர் பெயரிலே ஒரு மாவட்டத்தை உண்டாக்கப் போகிறோம். அதோடு ஆயிரக் கணக்கான மக்கள் பிழைக்கக்கூடிய முறையில் தொழிற்சாலைகளை ஒட்டப்பிடாரத்தில் ஒன்றும், வீரபாண்டிய கட்டபொம்மன் சிறையிலே வைத்து தூக்கில் இடப்படவில்லை பகிரங்கமாக கயத்தாறிலே ஆங்கிலேயனால் அநியாயமாகத் தூக்கிலிடப்பட்டு இறந்தான். அப்படிப்பட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் பெயரால் அந்தக் கயத்தாறிலே ஒரு தொழிற்சாலை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று நான் அவைத் தலைவர் அவர்கள் மூலமாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரம் எல்லா இடங்களிலும் இருக்கிறது. கட்டாலங்குளம் என்ற கிராமத்திற்கு நான் போயிருந்தேன். அங்கே ஒரு கம்பத்திலே மின் மினி பூச்சி இருக்கிறதோ என்று நான் நினைத்தேன். ஆனால் அது எலக்ட்ரிக் லைட்தான். அங்கே ஒரு டிரான்ஸ்பார்மர் வேண்டும் என்று அந்த மக்கள் கேட்டு கேட்டுப் பார்த்தார்கள். கிடைக்கவில்லை. அந்தத் தொகுதி மக்கள் இறவைக் கிணறுகளை நம்பியிருக்கிறார்கள். அவைகளுக்கு எல்லாம் மின்சாரம் வேண்டும் என்று பல நேரங்களில் மனுக்கள் போட்டுக் கிடைக்கவில்லை. இல்லாதவர்க்கு ஈவதே ஈகை என்று வள்ளுவர் சொன்னார். ஆகவே இல்லாதவர்களுக்குக் கஷ்டப்படுகிறவர்





களுக்கு மின்சார வசதியை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஐக்கிய நாட்டு சபைக்குச் சென்று வந்த மின்சார அமைச்சர் அவர்களை திருமதி இந்திரா காந்தி அவர்களே பாராட்டிப் பேசினார்கள். அவர்களிடத்திலே இந்த இலாக்கா இருக்கிறது. நான் அந்த அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அந்த இடங்களுக்கு மின்சாரத்தைக் கொடுத்து அவர்களுடைய குறைகளைத் தீர்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நான் அரிசன ஊழியர் — அரிசன சங்கத்திற்குத் தலைவராக இருந்தவன். மாநில சங்கத்திற்கு 15 ஆண்டுகளாகத் தலைவராக இருந்தவன். என்னுடைய தொகுதி ரிசர்வ் தொகுதி. அங்கே அரிசன மக்கள் அதிகமாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். மற்ற இடங்களில் 20 கிராமங்களுக்கு ஒரு அரிசன காலனி என்று கட்டப்பட்டு இருக்கிறது. ஒட்டப்பிடாரம் ஒதுக்கப்பட்ட தொகுதி மட்டும் அல்ல, புறக்கணிக்கப்பட்ட தொகுதியாகவும் இருக்கிறது. இந்தத் தொகுதியில் 100 கிராமங்களுக்கு ஒரு அரிசன காலனிதான் கட்டப்பட்டு இருக்கிறதாகத் தெரிகிறது. ஏன் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்று தெரியவில்லை. அந்தக் கிராமத்தில் உள்ள அரிசனங்கள் அரிசனங்களாக இல்லையா? அவர்களைப்போல ஏழைகள் யாரும் கிடையாது. நான் கிராமங்களுக்கு நன்றி சொல்லப் போகிறபோது தமிழக முதலமைச்சரை வேண்டி எங்களுக்கு அரிசன காலனி கட்டித் தாருங்கள் என்று கேட்டு இருக்கிறார்கள். 120 கிராமங்களில் என்னிடம் மனு கொடுத்தார்கள். நான் அத்தனையையும் கலெக்டரிடத்திலே கொடுத்துவிட்டு வந்தேன். வீட்டுமனைக் கிரயம் ரூபாய் 50 தான் ஆகிறது. வீட்டுமனைகூட வாங்கிக் கொடுக்கவில்லை. இவை எல்லாம் அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். இடிந்த பள்ளிக்கூட கட்டிடங்களைக் கட்டிக் கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். பல கிராமங்களில் கூரை கட்டிடங்களில் பள்ளிகள் இருக்கின்றன. ஓட்டைக் கட்டிடங்களில் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. மாட்டுத் தொழுவத்தில் பள்ளிகள் இருக்கின்றன. இதற்கெல்லாம் விமோசனமாக ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டு இருக்கிறது. நமது அறிவு சார்ந்த மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம்

[திரு. ஆர். எஸ். ஆறுமுகம்] [1985 மார்ச் 12

எல்லா கிராமங்களிடமிருந்தும் மனுக்கள் கொடுத்து இருக்கிறார்கள். அது பிற்படுத்தப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட தொகுதியாக இருப்பதால் அதற்கு உதவுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சில கிராமங்களில் கழிவு நீர் தேங்கி இருக்கிறது. அதற்கு அரசுமேல் குறை சொல்கிறார்கள். இதற்கு அரசு என்ன செய்ய முடியும். கிராமத்தில் இருக்கும் பஞ்சாயத்துதான் காரணம். மேடு பள்ளமாக இருந்தாலும் அரசு மீதுதான் குறை சொல்கிறார்கள். ஆகவே பஞ்சாயத்து தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தக் குற்றச்சாட்டு அரசு மீது வரத் தேவையில்லை. ஒரு சாக்கடையிருந்தால், ஒரு சாலையிலே மேடு பள்ளம் இருந்தால் அவர்கள் அந்தத் தலைவரைக் கேட்பார்கள், என் ஐயா, உங்களுக்கு ஓட்டுப் போட்டோம், பஞ்சாயத்துத் தலைவராக பஞ்சாயத்து யூனியன் தலைவராக ஆக்கினோம். இப்படியிருக்கிறதே என்று அவர்களைக் கேட்பார்கள். ஆனால் இப்பொழுது அப்படிக் கேட்பதற்கு வழியில்லை. நீங்கள் ஜூன் மாதம் 30-ம் தேதி வரையில் ஒரு நீட்டிப்பு கேட்டிருக்கிறீர்கள். அதற்குள்ளே எந்த முறையிலேயாவது திருத்தப்பட்ட முறையிலேயாவது அல்லது பழைய முறையிலேயாவது தேர்தலை நடத்த வேண்டும். 100 பம்புகள் இருந்தால் 90 பம்புகள் ரிப்பேராக இருக்கின்றன. இவைகளையெல்லாம் யார் திருத்துவது? யார் கவனிப்பார்கள்? ஆகவே, தேர்தலை நடத்துமாறு கேட்டுக்கொண்டு சத்துணவு கொடுத்ததுடன் சீருடையை இலவசமாக வழங்க இருப்பதற்கும், புத்தகமும் இலவசமாக வழங்க இருப்பதற்கும் என்னுடைய அன்பார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

*திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்களால் முன்மொழியப்பட்ட ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துரைப்பதற்கு வாய்ப்பளித்த எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.



1985 மார்ச் 12] [திரு. வே. இரா. ஜெயராமன்]

மூன்றாம் முறையாக இந்த அரசு தமிழகத்தில் ஏற்பட்டிருப்பது புரட்சித் தலைவரவர்களின் உடல் நலக் குறைவாலும், இந்திரா காந்தி அம்மையாருடைய அகால மரணத்தினால் ஏற்படுத்தப்பட்ட அனுதாப அலையாலும் இந்த வாக்குகள் பெறப்பட்டன என்ற எதிர்க்கட்சிக்காரர்களின் வாதத்திற்குப் பதிலாகச் சிலவற்றை நான் கூற விரும்புகின்றேன்.

தமிழ்நாட்டிலே சத்தியம், நேர்மை, உண்மை ஆகியவற்றின் மீது மக்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கை,

"The people have rededicated their faith in our beloved leader M.G.R."

என்கின்ற கருத்துக்கு ஒப்ப, அதன் காரணமாக வாக்குகள் பெறப்பட்டு, இன்றையதினம் மூன்றாம் முறையாக முதலமைச்சராகப் புரட்சித் தலைவரவர்கள் பொறுப்பேற்றிருக்கிறார்கள். ஜனநாயகத்தின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைக் காட்டும் வகையில் அவர்கள் இந்த ஆணையைக் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு கட்சி ஜனநாயகம் என்று கூறப்படுகின்ற அந்த வாதத்திற்கு எதிராக, மத்தியில் ஒரு கட்சியின் ஆட்சி, மாநிலத்திலும் அதே கட்சியின் ஆட்சி என்ற வாதத்திற்கு எதிராக அரசியலமைப்புச் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள வாக்குரிமையைப் பயன்படுத்தி மக்கள் தங்கள் தீர்ப்பை அளித்திருக்கிறார்கள். கடந்த 1980-ம் ஆண்டு முதல் இதுவரையில் மக்கள் தங்களுடைய வாக்குரிமையைச் சரியாகத்தான் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். வாக்காளர்கள் புத்திசாலிகள். "இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்பதற்கேற்ப, மத்தியில் இராஜீவ் காந்திக்கும், தமிழகத்திலே முதல்வர் புரட்சித் தலைவரவர்களுக்கும் மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். ஆகவே, ஒரு கட்சி ஜனநாயகத்தைத் திணிப்பது என்பது நடைமுறை ஜனநாயகத்திற்கு ஒத்து வரக்கூடிய ஒன்றல்ல என்பதை மக்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, தமிழ் நாட்டு மக்களால் நிராகரிக்கப்பட்ட தலைவர்களின் காலாவதியான அரசியல் கோஷங்கள், செல்லாத கொள்கைகள், உண்மைக்குப் புறம்பான தேர்தல் அறிக்கைகள்

[திரு. வே. இரா. ஜெயராமன்] [1985 மார்ச் 12

ஆகிய இவைகள்தான் எதிர்க்கட்சிகளின் தோல்விக்குக் காரணமாக அமைந்திருந்தன. இதுதான் தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலையாக இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

திரு. ரகுமான்கான் அவர்கள் கேட்டார்கள், சாராயக் கடையை மூடினீர்களா, அதற்காக உங்களுக்கு வாக்கா என்று கேட்டார்கள். அதற்காக வாக்குகள் போடப்படவில்லை. வாக்குகள் எதற்காகக் கிடைத்தன என்பதைச் சொல்கிறேன். சத்துணவுத் திட்டத்திற்காக, தன்னிறைவுத் திட்டத்திற்காக, இலவச மின் திட்டத்திற்காக, வளம் பெறும் திட்டங்களுக்காக, வளர்ச்சிப் பணிகளுக்காக மக்களின் அந்தச் செய்நன்றி அறிதல் என்ற தமிழ் உணர்வின் காரணமாகத்தான் புரட்சித் தலைவரவர்களின் அரசுக்கு வாக்களித்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அங்கே இராணுவத்தை அனுப்ப வேண்டுமென்று ஆணித்தரமாக திரு. ரகுமான் கான் அவர்கள் கூறினார்கள். அவர்களை நான் கேட்கிறேன், அவர்களுடைய தோழமைக் கட்சிகளுக்கு இலங்கைக்கு இராணுவத்தை அனுப்புவதில் உடன்பாடு இருக்கிறதா? மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைக் கேட்கிறேன், இலங்கைப் பிரச்னையில் உங்கள் நிலை என்ன? பொதுவுடைமைக் கட்சித் தோழர்களைக் கேட்கிறேன், இந்தப் பிரச்னையில் உங்கள் நிலை என்ன? இராணுவத்தை அனுப்புவதுதான் ஒரே தீர்வா என்று அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

இலங்கைப் பிரச்சினையில் அங்கே இராணுவத்தை அனுப்புவதற்குப் பதிலாக, இராஜீவ் காந்தி அவர்களின் இராஜ தந்திரத்தையும், புரட்சித் தலைவரவர்களின் அணுகுமுறையையும் பின்பற்றிச் சென்றால் இந்தப் பிரச்சினையில் அமைதியாகவும், சுமுகமாகவும் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை ஒளி பிறந்திருக்கிறது.

ஒரு விஷயத்தை அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

"Joint patrolling in the Palk Strait".



1985 மார்ச் 12] [திரு. வே. இரா. ஜெயராமன்]

இந்த விஷயத்தில் முதல் எதிர்ப்புக் குரல் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள்தான். அதற்குப் பிறகு இராஜீவ் காந்தி அவர்களும்—இந்தியப் பேரரசும் கூட்டுக் கண்ட்ரோல் பாதுகாப்பு என்ற அந்த முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, இலங்கைப் பிரச்சினை என்பது இன்றைக்குப் பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினையாகும். இதனை விட்டுவிட்டு, இலங்கைக்கு இராணுவத்தை அனுப்புவதால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று சொன்னால், உலக ஒற்றுமைக்கு, உலக அமைதிச் சித்தாந்தத்திற்கு அது ஒத்து வராத கொள்கை. ஆகவே, உலக அமைதி வேண்டும் என்று குறிப்பிடுகின்றபொழுது, புரட்சித் தலைவரவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு அனைத்துக் கட்சிகளும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

அதைப்போல தமிழர்கள் அகதிகளாக வருகின்ற பிரச்சினையை இன்றையதினம் அகில உலகப் பிரச்சினையாக மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது. எனவே உலக மக்களினுடைய கருத்துக்கள் இன்றையதினம் இலங்கைப் பிரச்சினையில் ஏற்படுத்தப்பட வேண்டும். திருமதி இந்திரா காந்தி அவர்கள் பங்களாதேஷ் உள்ளே நுழைவதற்கு முன்பு பங்களாதேஷ் என்ற ஒரு பூகோள அமைப்பை இந்திய வரைபடத்தில் உருவாக்க அவர்கள் முதலிலே பல வெளிநாடுகளுக்குச் சென்று உலகக் கருத்துக்களை எல்லாம் திரட்டி வந்தார்கள். அதற்குப் பின்னால்தான் பங்களாதேஷிலிருந்து வருகின்ற அகதிகள் பிரச்சினையை முன்வைத்து அதில் தலையிடுவது என்ற நோக்கத்தோடு குறுக்கிட முடிந்தது. அந்த வகையில் இன்றையதினம் இந்தியப் பேரரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு தமிழக அரசு உறுதுணையாக இருக்கும். தமிழக அரசின் கொள்கைகளை இந்தியப் பேரரசு நடைமுறைக்குக் கொண்டுவரும் என்று நம்புகிறோம்.

[திரு. வே. இரா. ஜெயராமன்] [1985 மார்ச் 12

அடுத்தபடியாக தமிழக அரசு பல நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாக குறிப்பாக ஆர்.எல்.இ.ஜி.பி. என்று கூறுகின்ற திட்டத்திற்காக மத்திய சர்க்கார் ஒதுக்கிய 44½ கோடி ரூபாய் அனைத்தையும் செலவழித்துவிட்டு மீண்டும் அதிக நிதியினைப் பெறுவதற்காகத் தன்னைத் தயார் நிலையில் வைத்திருக்கின்றது இந்தத் தமிழக அரசின் நிர்வாக இயந்திரம். அந்த அளவுக்குக் கூடுதல் நிதியினை எதிர்பார்த்துக்கொண்டு நிற்கின்றது. அப்படிப்பட்ட நிலையில் இருக்கின்ற நேரத்தில் என்னுடைய தொகுதியில் இருக்கின்ற சில முக்கியமான நீர்ப்பாசனத் திட்டங்களை, கிராமப்புற விவசாயிகளுக்கும், கிராமப்புற தொழிலாளர்களுக்கும் வேலை கொடுக்க எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அல்லிநகரம் வீரப்பநயினார்கோயில் அணைத் திட்டத்தையும் சின்ன ஓவுலபுறம் கிராமத்தில் பெருமாள்கோயில் ஊத்துக்கண்மாய் திட்டத்தையும் ஆர்.எல். ஈ.ஜி.பி. திட்டத்திலே கொண்டு வரவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிரந்தரமான நிலையான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதிலே இன்றையதினம் தமிழக அரசு திட்டங்களைத் தீட்டி அதற்கு அதிகமான ஆக்கம் செலுத்தி அவற்றை முடித்துக்கொண்டிருக்கின்றது. அதுபோன்று தகுதி வாய்ந்த முதியோர் அனைவருக்கும் முதியோர் ஓய்வூதியம் அளிக்கும் திட்டத்தைத் தமிழக அரசு கொண்டு வந்திருக்கின்றது. அதுபோல் திறமையான பொது விநியோக முறையின் மூலம் குடிமைப் பொருட்களை விநியோகம் செய்திருக்கின்றது. 20 ஆயிரம் நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. 80 ஆயிரம் டன் மாதம் ஒன்றுக்கு வினியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. எனவே பப்ளிக் டிஸ்ட்ரிபூஷன் என்ற சிஸ்டம் சீராகவும், சிறப்பாகவும் செய்யப்பட்டு வருகின்றது. இத்தகைய பொது வினியோக முறை எல்லாம் சீராகவும் சிறப்பாகவும் இயங்கினால் தான் அரசு மக்கள் நல அரசாக இருக்கும். அந்த வகையில் இன்றையதினம் இந்த அரசு கவனம் செலுத்திச் சீராகவும், சிறப்பாகவும் செயல்பட்டு வருகின்றது.



985 மார்ச் 12] [திரு. வே. இரா. ஜெயராமன்]

அடுத்து நிர்வாகத் திறனை உயர்த்துகின்ற நோக்கத்தோடு முதற்கட்டமாக முகவை மாவட்டம் மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மதுரை மாவட்டத்தில் அண்ணா மாவட்டம் ஏற்பட இருக்கின்ற இந்த நேரத்தில் ஒரு கருத்தினை நான் கூற விரும்புகிறேன். மதுரை மாவட்டத்தை மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கின்ற சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதுரை, மேலூர், திருமங்கலம், உசிலம்பட்டி, நத்தம், நிலக்கோட்டை தாலுக்காவில் ஒரு பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு மாவட்ட அமைப்பும், கொடைக்கானல், பெரியகுளம், முத்தாம்பாளையம் ஆகிய தாலுக்காக்களைக் கொண்ட ஒரு மாவட்ட அமைப்பும், நிலக்கோட்டைத் தாலுக்காவில் ஒரு பகுதி, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், பழனி ஆகிய தாலுக்காக்கள் உள்ளடங்கிய ஒரு மாவட்ட அமைப்பும் அமைக்கின்ற விதத்தில் உள்ள சாத்தியக் கூறுகள் பற்றி பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நிர்வாகச் சீரமைப்புக்காக இப்படி பல மாவட்டங்களை ஏற்படுத்துகின்ற பணி மற்ற மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுக் கடன்களுக்கான அபராதத் தொகையையும், வட்டியையும் கட்டுவதற்கான காலக்கெடு இந்த மாதம் 15 ஆம் தேதி என்ற அளவில் இருக்கின்றது. ஆனால் இன்னும் 6 மாத காலத்திற்கு அதனை நீட்டித்துத் தர வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மின்சாரப் பற்றாக்குறை என்பது ஏதோ அணைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே மட்டும் ஏற்பட்டதல்ல. மின்சாரப் பற்றாக்குறை என்பது தொடர்ந்து வரக்கூடிய ஒரு சுமை. எனவே புதிதாக மின்சார உற்பத்தியைப் பெருக்க வேண்டுமேயல்லாது இங்கே இருக்கக்கூடிய அரசுகளையோ அல்லது நிர்வாகத்தினையோ குறை கூறிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை என்று கூறிக் கொள்கிறேன். தாராளமான மின் இணைப்பு கொடுப்பதும் அதிகப் படியான மின்சாரத் தேவையும்தான் இந்த மின்சாரப் பற்றாக் குறைக்குக் காரணமாகும். எனவே அடுத்து ஏற்பட இருக்கின்ற

நெய்வேலி தெர்மல் மின்சாரத் திட்டத்திற்கும், தூத்துக்குடியில் ஏற்பட இருக்கின்ற அனல் மின்சாரத் திட்டத்திற்கும் மத்திய அரசு மனம் உவந்து உதவ முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் தொழிற் சாலை இல்லாத மாவட்டம் என்று இருக்கின்றது. ஆனால் எஜுகேஷனல் டிஸ்ட்ரிக் என்று வைத்திருக்கிறோம்; ரெஜிஸ்ட்ரேஷன் டிஸ்ட்ரிக்ட் என்று வைத்திருக்கிறோம். அதுபோல நோ இண்டஸ்ட்ரீஸ் டிஸ்ட்ரிக்ட் என்ற வகையில் புதிய தொழில் இல்லாத பகுதிகளைத் தொழில் இல்லாத மாவட்டங்களை நாம் புதிய மாவட்டங்களாகப் பிரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தேனி தொகுதியிலே இன்றையதினம் தொழில் வளம் பெருக வேண்டுமென்ற காரணத்தாலும் தொழில் வளம் பெருகுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக இருக்கிற காரணத்தாலும் கரும்பு உற்பத்தியாளர்களுடைய குறையைப் போக்குகின்ற வகையில் சின்னமனூர் பகுதியிலே கூட்டுறவு கரும்பாலை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசின் ஆய்விலுள்ள தேனி நகருக்கு 230 கே.வி.ஏ. துணை மின் நிலையத்தை அவசியம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல், பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்திற்காக இன்றையதினம் உலக வங்கியிலேயிருந்து நிதி உதவி பெற்றிருக்கிறோம். எனது தொகுதியிலே சின்ன ஓவுலாபுரம், கோவிந்த நகரம் கூட்டு குடிநீர்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த இரண்டு திட்டங்களையும் நிறைவேற்றுவதன் மூலம் தேனி தொகுதியிலே குடிநீர் பஞ்சம் இனிமேல் ஏற்படாத அளவுக்கு அந்தக் கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் என்ற காரணத்தால் அந்த இரண்டு திட்டங்களைப் போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.





வேளாண்மைத் துறையைப் பொறுத்த அளவிலே 60 மெட்ரிக் டன் உற்பத்தியை எய்தியிருப்பது பாராட்டுக்குரியதாகும். வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் நாம் நிர்ணயிக்கிற இலக்கினை அடையக்கூடிய அளவு, முனைப்பாக விவசாயம் செய்யக்கூடிய எழுச்சிமிக்க விவசாயப் பெருங்குடிமக்கள் தமிழகத்திலே இருக்கிற காரணத்தால் அந்த இலக்கினை நாம் அடைய முடிகிறது.

அதே நேரத்திலே, அதிகமான உற்பத்தியின் காரணமாக விவசாயிகள் மத்தியிலே ஏற்படுகின்ற ஒரு நிலையைக் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக, போடி, கம்பம், உசிலம்பட்டி, தேனி, ஆகிய பகுதிகளிலே பருத்தி உற்பத்தியாளர்களிடம் கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள பருத்தி விளைந்து இன்று அதை வாங்குவதற்கு ஆளே இல்லாத நிலைமை இருக்கிறது. அதனால் குறைந்த விலைக்கு உற்பத்தியாளர்களிடமிருந்து எடுக்கின்ற சூழ்நிலை உருவாகி இருக்கிறது. ஆகவே, தமிழக அரசு உடனே முன்வந்து அந்த மிகுதியாக தேங்கிக் கிடக்கின்ற பருத்தியினைக் கொள்முதல் செய்ய வேண்டும். மத்திய அரசு அறிவித்திருக்கிற சப்போர்ட் பிரைசுக்கு மேலே வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

போதிய குடிநீர்த் திட்டங்கள், ஆதி திராவிடர் நல மேம்பாட்டு திட்டங்கள், நகராட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள், கைத்தறிக்குத் தனித் துறை அமைப்பு, கைத்தறி நெசவாளர்களுக்கு வீட்டு வசதி திட்டங்கள், அரசுப் பணியாளர்கள் இறந்தால் அவர்கள் குடும்பத்தினருக்கு ரூ. 10,000-லிருந்து ரூ. 20,000 வரை உயர்வு, தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும் போது இறக்க நேரிட்டால் அளிக்கப்படும் இழப்பீட்டுத் தொகை ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000 ஆக உயர்வு, வேளாண்மைத் தொழிலாளர்களுக்குக் காப்புறுதி ஓய்வுகால நலத் திட்டம், முதலமைச்சருடைய வாழ்க்கைத் தொழில் அடிப்படையிலான கல்வித் திட்டம், பழுதுபட்ட நிலையிலுள்ள பள்ளிக் கட்டிடங்களைச் செப்பனிட காலவரையோடு கூடிய திட்டம், சென்னையிலே மருத்துவப் பல்கலைக் கழகம், எல்லாவற்றுக்கும் மேலாக, பதுக்கல், கள்ளச்சந்தை போன்றவற்றைப் போர்க்கால அடிப்படையிலே ஒழிப்பதற்கான திட்டங்கள், மற்றும் சட்டம், ஒழுங்கு, காப்பாற்றப்பட்டு அமைதியான சூழ்நிலையிலே, புரட்சித்

[திரு. வே. இரா. ஜெயராமன்] [1985 மார்ச் 12

தலைவர் இங்கே ஆட்சி செய்கின்ற காரணத்தாலே, இந்த அரசு ஒரு 'ஐடியல் வெல்பேர் ஸ்டேட்' என்று கூறி, கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் திரு. வி. பி. சிந்தன் சொன்னது போல் இது 'போலீஸ் ஸ்டேட்' அல்ல என்று கூறி, திரு. செம்மலை முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்து அமர்கின்றேன், நன்றி, வணக்கம்.

*திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தில் நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கருத்துக்களைச் சொல்லுகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்காக, என்னுடைய கட்சிக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த ஆளுநர் உரையில் நல்ல அம்சங்கள் இருப்பதாகப் பாராட்டினார்கள். முதலிலே, ஒன்றை நான் குறிப்பிட்டுக் காட்டி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடல் நலிவு பெற்று, அப்பொல்லோ மருத்துவ மனை சென்று. அமெரிக்கா சென்று, சிகிச்சை பெற்று, உடல் நலத்தோடு திரும்பி வந்திருக்கிறார்கள். அப்படி அவர்களது உடல் நலக்குறைவு நீங்கி, அவரது உடலை ஆரோக்கியமாக ஆக்கித் தந்த, அங்கங்கே பணியாற்றிய சிறப்பான மருத்துவர்களுக்கு கவர்னர் நன்றி தெரிவித்திருக்கலாம், பாராட்டுத் தெரிவித்திருக்கலாம். ஆனால், பாராட்டாமல் விட்டதற்குக் கூட காரணம் இருக்கலாம். காரணம் நீங்கள் மொட்டை அடித்து மொட்டை போட்டுக் கொள்கிற காரணத்தாலேயும், மன்றத்திலே அண்ட சராசரம் கண்டு, ஆர்ப்பரித்த முன்னவர்கள் எல்லாம், இன்றைக்குப் பிரார்த்தனையிலே ஈடுபடவேண்டுமென்று சொல்கின்ற காரணத்தினால், அறிவியலில் நம்பிக்கை இல்லாமல் இருந்திருக்கலாம். என்றாலும் முதல்வருடைய உடல் வலிவு பெறுவதற்காகப் பணியினை மேற்கொண்ட அனைத்து மருத்துவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

இந்த உரையிலே பார்க்கின்ற நோக்கில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் சிறப்புறச் செய்திருப்பதாகப் பட்டியல் போட்டு காட்டி இருக்கிறார்கள். ஆனால், ஒன்றைத் தொடர்ந்து காட்டியிருக்கிறார்கள், 1982, 1983, 1984-ல் எல்லாம் தொடர்ந்து,



1985 மார்ச் 12] [திரு. மா. மணிமாறன்]

வெள்ளம், புயலால், பாதிக்கப்பட்ட நிகழ்ச்சிகளைத் தொடர்பு படுத்தித் தந்திருக்கிறார்கள். அந்த நிகழ்ச்சிகளைத் தொடர்பு படுத்துகிற நேரத்தில், அவர்கள் ஆற்றியிருக்கிற சிறப்பான பணிகளை வேண்டுமென்று சொன்னால் வெள்ளம் வருகிற நேரத்திலே அரிசியை அள்ளிக் கொடுத்திருக்கலாம். அளக்காமல் கூட யார் யாருக்கோ; அல்லது சேலைகளை எண்ணிப் பார்க்காமல் எடுத்துக் கொடுத்திருக்கலாம். தேவையற்றவர்களுக்கெல்லாம். ஆனால் இப்படிப்பட்ட நிலை வெள்ளம் புயலால் இருந்திருக்கிறதே தவிர தேவையானவர்களுக்கு தெரிந்து உதவி செய்த வரலாறு வெள்ளக்காலங்களில் கிடையாது. தொடர்ந்து தஞ்சை மாவட்ட விவசாயிகள் வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்டுக் கொண்டு வருகிறார்கள். விவசாயிகளுக்கு பரிகாரம் காண்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அரிசி, ஆடையாக இருக்கிறதே தவிர ஆறுகள் அகலப்படுத்தப் படவில்லை. ஆறுகளில் மண்டியிருக்கிற செடிகளை அகற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆட்டை இழந்தவர்கள், மாட்டை இழந்தவர்கள் இன்னும் சொல்லப் போனால் மக்களை பலி கொடுத்தவர்கள், மழை, வெள்ளம் என்று அடித்து வருகிற காலங்களில் ஆறாத் துயரில் அவதிப்பட்டவர் களுக்கு அவையெல்லாம் ஆறுதலாக அமையுமா என்பதை இந்த அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததிலிருந்து இன்றைக்கு வரையில் வெள்ளம், புயல் என்று கோடிட்டு காட்டிக்கொண்டு வந்திருக்கிறீர்கள். இவற்றை நிரந்தரமாகப் போக்குவதற்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கை முயற்சிகள் என்ன என்பதை இந்த உரையில் கோடிட்டு காட்டவில்லை. அதற்குரிய திட்டங்கள் எதுவும் ஆளுநர் உரையில் அறிவித்துவிடவில்லை. வெள்ளம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வெள்ளம் வடிவதற்கு வழி ஏற்படுத்தி இருக்கிறீர்களா? வறட்சி ஏற்பட்டிருக்கிறது. வறட்சியைப் போக்குவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன? தஞ்சை மாவட்டத்தில் 5000 பம்ப் செட்டுகளை அமைக்க விரைவுகாலத் திட்டம் அறிவித்தீர்கள். அமைத்திருப்பது 3000 பம்ப் செட்டுகள்தான். எஞ்சியிருக்கிற 2000 பம்ப் செட்டுகளை அமைக்க ஏன் முயற்சிகளை எடுக்க

வில்லை. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மந்திரிக்கு பஞ்சம் இல்லையென்ற அளவில் மூன்று அமைச்சர்கள் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நான் நான்கு அமைச்சர்கள் என்று கருதுகிறேன். நாவலர் அவர்களை சேர்த்துக் கொண்டால் தஞ்சை மாவட்டத்திற்கு நான்கு அமைச்சர்கள் ஆகிறார்கள். நான்கு அமைச்சர்களைக் கொண்ட தஞ்சை மாவட்டத்தில் சொன்னதை காப்பாற்றுவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கவில்லை. அங்கே இருக்கிற விவசாயிகள்மீது அக்கறை காட்டியிருக்கிறீர்களா? எண்ணிப் பாருங்கள். விவசாயிகள் 1977-லிருந்து பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இன்றைக்கு அவர்களுக்கு வாய்தா வந்திருக்கிற நேரத்தில் அவர்கள் படுகிற துயரங்கள் சொல்லமுடியாத துயரங்களாக இருக்கின்றன. வீடுகள் ஜப்தி செய்யப்படுகின்றன. மாடுகளை ஜப்தி செய்கிறார்கள். வண்டிகளை ஜப்தி செய்கிறார்கள். இப்படி அவர்கள் அவமானப்படுகிறார்கள்.

ஏதாவது காரணத்தைச் சொல்லி அறிவிப்பு இல்லாமலே வாய்தா கேட்கிறார்கள். அப்படி வாய்தா கேட்பதில், நீங்கள் அறிவிப்பு இல்லாமல் செய்கிறீர்கள் என்று சொன்னால், காவல் துறைக்குச் சென்று கடுமையாக பேசிவிட்டார்கள் என்று சொல்லி குற்றம் சுமத்தி காவல் துறையினால் அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால் நன்னிலம் பகுதியில் முடிகொண்டான் என்ற பகுதியை நாவலர் அவர்கள் நன்றாக அறிந்திருப்பார்கள். அந்த முடிகொண்டான் பகுதியில் பிராமண சமுதாயத்தினர் அதிகமாக வாழ்கிறார்கள். அந்தப் பகுதியிலே சென்றால் பிராமணர்கள் சண்டைக்குச் செல்வார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். அப்படி பிராமணர்களை வரிகேட்கிற நேரத்தில், அறிவிப்பில்லை என்று அவர்கள் சொல்லிவிட்ட காரணத்தினாலே அவர்கள் அதிகமாக பேசி விட்டார்கள் என்று சொல்லி மூன்று பிராமணர்கள் அங்கே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படி வருமானம் இல்லாது விவசாயிகள் வாடியிருக்கிற நேரத்தில் அவர்களை கசக்கி பிழிவது நியாயமா? எட்டு ஆண்டுகள் வரி வசூலிக்க வேண்டாமென்று யார் சொன்னது? விவசாயிகள் கொடுக்க மாட்டோம் என்று சொன்னார்களா? எட்டு ஆண்டுகளாக வருவாய்த்துறை இல்லாமல் இருந்ததா? எட்டு ஆண்டுகளாக





வருவாய்த்துறை அமைச்சர்கள் இல்லாமல் இருந்திருக்கிறீர்களா? எட்டு ஆண்டுகளாக அதற்குரிய அதிகாரிகள் சம்பளம் வாங்காமல் இருந்திருக்கிறார்களா? துறை இருந்திருக்கிறது, அமைச்சர்கள் இருந்திருக்கிறார்கள். அரசு இருந்திருக்கிறது. அத்தனை பேர்களும் இருந்ததற்குப் பின்னாலே எட்டு ஆண்டுகளுக்கு உரிய வாய்தாவைச் சேர்த்து வசூலிப்பது நியாயமா? நீங்கள் என்ன காரணத்திற்காக எட்டு ஆண்டு காலமாக ஒத்தி வைத்திருக்கிறீர்கள். அப்படி ஒத்தி வைக்கப்பட்ட வாய்தாவை இன்றைக்கு ஒரே ஆண்டிலே கொடுக்க முடியுமா? என்பதை நீங்கள் எண்ணிப் பாருங்கள். அரசாங்கத்தின் புள்ளிவிவரத்தை நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள். இன்றைக்கு நெல்லுக்கு கொடுக்கப்படுகிற விலை நியாயமான விலை இல்லை என்பதையும், அதிகப்படுத்தப்பட வேண்டுமென்று மத்திய அரசினிடத்தில் வற்புறுத்தி வருகிறீர்கள். வாதாடி வருகிறீர்கள், போராட விட்டாலும்; எனவே நெல்லுக்கு அதிக விலை கொடுக்க ஏற்பாட்டைச் செய்து வருகிறோம் என்று சொல்லி வருகிறீர்கள். அந்த விலைக்கு இன்றைக்கு வரையில் தஞ்சை மாவட்டத்தில் விற்க முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது.

எட்டு ஆண்டு காலமாக வறட்சியாலே, வெள்ளத்தாலே, புயலாலே பாதிக்கப்பட்ட அந்த விவசாயிகள் இந்த ஆண்டு மட்டும் குறுவையிலேதான் மகசூலை பார்க்க முடிந்திருக்கிறது. எட்டு ஆண்டுகளாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்த ஒரே ஒரு குறுவை பட்டத்திலே கிடைத்த நெல்லை வைத்துக்கொண்டு எட்டு ஆண்டு பாக்கியை அவர்களாலே தீர்க்க முடியுமா என்பதை எண்ணிப் பாருங்கள். அப்படி முடியாது என்று தெரிந்தும் ஏன் அவர்கள் மீது சுமத்துகிறீர்கள்? எட்டு ஆண்டு காலமாக நீங்கள் ஒத்தி வைத்திருக்கிறீர்கள். எட்டு ஆண்டு காலமாக இன்றைக்கு கடை பிடிக்கிற வழியை ஏன் கடைபிடிக்க வில்லை. அன்றைக்கு முடியவில்லை என்றால் அவர்களுக்கு விளையவில்லை என்று சொல்கிறீர்கள். இன்றைக்கு எட்டு ஆண்டுகால பாக்கியை தீர்க்கிற அளவிற்கு தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் முன்னேறி இருக்கிறதா? சம்பா பட்டத்தை சிறப்பாகச் சொல்லி இருக்கிறீர்கள். சம்பாவை தஞ்சை மாவட்டத்திலே போய் பார்த்தால் தெரியும், அது படுதோல்வி அடைந்திருக்கிறது.

இன்றையதினம் விவசாயிகள் 2, 3 மனுக்கள் கொடுத்தும் அதன்மீது சரியான நடவடிக்கை இல்லாமல், மனம் சங்கடப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் என்ன சொல்கிறது? நிலைமை நன்றாக இருக்கிறது என்று அரசாங்கம் புள்ளிவிவரம் கொடுக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படுவது அரசுக்கு நியாயமாகத் தெரிகிறதா? சிரமப்பட்டுக் கொண்டிருக்கிற விவசாயிகளுடைய நிலைமைகளை ஒத்துக் கொள்ளாமல், இதிலே ஓரவஞ்சனையாக நடக்கிறது. இப்படி ஓரவஞ்சனை செய்வது நியாயம்தானா என்பதை இந்த அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். தொடர்ந்து கடன் தொல்லை களால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிற தஞ்சை மாவட்ட விவசாயிகள் மீது அக்கறை காட்டாமல் இருப்பது அந்த விவசாயப் பெருங்குடி மக்களின் நலனைப் பாழாக்குவதாகும்.

தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கே தொழில் வளம் இல்லை. அந்த மக்கள் விவசாயத்தையே நம்பிக்கொண் டிருக்கிறார்கள். விவசாயத்தையே நம்பிக்கொண்டிருக்கிற அந்த மக்கள் இன்றைக்கு வாழ வழியின்றி பிற மாவட்டங்களுக்குச் செல்லக்கூடிய நிலைமை உருவாகிக்கொண்டிருக்கிறது. ஏதாவது துணைத் தொழில் அல்லது தங்கள் வசதிக்கேற்ற வேறு தொழில்களைச் செய்யக்கூடிய விவசாயிகள்தான் இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் இருக்க முடியும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மற்றவர்கள் பிழைப்புக்காக வேறு மாவட்டங்களை நாடிச் செல்ல நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நிலையில் கெடுபிடி வசூல் நடைபெறுகிறது. வாய்தா பாக்கி, கூட்டுறவுச் சங்கப் பணம் பாக்கி என்று சொல்லி கட்டாய வசூல் நடக்கிறது. பணம் கட்ட முடியாதவர்களுக்கு அரசு உதவியைப் பெறுவதிலே பல்வேறு தொல்லைகள் ஏற்படுகின்றன.

குறிப்பாக விவசாயத் துறையில் இருக்கிற பொறியியல் பிரிவில் வாடகைக்கு டிரில் தருகிறார்கள்; கை "செட்" வாடகைக்குத் தருகிறார்கள். கை செட்டுக்கு முன்னால் 5 ரூபாய் வாடகை ஒரு நாளைக்கு. இப்போது 25 ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். பவர் டிரில்லுக்கு முன்னால்





25 ரூபாய் வாடகை என்றால் இப்போது 250 ரூபாய் வாடகை. அதுமட்டுமல்ல. ஏறத்தாழ 4,000 ரூபாய் கட்டினால்தான் டிரில் நகரும் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். ஏற்கனவே பெரும் கஷ்டத்தில் இருக்கிற விவசாயிகளிடத்தில் இப்படி அதிகமான வாடகை வசூல் செய்வது நியாயம்தானா? இப்படிப் பட்ட நிலைமைகள் தொடர்ந்தால் தஞ்சை மாவட்ட விவசாயிகள் வேறு மாவட்டங்களில் அடைக்கலம் தேடும் நிலைமைதான் உருவாகும்.

அரசாங்கம் நெல் விலையில் ஒரு பகுதி உரமாக கொடுக்கிற உத்தினால் இப்போது உரம் பெற்றால், உரத்தை வாங்கிக்கொள் என்கிறார்கள். யார் உரம் வேண்டுமென்று கேட்கிறார்கள்? பணம்தானே கேட்டார்கள். கூட்டுறவுச் சங்கத்தில் பயிர் கடன் தரும்போது, உரம் வாங்க முடியாத நிலை ஏற்படுமே. இப்படிப் பட்ட முரண்பாடு இருக்கிறது. தொடர்ந்து முரண்பாடு என் றாலும் இதிலாவது அந்த முரண்பாட்டை நீக்கக்கூடாதா. மத்திய அரசிடம் வாதாடி உரத்தின் விலையை ஏன் குறைக்க நடவடிக்கை எடுக்கக்கூடாது? நியாயமான விலையில் உரம் கிடைக்காமல் கஷ்டப்படும் விவசாயிகளுக்கு தொல்லை கொடுப்பது இந்த அரசாங்கத்தின் வாடிக்கையாகி விட்டது, வழக்கமாகி விட்டது.

தஞ்சை மாவட்டத்தில் வடிகால்களை சீர்படுத்த வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை வைத்திருக்கிறோம். அப்படி கோரிக்கை வைக்கப்பட்டபோது வடிகால்களை அகலப்படுத்த "மேன் பவ்வரை" (Man power) பயன்படுத்தக் கூடாது. மெஷின் (போகசர்) பவ்வரைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கி றோம். மெஷின் பவ்வரைப் பயன்படுத்தினால்தான் ஒழுங்காக, நல்ல முறையில் இந்தப் பணிகளைச் செய்ய முடியும். அகலப் படுத்த புல்டோசர் பயன்படுத்த வேண்டும் என்கிறோம். சென்ற ஆண்டு புல்டோசர் பயன்படுத்தப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு தயக்கம் காட்டுகிறார்கள். தயக்கம் கூடாது. இந்த ஆண்டும், எந்த ஆண்டும் புல்டோசர்களைத்தான் பயன்படுத்த வேண்டும்.

விவசாயப் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பது பற்றிச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் இலவசமாக 278 பம்பு செட்டுகள் இலவச மின்திட்டத்தில் சேர்க்கப்பட்டது.

[திரு. மா. மணிமாறன்] [1985 மார்ச் 12

அதுவும் தேர்தல் நேரத்தில் ரெவின்யூ அதிகாரிகளைப் பிடித்து, அவர்களை தாஜா செய்து, 278 பம்புசெட்டுகள் கணக்கு கொடுத்தார்கள். தஞ்சை மாவட்டத்தில் சென்ற ஆண்டு ஏறத்தாழ 5,000 பம்புசெட்டுகள் அமைக்க திட்டம் வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் நடந்தது என்ன? 3000 தான் அமைத்தார்கள். ஏராளமான பம்பு செட்டுகள் உள்ள தஞ்சை மாவட்டத்தில் 278-க்குத்தான் இனாமாக மின்சாரம் கொடுத்திருக்கிறார்கள். எஞ்சியிருக்கிறவர்கள் நிலைமை என்ன?

பம்புசெட்டுகளுக்கு இலவச மின் கனெக்ஷன் கொடுக்கும்போது, சிறு விவசாயிகள் பெரிய விவசாயிகள் என்று பார்க்கிறார்கள். சிறு விவசாயிகளுக்குச் செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை, நிச்சயமாகச் செய்ய வேண்டும். அதேநேரத்தில் பெரிய விவசாயிகளுக்கு இருக்கிற சங்கடங்களையும் எண்ணிப் பார்க்க வேண்டும். பெரிய விவசாயிகள் நிறைய செலவு செய்கிறார்கள், நிறைய உற்பத்தி செய்கிறார்கள். இழப்பு ஏற்பட்டால் அதுவும் அதிகமாகி விடுகிறது. ஆகையால் அவர்களுடைய சிரமத்தையும் குறைக்க வேண்டும். விவசாயிகள் என்றால் அவர்கள் வியாபாரிகளைப்போல் கள்ளக் கணக்கு எழுத மாட்டார்கள். தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால் அவர்கள் இரண்டு கணக்கு வைத்திருக்கிறார்கள். ஆனால் விவசாயிகள் அப்படி கள்ளக் கணக்கும் எழுதுவதில்லை, இரண்டு கணக்கும் வைத்துக்கொள்வதில்லை. பதுக்கல் வேட்டை நடக்கும்போது எந்த விவசாயிடமாவது இவ்வளவு பணம் சிக்கியது, கணக்கில் காட்டப்படவில்லை என்று செய்தி வந்ததுண்டா? அல்லது கருப்புப் பணக்காரர்களுக்கு அரசாங்கம் சலுகை அளிக்கிறோம் என்ற அரசு அறிவிப்பின்போது கேட்டபோது, என்னிடம் கறுப்புப் பணம் இவ்வளவு இருக்கிறது என்று விவசாயி சொன்னதுண்டா? அந்த வரலாற்றை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? யாரும் கேட்டிருக்க முடியாது. யாரும்

(முற்பகல் 11-20.)

அப்படிப்பட்ட விவசாயிகளை நம்மிடத்திலே பார்க்க முடியாது. இன்கம்-டாக்ஸ் ஏய்ப்பு விட்டவர்கள் இல்லை. கள்ளப் பணம் வைத்திருப்பவர்கள் இல்லை. கறுப்புப்பணம் வைத்திருப்பவர்கள் இல்லை. வெளிநாட்டிலே தெரியாமல் மூலதனத்தை முதலீடு செய்கின்ற விவசாயிகள் யாரும் இருப்பதாக நமக்குத்



1985 மார்ச் 12] [திரு. மா. மணிமாறன்]

தெரியாது. அப்படிப்பட்ட நிலைமைகளிலே எல்லாம் இல்லாமல் அற்பமான வருவாயை வைத்துக்கொண்டு வாழ்கிற விவசாயிகள் தான் இன்றைக்கு இருக்கிறார்கள், என்பது இந்த ஆட்சியிலே தொடர்ந்து வருகிற வரலாறாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் தொடர்ந்து இருக்குமானால், தஞ்சை மாவட்டத்தில் இருந்து விவசாயிகள் எல்லாம் காலி செய்து கொண்டு, வேறு எங்காவது செல்லக்கூடிய ஒரு இக்கட்டான நிலைமைதான் வரும் என்பதை நான் இந்த அரசுக்கு மிக வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் விவசாயத்தைப் பற்றிச் சொல்லும்போது, நீங்கள் தஞ்சை மாவட்டத்தைப் பற்றி மட்டும் சொல்லிவிட வில்லை. நீங்கள் பெரிய திட்டத்தை வைத்திருப்பதாக, கவர்னர் உரையிலே சொல்லி இருக்கிறீர்கள். இந்த ஆட்சியினுடைய திறமை பற்றிச் சொல்கிற நேரத்தில் ஒரு நேர்மையாக, சீரான ஆட்சியைத் தருவோம் என்றெல்லாம் சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் இந்த ஆட்சியில்தான் 1982-ல் பெரியார் அணை பேக்கின் வேலைக்காக 55 லட்சம் ரூபாய் ஒதுக்கினீர்கள். இப்படி 55 லட்சம் ரூபாய் ஒதுக்கிய பணத்தை அதே ஆண்டில் வேலை செய்ய முடியாமல் 40.75 லட்சம் ரூபாயை நீங்கள் அரசுக்கு சரண்டர் செய்கிறீர்கள்.

அடுத்து, குடகனாறு அணை 1977-லே உடைந்தது. 77-லே உடைந்த அந்த அணைக்காக பல்வேறு தரப்பிலிருந்து வேண்டு கோள்கள் விடப்பட்டு, போராட்டங்கள் நடத்தப்பட்டு அந்த வேலையைத் தொடர வேண்டும் என்று வாதிட்டார்கள். அதற்குப் பின்னால் 1982-லே அதற்காக நீங்கள் புரப்போசலை வைக்கிறீர்கள். அப்படி வைக்கிற நேரத்தில், 81.85 லட்ச ரூபாயை அதற்காக ஒதுக்கியிருக்கிறீர்கள். அந்த 81.85 லட்ச ரூபாயை குடகனாறு புராஜக்ட்டுக்காக ஒதுக்கிய அந்த பணத்தை நீங்கள் செலவு செய்யாமல், திருப்பி 61.93 லட்சம் ரூபாயை சரண்டர் செய்கிறீர்கள் என்று சொன்னால், அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகளுக்காக நீங்கள் எவ்வளவு அக்கறை காட்டியிருக்கிறீர்கள் என்பது தெரியும்.

அதேபோல் பெரியார் புராஜக்ட் திட்டத்திற்கு நீங்கள் எஸ்டிமேட் ஒப்புதலளிப்பதிலே டிலே செய்த காரணத்தாலே அந்தப் பணத்தையும் நீங்கள் சரண்டர் செய்திருக்கிறீர்கள். அதே

போல் வைகை வாய்க்கால் சீர்திருத்தத்திற்காக 1981-82-ல் 45.42 லட்சம் ரூபாய் நீங்கள் ஒதுக்கியிருக்கிறீர்கள். பிறகு அதே ஆண்டில் அந்தப் பணத்தை உங்களால் செலவழிக்க முடிய வில்லை. அதற்குக் காரணம் என்ன சொல்கிறார்கள் என்றால், 'லாண்ட் அக்குசிசன்' செய்வதிலே மாவட்ட ஆட்சித் தலைவரால் இயலவில்லை என்ற காரணத்தால் அந்தத் திட்டத்தை நிறை வேற்ற முடியவில்லை என்று சொல்கிறீர்கள். இதற்கு என்று ரெவின்யூ துறை இருக்கிறது, அமைச்சர்கள் இருக்கிறார்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள். இதற்கு என்று ஒரு துறை இருக்கிற நேரத்தில்கூட, ஒரு ஆண்டில் போட்ட ஒரு திட்டத்தை செயல்படுத்துவதற்கு, நிலத்தைக் கையகப்படுத்து வதற்கு முடியவில்லை என்று சொன்னால் அதற்காக ஒதுக்கப் பட்ட பணம் திருப்பி அனுப்பப்படுகிறது என்று சொன்னால் இதற்கு அரசு தேவைதானா, அமைச்சர்கள் தேவைதானா என்பதை நீங்கள் எண்ணிப் பாருங்கள்.

அதேபோல அந்தத் திட்டத்தை அடுத்து ஆண்டு 1982-83-ல் செயல்படுத்துவதற்கு ஒரு குறிப்பு வருகிறது. 45 லட்சம் ரூபாய் செலவு செய்து முடிக்க வேண்டிய அந்தத் திட்டம், அடுத்த ஆண்டு செயல்படுத்தப்படுவதால் அதனுடைய தொகை 51 லட்சமாக ஆகிறது. எனவே அதற்குத்தேவையான பணம் ரூ. 51 லட்சம் ஒதுக்குகிறார்கள். ஆனால் அப்படி ஒதுக்கிய அந்த 51 லட்ச ரூபாயை செலவு செய்திருக்கிறீர்களா என்றால் அதையும் செலவு செய்யவில்லை. காரணம் ஏஜென்சி செட்டில் செய்வதில் காண்ட்ராக்டர்கள் நியமனம் செய்வதில் சிரமங்கள் இருக்கிற காரணத்தால் அதிலே 49 லட்சம் ரூபாயை நீங்கள் சரண்டர் செய்கிறீர்கள்.

அதேபோல் நாகாவதி திட்டத்தில் 111 லட்சம் ரூபாய் ஒதுக்கி யதில் ஏறக்குறைய 64 லட்சம் ரூபாய் அளவிற்கு வேலை செய் யாமல் திருப்பி அனுப்பப்படுகிறது. எதற்காக நீங்கள் நிதியை ஒதுக்குகிறீர்கள் என்றால், அதிகாரிகளுக்குச் சம்பளமாகவும், அந்தத் திட்டங்களைப் பார்க்க வருகின்ற அமைச்சர்களின் பயணப்படிக்காகவும், மற்றுமுள்ள எடுபிடிச் செலவினங்களுக் காகவும்தான் அந்தப் பணத்தைச் செலவு செய்கிறீர்கள். என்





இப்படிப்பட்ட நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதைத் தான் நான் உங்களிடம் கேட்க ஆசைப்படுகிறேன். இப்படி பல்வேறு திட்டங்கள் இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்றன.

அதேபோல் அரசுத் துறைகளிலே இருப்பவர்கள் பணியாற்று கின்ற நேரத்தில் கையாடல் வழக்குகள் வருகின்றன. ஒருவர் 1979 ஆம் ஆண்டில் 69 ஆயிரம் ரூபாய் கையாடல் செய்துவிட்டார். ஆனால் இன்றைக்கு வரை அதன் மீது வழக்கு போட முடியாத நிலையிலிருக்கிறது என்று சொன்னால், 4, 5 ஆண்டுக்காலம் ஆகியும் வழக்கு போட முடியவில்லை என்று சொன்னால் இது நியாயமா? அது நியாயமாக இருப்பதாக அவர் கருத முடியும். 40 லட்சம் ரூபாய் கையாடல் செய்த வருக்கு ஒரு மாதத்திற்கு முன்பு வாலண்டரி ரிடையர்மெண்ட் கொடுக்கிறபோது, 69 ஆயிரம் ரூபாய் அளவிற்கு தவறு செய்த வருக்கு இவ்வளவு நாள் வழக்கில்லாமல் இருப்பது நியாயம் தானே? எனவே அப்படிப்பட்ட நிலையால் காரணமாக அது தொடர்கிறதோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. எனவே இப்படிப்பட்ட நிலைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

அடுத்து இந்த ஆட்சியில் ஆதி திராவிட மேம்பாட்டுத் திட்டம் ஒரு ஜபமாக ஆகிக்கொண்டிருக்கிறது. எதற்கு எடுத்தாலும் ஆதி திராவிட மேம்பாட்டுத் திட்டம் என்று சொல்கிறார்கள். வேண்டும் என்றால் இது ஒரு மந்திரமாக ஆக்கி எல்லா உறுப் பினர்களும், அமைச்சர்களும் இதைக் கையில் எடுத்துக்கொண்டு செல்லும் இடம் எல்லாம் சேபிக்கலாம் என்றுகூட நான் யோச னையாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இதற்கு முன்னாலே இருந்த கவர்னர் உரையிலேகூட சொல்லியிருக்கிறீர்கள். அதையே தான் தொடர்ந்தும் சொல்லிக்கொண்டு வருகிறீர்களே தவிர ஆதி திராவிடர்களுக்காக என்ன மேம்பாட்டுத் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்? டாட்கோவிலே போட்ட கான் கிரீட் வீட்டு திட்டங்கள் தொடர்ந்து கட்டப்பட்டு வருகின்றதா? டாட்கோவிலே போட்ட திட்டங்கள் எல்லாம் இன்றைக்குச் செயல்படுகிறதா? பணங்கள் எல்லாம் திருப்பி அனுப்பப்படு கிறது. மத்திய அரசிடமிருந்து வருகிற நிதியைத் தவிர டாட்கோவிற்கு மாநிலத்திலிருந்து வாங்கிற நிதி மிகமிகக் குறை

வாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது. இது எதற்காக இருக்
கிறது என்று சொன்னால்—ஒரு உன்னதமான பணிக்காக
உருவாக்கப்பட்டது இந்த தாட்கோ. வீடு அற்றவர்களுக்கு
நிலமற்றவர்களுக்கு, எதிர்காலத்தில் நம்பிக்கை இல்லாத ஆதி
திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு வீடுகளை உண்மை
யாக வழங்கவேண்டும், அவர்கள் உறுதியாகப் பெறவேண்டும்
என்று உருவாக்கப்பட்ட இந்த திட்டம் இன்றைக்கு காலாவதி
யான கட்டத்தில் நின்று கொண்டிருக்கிறது. இன்றைக்குக்
கூட நிலைமை சற்று பரவாயில்லை. அதற்குக் காரணம்
ஏதோ மத்திய அரசாங்கம் கருணை கூர்ந்து ஆர்.எல்.இ.ஜி.பி.,
என்.ஆர்.யி.பி., ஆகிய திட்டங்களின் கீழ் பணம் அனுப்பிய
காரணத்தினாலே, அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு,
இன்றைக்கு அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க இந்த அரசு
முனைகிறதே தவிர, மாநில அரசின் நிதி இதற்குப் போதாத
நிதியாகத்தான் இருக்கிறது.

கலைஞர் ஆட்சிக் காலத்தில் 530 கோடி ரூபாய் வருமானம்
இருந்த நேரத்திலே, தாட்கோவின் மூலமாக அரிசனங்களுக்கு
வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று 13 கோடி ரூபாயை
ஒதுக்கினார்கள். இன்றைக்கு வருமானம் 2 ஆயிரம் கோடியை
எட்டியிருக்கிற நேரத்தில், இதற்காக 3 கோடி ரூபாயை ஒதுக்கு
வதற்குக் கூட முணுமுணுத்துக் கொண்டிருக்கிறது இந்த அரசு.
இப்படிப்பட்ட நிலையில் செயல் எதுவும் இல்லாமல், ஆதி
திராவிடர்கள் வாக்களிக்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக,
ஆதிதிராவிடர்களுக்கு புதிய திட்டம், புதிய திட்டம் என்று
எக்காளமிட்டுக்கொண்டு, அவர்களுடைய வாக்குகளை
ஏமாற்றி பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள். இப்படிப்பட்ட
நிலைமை தொடரும் என்று சொன்னால், ஒரு காலத்தில், ஆதி
திராவிட சமுதாயமே கொதிப்பு அடையும் நிலை உருவாகும்
என்ற நிலையில்தான் இன்றைய நிலை இருக்கிறது. இன்றைக்கு
அவர்களின் நிலைமை என்னவாக இருக்கிறது? அவர்கள் வாழ
முடிகிறதா?





இராமநாதபுரம் சேதுபதிக் கல்லூரியில் ஆதிதிராவிட மாணவர்
நிலை என்னவாயிற்று? மாணவர்களுக்குத் தனியாக ஹாஸ்டல்
கட்ட வேண்டும் என்று அங்கேயிருக்கிற பெற்றோர்கள் தீர்மானம்
நிறைவேற்றியிருக்கிறார்கள். சேதுபதிக் கல்லூரியில் பயிலுகிற
மற்ற மாணவர்களோடு இவர்கள் ஒன்றாக சேர்ந்து இருக்க
முடியாத நிலை இன்றைக்கும் நீடித்துக் கொண்டிருக்கிறது.
அங்கே பணி புரிகிற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த
ஆசிரியர்கள் வேறு ஊருக்கு மாற்றல் கேட்கிற நிலை இன்றைக்கு
இராமநாதபுரத்தில் இருந்து கொண்டிருக்கிறது.

அதேபோல தஞ்சை மாவட்டத்தில் பொறையாறில் இருக்கிற
கல்லூரியிலே, 3 ஆண்டுகளாகத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச்
சேர்ந்த மாணவர்கள் பயிலச் செல்ல முடியாத நிலை இன்றைக்கும்
இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருப்பது மட்டும்
அல்ல, பல ஊர்களிலே அந்த சமூகப் பெண்கள் கற்பழிக்கப்படு
வதும், கொலை செய்யப்படுவதும், ஊரைவிட்டே விரட்டுவதும்,
அவர்களின் வீடுகளுக்கு தீ வைப்பதும், தொடர்ந்து ஏற்படும்
வரலாற்று நிகழ்ச்சிகளாகவே இந்த ஆட்சியில் தாழ்த்தப்பட்ட
சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்
கிறார்கள். இப்படிப்பட்ட நிலை இருக்கிற நிலைமையிலேதான்,
ஆதி திராவிட சமுதாயத்தைப் பற்றியெல்லாம் இங்கே சிறப்பாகப்
பேசி வருகிறார்கள்.

வால்பாறை நண்பர் மிக அழகாகச் சொன்னார்கள்.
அம்பேத்கார் படம் வைத்தது பற்றியெல்லாம் சொன்னார்கள்.
அம்பேத்கார் படம் உள்ளே வருவதற்கு, எந்த அளவிற்கு
அம்பேத்கார் பாடுபட்டு பிறகு உள்ளே வந்திருக்கிறார் என்பது
இங்கே உள்ள பல நண்பர்களுக்குத் தெரிந்திருக்க நியாயம்
இல்லை தான். அம்பேத்கார் படம் வைக்க வேண்டும் என்ற
தீர்மானம் நிறைவேற்றியது எப்போது? அம்பேத்கார் படம்
உள்ளே வந்தது எப்போது? அதற்காக குடியரசு கட்சி நடத்திய
போராட்டம் என்ன? இந்த வரலாறுகளுக்கெல்லாம் பின்னாலே
தான் அம்பேத்கார் உள்ளே வந்திருக்கிறார்களே தவிர, அதற்கு
முன்னாலே உள்ளே நுழைய முடியவில்லை. இதே மன்றத்திலே

நான் அம்பேத்காருடைய படம் வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார்கள். அன்றைக்கு அமைச்சராக இருந்தவர்கள் மிக அழுத்தமாகப் பதில் சொன்னார்கள். அம்பேத்கார் அவர்களுக்குப் படம் வைக்க வேண்டிய அவசியம் இல்லை. அம்பேத்காருடைய அறையில் அவருடைய அரசியல் சட்டம் படமாக இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட படம் அவர்களுக்கு அவசியம் இல்லை என்று சொன்னார்கள்.

அந்த நேரத்திலே கார்ப்பொரேஷன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையிலே இருந்ததன் காரணத்தாலேதான், கார்ப்பொரேஷன் தீர்மானத்தை நிறைவேற்றி, அன்றைக்கு படம் வேண்டாம் என்று சொல்லிய நேரத்திலும், கார்ப்பொரேஷனில் அம்பேத்காரின் சிலையை திராவிட முன்னேற்றக் கழகம் திறந்தது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இந்த சமுதாயத்தினரை திராவிட முன்னேற்றக் கழகம் எந்த நாளும் மறந்தது கிடையாது. அவர்களுக்கு உரிய மரியாதையை எப்போதும் செலுத்தி வந்திருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், சிவராஜை நீங்கள் பல்லோரும் அறியாதவர்கள் அல்ல. சிலர் அறியமுடியாமல் இருக்கக் கூடும். சிவராஜ் என்பவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே முன்னோடியாக இருந்தவர். முனைப்பாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு பாடுபட்டவர். அப்படிப்பட்ட பெரும் தலைவர் டெல்லியிலே காலமானார். அவர் அப்படி காலமாகிய நேரத்தில், அன்றைக்கு பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கும், அன்றைக்கு காங்கிரஸ் இயக்கத்திலே சேர்ந்தவர்கள் விருந்து ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த விருந்தை நடத்தக் கூடாது, ஒத்தி வைக்க வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு குறிப்பு அனுப்பி வைத்தார்கள். அப்படி குறிப்பு அனுப்பியும் கூட, அதை மறுத்துவிட்டு, விருந்து நடத்தினார்கள். நடத்தியபோது திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது குற்றம் சுமத்தினார்கள். அப்படி குற்றம் சுமத்திய நேரத்திலேதான், திராவிட முன்னேற்றக் கழகம் விருந்திலே கலந்து கொள்ளாமல், மீனாம்பாள் சிவராஜோடு, சிவராஜினுடைய சடலத்தை சென்னைக்கு அனுப்புகிற பெரிய பணியை மேற்கொண்டு,





அனுப்பிவிட்டு அந்த வருத்தத்திலே பங்கு கொண்ட பெருமை, வரலாறு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இப்படிப்பட்ட அவல நிலைமைகள் இன்னும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு இந்த ஆட்சியிலே இருக்கிறது என்பதையும், அதற்கு எதிர்ப்புக் கொடுத்த வரலாறு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்டி, ஒன்றே ஒன்று மட்டும் சொல்லி விடைபெறலாம் என்று நினைக்கிறேன்.

அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு நீங்கள் இன்றைக்கு இனாம் கொடுத்திருக்கிறீர்கள். அரசு ஊழியர்களுக்கு நீங்கள் பே கமிஷன் நியமித்திருக்கிறீர்கள். கமிஷனுடைய அறிக்கை வருவதற்கு முன்னால் 300 ரூ. 200 ரூ. என்று இனாம் கொடுத்திருக்கிறீர்கள். இந்த இனாமை உங்களிடம் யார் கேட்டது? அரசு ஊழியர்கள் என்ன பிச்சைக்காரர்களா? அரசாங்கத்திலே ஊழியம் செய்யக் கூடியவர்கள், உழைக்கக் கூடியவர்களே தவிர, தவறான வழியில், தப்பான வழியில் பணம் சம்பாதிக்கக் கூடியவர்கள் அல்லர். அப்படி உழைக்கக் கூடிய வர்க்கத்திற்கு அவர்கள் கேட்கும் ஊதிய உயர்வு கொடுக்கிற நேரத்திலே, உங்களை யார் இனாமாகக் கொடுக்கச் சொன்னது அல்லது ஒரு இன்டீரிம் ரிப்போர்ட்டை அந்தக் கமிஷனிடத்திலே வாங்கி, அந்த ரிப்போர்ட்டிலே கமிஷன் என்ன என்ன சொல்கிறது என்று பார்த்து அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்தித் தரவேண்டுமே தவிர, தமிழ்நாடு அரசாங்கமே ஒரு சத்திரம் நடத்துவது என்பதை நான் ஒத்துக் கொள்ளத் தயாராக இல்லை. இனாம் கொடுப்பதற்கு நீங்கள் யார்? அவர்கள் உங்களிடத்திலே உழைக்கிறார்கள், அதற்கு ஊதிய உயர்வு கேட்கிறார்கள், அதைக் கொடுப்பதை விட்டு எதற்கு இனாம்?

இன்றைக்கு நாட்டிலே என்ன நிலைமை இருக்கிறது? 16 லட்சம் பேர்களுக்கு மேல், படித்த இளைஞர்கள் வேலை தேடித் தரும் நிறுவனங்களிலே பதிவு செய்து வைத்துக் கொண்டு இன்றைக்கும் வேலை கிடைக்காமல் தவித்துக் கொண்டிருக்

கிறார்கள். எவ்வளவு தான், ஆடை கொடுத்தாலும் அரிசி கொடுத்தாலும், எதிர்காலத்தில் படித்த இளைஞர்களின் எதிர்காலம் என்பது இந்த நாட்டில் ஒரு கேள்விக் குறியாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நாட்டில் படித்தவர்கள் வேலையில்லாமல், எந்த நாட்டிற்குச் செல்வது என்று திகைத்துக் கொண்டிருக்கிறார்கள். படித்தவர்கள் பட்டம் பெற்றவர்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள், டாக்டர்கள் எல்லாம் எந்த நாட்டிற்காவது சென்று பிழைக்க வேண்டும் என்று விரும்புகிறார்களே தவிர, இங்கே அவர்களுக்கு வாழ வழி இல்லை. இதற்கெல்லாம் காரணம் என்ன ?

இந்த நாட்டிலே இருக்கிற படித்தவர்களுக்கு மரியாதை இல்லை. படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடையாது. படித்தவர்களைப் பற்றி சிந்திப்பதற்கு இந்த அரசுக்கு திராணி இல்லாத காரணத்தினாலேதான் இப்படிப்பட்ட எண்ணங்கள் உருவாகியிருக்கின்றன. இவற்றைப் பற்றி ஆளுநர் அவர்கள் ஏதாவது உரையிலே கூறியிருக்கிறார்களா ? படித்தவர்களுக்கு, எதிர்காலத்தில் உள்ள வேலை வாய்ப்பு பற்றி ஏதாவது சொல்லியிருக்கிறார்களா என்றால் இல்லை. இப்படிப்பட்ட அவல நிலைதான் அவர்களுடைய உரையிலே இருக்கிறதே தவிர மக்களுக்கு ஆறுதல் அளிக்கக் கூடியதாக இல்லை. இன்னும் சொல்லப்போனால் ஏதோ கடந்த கால நிகழ்ச்சிகளை தொகுத்து தருகின்ற வரலாறு பாடமாக இருக்கிறதே தவிர, அதுவும் கூட கடந்த 4 ஆண்டு வரலாற்றை மட்டும் தொகுத்து தருகிற வரலாறாக இருக்கிறதே தவிர, எதிர்காலத்தில் செயல்பட இருக்கின்ற திட்டங்களுக்கு முன் உதாரணமாக வைப்பதற்கு ஆளுநர் அவர்களும் இந்த அமைச்சரவையும் தவறியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை தெரிவித்து விடைபெறுகிறேன்.

(முற்பகல் 11-30)

**திரு. ஏ. தங்கராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாமன்றத்தில் பேசியவர்கள் இதுவரை ஆளுநர் உரையை உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். ஆனால் ஆளுநர் உரை எந்தவகையில் அமைந்திருக்க





வேண்டுமோ அந்த வகையில் அமைந்திருக்கிறது என்பதையும் நான் எடுத்துச்சொல்லிக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மீது நாட்டு மக்கள் கொண்ட நம்பிக்கையின் அடிப்படையில் தான் அவர்கள் இந்த ஆட்சியை நடத்தி வந்திருக்கிறார்கள். கடந்த காலத்தில், வெள்ளங்கள் ஏற்பட்டாலும், வறட்சி வந்தாலும், குடிநீர்ப் பஞ்சம் வந்தாலும் இந்த நாட்டு மக்களுக்குத் தேவையான காரியங்களைத் தொடர்ந்து செய்து வந்து இருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லி, ஆகவே அந்த வகையில்தான் அவர்கள் பல்லாயிரக்கணக் கான தூரத்தில் நோய்வாய்ப்பட்டு படுத்திருந்தாலும், பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் இந்தக் கூட்டணி வெற்றி பெற்றிருக் கிறது என்பதை பார்க்கின்றபோது, கொள்கை இல்லை, கோட்பாடு இல்லை இந்த நிர்வாகத்திற்கு ஒன்றுமே இல்லை என்று எடுத்துச் சொன்ன எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்றவர்களை நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்வதெல்லாம் ஒரு இயக்கம் ஆட்சிக்கு பொறுப்புக்கு ஏற்க வருகிறதென்றால், முதல் ஆண்டிலேயே சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட முடியாது. ஆகவே, பொருளாதாரத்தை வைத்து கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு ஆண்டாக இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளின் அடிப்படையில்தான் புரட்சித் தலைவர் அரசு கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

அந்த அடிப்படையில்தான், ஏழை எளிய மக்கள், எவ்வளவு பெரிய காற்று அடித்தாலும், தூக்கி எறிந்துவிட்டு, பெரும் பான்மையான மைனாரிட்டி உறுப்பினர்களை தேர்ந்தெடுத்திருக் கிறார்கள். ஆகவே, உறுப்பினர்கள் பேசும்போது, யார் என்ன சொன்னாலும், இந்த மாமன்றத்தில் மக்களுக்கு பயன்தரக்கூடிய காரியங்களை பற்றி பேசியாக வேண்டும். இந்த மாமன்றத்தில் இப்போது புதிய உறுப்பினர்கள் எல்லாம் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு புது மாதிரியான எண்ணம் வந்துவிடக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, கண்ணிய மான நிர்வாகம் என்ற அடிப்படையில், சொறி நாய், வெறி நாய் என்று பேசுவதைவிட, இந்த நாட்டு மக்களுக்கு நல்ல கருத்துக் களை எடுத்துச் சொல்லுங்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள்

[திரு. ஏ. தங்கராசு] [1985 மார்ச் 12

'மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்' என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பு ஏற்று இந்த நாட்டு மக்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்துகொண்டு இருக்கிறார்கள். கட்சி வேறுபாடு இன்றி செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மற்ற மாநிலங்கள் எல்லாம் பாராட்டக்கூடிய அளவிற்கு அவர்கள் நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பல்லாயிரக் கணக்கான தூரத்தில் நோய்வாய்ப்பட்டிருந்தாலும், பெரும்பான்மையான வெற்றி பெற்று மீண்டும் முதலமைச்சராக வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தான் ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி, ஆளுநர் உரை 27 மடல்களைக் கொண்ட தாழம்பூவாக அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொரு மடலைக் கழற்றினாலும் அதனுடைய மணம் குன்றாது, அந்த அடிப்படையில் நான் ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்த ஆளுநர் உரையானது 27 மடல்களைக் கொண்ட தாழம்பூவாக விளங்குகிறது. முதல் மடலைப் புரட்டினால், தகுதி வாய்ந்த நபர்களுக்கு, இதுவரை வழங்காதிருந்த அனைவருக்கும் முதியோர் ஓய்வூதியம், கட்டுப்பாடின்றி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வழங்கப்படுகிறது. முன்பு ஒரு மாவட்டத்திற்கு இவ்வளவு என்று கட்டுப்பாடு வைத்திருந்தார்கள். அவ்வளவையும் நீக்கி இந்த மாவட்டத்திற்கு, தகுதி வாய்ந்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவேண்டுமென்ற ஆணையைப் பிறப்பித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதற்கு அடுத்து அரிசித் திட்டம் குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு 20 கிலோ அரிசியாக உயர்த்தியிருக்கிறார்கள். அதற்கு வழிவகை செய்கிற வகையில், இந்த அரசாங்கம் ரூ. 90 கோடி நஷ்டத்தை ஈடு செய்துகொண்டு ஏழை எளிய மக்கள் பாராட்டக் கூடிய வகையில் அந்த அரிசியை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் அரிசி வழங்கும்போது 600 கார்டுகளுக்கு ஒரு நியாய விலைக் கடை என்று விதித்து, நிர்ணயித்திருக்கிறார்கள். அதை இன்னும் கொஞ்சம் குறைத்து கூடுமான



1985 மார்ச் 12] [திரு. ஏ. தங்கராசு]

வரையில், கிராமப் பகுதிகளில் 500 கார்டுகளுக்கு ஒரு கடை வீதம் நியமனம் செய்து அந்த மக்களுக்கு வேண்டிய உணவு வகைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த மடலைப் புரட்டினால், நெல் உற்பத்திக்கு ஊக்க போனஸ்—ஊக்க போனஸ் கொடுக்கும்போது ஒரு குறிப்பிட்ட இடத்தில் நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குதான் கிடைக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், ஒரு பகுதியில் உள்ளவர்களுக்குதான் அந்த ஊக்க போனசைக் கொடுக்கிறார்கள். மற்ற பகுதிகளுக்குக் கொடுக்க வில்லை. குறிஞ்சிப்பாடியில் ஊக்க போனஸ் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த மடலைப் புரட்டினால், தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டம்; அடுத்து ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டம்; படித்த மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம்; அடுத்து ஆதிதிராவிடர் நலன் மேம்பாட்டுத் திட்டம்; கைத்தறி வளர்ச்சித் திட்டம்: கைத்தறி நெசவாளர் வீட்டுவசதித் திட்டம்; உழவர்களுக்கு வேலைவாய்ப்பு; உழவர்கள் வேலை செய்கிறபோது பாதிக்கப்பட்டிருந்தால், அவர்களுக்கு அளிக்கப் படும் இழப்பு ஈட்டுத்தொகை ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000 ஆக உயர்த்தியது ஆகிய திட்டங்கள் ஆளுநர் உரையில் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. ஆக இப்படி பல்வேறு மடல்களைக் கொண்ட தாழம்பூவாகத் திகழ்கிற இந்த ஆளுநர் உரையை நான் பாராட்டு கிறேன்.

அடுத்து சத்துணவுத் திட்டம். இந்தியாவிலேயே எல்லோரும் பாராட்டக்கூடிய அளவுக்கு இந்தச் சத்துணவுத் திட்டத்தின் மூலம், இன்றையதினம், 80 இலட்சம் குழந்தைகள், முதியோர்கள், உடல் ஊனமுற்றோர்கள் ஆகியவர்கள் வயிறாரச் சாப்பிடு கிறார்கள். இன்றையதினம், இந்தப் புண்ணியவான் வாழ்க என்று கிராமப் பகுதியிலே இருக்கிறவர்கள் பாராட்டுகிறார்கள். அப்படிப்பட்ட சத்துணவுத் திட்டத்தில், இன்றையதினம் சிறு சிறு குறைபாடுகள் இருந்தாலும், அந்தக் குறைபாடுகளை நாம் நிவர்த்தி செய்தாக வேண்டும். சத்துணவுத் திட்டத்தில் குறைபாடு

இல்லாதபடி பார்க்க இதுவரை அரசியலில் ஈடுபட்டு அனுபவம் பெற்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் அதற்கு உண்டான வழிவகைகளை ஆராய்ந்து ஆலோசனையாச் சொன்னால், இந்த அரசுக்கும் நல்லது, மக்களுக்கும் நல்லது என்பதை நான் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுநர் உரையில், இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, அதற்குத் தலைவர்கள் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சி வந்தபிறகு தான், கிராமப்புறப் பகுதிகளில் இருக்கிற மக்களுக்குச் சேரவேண்டிய சலுகைகளையும் வசதிகளையும் நிறைவேற்ற வேண்டுமென்று, துரிதமாகச் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் பெரிய மாவட்டங்களைப் பிரித்துத் தந்தார்கள்.

அந்த வகையில் தென்னாற்காடு மாவட்டத்தைப் பிரித்து, ஒரு பகுதிக்கு வள்ளலார் மாவட்டம் என்று ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். ஆகவே இந்த நேரத்தில் நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம், வள்ளலார் பிறந்த ஊரான மருதூர், வாழ்ந்த ஊரான வடலூர், சித்தி பெற்ற ஊரான மேட்டுக்குப்பம் ஆகிய மூன்றும் இணைந்த பகுதியான வடலூரில், வள்ளலார் மாவட்டத்திற்கான ஆயத்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஆளுநர் உரையின் மீது மாண்புமிகு செம்மலை மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்து என் உரையை முடித்துக்கொண்டு அமைகிறேன்.

(முற்பகல் 11-40)

* திரு. கு. சுப்பராயன்: பேரவை துணைத்தலைவர் அவர்களே, நான் என்னுடைய கன்னிப் பேச்சை நடைபெறுகிற கவர்னர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீதான விவாதத்திலே நிகழ்த்துவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். நடைபெறுகிற இந்த விவாதத்திலே கவர்னர் உரை மீதான சில விமர்சனங்களை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நான் இங்கே வெளியிட அனுமதி கோருகிறேன்.





என்னுடைய அருமைக்குரிய ஆளும்கட்சி நண்பர்கள் பேசு கின்ற நேரத்திய இந்த அரசாங்கத்தினுடைய நிர்வாகத் திறமைகளைப் பற்றி எல்லாம் அவர்கள் இருக்கிற இடத்தின் காரணமாக புகழ வேண்டிய தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்திற்கு ஆளானார்கள் என்று எண்ணுகிறேன். கவர்னர் உரையிலே குறிப் பிடப்பட்ட மாவட்ட பிரிவினைக்காக கூறப்பட்டுள்ள காரணம் பற்றி நான் நினைவுக்குக் கொண்டுவா விரும்புகிறேன். மாவட் டங்களில் பெரிய மாவட்டங்களாக இருப்பனவற்றை பிரிக்க வேண்டும் என்று எதற்காகச் சொல்கிறார்கள்? நிர்வாகத்தை மக்க ளிடையே நெருக்கமாக இணைக்க அதுதான் வழி என்று சொல்கி றார்கள். எனக்கு முன்னர் பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கூட அதைத்தான் குறிப்பிட்டார். இதிலிருந்து என்ன புலப்படுகிறது என்றால், ஏதோ, பிரிக்கப்பட்ட மாவட்டங்களின் நிர்வாகம் மக்களிடம் மிக நெருக்கமாக இருந்துகொண்டு இருக்கின்றன என்று புரிந்துகொண்டு இருப்பதுபோல் தெரிகிறது. ஆளும் கட்சியினர் இராஜ மாடங்களிலிருந்து மக்களைப் பார்க்கிற கார ணத்தால் அவர்கள் உண்மையிலேயே மக்கள் எவ்வளவு வேதனைப் படுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இல்லை என்று கருதுகிறேன்.

நகராட்சிகளில் என்ன நடந்து கொண்டிருக்கிறது? எதிர்க் கட்சி தரப்பில் பல்வேறு எதிர்க்கட்சி நண்பர்கள் குறிப்பிட் டார்கள், எதிர்க்கட்சி நண்பர்கள் மட்டும் தான் குறிப்பிட் டார்களா? ஆளும் கட்சியைச் சேர்ந்த எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் கூட என்னுடைய தொகுதியிலே இன்னும் பல வேலைகள் நடைபெறவில்லை என்றும் அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். 7½ ஆண்டு கால அ.இ.அ.தி.மு. கழகத்தினுடைய ஆட்சியில் நகராட்சியின் நிர்வாகம் எந்த அளவுக்கு பாழ்பட்டு கிடக்கிறது. அமைச்சர் பெருமக்கள் தெருக்களிலே நடந்து வந்தால் இவற்றைப் புரிந்து கொள்ளார்கள். நடுத் தெருவில் சாக்கடை தேங்கி கிடக்கிறது. காரை போட்டது உண்டா? இல்லையே; நகராட்சி நிர்வாகம் எந்த அளவுக்கு நடந்து கொண்டிருக்கிறது என்று இந்த அரசுக்குத் தெரியுமா? தெரியாது. எந்த நகராட்சியின் நிர்வாகமும் இன்றுவரை சரியாக நடைபெறவில்லை என்பதை அமைச்சர் பெருமக்கள் நேரிலே வருவார்களானால் நாங்கள் நேருக்கு நேராக காட்டத் தயாராக இருக்கிறோம்.

அது மட்டுமல்ல, அன் அப்ரூவுடு லே அவுட்ஸ் தமிழகத்திலே எவ்வளவு இருக்கின்றன? என்னுடைய திருப்பூர் நகரத்திலே மட்டும் 56 இருக்கின்றன. நகராட்சி நிர்வாகம் என்ன சொல்கிறது தெரியுமா? நாங்கள் போய் மனு கொடுத்துக் கேட்டால் பாதை போடவேண்டும், விளக்கு வேண்டும், டிச்சுக் கட்டப்பட வேண்டும் என்று கேட்டால் எங்கள் நகராட்சி விதி அதற்கு இடம் அளிப்பது இல்லை. ஏன் என்றால், அது அன் அப்ரூவுடு லே அவுட்ஸ் என்று சொல்கிறார்கள். அன் அப்ரூவுடு லே அவுட்ஸ்களுக்கு பில் கலெக்டர்களை அனுப்பி வரி வசூலிக்க மட்டும் விதி அனுமதிக்கிறதா? வரி வசூலிப்பதற்கு அனுமதிக்கிற விதி, வசதி செய்ய மட்டும் அனுமதிக்கவில்லையா? எந்த அமைச்சர் அவர்களாவது கேட்டார்களா? இங்கே உள்ளாட்சித்துறை என்று இருக்கிறதா? அதற்கு என்று ஒரு அமைச்சர் இருக்கிறாரா? அவர் ஏதாவது கேட்டாரா? சென்னை மாநகராட்சிக்குப் போய் மனு பெறுகிறேன் என்று சொல்கிறார்கள். நாங்கள் இங்கே குற்றங்களைச் சொல்கிறோம். நீங்கள் சென்னை மாநகராட்சிக்கு போகிறீர்கள். இதுவரை கொடுத்த மனுக்கள் எல்லாம் டிஸ்போஸ் ஆகிவிட்டதா? என்ன ஐ வாஷ் இது? யாரை ஏய்க்க இந்த ஐ வாஷ்? முதலிலே இந்த அரசு செய்ய வேண்டியது என்ன தெரியுமா? அன் அப்ரூவுடு லே அவுட்டை அப்ரூவுடு ஆக்க வேண்டும். அதற்கு ஒரு விசேஷ ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அ.இ.அ.தி.மு. கழகத்தினர் அவர்களுடைய நிலைமையிலிருந்து மக்களை பார்க்கிறார்கள். நாட்டு மக்கள் நிலைமையிலிருந்து அவர்கள் பார்க்க வேண்டும். அதை விடுத்து எவ்வளவு ஆர்ப்பாட்டங்கள், எவ்வளவு உண்ணாவிரதங்கள், எவ்வளவு பேரணிகள், மக்கள் குரலைக் கேட்டார்களா? இந்த அமைச்சரவை கேட்கவில்லை. கவர்னர் உரையிலே செவிமடுப்புக் கருவிகள் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நாட்டிலே உள்ள மக்கள் செவி மடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இங்கே பாருங்கள் அமைச்சர்களுடைய நாற்காலிகள் காலியாகக் கிடக்கின்றன. கவர்னர் உரை மீது விவாதம் நடக்கிறது. எதிர்க்கட்சியினர் என்ன விமர்சனங்கள் கொடுக்கிறார்கள், என்ன கருத்துக்களைச் சொல்கிறார்கள் என்று கேட்பதற்குக் கூட அவர்கள் இல்லை. எதிர்க் குரலுக்கு காது கொடுக்கிறார்களா, அவசியம் இல்லை, அக்கறை இல்லை, எப்படியோ ஓட்டு போடுகிறார்கள் என்ற நம்பிக்கை. எந்த நிலை ஏற்பட்டாலும் டிச்சைக்கூட கடந்து வந்து வோட்டு போட்டு விடுகிறார்கள்.





நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆளும் கட்சியினருக்கு. கால சக்கரம் இன்றைய 12 ஆம் தேதியோடு நின்று விடுவது இல்லை. இந்த மண்ணிலே எவ்வளவோ மணி மகுடங்கள் புதைந்துபோய் இருக்கின்றன. ஆண்டவர்கள் நிரந்தரமாக ஆள முடியாது என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். முதலிலே இந்த விவாதத்தை இங்கே அமர்ந்து கேட்கிற ஒரு பண்பை அமைச்சர்கள் முன் உதாரணமாகப் பெற வேண்டும் என்று இந்த நேரத்திலே குறிப்பாக நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்னுடைய திருப்பூர் நகர 2-வது குடிநீர்த் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அதற்கு தெரு தெருவாகப் பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் இன்றைய அளவில் அது அங்கே நிறைவேற்றப்பட்டு இருக்கிறதா? சிதம்பரம் ரகசியத்தைக் கூடத் தெரிந்து கொள்ளலாம் போல் இருக்கிறது. திருப்பூர் நகர 2 ஆம் குடிநீர் திட்டத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பே இல்லை. அது தான் கொடுமை. எனவே இவற்றை விரைவில் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவற்றை எல்லாம் நாங்கள் சொல்லவில்லை நாட்டு மக்கள் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் மூலம் சொன்னார்கள். நீங்கள் தான் அவற்றைக் கேட்கவில்லை. ஆனால் இங்கே கவர்னர் உரையிலே செவி மடுப்பு கருவி கொடுக்கப்போவதாக சொல்லப்பட்டு இருக்கிறது. எதிர்க்கட்சிகள் சார்பாக நான் சொல்ல விரும்புகிறேன், முதலில் அமைச்சர்கள் எல்லோருக்கும் ஒரு செவி மடுப்புக் கருவி கொடுக்கவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. கேளாக்காதினராய் கோட்டையின் உள்ளே நீங்கள் இருக்கிறீர்கள். கோட்டையின் உள்ளே உள்ள அமைச்சர் பெருமக்கள்தான் நாட்டிலே உள்ள குறைகளைக் கேட்கவில்லை. கேட்க வாய்ப்பு உள்ளவர்கள் வெளியே இருக்கிறார்கள். நீங்கள் செவி மடுப்புக் கருவி அணிந்து கொள்ளுவது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக நலன் என்ற பெயரிலே பரோபகாரம் செய்வதாகப் பெருவாரியாகக் கூறியிருக்கிறார்கள். அதில் தப்பு இல்லை. நிறைய செய்து இருக்கிறீர்கள். இன்னும் நிறைய செய்யுங்கள். நிறைய இல்லை. தர்ம சத்திரம் சாவடி கட்டுவது புதிதா? அது கவைா இல்லை. தர்ம சத்திரம் சாவடி கட்டுவது புதிதா? அது எப்போகோ கட்டினார்கள். ஆதரவற்றோர் இல்லம்

போன்றவை சேர, சோழ பாண்டியர்கள் காலத்திலேயே கட்டப்பட்டவை. மங்கம்மா சத்திரம் போன்ற பல சத்திரங்களைப் பார்க்கலாம். நான் குறிப்பாகக் குறிப்பிட விரும்புவது, இங்கே நடக்க முடியாதவர்களுக்கும் நடை வண்டி தருகிறீர்கள்; நடக்க முடியாதவர்களுக்கு நடை வண்டி தருவது சிறந்த மருத்துவம் அல்ல; நடக்க முடியாதவர்களை நடக்க வைப்பது தான் சிறந்த மருத்துவம். அதற்கு ஏதாவது இந்த அரசிடம் பிரயோசனம் உண்டா? இந்த கவர்னர் உரையிலே திட்டவட்டமான கொள்கைகள் உண்டா? திட்டங்கள் உண்டா? இல்லை. தமிழ்நாடு முழுவதும் கிராமப்புறப் பெண்களுக்கு கழிவறை கட்டியிருக்கிறார்கள். அது எப்படி இருக்கிறது தெரியுமா? சுத்தம் செய்ய தண்ணீர் இல்லாமல் அவைகள் இருக்கின்றன. அதேபோல் தமிழ்நாடு நிர்வாகத்தில் உள்ளவர்கள் இந்த கழிவறையை யாராவது பார்த்து இருக்கிறார்களா? கழிவறையைக் கட்டிவிட்டார்கள். யாரோ சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கம்பத்தை போட்டார்கள். கம்பியை நீட்டினார்கள் கரண்டு இல்லை என்று. கழிவறைகளைக் கட்டிவிட்டு அங்கே தண்ணீர் வரவில்லை என்றால் அங்கே எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள். தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம் போல்தான் இருக்கும். ஆகவே அது தண்ணீர் இல்லாததால் பயன் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக வேலை இல்லாதவர்களுக்கு நிவாரணம் தருவதாக சொல்லியிருக்கிறீர்கள். மெத்த மகிழ்ச்சி. நிறையத் தாருங்கள். ஆனால் தமிழ்நாட்டிலே மூடிக்கிடக்கின்ற பஞ்சாலைகளை திறப்பதற்கு உங்களுக்கு அக்கறை உண்டா? தொழிலாளர் நல அமைச்சர் இன்றையதினம் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். திருப்பூர் காட்டன் ஸ்பின்னிங் மில் மற்றும் கோவை மாவட்டத்தில் உள்ள மூடப்பட்ட மில்களினால் நான்கு ஆயிரம் பேர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். வேலை அற்றவர்களுக்கு நிவாரணத்தைக் கொடுத்துவிட்டு வேலையில் இருப்பவர்களை வீட்டுக்கு அனுப்புவது ஒரு பெரிய திட்டம் அல்ல. அவர்களுக்கு வேலை வாய்ப்பு தர நீங்கள் இங்கே சட்ட மன்றத்தில் குறிப்பாக சுட்டிக்காட்டப்படுகிறபோது அவைகளை மாநில அரசே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து, இந்த தொழில் துறையில் மத்திய மூலதனம்
பெறுவதில் இந்த மாநில அரசு ஒரு அக்கறை அற்ற, அசட்டை
போக்கில்தான் இருந்து வந்திருக்கிறது என்பதை தெரிவித்துக்
கொள்கிறேன். ரயில்பெட்டி தொழிற்சாலை ஆந்திராவுக்கு
போய்விட்டது. தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய ஒன்று அது.
அதற்கு காரணம் இந்த மாநில அரசு எச்சரிக்கை தன்மை
இல்லாமல் இருப்பது தான் என்பதை நான் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். அதேபோல் திருப்பூரிலே பனியன் தொழிற்
சாலைகள் இருக்கின்றன. பஞ்சாபில் இருக்கக் கூடியவர்கள்
ஏற்றுமதி ஆர்டர்களைப் பெற்று திருப்பூருக்கு அதை அனுப்பு
கிறார்கள். திருப்பூரில் தொழிலாளர்கள் அதை தயாரித்து
அவற்றை பஞ்சாபில் தயாரித்ததுபோல் வெளிநாடுகளுக்கு அதை
ஏற்றுமதி செய்து விடுகிறார்கள். அந்த ஆர்டர்களை நமது
தமிழ்நாடு அரசே முன்நின்று பெற்று திருப்பூரில் உள்ள சிறு
தொழில்களை வளர்க்க உதவி செய்யக் கூடாது? சிந்தித்துப்
பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் குறிப்பாக
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-50)

அடுத்து, அதே தொழிலுக்கு 5 பர்சென்ட் விற்பனை வரி
விதிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் தொழில் முன்னேற்றம்
பெற்றிருப்பதாக இந்த அரசு சொல்கிறது. மேற்கு வங்கத்தில்
பனியன் தொழில் உற்பத்தியாளர்களுக்கு சேல்ஸ் டாக்ஸ்
இடையாது. கர்நாடகம், பஞ்சாப் போன்ற இன்னா பிற மாநிலங்
களில் இந்த வரி கிடையாது. ஆனால் தமிழ்நாட்டில் பனியன்
தொழில் உற்பத்தியாளர்களுக்கு மட்டும் 5 சதவித விற்பனை வரி
போடுவது நியாயம் தானா? அந்தத் தொழில் ஆல் இந்திய
மார்க்கெட்டில் பிற மாநிலங்களோடு போட்டியிடுகின்ற வாய்ப்பை
இந்த அரசின் நிலைபாடு தடுக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள
வேண்டாமா? ஆகவே, 5 பர்சென்ட் விற்பனை வரியை ரத்து
செய்ய வேண்டுமென்பதை நான் இந்தச் சட்டமன்றத்தில்
குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சமீபத்தில் ஒரு செய்தியைப் பார்த்திருப்பீர்கள். 50,000
பேர்கள் பணியாற்றுகின்ற 600 வேஸ்ட் காட்டன் மில்ஸ் மூடப்படு
கின்ற அபாயம் இருக்கிறது. அதைப்பற்றி இந்த அரசு அக்கறை
செலுத்தியிருக்கிறதா? அதைப்பற்றி ஏதாவது அறிவிப்பினை
சபைக்கு வெளியிட்டிருக்கிறதா?

1,55,000 பேர்கள் பணியாற்றுகின்ற பஞ்சாலைத் தொழிலாளர்கள் மீது முதலாளிகள் பிரகடனப்படுத்தப்படாத ஒரு யுத்தத்தைத் தொடங்கிவிட்டார்கள். இன்றைக்கு அவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? தற்போது இருக்கின்ற தமிழக அரசு தங்களுக்கு ஒரு வலுவான கேடயம் என்ற முறையில், முதலாளிகளின் நலன்கள் சரியாகப் பாதுகாக்கப்படுகின்ற புத்திசாலி ஆட்சி என்பதால் தைரியத்தோடு அவர்கள் சொல்கிறார்கள். நாங்கள் 1,55,000 பஞ்சாலைத் தொழிலாளர்களில் ஒரு பகுதியினரை ஆட்குறைப்பு செய்வோம்; ஆட்குறைப்பு செய்வது மட்டுமல்ல—மோர் ஓர்க் லோட்—அதுமட்டுமல்ல, சம்பளத்தையும், பஞ்சப் படியையும் குறைப்போம் என்பது போன்ற பதினொன்கு அம்சங்களை உள்ளடக்கிய பிரகடனத்தை வெளியிட்டிருக்கிறார்கள். எனவே, இந்த மாநில அரசு ஒரு புதிய பஞ்சாலைக் கொள்கையை உருவாக்குவதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் 1,55,000 தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபடுகின்றபொழுது ஒரு கொந்தளிப்பான பதட்ட நிலை தமிழ்நாட்டில் நிலவும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே இருக்கக்கூடிய அருமை ஆளுங்கட்சி உறுப்பினர்கள், மாண்புமிகு திரு. வி. பி. சிந்தன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல இது போலீஸ் இராஜ்யம் அல்ல என்று சொன்னார்கள். ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.-க்களை போலீஸ் தீண்டுவானா? தீண்டமாட்டான். போலீஸ் தீண்டியவனுக்குத் தானே எங்கே போலீஸ் இராஜ்யம் நடக்கிறது என்பது தெரியும். எனவே, எங்களுடைய அனுபவத்தில் எழுந்த வேதனையின் காரணமாகத்தான் நாங்கள் விமர்சிக்கிறோமே தவிர, மேட்டிலேயிருந்து கொண்டு சொல்வதல்ல. எதிர்க்கட்சி என்பதால் ஆத்திரத்தில் ஆளுங்கட்சியைத் திட்ட வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை.' நடந்த நிகழ்ச்சிகளிலேயிருந்து ஒரேயொரு உதாரணத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

உங்களுக்கெல்லாம் தெரியும், சாத்தூரில் பகிரங்கமாக வீட்டுக் கதவை உடைத்து வழக்கறிஞர் ஒருவர் தெரு நாய் போல இழுத்து வரப்படுகிறார். காரணம், யாரோ ஒருவருக்காக அவர் ஆஜராகி விட்டாராம். இந்த மாமன்றத்தில் நான் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நாடு போற்றிய இந்திரா





காந்தி அம்மையார் அவர்களைச் சுட்டுக்கொன்ற சத்வந்சிங்கிற்கு வழக்கறிஞராக சுப்ரீம் கோர்ட்டில் ஒருவர் ஆஜரானார். அப்படி இருக்கும்பொழுது சாமானியன் ஒருவனுக்காக வேறு ஒரு வழக்கறிஞர் ஆஜராகக்கூடாதா? சுப்ரீம் கோர்ட்டில், இந்திரா காந்தியை கொலை செய்த ஒருவருக்கு வழக்கறிஞர் ஆஜராவதற்கு இந்தச் சட்ட அமைப்பு அனுமதிக்கிறது. அங்கீகரிக்கிறது. அதைப்போல இங்கே ஒரு சாமானியனுக்கு ஒரு வழக்கறிஞர் ஆஜராகக்கூடாதா? இந்த நிகழ்ச்சி நடந்ததே, அதன்மீது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்று கேட்க விரும்புகிறேன். இப்பொழுது வழக்கறிஞர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சி எதையும் ஊறப்போட்டுத்தான் நடவடிக்கை எடுக்கிறதே தவிர உடனடியாக எதையும் செய்வதில்லை. பிரச்னைகள் வெடித்துச் சிதறி, சேதாரம் அதிகம் ஆகின்றபொழுதுதான் இந்த அரசு தலையிடுமே தவிர, சேதாரம் குறைவாக இருக்கின்றபொழுது அக்கறை காட்டுவதில்லை.

இன்னொரு உதாரணத்தையும் சொல்ல விரும்புகிறேன். நெய்வேலியில், பிரஸ் ரிப்போர்ட்டர் ஒருவர் கட்டையால் அடிக்கப்பட்டார். சூப்பிரண்டெண்ட் ஆப் போலீஸ் அவர்களால் அடிக்கப்பட்டார் அந்தப் பத்திரிகை நிருபர். ஆனால் என்ன நடந்தது தெரியுமா. அதுபற்றி இந்தப் பேரவைக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அடித்தவரோ எஸ்.பி., ஆனால் ஹோம் செக்ரட்டரி வருத்தம் தெரிவித்து விட்டார். ஆனால் கட்டையால் அடித்த எஸ்.பி. வருத்தம் தெரிவிக்கவில்லை. நான் இந்த ஆட்சியைக் கேட்க விரும்புகிறேன். நான் இந்த அரசைக் கேட்க விரும்புகின்றேன். உங்கள் ஆட்சியில் போலீசார் வருத்தம் தெரிவிக்க மாட்டார்களா? அதிகாரிகள் தான் வருத்தம் தெரிவிப்பார்களா? ஹோம் செக்ரட்டரிதான் வருத்தம் தெரிவிப்பார்களா? ஹோம் செக்ரட்டரிதான் வருத்தம் தெரிவிப்பார்; எஸ்.பி. வருத்தம் தெரிவிக்க மாட்டாரா? எனவே, நான் கேட்க விரும்புகிறேன், நிருபரைக் தரக் குறைவாக நடத்திய, கட்டையால் தாக்கிய அந்த எஸ்.பி.யை சஸ்பெண்ட் செய்யவேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன். இல்லாவிட்டால் தமிழகத்தில் இதுபோன்ற சம்பவங்கள் மேலும் மேலும் நடக்கும். இவ்வளவு இடங்களில் நடக்கின்றன. ஆனால் போலீஸ் இராஜ்யம் இல்லை என்று சொல்கிறீர்கள். சுப்ரீம்

கோர்ட் என்ன சொல்லியிருக்கிறது தெரியுமா? இந்தியாவிலேயே அதிகமான போலீஸ் அக்கிரமம் நடந்தது தமிழ்நாட்டிலே தான் என்று. அது மிக அதிகமாக நடைபெற்றிருக்கிறது. தமிழ் நாட்டிலே தான் மிக அதிகமாக போலீஸ் அட்டூழியம் நடைபெற்றிருக்கின்றது என்று கண்டனம் செய்யப்படுகின்றது. எனவே மக்களை அடிக்கக் கற்றுக் கொடுக்கின்ற பழைய பிரிட்டிஷ் முறையை மாற்றி விடுதலை இந்தியாவிற்குப் பொருத்தமான வழிகளில் காவலர்களுக்குப் பயிற்சி கொடுக்கிற திட்டத்தைப் பற்றி இந்த அரசு பரிசீலிக்க வேண்டாமா? அதைப் பற்றி எப்போது பரிசீலிப்பார்கள் என்று தெரியவில்லை.

அடுத்து மின்சாரம். இது கொடுமையிலும் கொடுமை. மின்சாரத்திற்கென்று அநேகமாக ஒரு அமைச்சர் இருக்கிறார். என்ன நடந்திருக்கிறது தெரியுமா? பவர் கட். அதற்கு என்ன காரணம் சொல்லப்படுகின்றது? நீர் மின்சாரம் தண்ணீர் இல்லாததால் உற்பத்தி செய்யப்படவில்லை. அடுத்து அனல் மின்சாரத்திற்கு நிலக்கரி இல்லையாம். அனல் மின்சார உற்பத்தியில் இயந்திரக் கோளாறு. அப்படி என்றால் எதற்காக இங்கே ஒரு அமைச்சர்? இன்னொரு கொடுமை தெரியுமா? ஆந்திராவில் இருக்கக்கூடிய மத்திய அரசுத் துறைக்குச் சொந்தமான சூப்பர் மின் நிலையத்திலேயிருந்து தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய பங்கை இன்று வரை இந்தத் தமிழ்நாடு மின்சார வாரியம் பெறவில்லை. இவ்வளவு இருட்டடிப்புக்கு என்ன காரணம்? உரிய சாதன உத்தரவாதத்தை மின்சார வாரியம் அளிக்காததால்தான் தமிழ் நாட்டிற்குக் கிடைக்கவேண்டிய பங்கு கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகின்றது. இதுபற்றி இந்த அரசுக்கு அக்கறை இருக்கின்றதா? அந்தத் துறை சிந்தித்ததா? சிந்திக்கவேயில்லை. இவ்வளவு கொடுமையான பாதிப்பு இந்தத் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கின்றது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள் என்பதைக் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து பொது விநியோக முறையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பொது விநியோக முறையில் 20 ஆயிரம் ஃபேர் ப்ரைஸ் ஷாப்ஸ் ஓப்பன் செய்யப்பட்டிருக்கின்றன. எல்லோருக்கும் 20 கிலோ அரிசி வழங்கப்படுகிறதாம். எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்பது தெரியவில்லை.





இன்னொரு கொடுமை என்ன தெரியுமா? ஒரு சாதாரண அத்துக்கூலி, ஒரு சாதாரண தொழிலாளி அவனுக்கு 10 ரூபாய் சம்பளம் கிடைக்கும். அதைக் கொண்டு போய் அவன் நியாய விலைக் கடையில் கொடுத்து அவனுக்கு என்ன தேவையோ அதைத்தானே வாங்க முடியும். நீ எல்லாவற்றையும் வாங்கினால் தான் தருவோம் என்று சொன்னால் அது என்ன நிர்ப்பந்தம்? அந்த நிர்ப்பந்தம் பற்றி இந்த அரசுக்குத் தெரியாதா? ஆகவே இந்த அரசுக்கு இந்தப் பேரவையின் வாயிலாக நான் வலியுறுத்த விரும்புவது, அவர்கள் என்ன விரும்புகிறார்களோ, அதைக் கொடுக்க வேண்டுமே தவிர போகாதவற்றை எல்லாம் அவர்கள் தலையிலே தள்ளுகின்ற நிர்ப்பந்தப் போக்கைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்னொன்று சொன்னார்கள். என்.ஜி.ஓ.-க்களைப் பற்றி ஒரு உறுப்பினர் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டார். என்.ஜி.ஓ.-க்களுக்கு நன்றி கிடையாது என்று சொன்னார்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

வள்ளுவன் இந்த ஒரே ஒரு குறளைத்தான் எழுதியிருக்கிறானோ, வேறு குறளே எழுதவில்லையா? எனவே ஏன் அதை எதிர்பார்க்கிறார்கள்? உறுப்பினர்கள் பேசுகின்றபோதெல்லாம் நன்றி தெரிவித்துத்தான் பேசுகிறார்கள். நாங்கள் எந்தத் தனி மனிதனையும் மதிக்கக் கற்றுக்கொண்ட இயக்கத்தின் பிரதிநிதி என்பதால் சொல்கிறோம், எந்த மனிதனும் போற்றப்பட வேண்டியவன்தான். ஆனால் நீங்கள் மக்களை அண்டி பதவியில் இருங்கள்; மக்களை அண்டாமல் தனி மனிதர்களை நம்பி அல்ல. அப்படி நம்புவது தவறு. அப்படி தனி மனிதர்களை நம்பினால் அது சரியான நிர்வாகம் அல்ல. சாதாரண மக்களுக்குத் தொண்டாற்றுவதன் மூலம் நீங்கள் மக்களின் பிரதிநிதியாக விளங்க வேண்டுமே தவிர பிறரின் தயவில் நின்று நாம் பிரதிநிதியாக இருக்கவேண்டும் என்ற உணர்வுக்கு ஆட்பட்டுத்தான் நீங்கள் என்.ஜி.ஓ.-க்களை அப்படி எதிர்பார்க்கிறீர்கள். அந்த என்.ஜி.ஓ.-க்கள் எங்களுக்கு வேலை செய்யவில்லை தேர்தலில்; எதிர்தரப்புக்கு வேலை செய்தார்கள் என்று சொல்கிறீர்கள். இத்தகைய போக்கு சரியா? சரியல்ல.

சப்ஜக்ட்டிவ் க்ரிட்டிசிஸம். என்னுடைய நிலைமையிலே இருந்து நான் விமர்சனம் செய்தால்தான், எத்தகைய போக்கு நிலவுகின்றது என்று குறிப்பிட்டு சுட்டிக்காட்டினால்தான் உங்களுக்கு நல்லது. அத்தகைய இடிக்கும் துணையை நீங்கள் ஏன் வெறுக்கிறீர்கள்? எதிர்க்கட்சி என்பது என்ன தெரியுமா? ஆளும் கட்சியின் நடவடிக்கைகளில் கூர்மை வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆளும் கட்சிக்குக் கூர்மை வேண்டுமானால் எதிர்க்கட்சி எப்படி இருக்க வேண்டும்? சாணைக்கல்லுக்கு நிகரான தகுதி படைத்ததுதான் எதிர்க்கட்சி. ஆகவே எதிர்க்கட்சிக்கு வாய்ப்பு அதிகம் வழங்க வேண்டும். இங்கே என்னுடைய கட்சியிலே கூட ஒருவருக்குத்தான் வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது என்னவென்றால் எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சியில் கூர்மையை உருவாக்குவதற்குரிய சாணைக்கற்கள் போன்றவை யாகும். எனவே எங்கள் விமர்சனத்தை இடிக்கும் துணையாக நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாட்டு நடப்புகள், நிலவுகின்ற நிலைமைகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் உங்களைப்போல் எங்களுக்கும் பொறுப்புண்டு. நாங்கள் ஒன்றும் பொய் சொல்கிறவர்கள் அல்ல. வேதனைகளிலிருந்து வெளி வருகின்ற விமர்சனங்களைத்தான் உங்கள் முன்னால் சொல்கிறோம்.

இன்னொன்று. இந்த அரசு எவ்வளவு புத்திசாலித்தனமற்ற நிலையில் இருக்கின்றது என்று சொன்னால் வருத்தப்பட மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். இந்த மின்சாரத் துறையின் தேவை என்ன என்று மதிப்பீடு செய்திருக்கிறீர்களா? மின்சார உபயோகம் வளர்ந்து கொண்டே வருகின்றது. இந்த வளர்ச்சி வேகத்திற்கு ஒப்ப தற்போதைய மின்சாரத் தேவையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு உற்பத்தியை உருவாக்குவதில் உள்ள தீட்சண்ய புத்தி இந்த கவர்னர் உரையில் இருக்கின்றதா? திட்டங்கள் வெளியிடப்பட்டிருக்கிறதா? என்றால் கிடையாது. பொதுவாக அறிவிக்கப்படும், நிறைவேற்றப்படும் என்றுதான் இருக்கின்றது. இன்னும் எவ்வளவோ குழப்பங்கள் மேலிடு கின்றன. அதற்கெல்லாம் என்ன காரணம்? இந்த அரசின் நடவடிக்கைகள் எல்லாம் விலாங்கு மீன் மாதிரி இருக்கின்றது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக





(நண்பகல் 12.00)

ஆட்சி, நடைமுறையில் ஒரு விலாங்கு மீன் மாதிரி இருக்கிறது. எப்படி? காஞ்சிப் பெரியவருக்கும் சரணம் பாடுவார்கள், ஈரோட்டுப் பெரியாருக்கும் படம் திறப்பார்கள். நான் கேட்கி றேன், நீங்கள் ஈரோட்டுப் பெரியாரின் பரம்பரையானதால், மத மடாலயங்களுக்குச் சொந்தமான நிலத்தைக் கையகப்படுத்த ஏன் தயங்குகிறீர்கள்? எனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை. ஆனால், கடவுளை நம்புகிற மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் பெரு மக்களுக்குச் சொல்கின்றேன், ஆண்டவனின் பிள்ளைகள்தானே மக்கள். ஆண்டவனின் பிள்ளைகள் மக்கள் என்றால், அப்பனின் சொத்து பிள்ளைக்கு வாராதா? ஏன், இந்த மாநிலத்தில் மத மடாலயங்களுக்குச் சொந்தமான நிலங்களை, தனித்து, பிரித்து, ஏழை எளியவர்களுக்கு, நிலமற்ற ஏழை எளியவர்களுக்கு விநியோகிக்கக் கூடாது? விநியோகிக்க வேண்டுமென்பதை இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

பொது விநியோக முறைக்கு ஒரு மக்கள் கண்காணிப்புக் குழு போடப்பட வேண்டுமென்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து பள்ளிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பள்ளிகளின் நிலை என்ன? ஏழரை ஆண்டு காலமாக என்னுடைய திருப்பூர் சட்டமன்றத் தொகுதியில் ஒரு பள்ளி, அநேகமாக இடிந்து விழுகிற நிலைமையில் இருக்கிறது. நொய்யல் பகுதியிலே, முஸ்லிம் பெருமக்கள் வாழ்கிற பகுதியிலே அது இருக்கிறது. அது எப்பொழுது இடிந்து என்ன ஏற்படும் என்று தெரியாத நிலை இருக்கிறது.

அதேபோல், ஜீவா பாய் பெண்கள் உயர்நிலைப் பள்ளியினுடைய காம்பவுண்ட் வால் இடிந்து கிடக்கிறது. அது இரவில் சமூக விரோதிகளின் இருப்பிடமாக மாறிப் போய் விட்டது. அது பற்றி எவ்வளவு மகஜர்களைக் கொடுத்தார்கள்? எவ்வளவு பேர்களை வேண்டிப் பார்த்தார்கள்? வேண்டுதல்களை அந்த அதிகாரிகள் கேட்டார்களா? அமைச்சரவை எப்படி

[திரு. கு. சுப்பராயன்] [1985 மார்ச் 12

இருக்க வேண்டும்? அதிகாரிகளை ஓட்டுகிற, சாட்டைக் கோல் போல இருக்க வேண்டும். இல்லை அப்படி. ஆனால் என்ன நடக்கிறது தெரியுமா? ஒரு அமைச்சரவை அதிகாரிகளை ஓட்டுகிற, விரட்டுகிற சாட்டைக் கோலாக இருப்பதற்கு மாறாக வேறு மாதிரி ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. அதனால்தான் நகரத்தில் எதுவும் இல்லை: நகரம் அல்ல, நரகமாக இருக்கிறது. அந்த நிலை மாற வேண்டும். அதற்கு உடனடியாக, நகராட்சி நிர்வாகத்தின் கீழ் இருக்கிற நகர அமைப்பு மாற வேண்டும்.

இன்னொன்று. நகராட்சிகள் 20 ஆண்டு காலத்தில் விரிவடைந்திருக்கின்றன. நகர மக்கள் தொகை பெருகியிருக்கிறது. ஆனால், முனிசிப்பல், நகரசுத்தித் துப்புரவுத் தொழிலாளிகளின் எண்ணிக்கை அதேதான். நகராட்சி ஊழியர்களின் எண்ணிக்கை அதேதான். என்ன புத்திசாலித்தனமான அளவுகோல்? யோசித்துப் பாருங்கள். அமைச்சரவை விரிவாகட்டும், ஆட்சேபனை இல்லை. ஆனால், நகரசபை தொழிலாளர்கள் விரிவடைய வேண்டுமா, இல்லையா? நகர சுத்தித் தொழிலாளர்கள்தான் அதிகமாக விரிவடைய வேண்டும். மக்கள் தொகை அதிகமாகும்போது, மக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பதற்கு டைனமிக்கான ஒரு நிர்வாக அமைப்பு வேண்டுமென்றால் நகராட்சிக்கும் ஊராட்சிக்கும் பிரதிநிதிகள் இல்லா நிலையைப் போக்கி, உடனடியாகத் தேர்தல் நடத்துவதோடு, அவற்றை மக்களின் பிரதிநிதிகள் நிர்வகிப்பதற்குரிய ஒரு வாய்ப்பை வழங்க இந்த அரசு உத்தரவிட வேண்டும். தேர்தலுக்கான தேதிகளையும் அதற்கான அறிவிப்பையும் நீங்கள் குறிப்பாக தெரிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன். நீங்கள் கவர்னர் உரையில் பல விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இலங்கைத் தமிழர் பிரச்னையைப் பற்றி பேசுவதற்குரிய வாய்ப்பு தற்போதில்லை. இன்னும் பல்வேறு விஷயங்களை மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வரும் சமயத்தில் பேச வாய்ப்புள்ளதால் அவற்றைப் பற்றி சொல்லாமல், ஒன்றை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். இன்று உலக வங்கியிடம்,



1985 மார்ச் 12] [திரு. கு. சுப்பராயன்]

தமிழ் நாட்டின் நிதி, தொப்புள்கொடி இணைக்கப்பட்டு விடும் என்ற பேரபாயத்தை நான் இந்த மாமன்றத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். கசாப்புக் கடைக்காரனுக்கு நிகரான ஒன்றுக்கு பெயர்தான் உலக வங்கி. போக்குவரத்துத் துறை அமைச்சர் இப்பொழுது இல்லை. ஏன், போக்குவரத்துத் துறையிலே இரண்டு முறை டிக்கெட் கட்டணம் உயர்த்தப்பட்டது? நிர்பந்தம் எங்கேயிருந்து வந்தது? உலக வங்கியிலேயிருந்து வந்தது, நீங்கள் ஆயிரம் கோடி ரூபாய் முதல் போடுவீர்களானால் உங்களின் இரத்த நாளங்களில் விஷப் பல்லை வைக்கக் கூடும் ஒரு உலக அமைப்புதான், ஒரு ஏகாதிபத்திய அமைப்புதான் அந்த உலக வங்கி. உலக வங்கியின் உதவிகளில் மிகுந்த எச்சரிக்கையோடு நீங்கள் நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எட்டாவது சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு செம்மலை அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை வழிமொழிந்து எனது கருத்துக்கள் சிலவற்றை முன்வைக்க விரும்புகிறேன். இங்கே, இப்பொழுது தேர்தல் [illegible]தைப் பற்றி, வெற்றியைப் பற்றி பலரும் தங்களுக்கு [illegible] பல விமர்சனங்களைச் செய்தார்கள். ஆனால் நமது அருமைக்குரிய நண்பர் திரு. ரகுமான்கான் அவர்கள் மிக அழகாக [illegible] ஒரு புயல் என்று குறிப்பிட்டார்கள். ஆக புயலில் தப்பிய [illegible] ஒரு புயல் என்று குறிப்பிட்டார்கள். ஆக புயலில் தப்பிய [illegible]மரமாக [illegible] நின்றிருக்கிறேன் என்றார்கள். அவர் கூட இருக்கக்கூடிய நண்பரை நாங்கள் தேடிப் பார்த்தோம், [illegible] கணம் அனுதாபப்பட்டோம். ஆகவே இது புயல் அல்ல. [illegible] சொல்ல வேண்டுமென்றால் புரட்சித் தலைவருடைய புயல். [illegible] சந்திக்கிற புயல் இனிமேல் தான் இருக்கிறது. நடந்து [illegible] சட்டமன்றத் தேர்தலில் நீங்கள் சந்தித்தது அவர்களுடைய பெருமூச்சுதான். புரூக்லின் மருத்துவமனையிலிருந்து வெளிவந்த பெருமூச்சு. இங்கே விட்ட பெருமூச்சு அல்ல. பல்லாயிரக் [illegible] கணக்கான மைல்களுக்கு அப்பால் மக்களை நான் சந்திக்க முடியவில்லையே, அன்றாடம் சந்திக்க வேண்டிய லட்சக்கணக்கான

மக்களைச் சந்தித்து அவர்களுக்கான பணியை ஆற்ற முடியவில்லையே என்று ஆதங்கப்பட்டு அந்த அன்புப் பெருக்கால் அவர் விட்ட பெரு மூச்சுதான் உங்களை நிலைகுலைய வைத்திருக்கிறது என்பதை நான் பணிவோடு உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தப் பெருமூச்சின் மறைவில் நமது நண்பர் திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் இங்கே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்றால் உங்களைப் போல் புயலுக்குத் தப்பிய மரம்தான். ஆகவே அந்தப் பெருமூச்சின் காற்று வேகத்தை நம்மவர்களில் சிலர் தடுத்தார்கள். அவர் இங்கே வந்து வீராப்போடு பல கருத்துக்களைப் பேசுவதற்கு வாய்ப்புகளைப் பெற்றார்கள் என்பதை நான் மறைக்க விரும்பவில்லை.

ஆகவே நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் புரட்சித் தலைவர் பெற்ற வெற்றிக்கு ஈடுஇணை எதுவும் இல்லை. ஜனநாயக நாட்டில் ஒரு தலைவன் பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து இவ்வளவு மகத்தான வெற்றியைப் பெற்றதற்கு சாட்சியங்களாக கூறுவதற்கு நம்மிடம் சரித்திரத்தில் இடமில்லை. ஆனால் அதை கரிகால் பெருவளத்தான் ஏழு வேளிர்களை வென்று கொடிநாட்டிய அந்தப் பெருமையோடு ஒப்பிடலாம். அது மன்னர் காலம், நெப்போலியன் பெற்ற வெற்றிக்கு ஒப்பிடலாம். அது நாம் பழங்கால சரித்திரத்தில் தள்ளிவிடக்கூடிய காரியங்கள். ஆகவே ஈடுஇணையற்ற புரட்சித் தலைவரின் சரித்திரம் போற்றுகிற மகத்தான வெற்றியை நீங்கள் இங்கே சொன்ன விமர்சனங்களால் கொச்சைப்படுத்தி விட முடியாது என்பதை மக்கள் மன்றம் தீர்ப்பாக வழங்கி இருக்கிறது. ஆகவே, இந்த மாபெரும் தீர்ப்பிற்குப் பின்னாலே தான் ஆளுநர் உரையில் மக்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையின் விளைவு தான் இந்தத் தேர்தலின் முடிவு என்பதை சொல்லி இருக்கிறார்கள். நீங்கள் அதை ஒப்புக்கொள்ள மாட்டீர்கள். 1977-லும் நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. 1980-லும் நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இப்போதும் நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. நீங்கள் ஒப்புக்கொள்ள மாட்டீர்கள். மக்கள் உங்களை 50-லிருந்து 30 ஆக்கி, 30-லிருந்து 22-ஆக்கி, இனி அது கம்யூனிஸ்ட் உறுப்பினர்களைப் போல இரண்டானாலும் மக்கள் தீர்ப்பை மட்டும் மதிக்க மாட்டீர்கள். அதன் விளைவு தான் உங்களுடைய தேய்வு என்பதை நான்





மெத்தப் பணிவோடு இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மக்கள் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள் என்றால் இந்தத் தீர்ப்பிலே பெற்றிருக்கிற வெற்றி, நீங்கள் பெற்றிருக்கிற 22 இடங்கள் கூட உங்களால் உங்கள் கருத்துக்களை, கொள்கைகளை ஏற்றிருக்கிற மக்களால் கிடைத்த வெற்றி என்று நான் சொல்ல மாட்டேன். சில இடங்களில் நமது கழகத்தோழர்களுக்கு கிடைத்த தோல்வி உங்களால் தேர்வுசெய்யப்பட்டு, ரெக்ரூட் செய்யப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர்கள் இன்று உயர்ந்த நிலையில் உயர்த்தப்பட்டு இருக்கிற அவர்கள் செய்த உதவி. நீங்கள் பல இடங்களில் ஆதிதிராவிடர்களை அச்சுறுத்தி அவர்களை தடுத்ததன் விளைவாகும். அதுமட்டுமல்லாமல் திட்டமிட்டு பல்லாயிரக் கணக்கான ஆதிதிராவிடர்களை வாக்காளர்பட்டியிலிருந்து நீக்கி சதிசெய்து வாக்களிக்காமல் தடுத்ததாகும். இவைகள் எல்லாவற்றையும் மீறி புரட்சித்தலைவர் தாய்நாட்டிலே இல்லாத நேரத்தில் நம்மவர்களில் சிலர் காழ்ப்புணர்ச்சி அல்லது உள்கட்சி பிரச்னையை அடிப்படையாக வைத்து உங்களுக்கு செய்த உதவி. ஆகவே இவைகள் எல்லாம் இல்லா விட்டால் இந்த 22 இடங்களைக் கூட பெற்றிருக்க முடியாது என்பதை நான் திடமாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே கம்யூனிஸ்ட் உறுப்பினர் மிக வேகமாகப் பேசினார்கள். ஆனால் இப்போது தான் சட்டமன்றத்திற்கே வந்திருக்கிறார். அவர் எடுத்து வைத்த கருத்துக்களை நமது அமைச்சர் பெருமக்களோ, அரசோ புறக்கணித்து விட்டது என்று அவர் சொல்லவில்லை. ஆனால் வீராவேசமாக பேசிவிட்டு வெளியே சென்று இருக்கிறார்கள். அவர் எங்கே சென்றிருக்கிறார் என்றால் நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கோவையில் மூடப்பட்ட மில்கள் பிரச்னை பற்றி பேசுவதற்காக அவரை அழைத்தார்கள். பேச்சை முடித்துக்கொண்டு அங்கே போய் இருக்கிறார்கள். ஆகவே தொழிலாளர் பிரச்சினையிலே இந்த அரசின் அணுகுமுறை என்னவென்றால் நம்மை மதிக்காத, அல்லது நம்முடைய கொள்கைகளை விமர்சனம் செய்கிற மாற்றுக் கட்சியிலே இருக்கிற தொழிற்சங்கத் தலைவரானாலும், அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர்களை அழைக்க வேண்டும், அவர்களோடு பேச வேண்டும்; ஒத்தக் கருத்திற்கு அவர்களைக் கொண்டுவர வேண்டும்; எந்த வழியிலாவது

[திரு. மா. சின்னராசு] [1985 மார்ச் 12

முதலாளிகளை பணியவைத்து அதற்கு ஒரு தீர்வை பெற வேண்டும் என்பதுதான். இதுதான் நம்முடைய அரசின் கொள்கை, புரட்சித்தலைவர் அரசின் கொள்கை. அதன் விளைவுதான் திருப்பூர் சுப்புராயர் சார்ந்திருக்கிற கோவை மாவட்டத்தில், மான்செஸ்டர் என்று சொல்லப்படுகிற அந்த மாவட்டத்தில் புரட்சித்தலைவர் ஆட்சிக்கு வந்ததிலிருந்து பஞ்சாலைகளில் ஒரு நீண்டகால ஸ்ட்ரைக் என்ற அடிப்படையில் ஸ்ட்ரைக்கே வந்தது கிடையாது. இந்த நேரத்தில் பழைய காலங்களை நினைவு கூறவிரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக காலத்தில் இங்கே நடந்த தொழிற்சங்க அராஜகங்களைப் பற்றி தெரியாதது அல்ல.

(பிற்பகல் 12-10)

பலர் இரத்தம் சிந்தி இருக்கிறார்கள் என்ற வரலாறு திரு. சிந்தன் அவர்களுக்குத் தெரியும். அதை எல்லாம் அவர்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தொழிற்சங்கத் தலைவர்கள் என்ற முறையில் அவர்கள் எந்தத் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுடைய கருத்தை, ஆலோசனைகளை அரசாங்கம் உதாசீனம் செய்யவில்லை. வளர்ந்துவிட்ட தொழிற்சங்கத் தலைவர்களை எந்த நேரத்திலும் மதிக்கத் தவறவில்லை. அவர்கள் ஏதாவது கன்சிலியேஷனுக்கு வந்தாலும், உதவி நாடி அமைச்சரிடம் வந்தாலும், அதற்கு மேலாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடம் வந்தாலும் தொழிற்சங்கத் தலைவர்கள் வரவேற்கப்படுகிறார்கள். அப்படி எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக பல்வேறு தொழிற்சாலைகளில் ஸ்டிரைக் நிறுத்தப்பட்டிருக்கிறது. பல்வேறு பஞ்சாலைகளில் இந்தமாதிரியான நடவடிக்கைகளினால் நல்ல பயன் ஏற்பட்டிருக்கிறது.

இங்கே ஒரு அச்சுறுத்தலைச் சொன்னார்கள். அதாவது கோவை மாவட்டத்தில் 600 வேஸ்ட் காட்டன் மில்களை மூடப் போகிறார்கள் என்று அச்சுறுத்தினார்கள். அந்த நிலை நிச்சயமாக வராது. வேஸ்ட் காட்டன் மில்களை நடத்துகிறவர்கள், பனியன் தொழிலை நடத்துகிறவர்கள் எல்லாம் பெரிய முதலாளிகள் அல்ல. அவர்கள் எல்லாம் டாட்டாக்கள் அல்ல; பிர்லாக்கள் அல்ல. சாதாரண தொழிலாளர்கள் 4 பேர் 5 பேர்



1985 மார்ச் 12] [திரு. மா. சின்னராசு]

சேர்ந்து ஆளுக்கு ஆயிரம், 5 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய் முதலீடு போட்டு இந்த வேஸ்ட் காட்டன் மில்களைத் தொடங்கியிருக்கிறார்கள். பலர் விவசாய நிலத்தைக்கூட பிளாட்டாக மாற்றி, விற்றுவிட்டு வேஸ்ட் காட்டன் மில் துவக்கியுள்ளார்கள். இப்படிப்பட்ட நிலைமையில்தான் இன்றைக்கு தமிழகத்தில் தொழில் வளர்ந்து கொண்டிருக்கிறது. நடந்துகொண்டிருக்கிற 600 மில்களில் கடந்த ஆண்டில்தான் ஏறத்தாழ 500 மில்கள் தொடங்கப்பட்டன என்பது திரு. சுப்பராயன் அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். இப்படி ஒவ்வொரு நாளும் கோவை மாவட்டத்தில் தொழில்கள் வளர்ந்துகொண்டே இருக்கின்றன. மின்சார வெட்டு இருந்தாலும், தண்ணீர் தட்டுப்பாடு இருந்தாலும் அன்றாடம் தொழில் வளர்ந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் அரசாங்கத்தின் தொழில் கொள்கைதான்: தொழிலாளர் நலக் கொள்கைதான். மத்திய அரசுக்குச் சொந்தமான வங்கிகள், மாநில அரசின் நிதி உதவி நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து தொடர்ந்து கிடைத்துவருகிற பொருளாதார உதவிதான் இத்தகைய வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கிறது.

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான எல்லாவிதமான உதவிகளையும் அரசு செய்து வருகிறது. இப்படிப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளினால் தொழில் வளம் பெருகிவருகிற நேரத்தில் நீங்கள் பிரச்சனைகளை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும். பிரச்சனைகளை ஏற்படுத்தாமல் இருந்தாலே தொழில் வளம் பெருகும், அதன் மூலம் பொருளாதார வளமும் பெருகும்; நாம் எதிர்பார்க்கும் சமூக நிலையை, பொருளாதார நிலையை எட்ட முடியும்.

ஏற்கெனவே மூடிக்கிடக்கிற ஐந்து மில்களைப் பற்றி மேடைகள் தோறும் பேசுகிறார்கள்; பத்திரிகைகளில் எழுதுகிறார்கள். அவை பற்றி தொழிற்சங்கத் தலைவர்கள் அதிகமாகவே இங்கே பேசினார்கள். அந்த மில்கள் மூடப்பட்டதற்கு அரசாங்கத்தின் கவனக் குறைவா அல்லது அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் தவறா என்று யாரும் சொல்லவில்லை; மூடப்பட்டிருக்கிறது என்று மட்டும் சொல்கிறார்கள். ஏனென்றால் அரசாங்கத்தின் நடவடிக்கை காரணமாகத்தான் அந்த மில்கள் மூடிக்கிடக்கின்றன

என்று சொல்வதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. மூடப்பட்டிருக்கின்ற அந்த மில்கள் மீண்டும் திறக்கப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு கருத்து வேறுபாடு கிடையாது; அவை திறக்கப்பட வேண்டும்.

ஏற்கெனவே ஜோதி மில் மூடிக்கிடந்தது. அந்த முதலாளிகள் வழக்கு மன்றத்தில் எந்தவிதமான செட்டில்மென்டுக்கும் வர முடியாது என்ற நிலையிலிருந்தபோது அந்தமில் தொழிற் சங்கத் தலைவர்கள் வேண்டுகோளின்படி அரசு பல இலட்சம் ரூபாய்க்கு 'காரண்டி' கொடுத்து, அந்த மில் திறக்கப்பட்டது. வலது கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களை அந்த மில்லில், அவரது கட்சியின் தொழிற்சங்கத் தலைவர்களை திரு. சுப்பராயன் பார்த்திருக்கமாட்டார் என்று கருதுகிறேன். அவர்களைப் பார்த் திருந்தால், அவர்களிடம் கேட்டிருந்தால், ஜோதி மில் திறக்கப் பட்டது எப்படி என்பதைச் சொல்லியிருப்பார்கள்.

அதைப்போன்று இராமகிருஷ்ணா மில் திறக்கப்பட்டது. இப்படி அரசாங்கத்தின் சரியான தொழில் கொள்கையினால், தொழிலாளர் நலனைப் பேணிக் காக்கின்ற நடைமுறைகளினால் தமிழ்நாட்டில் தொழில் வளம் பெருகிக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நல்ல கொள்கைகளைக் கொண்டதுதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு என்பதை அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, முனிசிபாலிட்டியில் இருக்கிற பிரச்னைகள், தேவையான வசதிகள் என்பது சட்டமன்றத்தில் பேசிய அளவுக்கு இல்லை. எங்களுடைய தொகுதிகளிலும் இப்படி பல பிரச்னை கள் உண்டு. அதற்கு பல காரணங்கள் இருக்கலாம். அதிகாரி களின் சிரத்தைக் குறைவுதான் இதற்கு எல்லாம் காரணம் என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். அதைத் தெரிந்து தான் மக்கள் வாக்களித்திருக்கிறார்கள்.

குறைகள் பல உண்டு என்பதை மக்கள் மறுக்கவில்லை. அந்தப் பிரச்னைகள் ஒருபுறம் இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னால் அவர்கள் தீர்வு காண்பார்கள் என்று கருதினார்கள். மக்களுடைய இந்த எண்ணத்தின் பிரதிபலிப்புதான் நடந்து முடிந்த பாராளுமன்ற, சட்டமன்ற தேர்தல் முடிவுகள். அவர்களுடைய முடிவுதான் முப்பிறவி எடுத்த புரட்சித் தலைவர் மூன்றாவது முறையாக தேர்ந்தெடுக்கப்





பட்டதற்குக் காரணம். மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் நன்மை கிடைக்கும் என்பதால்தான் மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

தேர்தல் முடிவுக்குப் பின்னாலே சொன்னார்கள், அனுதாப அலையினால் தான் இந்த முடிவு ஏற்பட்டது என்று. பின்னால் சென்னையில் எழும்பூர் தொகுதியிலும், வடசென்னை நாடாளு மன்றத் தொகுதியிலும் நடைபெற்ற இடைத்தேர்தலுக்குப் பின்னால் அனுதாப அலை ஓய்ந்துவிட்டது என்று சொன் னார்கள். அப்படிச் சொல்லியவர்களுக்கு பாண்டிச்சேரி தேர்தல் முடிவும் திருப்பத்தூர் தேர்தல் முடிவும் மீண்டும் அனுதா பத்தை ஏற்படுத்தி விட்டது என்று சொல்ல வைக்குமா என்று தெரியவில்லை. ஆக மக்கள் தடுமாறவில்லை; புத்தி சுவாதீன மாகத்தான் இருக்கிறார்கள்; உங்களுடைய நிலையிலேதான் தடுமாற்றம் இருக்கிறது. அதற்கு என்ன காரணம்? இந்தத் தடுமாற்ற நிலையிலிருந்து விலகி எதிர்க்கட்சிகள் நல்ல நிலை மையிலே செயல்பட வேண்டும்.

இங்கே 1952-ல் ஏற்பட்ட சில விவகாரங்களைப் பார்த்தால் நன்றாகத் தெரியும். அவற்றைத் தெரிந்து கொண்டால் இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் கூட வேறு எந்தத் தலைவர் களிடமும் பாடம் படிக்க வேண்டியதில்லை. மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இருந்த காலத்திலிருந்து இங்கே எழுப்பப் பட்ட பிரச்சினைகளை, பிரச்சினைகளுக்கு அளிக்கப்பட்ட பதில் களைப் படித்துப் பார்த்தால் கூட நாம் நிறைய கற்றுக் கொள்ளலாம். ஆகவே அந்த அளவிற்குப் பண்பட்ட இந்தச் சட்ட மன்றத்தில் நாம் இந்த அரசை வழிநடத்துவதற்கு வேண்டிய கருத்துக்களை, அனுபவங்களைச் சொல்வது நமக்குப் பயனுடைய தாக இருக்கும். நாட்டுக்கும் பயன் உடையதாக இருக்கும். இதைவிட்டுவிட்டு புரட்சித் தலைவரின் மதிப்பை மக்கள் மத்தியி லேயிருந்து குறைத்துவிடலாம் என்று நப்பாசை எதுவும் பலிக் காது என்பதை நான் இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித் துக்கொள்கிறேன்.

காலச்சக்கரம் சுழன்று கொண்டிருக்கிறது. உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். காலம் இங்கே 12 ஆம் தேதியோடு நின்றுவிடாது என்று சொன்னார்கள். அது நிற்க

வில்லை. 1977-லே நீங்கள் இருந்த நிலை, காலச்சக்கரச் சுழற்சியினால் 1980-லே இங்கே பத்தாக வந்து உட்கார்ந்தீர்கள். எங்களோடு இருந்த காரணத்தால், புரட்சித் தலைவருடைய படத்தை போட்ட காரணத்தால் புரட்சித் தலைவர் உங்கள் தொகுதிக்கு வந்த காரணத்தால் நீங்கள் பெற்ற ஸ்தானங்கள் 10 கடைசியில் அது 8, 6 ஆக ஆகி பின்னால் காலச்சக்கரம் சுழன்றதன் காரணமாக இரண்டாக ஆகி வந்திருக்கிறீர்கள். 12 ஆம் தேதியோடு முடியாது. நீங்கள் அந்த இரண்டையும் இழப்பீர்கள். உங்களுடைய போக்கிலே நீங்கள் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்றால் நீங்கள் வருங்காலத்தில் மக்களுக்குப் புரியக்கூடிய கொள்கையைச் சொல்லுங்கள். எங்களைப் போன்ற ஓரளவுக்கு அரசியலைப் படிக்க விரும்புகிறவர்கள்கூட இடது கம்யூனிஸ்ட் கட்சிக்கும் வலது கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இருக்கிற கொள்கை வேறுபாடுகளைத் துருவித் துருவிப் பார்க்கிறோம், அறிய முடியவில்லை. உங்களுக்குத் தெரிந்தது எல்லாம் நீங்கள் இந்திரா காந்தியை எதிர்ப்பீர்கள், இந்திரா காந்தி ஆட்சியை அகற்ற வேண்டும் என்ற கொள்கையை, வைத்திருக்கிறீர்களே தவிர, வேறு எந்தக் கொள்கையையும் மக்களுக்குத் தருகிற அளவிற்கு— உங்களுக்குக் கொள்கை இல்லை என்று நான் சொல்லவில்லை? உங்களுக்கு நிச்சயம் இருக்க முடியும்— அதை மக்கள் புரிந்துகொள்கிற அளவிற்கு நீங்கள் சொல்லவில்லை. அது உங்களுடைய தவறு என்று நான் சொல்ல மாட்டேன். அது உங்கள் அரசியல் வாழ்விலே நீங்கள் ஏற்படுத்திக் கொண்ட முடிவு. அந்த முடிவின் விளைவாகத் தான் வலது கம்யூனிஸ்ட் கட்சி இப்போது இரண்டாக ஆகியிருக்கிறதே தவிர, வேறு அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களைப் பார்த்து கொள்கை இல்லை என்று சொல்கிறீர்கள். நீங்கள் 1980-லே அண்ணா தி.மு.க.வோடு புரட்சித் தலைவரோடு உடன்பாடு ஏற்படுத்திக்கொண்டீர்களே, அந்த அண்ணா தி.மு. கழகம் எந்தக் கொள்கையை அன்று கொண்டிருந்ததோ, அதே கொள்கையைத்தான் இன்றும் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டிருக்கிறார்கள். கட்சியையும் வழி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கொள்கையிலே மாற்றம் இல்லை



அதே தலைவர், அதே கொள்கை என்று சொல்கிறபோது, ஆளுநர் உரையிலே மிகச் சுருக்கமாக எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். கொள்கை இல்லை என்று சொல்கிறவர்களுக்குச் சொல்கிறேன். உங்கள் கொள்கை சில இடங்களை பகிர்ந்துகொள்வதுதான். எங்களுடைய கொள்கையோ பல கோடி மக்களுடைய வாழ்விற்கு நாம் என்ன செய்ய முடியும் என்று ஆதங்கத்தோடு பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே அந்த வகையிலே ஏழை எளிய மக்கள் முன்னேற்றத்திற்கு, தாழ்த்தப்பட்டவர்களின் துயரங்களைத் துடைப்பதற்கு வறுமையும் வேலையின்மையையும் நீக்குவதற்கு, தூய்மையும், திறமையும் வாய்ந்த நிர்வாகத்தை அளிக்க இந்த அரசு பாடுபடும் என்றும், மிக அழகாகக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள் கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையிலே.

ஆகவே முழு அளவுக்கு அந்தக் கொள்கையின் அடிப்படையிலேதான் அரசாங்கத்தினுடைய பழையகாலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பலன்தரும் திட்டங்கள் நிறைவேற்றப்படும். இதைவிட மிகப் பெரிய ஒரு கொள்கை இந்த நாட்டுக்குத் தேவை என்று நான் கருதவில்லை. மார்க்சையோ, லெனினிடமோ, கேட்டுப் பெறவேண்டிய அவசியம் இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டுக்குத் தந்த கருத்துக்கள், அவர் வழியிலே சென்று நாம் இன்றைக்கு மக்களுடைய ஏழ்மையையும், வறுமையையும் போக்குவதற்கு எடுத்துக்கொள்கிற முயற்சிகள், அதற்குத் தடையாக இருக்கிற மத்திய மாநில அரசாங்கத்தினுடைய நிதிப் பங்கீட்டு முறைகள், இவைகள் எல்லாம்தான் நம்முடைய கொள்கைகள். ஆகவே அந்தக் கொள்கையின் அடிப்படையிலேதான், அந்த அனுபவத்தின் அடிப்படையிலேதான், நிர்வாகத் திறமையிலே பெயர் பெற்ற நமது டாக்டர் நாவலர் அவர்கள் நிதியமைச்சராக இருந்து, இன்றைக்கு எட்டாவது நிதிக் குழுவிற்கு மாநில அரசின் பரிந்துரைகளைத் தந்து இருக்கிறார்கள். நீங்கள் அதைப் பார்த்து இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன். பார்த்திருந்தால் மத்திய அரசாங்கத்தைப் பார்த்து நீங்கள் அதைக் கேட்டீர்களா, இதைப் பெற்றீர்களா என்று சொல்லியிருக்கமாட்டீர்கள். அந்த நிதிக் குழுவிற்காக மாநில அரசாங்கம் தந்திருக்கிற பரிந்துரையின் அடிப்படையிலேதான் ஆளுநர் அவர்கள் உரையிலே சிலவற்றைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

[திரு. மா. சின்னராசு] [1985 மார்ச் 12

இந்த நிதிக் குழுவிற்கு மிக முக்கியமாக செய்திருக்கிற பரிந்துரைகளை நாம் மறந்துவிடாமல் பார்க்க வேண்டும். எந்தக் கட்சி எந்த இடத்திலே இருந்தாலும், தமிழகத்தினுடைய ஒட்டுமொத்தமான நன்மை என்று வருகிறபோது நாம் எல்லாம் ஒன்றுபட வேண்டும். கர்நாடகத்திலேயும், ஆந்திரத்திலேயும் அவர்கள் கூடியதைப் போல நாட்டின் வளர்ச்சிக்காகவும், தமிழ் நாட்டு மக்களின் வறுமையைப் போக்குவதற்காகவும் நம்முடைய கருத்து ஒருமித்து இருக்க வேண்டும் என்பதில் எனக்கு ஓரளவு விருப்பம் உண்டு. அந்த அடிப்படையிலே சொல்கிறேன். நிதிக் குழுவிற்கு நாம் செய்திருக்கிற பரிந்துரையிலே வருமான வரியிலிருந்து கிடைக்கும் வருமானத்தை மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும் பங்கு 90 சதவீதமாக உயர்த்தப்பட வேண்டும். நிதி திரட்டுவதற்காக அரசு வெளியிடும் கடன் பத்திரங்கள் மூலம் கிடைக்கும் வருவாயும், பிரித்துக் கொடுக்கப்படும் தொகுப்பு நிதியில் சேர்க்கப்பட வேண்டும். தற்போது வருமான வரி மீது விதிக்கப்படும் மேல் வரியானது வருமான வரியுடன் சேர்க்கப்பட வேண்டும். இது தவிர, கூட்டுறவு நிறுவன வரியானது திருப்பிக் கொடுக்கப்படும் தொகுப்பு நிதியில் சேர்க்கப்பட வேண்டும். ஆயத்தீர்வை பங்கீட்டு முறை போன்று வருமான வரி தொகுப்பினை மாநிலங்களுக்கு பங்கிட்டு ஒதுக்கீடு செய்ய வேண்டும். பழைய காட்கில் ஃபார்முலாவின் அடிப்படையில்

(பிற்பகல் 12.20)

ஏற்கெனவே நாம் அனுபவித்து வருகிற குறைபாடுகளை நீக்குகிற முறையில், மக்கள் தொகை குறைந்து வருகிறபோது, தனி நபர் வருமானம் உயர்கிறது என்ற ஒரே காரணத்தைக் கொண்டு, நமக்கு உரிய, வேண்டிய நிதியைக் குறைத்து விடக் கூடாது என்பதையும், சிறந்த நிர்வாகமும் மக்கள் தொகை குறைப்பிற்காக முயற்சியும், நம் நாட்டிலே நாமாகவே தேடுகிற



1985 மார்ச் 12] [திரு. மா. சின்னராசு]

ரிசோர்ஸஸ் & மொபிலைசேஷன், நம்முடைய சொந்த சக்தியை, சொந்த கேப்பிட்டல் இன்வெஸ்ட்மெண்ட்டையும் அதிகப்படுத்திக் கொள்வதன் மூலம், நாம எந்த விதத்திலும் தண்டிக்கப்படக் கூடிய குற்றங்களைச் செய்தவர்கள் அல்ல.

அவைகள் எல்லாம் நம்முடைய நிர்வாகத்தில் நாம் செய்ய வேண்டிய கடமைகள். அந்தக் கடமைகளைச் செய்ய மற்ற மாநிலங்களைத் தூண்டலாமேத் தவிர, கடமையைச் சரியாகச் செய்த மாநிலத்தைத் தண்டிக்கக் கூடாது என்பதை மாண்புமிகு நாவலர் அவர்கள் தன்னுடைய பரிந்துரையில் மிக அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது ஏற்கப்படவில்லை. முழுவதுமாக உடனடியாக ஏற்கப்படவில்லை என்றாலும் கூட, ஏற்கப்படுவதற்கான சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதைத்தான் ஆளுநர் உரை நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறது.

ஆகவே, நீங்கள் ஏன் இந்தியை எதிர்த்துப் போராடவில்லை. டி.வி. யிலே காட்டுகிற இந்தி திணிப்பை எதிர்த்து ஏன் போராடவில்லை என்று கேட்கிறார்கள். உங்கள் கொள்கை என்ன ஆயிற்று என்று கூட திரு. ரகுமான்கான் அவர்கள் கேட்டார்கள். நான் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். 1980-லே நீங்கள் தேர்தல் உடன்படிக்கை வைத்திருந்தீர்கள். பாதிக்குப் பாதி என்று. அதிலே யார் உயர்ந்தவர்கள் என்று நான் சொல்ல விரும்பவில்லை. அப்போது நீங்கள் சிறந்த வாய்ப்பு பெற்றிருந்த கட்சியா அல்லது அந்தச் சூழ்நிலையிலே காங்கிரஸ்தான் வாய்ப்பை பெற்றிருந்ததா என்பதைப் பற்றி இந்த நேரத்திலே விமர்சனம் செய்வதற்கு இடம் இல்லை. இருந்தாலும் நான் கேட்கிறேன். அன்று உங்கள் கொள்கையை நீங்கள் ஒரு நிபந்தனையாக வைத்தீர்களா ?

அன்று ராஜமன்னார் கமிஷனுடைய தீர்ப்பில் ஒரு சிலவற்றையாவது ஆட்சிக்கு வந்தபின்னால் நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அன்றைக்கு மதிப்பிற்குரிய 'டாக்டர் கலைஞர் அவர்கள் கேட்டிருந்தால் உண்மையிலேயே நீங்கள் கொள்கை பற்று உடையவர்கள் என்று நான் கருதியிருப்பேன். அன்று மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்குகிற

முயற்சிகளை தேர்ந்தெடுத்ததற்குப் பின்னால் செய்ய வேண்டும் என்ற ஒரு நிபந்தனையை வைத்து, பாதி இடம் அல்ல கால் பாகமாகத் தேர்தலில் நின்றிருந்தாலும் கூட, அண்ணாவின் கொள்கைகளுக்காக நீங்களும் இருந்தீர்கள் என்று கருதி யிருப்போம். அல்லது இந்தி திணிப்பிலே நேருவினுடைய உறுதிமொழியை அரசியலமைப்புச் சட்டத்திலே இடம் பெறச் செய்ய வேண்டும் என்கிற அந்த நிபந்தனையை வைத்து, அதற்கு உடன்பட்டால் நாங்கள் 100 அல்லது 50 இடங்களோடு மீதியை விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லியிருந்தால் தமிழர்களுக்காக, தமிழ் இனத்தினுடைய வாழ்விற்காக ராஜினாமா செய்த மாண்புமிகு தலைவருடைய கொள்கைப் பற்றில் எங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கக் கூடும். (குறுக்கீடு)

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, விவாதமே தேவையில்லை. ஏனென்றால், இந்தி ஆதிக்க எதிர்ப்பில் அகில இந்திய அண்ணா தி.மு.க. உறுதியாக இருப்பதாக நண்பர் சொல்கிறார். மகிழ்ச்சி. உங்களுடைய தேர்தல் அறிக்கையில், 'நேருவின் வாக்குறுதி சட்ட வடிவம் பெறப்பட வேண்டும் என்பது எங்களுடைய கருத்து' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது இந்தச் சட்ட மன்றத்திலேயே ஒரு தீர்மானமாகக் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றுகிற வாய்ப்பை அவசியம் செய்ய வேண்டும்; நாங்கள் அதற்கு ஆதரவாக இருக்கிறோம். எனவே அதை எப்பொழுது கொண்டு வருகிறீர்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. மா. சின்னராசு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தி எதிர்ப்புக் கொள்கையில் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், என்றும் நிலையான கொள்கையைக் கொண்டிருக்கிறது என்றும், அதை எந்தச் சூழ்நிலையிலேயும் கைவிடுவதற்குத் தயாராக இல்லை என்பதையும், புரட்சித் தலைவர் அவர்கள் பலமுறை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதுபோன்ற ஒரு தீர்மானம்; நேருவினுடைய உறுதியை சட்டம் ஆக்குவதற்கு, அரசியல் சட்டத்திலே இடம் பெறச்





செய்வதற்கு உதவும் என்றால், அதைப் பற்றி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முடிவு செய்வார். அந்த முடிவை நீங்கள் கேட்கிற காரணத்தால் அல்ல. இந்த நாட்டிலே இந்தி எதிர்ப்பு பிரச்னை அப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலம் தான் தீர்க்கப்பட வேண்டும் என்ற நிலை வந்தால், அதைப் பற்றி யாருமே அச்சப்பட மாட்டார்கள். . . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேச்சை முடிக்கட்டுமே, முடித்த பிறகு கேளுங்கள். இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவுமேயில்லை. (குறுக்கீடு) பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் வேண்டும் என்று கேட்கிறீர்கள். அவர் பேச்சை முடித்துவிட்டுமே பிறகு கேளுங்களேன். . . .

Thiru A. RAHMAN KHAN : Respected Deputy Speaker, Sir, my humble submission is that my name has been referred to by the hon. Member in his argument. That is why, I am raising this point of clarification, otherwise I will not. Therefore, I am putting this question again to my hon. Friend, with your permission.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேருவினுடைய வாக்குறுதி இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரைக்கும் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக நீடிக்கும் என்ற கருத்து உங்கள் கட்சியால் ஒத்துக்கொள்ளப்பட்டு, தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டது. அதை இந்தச் சட்ட சபையிலேயே ஒரு தீர்மானமாக நிறைவேற்றுவீர்களேயானால் ஆதரிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். இந்தக் கூட்டத் தொடருக்குள் நீங்கள் உண்மையாக அதில் ஈடுபாடோடு இருப்பீர்களேயானால் கொண்டு வந்து நிறைவேற்றுவீர்களா என்று அவை முன்னவர் அவர்கள் சொன்னால் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஏனென்றால் உங்களுக்கு அதைச் சொல்வதற்கு சிரமமாக இருக்கலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நேருவினுடைய உறுதிமொழி, அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம்பெற்று நடைமுறைப்

படுத்த வேண்டும் என்ற கருத்தை தொடர்ந்து பல கூட்டங்களில் பல அமைப்புகளில் வாய்ப்புகளில் வற்புறுத்தி வருகிறோம். அதையே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொள்கையாகக் கொண்டிருக்கிறது. அப்படி ஒரு தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றுவதன் மூலம் பலன் ஏற்படும் என்று இந்த அவையே கருதினால், இந்த அரசும் கொண்டு வருவதற்கு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (கரவொலி.)

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்கள் எங்களுடைய கொள்கைகளை எடுத்துச் சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது எல்லாம் எங்கள் கொள்கையை குறை சொல்லுகின்ற நீங்கள், 1980-லே உங்களுக்கு கிடைத்த வாக்கைப் பயன்படுத்தி, எதை நீங்கள் இந்த நாட்டிலே சாதிக்கத் துணிந்தீர்கள் என்பது தான். அதை நான் அத்தோடு விட்டுவிடுகிறேன்.

சர்க்காரியா கமிஷனை தமிழக மக்கள் மறந்துவிட மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அன்னை இந்திரா காந்தி அவர்கள் மத்திய மாநில அரசுகளுடைய உறவு குறித்தும் நிதி பங்கீட்டு முறைகளில் ஏற்படுத்த வேண்டிய மாறுதல்கள் குறித்தும் ஆராயும் பொருட்டு அமைக்கப்பட்ட சர்க்காரியா கமிஷனுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் செய்யப்பட்ட பரிந்துரைகள் கமிஷனுடைய பரிசீலனையில் இருக்கின்றன. அந்தக் கமிஷன் ஆட்சி மாறியதால் ஒரு சமயம் மறக்கப்பட்டுவிட்டதோ என்ற அச்சம் என் போன்றவர்களுக்கு இருக்கிறது. அதனுடைய உண்மையான நோக்கத்தை நிறைவேற்றுகின்ற, நல்ல தீர்ப்பை வழங்குகின்ற ஒரு கமிஷனாக அது அமைய வேண்டும் என்ற விருப்பம் நம்மில் பலருக்கு உண்டு. சுமுகமான பேச்சுவார்த்தை மூலம் நல்ல தீர்ப்பை பெறுவதன் மூலம். இதுபோன்ற காரியங்களில் நாம் ஒரு நல்ல முடிவை ஏற்படுத்திக் கொண்டால்தான் இந்தியாவினுடைய ஒருமைப்பாடும், இந்தியாவினுடைய வளர்ச்சியும் இங்கே எந்த குந்தகமும் இல்லாமல் நிலைநிறுத்தப் படும் என்பதில் ஆழமான கருத்தை திராவிட இயக்கமான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டிருக்கிறது என்ற அடிப்படையில் தான் அந்த



கமிஷனுடைய பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும். அதிலே வழங்கப்படுகின்ற தீர்ப்பு ஏதோ மாநிலங்களுக்கு உரிய அதிகாரங்கள் கொடுக்கப்படுவதன் காரணமாக மத்திய அரசின் வலிமை குன்றிவிடும் என்ற அச்சத்தோடு பார்க்க வேண்டிய அவசியம் இருக்காது. அந்தத் தேவையும் இல்லை. இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டை எல்லோரும் ஒத்துக் கொண்டிருக்கிறோம். இந்தியா ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்ற நிலையில் தான் எப்படி ஒன்றுபடுத்தப்படுவது, ஒன்று படுவது என்கின்ற அணுகுமுறையை—கட்சிகளுக்கு சில பேதங்கள் இருக்கக் கூடும்.—ஆனால் நம்மைப் பொறுத்த வரையில் உரிய அதிகாரங்கள், நிதி ஆதாரங்களானாலும் சரி, மாநிலங்களுடைய கலாசாரத்தையும், மொழி உரிமையையும் காத்து நிலை நிறுத்துவதற்கு நாம் வழிவகை செய்ய வேண்டும். அப்பொழுது தான் இந்தியர் ஒன்றுபடும். ஒருமைப்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்கின்ற எந்த முயற்சியையும் தடுக்க முடியும் என்ற அந்த நல்உணர்வுதான் பேரறிஞர் அண்ணாவின் காலத்திலிருந்து தொடர்ந்து மாநிலத்திற்கு உரிய உரிமை என்று கேட்டு வந்திருக்கிறோம். ஏற்படுத்திக் கொண்ட தேர்தல் உறவு காரணமாக நாம் இதை கைவிட்டுவிடவில்லை. இந்திய அரசாங்கத்தை பொறுத்தவரையில், காங்கிரஸ் இயக்கத்தை பொறுத்தவரையில் இங்கு புரட்சித் தலைவர் ஆட்சி அமைய வேண்டும் என்பதில் அவர்கள் நல் ஆதரவு தந்தார்கள்.

மத்தியிலே ஏற்பட வேண்டிய ஆட்சி அன்னை இந்திரா காந்தியினுடைய வாரிசான ராஜீவ் காந்தியினுடைய ஆட்சி தான் என்கின்ற மக்களுடைய நல்ல முடிவிற்கு நாங்களும் ஆதரவு தந்தோம். அந்த அளவிலே அன்னை இந்திராவினுடைய லட்சியங்களை நிறைவேற்றுகின்ற காங்கிரசினுடைய நல்ல திட்டங்களுக்கு நாம் ஆதரவு கொடுப்போம். அதே நேரத்தில் தம்முடைய வளர்ச்சிக்கான பணிகளில் அவர்கள் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆளுநர் உரையிலே, தேர்தல் உறவினால் மத்திய அரசிடமிருந்து நாம் கேட்க வேண்டிய உரிமைகளை மறைத்து விடவில்லை. கேட்டுக்கொண்டிருக்கிறோம். விரிவான முறையில் பலமுறை பேசப்பட்டு இருக்கிறது என்பதை நினைவு கூறுகிறேன். ஆக நீங்கள் தொடர்ந்து மக்களை

தடுமாறுகின்றவர்கள் என்ற அந்த கருத்துக்கு போகாமல் மக்கள் என்றும் நிலையான நல்ல கருத்துக்களை கொண்டவர்கள் என்று எண்ணுங்கள். மக்களை பொறுத்த வரையில் தெளிந்த தீர்ப்பை அளிக்கக்கூடியவர்கள் என்ற நிலையை உணர்ந்து அவர்கள் எடுத்திருக்கின்ற முடிவிற்கு உங்கள் தலை வணங்க வேண்டும். நீங்கள் எவ்வளவோ பிரச்சனைகளை தேர்தல் களத்திலே வைத்தீர்கள். நீங்கள் அரசாங்கத்தை அரசினுடைய கொள்கைகளை விமரிசனம் செய்தீர்கள். உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டதுபோல் லைட் இல்லை என்று சுட்டிக்காட்டாமல் யாரும் எதிர்க் கட்சி வரிசையிலே இங்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கமாட்டார்கள். அல்லது தோற்கடிக்கப்பட்டவர்கள் அதைச் சொல்லாமல் இருந்திருக்க மாட்டார்கள். அதையெல்லாம் காதிலே கேட்டு இதற்கு பின்னால் மக்கள் வழங்கிய தீர்ப்பு தான் இந்த நல்ல தீர்ப்பு என்பதை தயவுசெய்து இனிமேலாவது உங்கள் மனதிலே நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். புரட்சித் தலைவருடைய நல்லாட்சியிலே எடுக்கின்ற திட்டங்களில் உங்களுடைய ஆலோசனைகளும் ஆதரவும் நிறைந்து இருக்க வேண்டும். மக்களின் ஜனநாயகத்தை காப்பதற்கு நல்ல விமரிசனங்களை எழுப்புவதில் யாரும் தடை சொல்ல மாட்டார்கள். அப்படிப்பட்ட விமரிசனங்களை நம்முடைய மரியாதைக்குரிய ஆறுமுகம் என்ற உறுப்பினர், பெரியவர் எடுத்துச் சொன்னார்கள்.

(முற்பகல் 12-30)

அப்படி பல விமர்சனங்களை இங்கே அருமையாக, நல்ல பழுத்த அந்தப் பெரியவர் ஆறுமுகம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர்களைப் பார்க்கிறபோது, 52, 57-ல் உறுப்பினர் ஆவதற்கான வயதின் காரணமாக வாய்ப்பைப் பெறாத எங்களைப் போன்றவர்கள் இப்போதாவது அவர் பேச்சைக் கேட்பதற்கு சந்தோஷப்பட்டோம். அப்போதெல்லாம் விவாதங்கள் எல்லாம் நல்ல முறையில் நடந்துவந்தது. 1957-ல் இங்கே மூதறிஞர் ராஜாஜி அவர்கள் காலத்தில் நடந்த விவாதங் களைப் படித்தால் தெரியும். ஆகவே தான் இதை நான் சுட்டிக் காட்டினேன். 1952-ல் இருந்தேன், 1957-ல் இருந்தேன், 1962-லும் மீண்டும் சட்டமன்ற உறுப்பினர் ஆனேன் என்று சொன்னார்.





ஆனால் அவருடைய தொகுதியிலே இருக்கிற நிலை அப்படியே இருக்கிறது என்று ஆதங்கமாக, ஆனால் மிக்க சாதுர்யமாக விவாதத்தை எடுத்து வைத்தார்கள். 1952, 1957, 1962-ஆம் ஆண்டுகளிலே காங்கிரஸ் தியாகியாக இருந்த நீங்கள், அப்போதே கூட இந்தச் சாதாரண பிரச்சினைகளை உங்களுடைய அர சாங்கமே கூட தீர்த்து வைக்கும் நிலையில் இருக்கவில்லை என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. நீங்கள் ஆண்ட காலத்தில் செய்யத் தவறியதை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் உங்கள் தொகுதி எப்படியோ, எனக்குத் தெரியாது, எழ்கனவே நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த தொண்டா முத்தூர் தொகுதியில் 102 கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து தந்திருக்கிறோம். பல கிராமங்களிலே பஸ் வசதிகள் செய்து கொடுத்திருக்கிறோம். தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக பல திட்டங்களை தமிழகத்திலுள்ள பல்லாயிரக்கணக்கான கிராமங்களில் சரித்திரத்திலே இல்லாத அளவிற்கு, சுதந்திர வரலாற்றிலே இல்லாத அளவிற்கு இந்த ஆட்சிக் காலத்தில் செய்திருக்கிறோம். இதுவரை ஒரு ஆண்டில் இவ்வளவு திட்டங்களை நிறைவேற்றியதே கிடையாது என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். அந்த அளவிற்கு குடிநீர்த் திட்டங்களும், சாலை வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. புரட்சித் தலைவருடைய அரசு தொடர்ந்து உங்களுடைய தொகுதியும் விடுபடாமல் பார்த்துக் கொள்ளும். நீங்கள் பெற்றி ருக்கின்ற அனுபவத்தின் காரணமாக மத்திய அரசிடமிருந்து தமிழகத்தின் தேவைக்கேற்ப நிதியைப் பெற உதவுங்கள் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆக தமிழக வரலாற்று நடு நாயகனாக இருந்த புரட்சித்தலைவர் அவர்களை, நமது நாயகன் வருவான், நல்லாட்சி தருவான் என்று சொன்னோம். மக்கள் ஓட்டுப்போட்டார்கள், எனவே நடப்பவை நல்லதாக இருக்கும். புரட்சித் தலைவர் அவர்களைப் பற்றி இன்னும் யாருக்காவது ஐயப்பாடு இருந்தால் அவர்களுக்கு ஒரு சில வார்த்தைகளைச் சொல்கிறேன். மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இந்த மன்றத்திலே சொன்ன வார்த்தைகளை சொல்கிறேன். அவர் ஒரு விவாதத்தில் பங்குகொண்டபோது வழக்கமாகப் பயன் படுத்தும், கையில் இருந்து எடுத்து சொன்ன வாசகங்கள் புரட்சித் தலைவர் எப்படிப்பட்டவர், என்பதற்கு சிறந்த இலக்கணமாக அமைந்திருக்கிறது.

"It has been laid in Gita that no man can profit by acting against his own Dharma. Every man must act, according to his own Dharma and Dharma here means his own nature and his own make-up."

புரட்சித் தலைவர் அவராகவே வகுத்துக்கொண்டு, தர்மத்தின் அடிப்படையில் வாழும் மனித தெய்வம். ஆகவே நம்முடைய விமர்சனங்களால் அவரை அடக்கி விட முடியாது. அவரே இயற்கையில் தனி வடிவமாக இருக்கக் கூடியவர். புரட்சித் தலைவர் அவர்கள் தர்மத்தின் அடிப்படையில் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர். அந்த தர்மத்தின் தூய நோக்கத்தோடு, தமிழக மக்களுக்காக வாழ்கின்ற மனித தெய்வம். அவர் நம்முடைய விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர். அவருடைய பொற்கால ஆட்சியில் மீண்டும் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு வாய்ப்பு கிடைத்தமைக்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவை உதவித் தலைவர் அவர்களே,

"எனக்கெனச்செயல் வேறிலை யாவும் இங்கொரு நின்
தனக்கெனத் தரும் உடல்பொருள் ஆவியுந் தந்தேன்
மனத்தகத்துள அழுக்கெலாம் மாற்றி எம்பிரான் நீ
நினைத்த தெப்படி அப்படி அருளுதல் நீதம்".

என அன்றாட அலுவல்களைத் தொடங்குவதற்கு முன் தாயுமானவர் பொன் வார்த்தைகளைச் சொல்லித் தொடங்குவது போல, எட்டாவது சட்டமன்றத் தொடரில் கலந்துகொள்ள எனக்கு வாய்ப்பளித்த எனது தென்காசித் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன்.

இங்கே இந்தச் சட்டமன்றத்தில் என்னுடன் வருகை தந்திருக்கும் அனைத்து நண்பர்களுக்கும், உங்களுடைய தேர்தல் வெற்றிக்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிறப்பான முறையில் இந்தியாவிலே ஜனநாயகம் நீடித்து நிலையாக நிற்கிறது என்று ஆளுநர் அவர்கள் தன்





உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்களே, அதைப்போன்று அந்த ஜனநாயகத்தின் அடிப்படையான தேர்தல் சிறப்பாக நடந்து முடிந்ததற்குப் பிறகு இங்கே எட்டாவது சட்டமன்றப் பேரவை கூடியிருக்கிறது. அந்தத் தேர்தலைச் சிறப்பாக நடத்திய அதிகாரிகள் அனைவருக்கும், இந்த மன்றத்தின் மூலம் முதற்கண் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே தேர்தலைப் பற்றி குறிப்பிடுகிறபோது அந்தத் தேர்தலுக்குக் காரணமாக அமைந்திடும் வகையில் இந்த நாட்டிலே அடிமைத்தனத்தை நீக்கி இந்தியாவுக்குச் சுதந்திரம் வாங்கி வந்த பெரியவர்களையும், தியாகிகளையும் நினைவுகூர்ந்து முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தையும் அஞ்சலியையும் செலுத்திக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கவர்னர் உரையின் மீது இந்த விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 176 பிரிவின் கீழ் தேர்தலுக்குப் பிறகு கூட்டப்படும் முதற் சட்டமன்றக் கூட்டத்திலே கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையை ஆற்றிச் சென்றிருக்கிறார்கள். இது ஆளுநர் உரையாக இருந்தாலும் கூட, ஆளுகின்ற கட்சியினுடைய ஆளுகிற அரசினுடைய கொள்கைகளை விளக்குகின்ற பேச்சாக இருக்கின்ற காரணத்தால் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் முகந்தான் நடக்கின்ற இந்த விவாதத்திலே ஆளுநர் உரையை விமர்சிக்காமல் ஆளுகின்ற கட்சியின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் சிறந்த ஜனநாயகக் கடமை என்ற அடிப்படையிலே இங்கே நாம் விமர்சித்துக் கொண்டு இருக்கிறோம்.

முதலிலே ஒருசில பொதுக் கருத்துக்களைச் சொல்லலாம் என நினைக்கிறேன். இந்தத் தேர்தலிலே அகில இந்திய காங்கிரசும் அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகமும் கூட்டணி அமைத்து மக்களைச் சந்தித்து அ.இ.அ.தி.மு.க. ஆளும் கட்சியாகவும், காங்கிரஸ் பிரதான எதிர்க்கட்சியாகவும் இங்கே அமர்ந்திருக்கின்றன. சிலர் சொல்கிறார்கள், ஏதோ காங்கிரஸ் கட்சி எதிர்க்கட்சியாக இங்கே செயல்படாது என்று. நான் சொல்கிறேன், இங்கே இருக்கிற காங்கிரஸ் கட்சி கண்டிப்பாக ஜனநாயக அடிப்படையிலே சிறந்த எதிர்க்கட்சியாகச் செயல்படும். ஒரு

சிலர் நினைப்பதுபோல் எதிர்க்கட்சியாக செயல்படாது என்பதை மெத்த மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏன் என்றால், நாங்கள் கை சின்னத்திலே போட்டியிட்டவர்கள், அடிக்கிற கை தான் அணைக்கும் என்று சொல்வார்கள். இந்த அரசு தவறு செய்யுமேயானால் தட்டிக் கேட்கிற கட்சியாக ஜனநாயக மரபிலே இருப்போமே தவிர ஜனநாயக மரபுகளை மீற மாட்டோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே வள்ளுவப் பெருந்தகை அவர்கள் படம் இருக்கிறது.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானும் கெடும்"

என்று சொல்லிச் சென்று இருக்கிறார்கள். சிறந்த நண்பருக்கு இலக்கணம் தவறு செய்கின்ற நண்பரைத் தட்டிக் கேட்கவேண்டியதாக இருப்பதால் இந்த ஜனநாயகக் கடமையை அகில இந்திய காங்கிரஸ் கட்சி என்றும் நிறைவேற்றும் என்று சொல்லிக் கொண்டு ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டு இருக்கிற கருத்துக்களோடு என்னுடைய சில கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அவர்கள் பேசுகின்றபோது தேர்தலைக் குறிப்பிட்டுப் பேசி இருக்கிறார்கள். இந்தத் தேர்தலிலே ஆட்சிகள் மாறிய புதுமை மட்டும் அல்லாமல் மகத்தான சமுதாயப் புரட்சி ஒன்று நடந்து இருக்கிறது. சுதந்திரத்திற்கு மிக சமீபத்திலே பிறந்த என்னுடைய அருமைத் தலைவர் திரு. ராஜீவ் காந்தி போன்றவர்களும் சுதந்திரத்தின் பின்னாலே தோன்றிய என் போன்ற இளைஞர்களும் பெருவாரியாக சட்டமன்றத்திற்கும், பாராளுமன்றத்திற்கும் தேர்ந்து எடுக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. ஒரு ஜெனரேஷன் சேன்ஜ் என்று சொல்வார்களே அதுபோன்று ஒரு அரசியல் மாற்றம், ஒரு சமுதாயப் புரட்சி சத்தம் இல்லாமல் இந்த நாட்டிலே நடந்து இருக்கிறது. இந்திரா என்றால் இந்தியா என்று சொன்னதற்கு இந்திராவை அழித்துவிட்டால் இந்தியாவை அழித்து விடலாம் என்று பகற் கனவு கண்டவர்கள் எண்ணத்திலே மண்ணைப் போடுகின்ற அளவிலே இந்த நாட்டிலே இன்றைக்கு ஜனநாயகம் வேரூன்றி இருக்கிறது.





ஆளுநர் உரையிலே இலங்கைப் பிரச்சினை பற்றி மிக அழகாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மைய அரசும், மாநில அரசும் இலங்கைப் பிரச்சினையிலே சாதுரியமாக நடந்துகொள்ள வேண்டிய சரித்திரக் கட்டாயம் காரணமாக நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கின்றன. இருந்தாலும்கூட, அரசியல் காரணங்களுக்காகவும், சொந்தக் காரணங்களுக்காகவும், மைய அரசும் மாநில அரசும் இலங்கைப் பிரச்சினையிலே ஒன்றும் செய்யவில்லை என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்றை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்னை இந்திரா காந்தியின் இரங்கல் தீர்மானத்தின்போது பேசுகின்றபோது மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டதை நான் இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் அழுத்தமாகச் சொன்னார்கள், அன்னை இந்திரா காந்தி அவர்கள் இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதிலே முழுவதும் கருத்தாக இருந்தார்கள் என்பதை நான் அறிவேன் என்று. அந்த அன்னையினுடைய அருமைப் புதல்வரும் அந்தக் கருத்தோடுதான் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்ற உறுதிமொழியை மைய அரசிலே ஆளும் கட்சியாக இருக்கிற காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் இந்த மன்றத்திற்குத் தர விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, தமிழகத்தின் முதல்வராக இருக்கிறவரும், பிரதான எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற எங்களுடைய மதிப்பிற்குரிய தலைவர் திரு. உ. சுப்பிரமணியன் அவர்களும் தங்களுடைய இளமையை இலங்கையிலே கழித்தவர்கள். ஆகவே, இலங்கையோடு அவர்கள் உள்ளபூர்வமான, நெருக்கமான தொடர்பு வைத்து இருப்பவர்கள். ஆகவே, இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதிலே தமிழகத்தில் உள்ள ஆளும் கட்சி மட்டும் அல்லாமல் மத்திய அரசிலே ஆளும் கட்சியாக இருக்கிற காங்கிரசுக்கும் மிகுந்த ஈடுபாடு உண்டு என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இலங்கைப் பிரச்சினையால் தோன்றிய எண்ணற்ற பிரச்சினைகளிலே ரூபவாகினி என்று சொல்லப்படுகின்ற தொலைக்காட்சி மூலமாக தமிழகத்தினுடைய கலாச்சாரத்திற்கு ஒரு மாபெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் இங்கே சொல்லி அதற்காக மத்திய அரசிடம் நாங்கள் ஏற்கனவே

தொடர்பு கொண்டு தமிழகத்தினுடைய தென் கோடியிலே நீங்களும் ஒரு தூர்தர்ஷன், தொலைக்காட்சி நிலையம் அமைக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். அதைத் தமிழக அரசினுடைய செய்தித் துறையின் கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறோம். அதை விரைவாகச் செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-40)

அடுத்தபடியாக கவர்னர் உரையை ஒட்டியும் வெட்டியும் பேசுவதற்கு முன்னால் அதிலே உள்ள நல்ல திட்டங்களை ஆதரிக்க வேண்டும், பாராட்ட வேண்டும் என்ற முறையில் குழந்தைகளுக்கு இலவச உணவு, உடை, புத்தகங்கள் கொடுக்கின்ற திட்டத்தையும், குடும்ப நல நிதி உச்சவரம்பு உயர்த்தப்பட்டு இருப்பதையும், மரண இழப்புத் தொகை உயர்த்தப்பட்டு இருப்பதையும், ஓய்வுகாலத் திட்டத்தை அமல்படுத்துவதற்காக சில குறிப்பிட்ட இனங்களைக் குறிப்பிட்டு இருப்பதையும் மனமார பாராட்டுகிறேன். ஓய்வுகால நிதி இருப்பதையும் மனமாரப் பாராட்டுகிறேன். ஓய்வுகால நிதி திட்டத்திலே நீங்கள் சொல்லிய அங்கங்களோடு வக்கீல் குமாஸ்தாக்களை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வழக்கறிஞர்களுக்கு வக்கீல் குமாஸ்தாக்கள் தேவை என்பதை இந்த மன்றத்தில் உள்ள வழக்கறிஞர்கள் அனைவரும் அறிவார்கள். வழக்கறிஞர்களுடைய குமாஸ்தாக்கள் மிகவும் மோசமான நிலையில் சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் இருப்பதால் அண்டை மாநில்மாகிய கேரளாவில் இருப்பதைப் போன்று அவர்களையும் இந்த ஓய்வுகால திட்டத்திலே இணைத்துக்கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசினுடைய சாதனைகளைப் பற்றி ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். சத்துணவுத் திட்டம் தேர்தல் காலத்திலே மாற்றாராலும் பாராட்டப்பட்ட ஒரு திட்டம். இந்த அரசு மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கு உதவியாக இருந்த ஒரு திட்டம் என்று சொன்னால் அதிலே எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. ஒரு திட்டத்தைத் தந்துவிட்டதன் காரணமாக அது தானாகவே





செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற நிலைக்கே இந்த அரசு வந்துவிட்டது என்று எனக்குத் தோன்றுகிறது. அந்தத் திட்டத்தை அரசு தினசரி ஆராய்ந்து பீட் பேக் (Feed Back) என்று சொல்வார்களே அதைப்போல பின்னாலே இருந்து வருகிற செய்திகளை ஆராய்ந்து அந்தத் திட்டத்தை சீர்தூக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக என்னுடைய ஆலோசனை ஒன்றையும் இந்த மன்றத்திலே வைக்க விரும்புகிறேன். அன்னச்சத்திரம் ஆயிரம் வைத்தலின் ஆலயம் பதினாயிரம் கட்டலின் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும் என்று சொன்னார் பாரதியார். இந்த நாட்டில் பரம்பரை பரம்பரையாக அன்னச்சத்திரங்கள் ஆயிரம் ஆயிரம் மூலை முடுக்குகளில் கட்டப்பட்டு அப்போது இருந்த காலச் சூழ்நிலையில் அதற்காக நிலங்கள் ஏராளமாக ஒதுக்கப்பட்டன. மாறி வருகிற சூழ்நிலையில், மாறி வருகிற போக்குவரத்து சூழ்நிலையில் யாத்திரிகர்கள் எண்ணிக்கை பெருகி வருகிற சூழ்நிலையில், ஓட்டல்களின் எண்ணிக்கை ஊர் ஊருக்குப் பெருகிவிட்ட சூழ்நிலையில் இன்றைக்கு அன்னச் சத்திரங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களைக் கேட்பார் இல்லாமல் தனி நபர்கள் சொந்த லாபத்திற்காகவும், சொந்த வசதிக்காகவும் பயன்படுத்தக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அந்தப் பெருமக்கள் சத்திரங்களைக் கட்டி, எந்தக் காரணத்திற்காக சொத்துக்களை விட்டுச் சென்றார்களோ அந்தக் காரணத்திற்காக இன்றைக்கு அவை பயன்படாமல் அந்தப் பெருமக்களுடைய எண்ணக் கனவுகள் வீணாகிக் கொண்டிருக்கின்றன. அந்தச் சொத்துக்களை எல்லாம் ஒரு திட்டத்தின் மூலமாக அரசு எடுத்துக் கொண்டு அந்த நிலங்களிலிருந்து வருகின்ற அரிசியை குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்குத் தருவார்களேயானால் சத்துணவுத் திட்டத்திற்காக அரசு செலவிடும் தொகையில் மீதம் பிடிக்கலாம் என்ற யோசனையை நான் இந்த நேரத்திலே இந்த மன்றத்திலே வைக்க விரும்புகிறேன். அவ்வாறு செய்வதற்குச் சட்டம் இருக்கிறதா என்று கேட்கலாம். சட்டம் படித்தவர்கள் பலர் இங்கே இருக்கிறார்கள். Transfer of Property Act என்று சொல்லப்படுகிற சொத்துக்களை மாற்றம் செய்யும் சட்டத்திலே சைப்ரி டாக்டிரின் என்று சொல்லப்படுகிற ஷரத்து மூலம் அதைச் செய்யலாம். ஒரு அறநிலையத்திற்கு அல்லது

[திரு. டி. ஆர். வெங்கடரமணன்] [1985 மார்ச் 12;

ஒரு டிரஸ்டுக்கு ஒரு சொத்து கொடுக்கப்பட்டு இருந்தால் ஏதாவது ஒரு காரணத்திற்காக அந்தச் சொத்து அந்த அறநிலையத்திற்குப் பயன்படாமல் இருக்குமானால் அதேபோன்ற வேறு ஒரு அறநிலையத்திற்கு மாற்றலாம் என்று வகை செய்யக் கூடிய சைப்ரி டாக்டிரின்—சைப்ரஸ் டாக்டிரின் என்று சொல்வார்கள் அது சரியல்ல—பயன்படுத்திச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக இந்து அறநிலையச் சட்டம் மூலம் எடுத்துக்கொள்ளலாம் என்றாலும் கூட அதனுடைய விளைவு அதிகமாக இருப்பதால்கூட அதை ஆராய்ந்து தனியாக ஒரு சட்டம் கொண்டுவந்து அன்னதான சத்திரங்களை அரசுடைமை ஆக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதன் மூலமாக அந்த நிலங்களைச் சத்துணவுத் திட்டத்திற்கு மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற அனுபவபூர்வமான யோசனையை நான் இந்த மன்றத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவ்வாறு நீங்கள் செய்கின்றபொழுது, ஒழுங்காக நடந்து கொண்டிருக்கின்றபொழுது ஓரிரு அன்னதானச் சத்திரங்களுக்கு விலக்களிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இத்துடன், ஆளுநர் உரையிலே இருக்கின்ற கருத்துக்களை விட்டுவிட்டு, இந்த உரையிலே இல்லாத கருத்துக்களை நாம் உற்று நோக்கும் காலத்திலே, ஆளுநர் உரையானது ஒரு பொதுப்படையானதாகவும், கருத்துக்கள் அழுத்தமாகவும் இல்லாமல் இருக்கின்றது என்று சொன்னால் அதற்குப் பொறுப்பு ஆளுநர் அல்ல என்பது விஷயமறிந்த அனைவரும் அறிந்த ஒன்றுதான். காரணம், ஆளுகின்ற அரசினுடைய ஓராண்டு காலச் சாதனை என்ற புத்தகத்திற்கு எழுதப்பட்ட பிரீஃபேஸ்தான் ஆளுநர் உரை என்பதை அறிவோம். எதிர்கால ஓராண்டில் இந்த அரசு என்ன சாதனையைச் செய்யவிருக்கிறது என்று இந்த ஆளுநர் உரையைப் படிக்கின்றபொழுது எனக்கு முன்னால் பேசிச் சென்ற பலரும் தொட்டுச் சென்றதைப் போல, எல்லோரும் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்திருக்கின்ற பஞ்சாயத்துத் தேர்தல்கள், நகராட்சித் தேர்தல்கள்பற்றி இந்தப் பேச்சிலே இல்லாதது மிகுந்த வேதனைக்குரிய ஒன்றுதான். ஏனென்றால் இன்றைக்குப் பஞ்சாயத்து இராஜ்யங்களெல்லாம் அதிகாரிகளின் இராஜ்யங்களாகத்தான் மாறிவிட்ட நிலையிலே இன்றைக்குத் தெருவெல்லாம் தமிழ்



1985 மார்ச் 12] [திரு. டி. ஆர். வெங்கடரமணன்]

மணம் கமழ்கிறது என்று சொல்வோமே, அதேபோல் இன்றைக்குத்—தெருவெல்லாம் சாக்கடை மணம் கமழ்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இங்கே ஒரு நண்பர், பஞ்சாயத்துக்களில் மக்கள் எண்ணிக்கை கூடிவிட்டபொழுது அதற்குத் தகுந்தாற்போலத் துப்புரவுத் தொழிலாளர்களின் எண்ணிக்கை கூட்டப்படவில்லை என்பதை மிகவும் அழகாகச் சொன்னார். என்னுடைய தொகுதியான தென்காசி தொகுதியில் உள்ள தென்காசி நகராட்சியில் 25 தொழிலாளர்களைக் கூட்ட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்தும்கூட, பலப்பல காரணங்களினால் அவ்வாறு செய்யப்படவில்லை. இன்றைக்கு தென்காசி நகராட்சியானது மிகச் சிறந்த நகராட்சிகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. அங்கே மிக மோசமான அளவிற்கு வேலைகள் துப்புரவைப் பொறுத்தவரையில் நடந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னால் அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்திற்கும் இடமிருக்காது.

அடுத்தபடியாக, ஆளுநர் உரையில் கழிப்பிடங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த இடத்தில் ஒன்றை நினைத்துப் பார்க்கிறேன். அண்ணல் காந்தியடிகள் கழிப்பிடங்களைப்பற்றி மிகவும் விரிவாக எழுதியிருக்கிறார்கள். நான் மாணவனாக இருந்த பொழுது அதைப் படித்தபொழுது நினைத்தேன், ஒரு தேசப் பிதா என்று சொல்லப்படுகின்றவர் கழிப்பிடத்தைப்பற்றிப் பக்கம் பக்கமாக எழுதியிருக்கிறாரே என்று நினைத்தேன். ஆனால் இன்றைக்கு இந்த நாட்டில் கட்டப்பட்டுள்ள ஃப்ளஷ் அவுட் என்னும் கழிப்பிடங்களைப் பார்க்கின்றபொழுது அண்ணல் அவர்கள் அன்று சொன்ன கருத்துக்கள் இன்றைக்கும் ஏற்புடையதாக இருக்கின்றன என்ற எண்ணமே என் மனத்தில் எழுகின்றது. இந்தியாவில் உள்ள சூழ்நிலையைக் கருதிப் பார்க்கின்றபொழுது, தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள இந்தியாவிற்கு ஃப்ளஷ் அவுட் லெட்ரின்கள் தேவையற்றவை என்பதை ஆணித்தரமாகச் சொல்ல முடியும். இன்றைக்குப் ஃப்ளஷ் அவுட்டுகள் கட்டப்பட்டு, தண்ணீர் இல்லாத காரணத்தினால் அவை மிகவும் மோசமாக இருக்கின்றன. உலகத் தமிழ் மாநாட்டின்போது மதுரையில் திரும்பிய இடத்திலெல்லாம் இந்த நவீனக் கழிப்பிடங்கள்

கட்டப்பட்டிருந்தன. ஆனால் இன்றைக்கு அவைகள் கேட்பாரில்லாமல் இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், தவறான செயல்களுக்கு அந்தக் கழிப்பிடங்கள் உடந்தையாக இருக்கின்றன என்றால் அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. எனவே, தண்ணீர் வசதியைக் கருத்திற்கொண்டு பார்த்தோமே யானால், இதுபோன்ற கழிப்பிடங்களைக் கட்டுவதற்குப் பதிலாக, இந்திய முறை கழிப்பிடங்களைக் கட்டுவதற்கு ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சார உற்பத்தியைப்பற்றிச் சொன்னார்கள். தமிழகத்திலே இருக்கின்ற மின்சாரப் பற்றாக்குறையானது, ஆண்டுதோறும் வருகின்ற மாரியைப் போன்று, குற்றாலத்தில் ஆண்டுதோறும் வருகின்ற சீசனைப்போன்று மாறிவிட்டது. அதைத் தடுப்பதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. கேட்டால் சொல்கிறார்கள், தினசரிப் பத்திரிகைகளில் வருகிறது, இந்த தூத்துக்குடியில் ஷட்டவுன் ஆகிவிட்டது; டிரில் ஆகிவிட்டது என்று. இன்னும் கேட்டால், பி.எச்.இ.எல்.லிலிருந்து வந்து பார்க்கிறார்கள், பிறகு கொஞ்சம் நாட்களில் இயந்திரங்கள் கெட்டுவிடுகின்றன என்று சொல்கிறார்கள். ஆனால் உண்மை நிலைமை என்னவென்று சொன்னால், அந்தக் கருவிகளை மின்சார வாரியமோ அல்லது மின்சார இலாக்காவின் அதிகாரிகளோ சரிவரப் பராமரிப்பதில்லை. உங்களுக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன், சமீபத்தில் தூத்துக்குடியில் உள்ள அனல் மின்சார உற்பத்தி நிலையத்தில் உள்ள மின்சார சாதனம் பழுதடைந்தபோது, பி.எச்.இ.எல்.லில் உள்ள இன்ஜினியர்கள் வந்து, இரண்டு நாட்களில் மின்சார சாதனங்களைப் பழுது பார்த்து, மீண்டும் அந்தத் தொழிற்சாலையை ஓட விட்டார்கள். எனவே, அங்கே இருக்கின்ற அதிகாரிகள், ஆக்கபூர்வமாக வேலை பார்க்க வேண்டியவர்கள், மெயின்டனென்ஸை ஒழுங்காகச் செய்வதில்லை, அதற்கான முறையில் சரியாக வேலை பார்ப்பதில்லை. எனவே, அதில் இந்த அரசு தனியாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





(பிற்பகல் 12-50)

" Give me electricity and men ; I will give you revolution ".

என்று லெனின் சொல்லியிருக்கிறார். அந்த வகையில் இன்றைய காலத்தில் நாம் அனைவரும் மின்சாரத்திற்கு அடிமையாகி விட்டோம் என்று சொன்னால் அதில் நாம் வெட்கப்பட ஒன்றும் இல்லை என்று நான் கருதுகிறேன். அந்த அளவுக்கு வாழ்க்கையில் மின்சாரம் மிக முக்கியமான கட்டத்தை வகிக்கின்றது. அந்த மின்சாரம் இல்லாமல் நாம் மிகவும் கஷ்டப்படுகிறோம். மின்சாரத்தைப் பொறுத்தவரையில் சென்னையில் பரவாயில்லை, நாள் முழுவதும் மின்சாரம் இருக்கின்றது. ஆனால் புறநகர்ப் பகுதிகளிலே மின்சாரம் இல்லாத காரணத்தால் திடீர் திடீரென்று மின்வெட்டுக்களைக் கொண்டுவந்து மக்களை அவதிக்குள்ளாக்குகின்ற நிலைமை இருக்கின்றது.

சாலைகள் எல்லாம் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அவ்வாறு சாலைகள் பழுதடைந்த நிலையில் இருப்பதன் காரணத்தால் பேருந்துகள் பழுதடைவது மட்டுமல்ல; விபத்துக்களுக்கும் காரணமாக இருக்கின்றன. எனவே சாலைகள் சீர்படுத்தப்பட வேண்டும். சாலைகளில் ஏற்படுகின்ற சேதம் காரணத்தால் இன்றைக்கு நம்முடைய போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் எல்லாம் பழுதடைந்து அதன் காரணமாக இன்டைரக்ட் காஸ்ட் என்று சொல்லப்படுகிற மெயின்டனன்ஸ் காஸ்ட் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது.

தென்காசித் தொகுதியில் தண்ணீர்த் தட்டுப்பாடு மிகவும் அதிகமாக இருக்கின்றது. தென்காசி நகரத்திற்காக கிட்டத்தட்ட 7 ஆண்டுகளுக்கு முன்பு 50 ஆயிரம் ரூபாய் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்தித் திட்டத்தைத் தீட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்ட பிறகு நாளது தேதி வரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த வகையில் அரசு எந்திரம் முடுக்கிவிடப்பட வேண்டும். அரசின் இயந்திரம் முடுக்கி விடப்படும் என்ற வாசகங்கள் ஆளுநர் உரையில் இருக்கின்றன. அந்த வகையில் அரசு யந்திரம் முடுக்கி விடப்பட்டு தென்காசிக்குத் தண்ணீர் கொடுக்கின்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக அரசுக் கருவூலங்கள் இருக்கின்றன. அந்த அரசுக் கருவூலத்திற்குச் சென்று ஒருவர் மூன்று ரூபாய் முப்பது பைசா பெறவேண்டும் என்றால் கிட்டத்தட்ட 15 ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கின்றது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே அடிக்கப்பட்ட ஃபாரங்கள்தான் இன்றும் இருக்கின்றன. இன்றைக்கு எவ்வளவோ விஞ்ஞானம் முன்னேறி இருக்கின்ற நிலையில், பொருளாதாரத் துறை முன்னேறி இருக்கின்ற நிலையில் பாங்கிங் சிஸ்டம் முன்னேறி இருக்கின்ற நிலையில் இன்றைக்கும் அரசுக் கருவூலங்கள் பழைய பண்டையக் காலத்திலேதான் இருக்கின்றன. எனவே அதற்கென்று தனியாக ஒரு கமிஷன் நியமித்து அதன் மூலமாக அந்தக் கருவூலங்களின் செயல்பாட்டுத் திறனை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே ஆளுநர் உரையில் 8-வது நிதிக்குழுவை விமர்சனம் செய்து அதிலே தமிழகத்திற்குத் தரப்பட்ட தொகைகள் குறைவாகத் தரப்பட்டிருக்கின்றன என்று விமர்சிக்கப்பட்டிருக்கின்றது. நான் 8-வது நிதிக் கமிஷனுடைய ரிப்போர்ட்டைப் படித்ததன் காரணமாக ஏற்பட்ட தெளிவுகளை இந்த மன்றத்தில் வைப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். வருமான வரியில் தமிழகம் 7-வது இடத்தையும், கலால் வரியில் தமிழகம் 5-வது இடத்தையும், கூடுதல் கலால் பங்கீட்டிலே 5-வது இடத்திலும் இரயில் பயணிகள் வரியைப் பொறுத்தவரையில் 5-வது இடத்திலும் இருக்கின்றது. கடந்த நிதிக் கமிஷனுடைய அறிவிப்பின்படி தமிழகத்திற்கு 1503.6 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கின்றது. 8-வது நிதிக்கமிஷன் அறிக்கைப்படி 1984-89 ஆம் ஆண்டிற்கு 2,464.94 கோடி ரூபாய் நாம் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. கிட்டத்தட்ட 961.34 கோடி ரூபாயை நாம் அதிகமாகப் பெறக்கூடிய வாய்ப்பு இருப்பதால் நம்முடைய நிதி குறைக்கப்படவில்லை. உண்மையிலேயே நிதி கூடி இருக்கின்றது. ஆனால் விகிதாச்சாரத்தைப் பார்க்கும்போது நம்முடைய பங்கு 0.96 சதவீதம் குறைவாக இருக்கின்றது என்ற ஒரே காரணத்தை வைத்துக்கொண்டு இந்த அரசு ஏதோ மத்திய அரசு நம்முடைய மாநிலத்திற்குத் தரவேண்டிய நிதியைக் குறைத்துத் தந்திருப்பது போல் ஒரு பாடம் புகட்டப்பட்டிருக்கின்றது. அதிலே உண்மை இல்லை என்பதற்காக ஒரு கருத்தை மட்டும் நான் சொல்லி விடைபெற விரும்புகிறேன். சதவீதக் கணக்கில் பார்த்தால்





0.9 சதவீதம் மத்திய உதவி குறைந்து உள்ளது. ஆனால் மின்சார கலால் வரி என்று வசூலிக்கப்பட்டு மீண்டும் மாநிலத்திற்குக் கொடுக்கப்பட்டு வந்ததை 1984-85 ஆம் ஆண்டில் இருந்து மாற்றப்பட்டு விட்டதையும் கணக்கில் எடுத்துக்கொண்டால் உண்மையில் தமிழகத்திற்குச் சரியான விகிதத்தில் குறைவின்றி மானியம் வழங்கப்படுவது விளங்கும். (மணியடிக்கப்பெற்றது). நன்றி வணக்கம்.

*திரு. க. சோலைராசு: வணக்கத்திற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் திரு. செம்மலை அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது ஆளுகின்ற இயக்கத்தின் சார்பிலே நான் வழிமொழிந்து பேசுவதற்கு முன்னாலே விண்ணும், மண்ணும் நீயே, எங்கள் முழு முதற் கடவுளும் நீயே என்று போற்றிப் புகழ்ந்து, எங்களுடைய புரட்சித் தலைவரை வாழ்த்தி, எனக்கு அதிகபட்சமான வாக்குகளைத் தந்து வெற்றி பெறச் செய்த மருங்காபுரித் தொகுதி மக்களுக்கும் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

ஆளுநர் உரையில் புரட்சித் தலைவர் ஆற்றியிருக்கின்ற உலகம் போற்றும் உன்னதத் திட்டங்களைப் பற்றியும், அவர் நாட்டுக்குத் தர இருக்கின்ற சீரிய சிறப்புமிக்க நாட்டு நலனுக்குகந்த திட்டங்கள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. மாநிலங்களுக்கு மத்தியப் பேரரசு நிதி ஒதுக்கீடு செய்கின்றபோது நபர்வாரி வருமானத்தின் அடிப்படையில் இருக்கக்கூடாது என்று தொலை நோக்கத்தோடு நம்முடைய மாநிலத்திற்கு மட்டுமின்றி பிற மாநிலங்களுடைய உரிமைக்கும் குரல் கொடுப்பதுபோல் ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. மையப் பேரரசின் திட்டங்களை நூற்றுக்கு நூறு முழுமையாக செயல்படுத்துகிற தமிழ்நாடு போன்ற சில மாநிலங்களில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் தீவிரமாக இருக்கின்ற காரணத்தினாலே, குறைந்து வருகின்ற மக்கள் தொகையினால் தனி நபர்வாரி வருமானம் கூடுதலாகிறது. எனவே, இதன் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்தால் மையப் பேரரசினுடைய திட்டங்களை நூற்றுக்கு நூறு அமல்படுத்துகிற தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்குத் தண்டனை வழங்குவது போன்று ஆகும் என்று சொல்லி, இதில் நியாயமும் கிடையாது, தர்மமும் கிடையாது என்ற வகையிலே ஆளுநர் உரை தெளிவாகக் கூறுகிறது.

அதேபோல் ஆளுநர் உரையில் துன்பப்பட்டு, துயரப்பட்டு, அல்லலுற்று தமிழகம் வருகிற ஈழத் தமிழ் மக்களின் கண்ணீரைத் துடைக்கின்ற வகையிலே போர்க்கால நடவடிக்கை போல புரட்சித் தலைவரின் அரசு விரைந்து செயலாற்றி வருகிறது என்று கூறப்பட்டிருக்கிறது. ஈழத் தமிழ் மக்களிடையே அன்றும் இன்றும் நடைபெறுகின்ற பல்வேறு வரலாற்றுத் தவறுகளால் இப்போது துன்பப்படுகிற அவர்களுக்கு உதவிடும் நோக்கோடு புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். அதன் அடிப்படையிலேதான் தமிழக மின்சாரத் துறை அமைச்சர் மாண்புமிகு பண்ருட்டியார் அவர்கள் ஐக்கிய நாட்டு சபையிலே ஈழத் தமிழர்களுக்காக வாதிட்டார். இன்றைக்குக் கண்ணீரும் கவலையுமாய் கடலிலே தத்தளித்து வருகிறவர்களுக்குத் தங்களுடைய வாழ்க்கைக்கு ஒளி விளக்காக, கலங்கரை விளக்காக புரட்சித் தலைவர் அவர்கள் விளங்குகிறார்கள். ஈழத்து மக்களுடைய இதயம் கவர்ந்த புரட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை போற்றத்தக்க அளவினிலே சிறப்பான நடவடிக்கையாக இருந்து கொண்டிருக்கிறது. இலங்கைத் தமிழர் பிரச்சினையை வைத்து அரசியல் நடத்திக் கொண்டிருக்கிற கட்சியினுடைய உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஈழத் தமிழ் மக்களுக்காக இந்த அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது என்று கேட்டார்கள். ஈழத் தமிழர் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்காக நான் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்கிறேன் என்று சொல்லிவிட்டு இன்றைக்கு மேலவையிலே உறுப்பினராக இருக்கிற தலைவரைப் பெற்றிருக்கிற அவர் கேட்டார். அவரைப் பார்த்து ஒன்று கேட்க விரும்புகிறேன், அவருடைய இயக்கம், அவருடைய தலைவர் ஆண்டுகொண்டிருந்த நேரத்திலேதான் தமிழகத்திலேயிருந்து ஈழத் தமிழ் இளைஞர்கள் எல்லாம் கங்காணிகள் என்று காட்டிக் கொடுக்கப்பட்டனர். ஈழத்தில் நடக்கின்ற பிரச்சினை உள்நாட்டுப் பிரச்னை என்று கூறி ஒதுங்கிக் கொண்டார்கள். ஆனால், புரட்சித் தலைவர் அவர்கள் காலா காலத்திலே நடக்கிற காரியங்களைப் பொறுத்து, மிகத் தெளிவான நோக்கத்தோடு, தமிழகத்திலே பல்வேறு அறிக்கைகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் மைய அரசோடு இணைந்து தம்முடைய நடவடிக்கையினால் உபத்திரவம் செய்யாது உதவி செய்கிற ராஜதந்திர நடவடிக்கைகளுக்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்.





மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களும்,
மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்களும் பல்வேறு திட்டங்
களை இந்த ஆளுநர் உரையில் இல்லையென்று வாதாடினார்கள்.
உழைக்கும் மக்கள் உரிமைக்காகப் பாடுபடுகின்றோம் என்று
சொல்லிக் கொண்டிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் சிந்தன்
போன்றவர்களைப் பார்த்து நான் கேட்க விரும்புகிறேன்,
சத்துணவு சாப்பிடுகின்ற குழந்தைகளுக்கு, புத்தாடை தருகின்ற
அந்த அரிய திட்டத்தையாவது மனம் திறந்து பெருந்தன்மை
யோடு பாராட்டி இருக்கலாம். இன்றைய குழந்தைகள் நாளைய
ராஜாக்கள் என்ற உணர்வோடு அவர்கள் பிஞ்சிலே வெம்பிவிடக்
கூடாது, இளமையிலே வறுமை தெரியக்கூடாது, வளர்கின்ற அவர்
களுக்கு வளமான உடல் அமைய வேண்டும் என்ற அறிவியல்
நோக்கோடும், வாடிய பயிரைக் கண்டு வாடிய வள்ளல் போல சத்
துணவு தந்த சரித்திர நாயகன் உணவு கொடுத்தது மட்டுமல்ல,
உடையும் கொடுப்பேன் என்றும் 10,000 மையங்களை பாலர் பள்ளி
யாக மாற்றி நூல் அறிவும் தருவேன் என்றும் அறிவித்திருக்கி
றார்கள். அந்த அரிய திட்டத்தினையாவது பாராட்டி இருக்க
லாம் அல்லவா?

தஞ்சைத் தாணியிலே உழைக்கின்ற பெண்களுக்காக
சங்கத்தை வைத்துக்கொண்டிருக்கிற அந்தப் பெரியவர்களைப்
பார்த்து நான் கேட்க விரும்புவதெல்லாம், இன்றைக்கு 80
இலட்சம் குழந்தைகள் சத்துணவு சாப்பிடுகின்றனவே அந்தத்
திட்டத்தை நீங்கள் பாராட்ட வேண்டாம். அந்த 80 இலட்சம்
குழந்தைகளைப் பெற்றார்களே, அந்தப் பெற்றோர், ஏழை எளிய
வர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்கள் எல்லாம்
10 மாதம் சுமந்தெடுத்து, பாலூட்டி, சீராட்டி, முத்தே என்று
அணிகள் பூட்டி, முழு நிலவே, மறை ஒளியே, பால் நிலவே என்று
அருகில் கொஞ்சி, அல்லி அரும்பாக, முல்லை மலர் மணமாக
பிள்ளைப் பருவத்திலே பள்ளிக்கு அனுப்ப முடியவில்லையே
என்று தவித்துக் கொண்டிருந்தாலுங்கூட, தான் பெற்ற பிள்ளை,
தனக்கு எதிராக அழுகின்ற நேரத்திலே அதை வாரி எடுக்க
முடியாத அளவிலே அங்கே எஜமானர்கள் முன்னே கீழே தஞ்சைத்
தாணியிலே பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்களே, அந்தப் பெண்
மணிகளுடைய துயரங்களைப் போக்கியிருக்கிறார் புரட்சித்

[திரு. க. சோலைராசு] [1985 மார்ச் 12

தலைவர் என்ற அந்தப் பெருந்தன்மையோடு பாராட்டியிருக்க
லாம் அல்லவா என்று நான் கேட்கிறேன். அதுபோல், குழந்தை
களுக்கெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கும் சத்துணவைப்பற்றி
இங்கே ஒரு வார்த்தைகூட பாராட்டிப் பேசவில்லை.

குழந்தைகளுக்கெல்லாம் கொடுக்க இருக்கின்ற ஆடைகளைப்
பொறுத்தவரை, திருநாளுக்குத் திருநாள் கூட புத்தாடை
இல்லாது வெறும் நாட்களாகக் கொண்டாடி வருகின்ற வறுமைக்
கோட்டுக்குக் கீழே இருக்கின்றவர்களுடைய வாழ்த்துக்கள்
எல்லாம் எங்களுடைய திருத்தலமான இராமாவரம் தோட்டத்
துக்குச் சென்று கொண்டிருக்கிறது, என்பதை இந்த நேரத்திலே
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல் சமுதாயத்தில் இதுவரை யாரும் எண்ணிப்
பார்க்காத வகையில் கேட்பாரற்று கிடக்கின்ற, சமுதாயத்தின்
அடித்தளத்தில் இருக்கிற உழவுத் தொழிலாளர்கள்,
ஞர்கள், சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், கைவினை
தொழிலாளர்கள் ஆகியோரது நலனுக்காக அறிவிக்கப்பட்ட
இழப்பு ஈட்டுத் திட்டத்தின்படி அத்தொழிலாளர்கள் பணியில்
ஈடுபடும்போது இறக்க நேரிட்டால் அளிக்கப்படும் இழப்பு ஈட்டுத்
தொகை ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000 ஆக உயர்த்தி இருக்கின்ற
உயரிய உள்ளத்தை பஞ்சையாய், பராரியாய், வாழ்க்கையின் அடித்
தளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள் வாழ்த்திக் கொண்
டிருக்கிறார்கள்.

அரசு ஊழியர்கள் பற்றி மிக வேகமாக இங்கே நண்பர்கள்
கேட்டார்கள். அவர்களைப் பார்த்து நான் கேட்க விரும்புகிறேன்.
64 ஆண்டுக்காலமாக பாரம்பரியமிக்க அரசு அலுவலர் சங்கமும்,
அதன் தலைவராக இருக்கிற திரு. சிவ. இளங்கோ அவர்களும்—
எட்டு லட்சம் அரசு ஊழியர்களும் இன்றைக்குத் திகைத்துப்
போகின்ற அளவு புயல் வேகப் பணிகளைச் செய்வதைப் பார்த்து
வாழ்த்துவதற்கு வார்த்தை தேடி தடுமாறிக் கொண்டிருக்கி
றார்கள் என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்
கொள்கிறேன்.



1985 மார்ச் 12] [திரு. க. சோலைராசு]

(பிற்பகல் 1-00)

நேற்று பேசிய மாண்புமிகு மார்க்சிஸ்ட் உறுப்பினர் அவர்கள்
சொன்னார்கள். அவருடைய உரையில் அனுதாப அலையினால்
அண்ணா தி.மு.க.விற்கும், இந்திரா காங்கிரசிற்கும் வாக்குகளை
அளித்து விட்டார்கள் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு
சொல்லும்போது, இப்போது இந்தத் தேர்தல் நடந்திருந்தால்
ஸ்ரீபெரும்பூரைப் போல, பெரம்பூரைப் போல பல்வேறு தொகுதிகள்
மாறியிருக்கும் என்று சொன்னார்கள். அவருக்கு ஒன்றை
நினைவுபடுத்த விரும்புகிறேன். அதற்குப் பிறகு நடைபெற்ற
தேர்தலில் திருப்பத்தூரிலும், பாண்டிச்சேரியிலும் எங்களுடைய
இயக்கம் வெற்றி பெற்றிருக்கிறது என்பதை நினைவுபடுத்த
விரும்புகிறேன். அவருடைய உரையிலே முடிவாக ஒன்றைச்
சொன்னார். என்னைவிட இந்த அவையிலே இருக்கிறவர்களை
விட வெளியிலே இருக்கிற மக்கள் புத்திசாலிகள் என்று சொன்
னார். இதே வார்த்தையை நான் அவரைப் பார்த்துச் சொல்ல
விரும்புகிறேன். அவர்களைவிட இந்த அவையிலே இருக்கிறவர்
களைவிட புத்திசாலிகளாக இருக்கிற மக்கள் அனுதாபத்திலே
எப்படி மயங்கினார்கள்? இதை நான் அவரைப் பார்த்து கேட்க
விரும்புகிறேன். அவர்கள் மயங்கியதெல்லாம் புரட்சித் தலைவ
ருடைய ஆட்சியின் கொள்கைகளைப் பார்த்து, மயங்கினார்கள்.
புரட்சித் தலைவரின் அரசின் திட்டங்களைப் பார்த்து மயங்கி
னார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல்
இங்கே பேசியவர்கள் எல்லாம் ஒன்றைச் சொன்னார்கள்.
அண்டை மாநிலங்களைப் பாருங்கள் என்று சொன்னார்கள்.
அவர்களைப் பார்த்துச் சொல்கிறேன். தமிழகத்தின் இதய தெய்வ
மான புரட்சித் தலைவர் அவர்கள் எட்டு லட்சம் அரசு ஊழியர்
களுக்கு அகவிலைப் படியை வழங்கிக் கொண்டிருக்கிறார்.
அண்டை மாநிலங்களைப் பாருங்கள் என்று சொன்னவர்களுக்கு
நானே சில அண்டை மாநிலங்களைக் காட்டலாம் என்று நினைக்
கிறேன். மேற்கு வங்காளத்திலே அரசு ஊழியர்களுக்கு வழங்கப்
படுகிற அகவிலைப்படி ஏழு தவணைகள் பாக்கி இருக்கிறது.
காலையிலே எனது நண்பர்கள் சொன்னார்கள். அது 10 தவணை
களாக உயர்ந்துவிட்டது என்று. எனக்குத் தெரிந்த தகவல்
அங்கே கொடுக்க வேண்டியது ஏழு தவணைகள் பாக்கி இருக்
கிறது. கேரளத்திலே, கர்நாடகத்திலே அரசு ஊழியர்களுக்கு அக

[திரு. க. சோலைராசு] [1985 மார்ச் 12

விலைப்படியை அவர்கள் சேமிப்பு பத்திரமாகவும், சேமிப்பு நிதியில் மாற்றி விடுகிற வகையிலும் அவலநிலை இருக்கிறது. இங்கே அகவிலைப் படியை பத்திரமாகக் கொடுத்தால் இங்கே பேசிய அன்புச் சகோதரர் ரகுமான்கான் விட்டுவிடுவார்களா? பத்திரம் கொடுக்கிற கீழ்த்தரமான, கேவலமான நிலையில் தமிழக அரசு இருக்கிறது என்று சொல்ல மாட்டார்களா? அதேபோல் இந்திய துணைக்கண்டத்திலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மாதம் ஒரு ரூபாய் பிடித்துக்கொண்டு அரசு ஊழியர்கள் பணியிலே இருக்கிறபோது இறந்துவிட்டால் 20 ஆயிரம் ரூபாய் தருகிற அரிய திட்டத்தைப் பாராட்டி இருக்கலாம் என்று அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு ரகுமான்கான் தன்னுடைய உரையில் ஒன்றைச் சொன்னார்கள். பினாமி ஒழிப்புச் சட்டம் என்னவாயிற்று? ஏகமனதாக நம் சட்டமன்றத்திலே நிறைவேற்றி அனுப்பினோமே அந்தச் சட்டம் என்னவாயிற்று என்றெல்லாம் கேட்டார்கள். எங்களுடைய அரசின் சார்பில் அந்தச் சட்டத்தை கைவிட்டுவிட்டோம் என்று இதுவரையில் அறிக்கை வந்திருக்கிறதா? மத்திய அரசு அந்தச் சட்டத்தை தமிழக அரசிற்கு திருப்பி அனுப்பியிருக்கிறது. திருப்பியனுப்பியிருக்கிற அந்தச் சட்ட நகலைப் பற்றி எங்களுடைய அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது. அதை இன்னும் கைவிடவில்லை. அதுபற்றி ஒரு முடிவை எங்கள் தலைவர் எடுப்பதற்கு முன்னால் என்னவாயிற்று என்று கேட்கிற அவரைப் பார்த்து நான் ஒன்றை கேட்க விரும்புகிறேன். 1972-ம் ஆண்டில் நான் 10-ம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் என்று நினைக்கிறேன், உழுபவர்களுக்கு நிலம் சொந்தம் என்று ஒரு அரிய திட்டத்தை கலைஞர் அவர்கள் அறிவித்தார். அந்த அரிய சட்டத்திலே சோவியத் ரஷ்யாவைப் போல் தமிழகத்தில் பொதுவுடமைப் பூங்கா மலர இருக்கிறது; அந்தச் சட்டம் ரஷ்யாவில் இருக்கிற கம்யூனிஸ்ட்களை தோற்கடிக்கிற அளவிற்கு கலைஞர் அவர்கள் அறிவித்து விட்டார்கள் என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தோம், அந்த அறியாத பருவத்திலே, எந்தச் சட்டம் முதல்வர் கருணாநிதி அவர்களால் டெல்லி போரசுக்கு அனுப்பப்பட்டதோ, அந்த உழுபவர்களுக்கு நிலம் சொந்தம் என்கிற சட்டத்தை அதே முதல்வர் கருணாநிதி அவர்கள் திரும்பப் பெற்றுக் கொண்டார். இதுபற்றி நான் சகோதரர் ரகுமான்கான் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.



1985 மார்ச் 12] [திரு. க. சோலைராசு]

அதேபோல எந்தச் சட்டத்தை வைத்து, எந்தத் திட்டத்தை வைத்து, எந்தக் கொள்கையை வைத்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வேன். நானும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையைப் பார்த்தேன். அந்த அறிக்கையிலே அவர்கள் என்ன சொன்னார்கள். சத்துணவு கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். சத்துணவு கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். இலவச மின்சாரம் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். சத்துணவு கொடுத்தது யார்? புரட்சித் தலைவர். இலவச மின்சாரம் கொடுப்போம் என்று சொன்னது யார்? புரட்சித் தலைவர். ஆனால் அவர்கள் தங்கள் அறிக்கையில் வார்த்தை ஜாலங்களால் வர்ணம் பூசி அதையே சொன்னார்கள். மிக அழகாகச் சொன்னார்கள். நல்ல சத்துணவு போடுவோம்; இலவச மின்சாரம் எல்லோருக்கும் தருவோம் என்று சொன்னார்கள். ஆகவே நாங்கள் சொன்னதையே அவர்கள் வார்த்தைகளால் மாற்றிச் சொன்னார்களே தவிர வேறில்லை என்பதை மக்கள் புரிந்து கொண்டார்கள். சொல்வதை செய்யக்கூடியவர்கள் யார்? நல்லவர் யார் என்று புரிந்து கொண்டார்கள். அந்தச் சிந்தனைத் திறனோடுதான் எங்களை எல்லாம் அவர்கள் பெருமளவில் தேர்ந்தெடுத்தார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக ஒன்றைச் சொன்னார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திரா காங்கிரசும் கூட்டணியிலே இருக்கிற காரணத்தினாலேதான் அண்ணா தி.மு.க.வில் இருக்கிறவர்கள் எல்லாம் பேசுவதற்கு சங்கடப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அண்ணா தி.மு.க. இந்திரா காங்கிரஸ் கூட்டணியிலே இருக்கிறபோதுதான் ஒரு மாநிலத்தில் ஒருவரை நீதிபதியாக நியமிக்க வேண்டுமென்று சொன்னால் அந்த மாநிலத்தில் மொழி தெரியாதவர்களை நியமிக்கக் கூடாது என்று அறிக்கை கன்னி எங்களுடைய இதய தெய்வம் எம். ஜி. ஆர். அவர்களும், எங்களுடைய சட்டத்துறை அமைச்சர் அவர்களும் வெளியிட்டார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

(திரு. க. சோலைராசு) [1985 மார்ச் 12

அதைப்போலவே 1980-ல் இந்திய இராணுவத்தில் இருக்கிறவர் களுக்கு இந்தி தெரிந்தால்தான் பதவி உயர்வு பெறுவதில் முன் னுரிமை அளிக்கப்படும் என்று ஒரு சட்டத்தைக் கொண்டுவந் தார்கள். தம்முடைய மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் இப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது என்று சொன்னார்கள், அறிக்கை வெளியிட்டார்கள். அப்போது நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்த திரு. தண்டபாணி அவர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இராணு வத்தில் குழப்பத்தை ஏற்படுத்தப் பார்க்கின்றார் என்று சொன் னார்கள். ஆக, இந்தி படித்தால் பதவி உயர்வில் முன்னுரிமை என்பதை ஆதரிக்கக் கூடாது என்று சொல்கிறவர்கள் அன்றைக்கு ஆதரவு தரக்கூடிய முறையில் பேசினார்களா? (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப் பினருக்கு இது கன்னிப் பேச்சு. கன்னிப்பேச்சின்போது யாரும் குறுக்கிடக் கூடாது, பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்கக் கூடாது என்பது நம்முடைய மரபு. ஆகவே, வேண்டுமானால் அவர்கள் பேசி முடித்த பிறகு ஏதாவது விளக்கம் கேட்கலாம்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தங்களிடம் ஒரு ரூலிங் கேட்க விரும்பு கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதன் முதலாக உரை நிகழ்த்துகின்ற காரணத்தால் குறுக்கிடக்கூடாது என்ற ஆரோக்கியமான மரபை எல்லோரும் காப்பாற்ற கடமைப்பட் டிருக்கிறோம்; நிச்சயமாகக் காப்பாற்றுகிறோம். நான் தெரிந்து கொள்ள விரும்புவது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்தில் பேசும்போது இந்தத் தகவலைச் சொன்னார் என்று ஒரு தவறான தகவலைச் சொல்லும்போது, தவறான தகவலைத் தரக் கூடாது என்ற நல்ல எண்ணத்தோடு அந்தக் கட்சியைச் சேர்ந்த நாங்கள் கேட்கிறோம். தவறான தகவலைச் சொல்லும்போதே கேட்காமல், வேறு எப்போது கேட்கலாம் என்று நீங்கள் சொன் னால் அப்போது கேட்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கன்னிப் பேச்சின் போது குறுக்கீடு கூடாது என்பதை ஒரு மரபாக நாம் வைத்திருக்கிறோம். தவறான தகவலைத் தருகிறார் என்றால்



1985 மார்ச் 12] (பேரவைத் துணைத் தலைவர்)

அடுத்து உங்கள் கட்சியிலிருந்து பேசுகின்ற உறுப்பினர் விளக்கம் அளிக்கலாம். அல்லது அந்த உறுப்பினர் பேசி முடிந்த பிறகு விளக்கம் கேட்கலாம்.

**திரு. க. சோலைராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அவையில் நீண்டநாள் அனுபவம் பெற்றிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய கன்னிப்பேச்சு முடிந்த பிறகு கேட்டிருந்தால் நான் பதில் சொல்லி யிருப்பேன்; இடையிலே குறுக்கிட்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. என்னைப் பொறுத்தவரையில் அவர் கேட்டதற்கு ஆதாரம் தர நான் தயாராக இருக்கிறேன் என்று சொல்லி, என்னுடைய பேச்சைத் தொடருகிறேன்.

இப்படிப்பட்ட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பார்த்து அவர்களுக்கு அஞ்சுகிறார்கள் என்று சொல்கிறார்கள். "அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா" என்று கூறிய புரட்சித் தலைவரைப் பார்த்து, மூன்றுமுறை மரணத்தை வென்று வந்திருக்கிற புரட்சித் தலைவரைப் பார்த்து அஞ்சுகிறார்கள் என்று சொல்வது உள்ளபடியே வேதனை அளிப்பதாக இருக்கிறது.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சில தகவல்களைச் சொன்னார்கள். அப்போது குறுக்கிடக் கூடாது என்ற காரணத்தால் நாங்கள் அமைதியாக இருந்தோம். போலீஸ் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அவரைப் பார்த்து ஒரே ஒரு சம்பவத்தைப் பற்றி மட்டும் கேட்க விரும்புகிறேன். திரிபுரா மாநிலத்தில் 15 பேரை போலீசார் சுட்டுக் கொன்றார்கள். மக்கள் போராட்டம் நடத்தினார்கள், நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கோரிக்கை வைத்தார்கள், கிளர்ச்சி நடத்தினார்கள். அதைப்பற்றிக் கேட்டபோது ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற திருபன் சக்கரவர்த்தி என்ன சொன்னார்? நான் மக்கள் உரிமையை மதிக்கிறேன், இந்த சம்பவத்திற்கு விசாரணை வைக்கிறேன் என்று சொன்னார்கள். உடனே, திரிபுராவிலே ஜனநாயகம் காப்பாற்றப்பட்டிருக்கிறது என்று நாங்கள் கருதினோம். விசாரணைக் கமிஷன் வைத்தார்கள். கமிஷன் தன்னுடைய தீர்ப்பை அளித்துவிட்டது. மக்கள் உரிமையை

மதிக்கிறேன், விசாரணைக் கமிஷன் வைக்கிறேன் என்று சொன்ன அதே நிருபன் சக்கரவர்த்தி, கமிஷன் தீர்ப்பு அளித்த பின்னால் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போன்று தமிழ்நாட்டில் மூடிக் கிடக்கின்ற பஞ்சாலைகளைத் திறக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி இந்த நாட்டில் ஏற்பட்ட பிறகுதான் பல்வேறு பஞ்சாலைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. உதாரணமாக மதுரையிலே 'மதுரா ஷுகர்ஸ்' நிறுவனத்தை அரசு ஏற்கும் நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சி ஆட்சி நடைபெறுகின்ற மேற்கு வங்கத்தில் 26 அரசு நிறுவனங்களை தனியாரிடம் விட அரசு உத்தேசித்துக்கொண்டிருக்கிறது என்ற செய்தியை நாம் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலைமைகள் இங்கே இல்லாமல், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க என்றும் தயாராக இருக்கிறார்கள். புரட்சித்தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே தொழிலாளர் நலன்களைப் பேணிப் பாதுகாக்கின்ற சட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

முடிவாக நான் சார்ந்திருக்கிற மருங்காபுரி தொகுதி மக்களின் பிரச்சனைகளைப் பற்றி இந்த அவையில் தெரிவிக்க விரும்புகிறேன். மருங்காபுரி தொகுதி நான்குபுறம் மலைகளால் சூழப்பட்டு இருக்கிற மிகப்பெரிய வறண்ட பகுதியைக் கொண்டது. மலைகள் என்ற உடன் இங்கே இருப்பவர்கள் வேறு விதமாக எண்ணிவிடக்கூடாது. ஒரு ஏக்கர் நிலத்தை உழுவதற்கு ஒரு இரும்புக் கலப்பைத் தேய்கிறது. மலை என்று சொன்னால் வனப்புமிக்க எழிலான மலைகள் அல்ல, கற்களாலும், பாறைகளாலும் நிரம்பப்பெற்ற மலைகள். இப்படி வறண்டு கிடக்கின்ற தொகுதியில் உள்ள மக்கள் வானம் பார்த்திருக்கிற பகுதியிலே "வான் பொய்ப்பினும் நான் பொய்க்கமாட்டேன்" என்று





சொல்வதைப்போல, மூன்றாவது முறையாக புரட்சித் தலைவர் அவர்கள் வந்ததற்குப் பிறகு மிகப் பெரிய கசிவு நீர்குட்டைகளை வெட்டுவதற்கு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மருங்காபுரி ஒன்றியத்தில் கஞ்சான்நாயக்கன்பட்டி பகுதியிலும், வையம்பட்டி ஒன்றியத்தில் கோழிசின்னாபாறை, மின்னகரடு என்கிற மூன்று கசிவுநீர் குட்டைகளைக் கட்டி, விவசாயத்திற்கு உதவியாக இருக்க வேண்டும் என்று, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மூன்றாம் முறையாக ஆட்சிக்கு வந்திருக்கிற புரட்சித்தலைவர் அவர்கள் இதை விரிவுபடுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் புன்செய் விவசாயத்தை நம்பிக்கொண்டிருக்கிற எங்கள் பகுதி மக்களின் வேதனையைத் தீர்க்கவும் என்னுடைய தொகுதியிலே இரண்டு தொழிற்சாலைகளைக் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் வெகுகாலமாக பேசி வருகிற திட்டமான, மேற்கு நோக்கி பாய்கிற நீரை, கேரளாவிற்குச் சென்று வீணாக கடலில் கலக்கிற தண்ணீரைத் தமிழகத்திற்குக் கொண்டு வருகிற திட்டத்தின் அடிப்படையிலே பெரியகுளம், நிலக்கோட்டை, திண்டுக்கல் வழியாக என்னுடைய தொகுதியைச் சேர்ந்திருக்கிற வையம்பட்டி பகுதியிலே இருக்கிற பொன்னனி ஆறுக்கு வரவிருக்கின்ற ஆலடி நீர்த்தேக்க திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வர சம்மதித்து இருக்கிறார்கள் என்று டெல்லியில் இருந்து செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அன்றைக்கு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ராஜீவ் காந்தி அவர்கள் இன்றைக்குப் பாரதப் பிரதமராக ஆகியிருக்கிறார்கள். அவர்கள் இதற்கு பெருந்துணை புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிற காரணத்தால், அந்தத் திட்டத்தை விரைவுபடுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் வையம்பட்டி ஒன்றியத்தின் வடக்குப் பகுதி மக்கள் மருத்துவமனைக்குச் செல்லவேண்டும் என்றால், 15 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கிற தோகைமலை, வையம்பட்டி, மணப்பாறை போன்ற போக்குவரத்து வசதியற்ற பகுதிகளுக்கு வரவேண்டியதாக இருக்கிறது. அங்கே எந்தவிதமான போக்குவரத்து வசதியும் கிடையாது. இன்றைக்கு இருக்கிற போக்கு

வரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் முத்துசாமி அவர்கள் தயவால் இப்போது விட்டு இருக்கிற பேருந்து காலையில் ஒன்று செல்கிறது, மாலையில் ஒன்று செல்கிறது. எனவே, இது அங்குள்ள மக்களுக்கு சரியான வகையில் உதவிட முடியவில்லை. எனவே தினமும் அல்லல்படுகிற அவர்களுக்கு வடக்குப் பகுதியின் மையமாக இருக்கிற அனியாபூரியில் ஒரு மருத்துவமனையைக் கட்டித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த நம்பிக்கையின் விளைவாகத்தான் கற்பகத்தரு போன்ற புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே நமக்கு எல்லாம் நல்லது கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேதான் இளைஞனான எனக்கு 38,521 வாக்குகளை அதிகப்படியாக வாரி வழங்கியிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதிக்கு புரட்சித் தலைவர் அவர்கள் நல்லது செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு அங்கேயிருக்கிற பிற்படுத்தப் பட்டவர்கள் வாக்குகளை அளித்திருக்கிறார்கள். எனவே என்னுடைய மருங்காபுரி தொகுதியில் இருக்கிற மாணவர்களுக்கு ஒரு தொழில்நுட்ப கல்லூரியைக் கட்டித்தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் புத்தாநத்திலிருந்து மானாக்குன்றம் இளங்மனம் வழியாக கல்பட்டிச் செல்லுகின்ற பாதையிலே இருக்கின்ற சிறிய பாலங்களைக் கட்டியும், அதை தார் சாலையாக மாற்றித் தருமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

வெள்ளையர்கள் காலத்திலிருந்து வேண்டிக்கொண்டு இருக்கிற கோரிக்கையாக மருங்காபுரி ஒன்றியத்திலே வேம்பனூர் பகுதியில் இருக்கிற மூன்று பாலங்களையும், வையம்பட்டி ஒன்றியத்தில் இருக்கிற குமாரவாடி பாலம் போன்ற நான்கு பாலங்களையும் கட்டுவதற்கு புரட்சித் தலைவர் அவர்கள் மூன்றாம் முறையாக பதவி ஏற்ற பின்பு திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. அந்த திட்டங்களை விரைவுபடுத்தி, அவைகளை முடித்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் ஆட்சியை காமதேனு என்றும், அட்சயப் பாத்திரம் என்றும் நம்பிக்கொண்டு பெருவாரியான வாக்குகளை அளித்த என்னுடைய தொகுதி மக்களுக்கு புரட்சித் தலைவர் அவர்கள், அமுதசுரபி போன்று நல்ல திட்டங்களை எல்லாம்,





என்னுடைய தொகுதிக்கு வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இங்கே பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்திற்காகக் கேட்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் மருங்காபுரி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசும் போது நாடாளுமன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகத் தினுடைய குழுத்தலைவராக இருந்த திரு. சி. டி. தண்டபாணி அவர்கள் தமிழ்நாட்டு முதலமைச்சரைப் பற்றி குறைவான நிலையிலே அல்லது தவறான நிலையிலே கருத்தைத் தெரிவித் தார்கள். அதற்கு என்னிடத்திலே ஆதாரம் இருக்கிறது என்று இந்த மன்றத்திலே குறிப்பிட்டார்கள். ஆனால் சி. டி. தண்டபாணி இந்த மன்றத்திலே இல்லை. இப்படிப்பட்ட கருத்தை அவர்கள் சொன்னார்களா ? இல்லையா ? என்று பதில் சொல்வதற்கு அவர் களுக்கு வாய்ப்பில்லை. அவர்கள் இல்லாத அவையில், நடந்து முடிந்த நாடாளுமன்றத்தில் வந்த ஒரு பிரச்சனையைப் பற்றி இங்கே பேசுவது ஏற்பு உடையதுதானா ? இதுபோன்ற விவாதங்கள் இந்த மன்றத்தினுடைய மரபுக்கு உகந்ததுதானா என்பதை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்களின் முடிவிற்கே விட்டுவிடுகிறேன்.

**திரு. கு. சுப்பராயன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மருங்காபுரி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு உங்கள் மூலமாக நான் ஒரு விளக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். நான் சார்ந்திருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி திரிபுரா மாநிலத்தில் ஆட்சியில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

Thiru A. RAHMAN KHAN : We want a clear ruling from the Chair regarding the issue raised by my Learned Friend.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர் பேசியதில் எதுவும் தவறு இல்லை. அவர் பாராளுமன்றத்திலே பேசியதைப் பற்றி பேசியது அவைக் குறிப்பிலே இருக்கிறது. அவ்வாறு பாராளுமன்றத்திலே திரு. சி. டி. தண்டபாணி அவர்கள் பேச வில்லை என்று மறுத்ததும் அவைக் குறிப்பிலே இருக்கிறது. இரண்டுமே அப்படியே இருக்கட்டுமே (குறுக்கீடு) உறுப்பின

[பேரவைத் துணைத் தலைவர்]

[1985 மார்ச் 12

ருடைய கன்னிப்பேச்சு அது. தவிர இன்னொரு உறுப்பினரும் பேச இருக்கிறார். ஆக எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு கவனிக்கவேண்டும் . . .

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். பேசியதற்கு ஏதாவது ஆதாரம் இருந்தால் அது அவைக் குறிப்பிலே இருக்கலாம். அதை ஏற்றுக் கொள்ளலாம். அப்படி ஆதாரம் இல்லாத போது, அதை ஆஃப் ஹேண்ட்டாக பேசுவது சரியல்ல என்று தான் சொல்கிறேனே தவிர, நீங்கள் சொல்வதுபோல் இரண்டும் இருக்கட்டும் என்று சொன்னால் அது . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர் கன்னிப் பேச்சிலே அவ்வாறு பேசியிருக்கலாம். அதற்காக ஒரு ரூலிங் தேவையில்லை என்பதுதான் என் கருத்து . . .

Thiru A. RAHMANKHAN : The hon. Member has made a reference to the speech made by Thiru C. T. Dhandapani on the floor of the Parliament. Is there any evidence ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. சி. டி. தண்டபாணி இவ்வாறு பேசியிருக்கிறார் என்று எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். அவ்வாறு இல்லை என்று மறுத்தும் பேசியிருக் கிறார்கள். இரண்டுமே அவைக்குறிப்பிலே இருப்பதினால் சரியாக இருக்கும் . . .

**டாக்டர் கே. சமரசம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசிய உறுப்பினர் ஒரு சம்பவத்தைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதை மறுப்பதோ ஏற்பதோ மற்றவர்களுடைய, சம்பந்தப்பட்டவர்களுடைய பொறுப்பு . . . . (குறுக்கீடு)

Thiru A. RAHMANKHAN : It is not an occurrence, but it is a speech

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது, திரு. தண்டபாணி அவர்கள் நாடாளுமன்றத்திலே பேசியபேச்சு.



[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 12

அதுபற்றிக் குறிப்பிட்டு இந்த மாதிரியாகப் பேசினார்கள் என்று சொன்னார். அப்படிச் சொல்வது சம்பவம் அல்ல, பேச்சு. அந்தப் பேச்சுக்கு ஆதாரம் உண்டா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேசிய உறுப்பினரிடத்திலே ஆதாரம் இருக்கிறது. அவர்கள் பொறுப் பேற்றிருக்கிறார்கள். அப்படி இல்லை என்று நிரூபிக்கிறபோது தான் பிரச்னை ஏற்படும் . . . (குறுக்கீடு)

**திரு. அ. ரகுமான்கான் :** ஆதாரத்தைக் காட்டிய பிறகு அதை ஏற்றுக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். துணைத் தலைவர் அவர்களே, நீங்களும் நானும் இந்த அவையில் முன்பே இருந்தவர்கள். இதுபோன்று பல சம்பவங்களில் அப்படித்தான் இந்த அவை . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தக் கூட்டத் தொடரிலேயே இதைத் தலைவர் பலமுறை இப்படிப் பேசினார் அப்படிப் பேசினார் என்று கூறியிருக்கிறார்கள். நீங்களே கூட, தேர்தல் அறிக்கையில் என்னென்ன எல்லாம் கொடுக்கப்பட்டது என்று சொன்னீர்கள். 1975 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையையும், 1980 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையையும் குறிப்பிட்டுச் சொன்னீர்கள். அப்போது அந்த தேர்தல் அறிக்கைகளை கொண்டு வந்து காட்டுங்கள் என்று கேட்கவில்லையே. இது உறுப்பினரின் கன்னிப் பேச்சு. அத்தோடு அவர் பொறுப்பேற்றுக் கொள்கிறார். அதனால் இதை இத்தோடு விட்டு விடுவோம். திரு. ஜி. கே. ஜெ. பாரதி அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

(பிற்பகல் 1-20)

***திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டப் பேரவையில் முதன் முதலாக பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்த அருமைத் தலைவி எங்கள் வணக்கத்திற்குரிய அன்னை இந்திரா காந்தியி னுடைய திருவடியை வணங்கி இந்த வாய்ப்பினை உருவாக்கி, மேலும் மேலும் வளர்கின்ற உற்சாகத்தைத் தருகின்ற இந்த இளைஞர் ஆண்டின் இணையற்ற தலைவராக விளங்கும் இளைய

பாரதத்தின் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, வாக்களித்த என்னுடைய திருவொற்றியூர் தொகுதி மக்களுக்கும் குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அடலேறுகளுக்கும், காங்கிரஸ் கட்சி மறவர் களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

ஏழாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள அமெரிக்காவில் சிகிச்சைக்கு சென்ற முதலமைச்சர் அவர்கள், மீண்டும் தமிழகத் திற்கு வருகின்றபோது நம்முடைய உருவாக்கித்தந்த, எழுச்சி மிக்க வரலாற்றுத் தலைவராக தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கின்ற பெருமையினை உள்ளபடியே நான் பாராட்டுகிறேன். (கரவொலி). அவர்கள் நலத்தோடு தமிழகத் திற்கு வந்து மிகப் பெரிய 4½ கோடி தமிழக பெருமக்களைக் காப்பாற்றுகின்ற, கட்டி பேணுகின்ற அந்த ஒழுக்கம் மிக்க தலைவருக்கு அன்பு கலந்த நன்றியைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாக மீண்டும் அவர்கள் நலம் பெற்றதற்கு நான் தினமும் வழிபடுகின்ற கண்ணனுடைய திருவடி கழலை ஏற்றுகின்றேன்.

என்னுடைய அருமைத் தலைவி, கூட்டு சேரா நாட்டினுடைய ஒப்பற்றத் தலைவி, மிகப் பெரிய பாரதத்தை கட்டிக் காத்தார் களே, குறிப்பாக 16 ஆண்டுகளாக இந்தியத் திருநாட்டை கட்டிக் காத்தார்களே, அந்த தலைவிக்கு கயவர்கள் 16 குண்டுகளைப் பாய்ச்சினாலும்கூட, இந்திய நாட்டு மக்களுக்காக வாழ்வேன், வாழ்கின்ற தன்மையில் இருப்பேன் என்று சாகின்ற ஒரு நாளைக்கு முன்பாகக்கூட சொன்னார்கள். மேலும் இந்த உடலில் இருக்கின்ற ஒரு துளி குருதியானது இந்த மண்ணிற்குச் செல்லுமானால், அது இந்த மக்களுக்கு பயன்படுமானால் அதற்கும் நான் சித்தமாக இருக்கிறேன், உவகை அடைகின்றேன், இந்த நாட்டினுடைய வளர்ச்சிக்காக நான் பூரிப்பு அடைகிறேன் என்று சொல்லி பூரித்த அந்த உள்ளத்தினுடைய இதயத்திற்கு 16 குண்டுகளைத் தந்தார்கள். அந்த 16 குண்டுகளை ஏற்றுக் கொண்ட அந்த தாய் உயிர் பிரிகின்றபோதுகூட நாடு நாடு என்று செத்தார்களே, அப்படி செத்த அந்த அருமை உத்தமிக்கு இந்த மாமன்றம் குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட



முன்னேற்றக் கழக அரசு, அவருடைய திருவுருவப் படத்தைத் திறந்து வைக்கின்ற தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்கு காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற செயலாளர் என்ற முறை யிலும், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும் நன்றி தெரி விக்க கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை பணிவுடன் தெரி வித்துக்கொள்கிறேன்.

மேலும் நம்முடைய ஆளுநர் உரையிலே சிறப்பான அம்சங்களை வெளியிட்டு இருக்கிறீர்கள். அதை நான் வரவேற் கிறேன். பல்வேறு திட்டங்களை சொல்வதற்கு முன்னாலே, மத்திய மாநில உறவுகள் குறிப்பாக நடுவண் ஆட்சியினுடைய தன்மைகள் நலமாக இருக்கின்றன என்று பல்வேறு நிலையிலே ஆளுநர் அவர்கள் பெருமைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நிர்வாகத்தை தூய்மைப் படுத்துவோம், நடுவண் அரசுக்கு மன நிறைவான ஆதரவைத் தருவோம் என்று ஆளுநர் உரையிலே சொல்லி யிருக்கிறார்கள்.

நிர்வாகத் திறமையை உருவாக்குவதற்கு இந்தியாவிலே 542 பாராளுமன்றங்களிலே 402 இடங்களைப்பெற்று இந்திய வரலாற்றில் மாபெரும் எழுச்சியை உருவாக்கித் தந்திருக்கின்ற, பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியினுடைய எழுச்சியினையும், முதல் பாராளுமன்றத்திலேயே, கட்சி மாறுகின்ற தடைச் சட்டத்தை கொண்டு வந்து இந்திய நாட்டிலே நிர்வாக சீர்திருத்தத்தை உருவாக்கிக் காட்டிய பெருமை மிக்கத் தலைவராக ராஜீவ் காந்தி எழுந்திருக்கிறார்களே அந்த எழுச்சியினை பார்த்து, நிர்வாக சீர்திருத்தத்தை வரவேற்கின்ற எழுச்சித் தன்மை மிக்க தமிழக அரசிற்கு நான் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து நம்முடைய 20 அம்சத் திட்டத்திற்கு முழுமையான வடிவத்தோடு செயல் திறனை கடைபிடிப்பதற்கு நாங்கள் பரிபூரண ஒத்துழைப்பு தருகிறோம் என்று ஆளுநர் உரையிலே குறிப்பிட்டு இருக்கிறீர்கள். அந்த ஆளுநர் உரையில் குறிப்பிட் டிருப்பதுபோல் இந்திய நாட்டிலே, மிகப்பெரிய எழுச்சி பெற்றிருந்தாலும், அந்த பரிபூரண ஒத்துழைப்பால் தான் தமிழகத்தில் ஒரு மாபெரும் வளர்ச்சியை நாம் பெற்றிருக்கிறோம் என்ற உணர்வை கூர்ந்து பார்த்தாக வேண்டும்.

[திரு. ஜி. ஜெ. பாரதி] [1985 மார்ச் 12

இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். அனுதாபத்தால் தான் நாம் இங்கே மாபெரும் வெற்றியை உருவாக்கினோம் என்று சொன்னார்கள். குறிப்பாக எம். ஜி. ஆர். அவர்களின் உடல் நலக் குறைவினாலும், அருமைத் தலைவி இந்திரா காந்தியினுடைய அனுதாப அலையினாலும் வெற்றி ஏற்பட்டது என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்திரா காந்தி யினுடைய புதிய 20 அம்சத் திட்டத்தினுடைய எழுச்சியையும், அந்த 20 அம்சத் திட்டத்தை கிராமங்கள் தோறும், பட்டிகள் தோறும், நகரங்கள் தோறும் செம்மையாக புரட்சித் தலைவர் அவர்கள் செயல்படுத்திய காரணத்தினால்தான் மீண்டும் தமிழகத்திலே எழுச்சி பொருந்திய ஒரு ஆட்சியை உருவாக்க முடிந்தது என்று பெருமையோடு, பூரிப்போடு சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆகவே இந்த எழுச்சி பொருந்திய சூழ்நிலையில் எந்த அலையும் இல்லை. தமிழகத்தைப் பொறுத்தவரையில் அருமைத் தலைவி இந்திரா காந்தி அலையும், தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அலையும், நம்முடைய வங்கக் கடல் ஓரமாக அலை தொடர்ந்து வீசிக்கொண்டிருப்பதைப் போன்று தமிழகத்திலே நிச்சயமாக வீசிக்கொண்டே இருக்கும் என்பதை உணர்வுப் பூர்வமாக எண்ணிப்பார்க்க வேண்டும். அலை ஓய்ந்ததாக வரலாறு இல்லை. ஓய்ப்போவதும் இல்லை.

நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் இலங்கைப் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆளுநர் உரையிலே இலங்கைப் பிரச்சினை பற்றி மிகச் சிறப்பாக உரையாற்றியிருக்கி றார்கள். ராஜீவ் காந்தி சுமுகமான முறையில் இலங்கைப் பிரச் சினையைத் தீர்க்க வேண்டுமென்று, பந்தத்தோடு, பரிவோடு, காதலோடு அவர்கள் செயல்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லி யிருக்கிறார்கள்.

குறிப்பாக ராமேஸ்வரத்தில் மீனவர்கள் தாக்கப்பட்டபோது, கடற்படையைச் சேர்ந்த ரோந்துப் படகுகளையும், வீரர் களையும் அனுப்பி வைத்து, அந்த மீனவர்களைப் பாதுகாத்த



1985 மார்ச் 12] [திரு. ஜி. ஜெ. பாரதி]

அந்தப் பண்பாட்டினைப் பார்க்கின்றபோது தமிழகத்தின் மீது அவர் எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறார் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

பாராளுமன்றத்தில் ராஜீவ் காந்தி பேசும்போது இது தமிழகத்து தமிழர்கள் பிரச்சினை மட்டுமல்ல, இந்த இலங்கைப் பிரச்சினை இந்தியர்களின் பிரச்சினை என்பதை அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி வருவதைப் பார்க்கிறோம். ஆகவே இந்த எழுச்சி பொருந்திய இலங்கைத் தமிழர்களை, அங்கே துன்பப் படுகிறவர்களை நாம் வேடிக்கை பார்க்கவேண்டுமென்ற எண்ணம் நடுவண் அரசுக்கு இல்லை. ஆனால் ஒருசில தோழர்கள், ஒருசில கட்சிகளின் சொந்தக்காரர்கள் மட்டும், தமிழால், தமிழ் மொழியால், தமிழ் இனத்தால், தமிழ்க் காதலால் எண்ணுகின்ற பண்பாட்டினை மாற்றிக் கொள்ளவேண்டுமென்று நான் பணிவன் போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ் இன மக்கள் எந்த மூலையில் பாதிக்கப்பட்டாலும், தமிழ் இன மக்கள் எந்தப் பகுதியில் துன்பப்பட்டாலும், அதற்காகக் குரல் கொடுப்பதற்கு எங்களுடைய காங்கிரஸ் பேரியக்கமும், நடுவண் அரசும், அருமைத் தலைவர் ராஜீவ் காந்தியும் குரல் கொடுப்பார்கள் என்பதை நான் இறுதியாக உறுதியாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இலங்கைப் பிரச்சினையில் ராணுவத்தை அனுப்பவேண்டு மென்று சொல்கிறார்கள். ராணுவத்தை அனுப்புவது, அங்கே இருக்கின்ற சிங்களவர்களையும், அங்கே இருக்கின்ற தமிழர் களையும், அங்கே இருக்கின்ற மாற்று இனத்தவர்களையும் அந்த இராணுவம் சென்று, எவன் தமிழன், எவன் சிங்களவன் என்று பாகுபாடு கண்டறிய முடியுமா? அப்படி கண்டறிய வேண்டிய சூழ்நிலையை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். அது நல்ல முறையிலே அங்கே இருக்கின்ற மக்களுக்கும் அங்கே இருக்கின்ற மாற்று இனத்து மக்களுக்கும் செழுமையான உணர்வை உருவாக்க வேண்டுமென்பதை, மனப்பூர்வமான துணிச்சலை நாம் பெற்றாக வேண்டும் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். நான் குறிப்பாகச் சொல்கிறேன். இங்கே நம்முடைய தமிழக அரசு இலங்கைப் பிரச்சினையில் அணுகிய முறை மிகச் சிறப்பாக

இருக்கிறது என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.
இலங்கையில் வாழ்கின்ற அந்த இன்பத் தமிழர்கள்,
தமிழர்கள், அன்புத் தமிழர்கள், அந்த கருத்துமிக்கத் தமிழர்களின் ஈழத்
உணர்வுகளை அரசு அறிகிறது. அவன் பாதித்தால், அந்த விளைவு
கள் அவனை துன்பநிலைக் உருவாக்குவதற்கு முன்னாலே,
அங்கே ஏற்படுகின்ற சிக்கல்கள் எல்லாம் நம்முடைய தமிழர்
களுக்கு. தமிழகத்திலே இருக்கின்ற தலைவர்கள் நடந்துகொள்
கின்ற முறை, வெளியிடுகின்ற அறிக்கைகளால் தான் அங்கே இருக்
கின்ற தமிழர்களுக்கு துன்பம் ஏற்படுகிறது என்று இலங்கையி
லிருந்து வருகின்ற தமிழர்கள் சொல்கிறார்கள். ஆகவே இங்கே
இருக்கின்ற தமிழ்த் தலைவர்கள், குறிப்பாக அமைதியான
முறையிலே அணுகினால்தான், அவர்களைத் தொல்லையிலிருந்து
காப்பாற்றலாம் என்று நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆகவே
இலங்கைப் பிரச்னையை பொறுத்தவரையில், அதைத் தீர்க்கின்ற
வகையில் அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு
வல்லமையும், திறமையும் உண்டு என்பதை மனப்பூர்வமாக
எண்ணிப் பார்க்கவேண்டும். நம்முடைய மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களிடம் நான்
பணிவோடு தெரிவித்துக்கொள்வதெல்லாம் நம்முடைய தமிழக
முதல்வர் அவர்கள், அருமைத் தலைவி இந்திரா காந்தி அவர்கள்
பிரதம மந்திரியாக இருந்தபோது, பல்வேறு கட்சிகளைச் சார்ந்த
தலைவர்களை அழைத்துக்கொண்டு டில்லியிலே அவரோடு
கலந்து பேசி, அவரது அன்பினைப் பெற்று, எப்படி அந்தப்
பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டுமென்று எண்ணினார்களோ,
அதைப் போன்று மீண்டும் நம்முடைய இளைய பாரதத்தின்
இணையற்ற தலைவராக வந்திருக்கின்ற மாபெரும் எழுச்சித்
தலைவராக விளக்கும் ராஜீவ் காந்தி அவர்களிடம் மறுபடியும்
இப்படிப்பட்ட ஒரு குழுவை அனுப்பவேண்டுமென்று நான்
பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த முறை சென்றால்
அந்த இளம் சிங்கம் சும்மா விடாது என்பதை நான் மனப்
பூர்வமாக எண்ணுகிறேன். சில செயல்களைச் சொல்லித்தான்
தீரவேண்டுமென்பதில்லை. அவர்கள் செய்து காட்டுகின்ற
திறமையைப் பார்க்க வேண்டும்.





தென் ஆந்திராவிலிருந்து வந்த புயலானது நம்முடைய சென்னையையும், செங்கற்பட்டு மாவட்டத்தையும் தாக்கியபோது அங்கே செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மக்கள் பாதிக்கப் படுகின்ற சூழ்நிலையை நாம் பார்த்தோம். புயலால் பாதிக்கப் பட்டவர்களைப் பார்ப்பதற்காக செங்கற்பட்டு, பழவேற்காடு, திருவொற்றியூர் போன்ற பகுதிகளுக்கு திரு. ராஜீவ் காந்தி ஓடோடி வந்தார்கள்.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி :** தன்னுடைய தாய் சுட்டுக் கொல்லப் பட்ட சூழ்நிலையை மறந்து இரண்டு, மூன்று வாரங்களுக் குள்ளாகவே அவர்கள் இங்கு ஓடோடி வந்து பார்த்து பார்த்து அவர்களோடு கனிவோடு பேசி மிகப் பெரிய தொகையை தந்தார்கள். 18.76 கோடி ரூபாய் தந்ததற்காக தமிழக அரசு நன்றிக் கடன் பட்டிருக்கிறது என்று ஆளுநர் உரையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். புயலால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்ப்பதற்காக ஓடோடி வந்த நிலையைப் பார்த்தோம். காலம் கடந்துவிட்டது. மணி ஓசை கேட்டு விட்டது. காலம் கடந்து காலனையும் வென்று காலத்தோடு கன்னித் தமிழ் வளர்க்கின்ற மாண்புமிகு முதல்வர் ஆட்சியில் ஒரு ஐந்து நிமிடம் எனக்கு கொடுக்க மாட்டார்களா என்று எண்ணுவதிலே வியப்பில்லை என்று சொல்லி நான் மேலும் பேச விழைகிறேன். அதற்கு அனுமதி தருவார்கள் என்று நம்புகிறேன்.

திருவொற்றியூர் பகுதி மிகப் பெரிய தொழிற்பேட்டைகள் நிறைந்த பகுதி. எழுச்சி மிக்கத் தொழிற்சாலைகள் சொன்னால் ஒரு பட்டியலே அடங்கும். அந்த தொழிற்சாலையிலே 10 தினங் களுக்கு முன்பு நச்சு வாயு வெளியேறி, ஐந்து, ஆறு தொழிலாளர் களை பாதித்தது. அந்தத் தொழிலாளர்களை மருத்துவ மனையிலே சேர்த்து அவர்கள் சிகிச்சைப் பெற்றார்கள். மிகப்

[திரு. ஜி. ஜெ. பாரதி] [1985 மார்ச் 12

பெரிய தொழிற்கூடமாக இருக்கிற அந்தப் பகுதியிலே ஏர் போல்யூசன் என்று சொல்வார்களே சுகாதாரம் அற்ற வாயுவை வெளியேற்றுகின்ற சூழ்நிலை இருப்பதை இங்கே சுற்றுப்புற சூழ்நிலை அமைச்சராக இருக்கின்றவர்கள் அதை போக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன். காரணம் என்ன வென்றால்

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

என்று வள்ளுவர் கூறியதைப் போன்று வருகின்ற காலத்தை அறிந்து நாம் இங்கே நச்சு வாயு வெளியேறாமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தத் தொழிலாளர்கள் அங்கே இருக்கிற மக்கள் பல குடும்பங்கள் பாதிக்கப்படலாம் என்ற உணர்வின் காரணமாக நான் இதைச் சொல்லுகிறேன். அங்கே வெளியேற்றப்படுகிற கழிவு நீரை மாடுகளும் எருமைகளும் பருகி செத்து விடுகிற காட்சியைப் பார்க்கிறோம். அந்தக் கழிவு நீரை பக்கத்தில் உள்ள கூவம் கால்வாயில் சேர்ப்பதற்கு வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே மிகப் பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை இருக்கிறது. ஆளுநர் உரையிலே 2.8 ஆக இருந்து வந்த அதன் சக்தியை 5.6 மில்லியன் டன்னாக உயர்த்த வேண்டும் என்ற பணியைச் செய்திருக்கிறார்கள் என்ற பூரிப்பான செய்தியைக் கேட்டு நாங்கள் உள்ளபடியே மகிழ்கிறோம் என்னுடைய தொகுதியில் படித்த இளைஞர்கள் பாமர மக்கள் வேலைவாய்ப்பைப் பெறப் போகிறார்கள். அந்த அளப்பெரும் கருணையை எண்ணி நான் நன்றி சொல்கிறேன். மணலியில் உள்ள உரத் தொழிற்சாலை வளர்ச்சித் திட்டத்திற்கு காங்கிரஸ் உறுப் பினர்களாகிய நாங்களும் சேர்ந்து பாரதப் பிரதமர் இடத்திலே இந்த அரசின் சார்பாக சொல்லி விரிவுபடுத்தப் போராடுவோம் என்று நான் இந்த அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.



1985 மார்ச் 12] [திரு. ஜி. ஜெ. பாரதி]

என்னுடைய தொகுதி கடலால் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. தினமும் 10, 20 அடியை கடல் விழுங்கிக் கொண் டிருக்கிறது. நம்முடைய மீனவர்கள் நம்முடைய ஜனநாயக கூட்டணிக்கு வாக்களித்தார்கள் என்பதற்காக நான் வக்காலத்து வாங்கவில்லை. அவர்களுடைய துன்ப துயரத்தைப் பார்த்து வேதனைப்படுகிறேன். அவர்கள் பாதிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கட்டுமர தொழிலாளர்களுக்கும் விசைப் படகு தொழிலாளர்களுக்கும் தகராறு ஏற்படுகிறது. எனக்கு முன்னாலே அந்தத் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. குமரி அனந்தன் அவர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். இன்று நான் அதையொட்டியே பேசுகிறேன். நண்பர்களே, அங்கே விசைப் பட்கு தொழிலாளர்களுக்கும், கட்டுமர தொழிலாளர்களுக்கும் இடையே உள்ள துன்பத்தைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மீனவர்களுக்காக வீடுகளை கட்டித் தரவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நண்பர்களே என்று இங்கே அழைத்து பேசக் கூடாது.

**திரு. ஜி. ஜெ. பாரதி:** என்னுடைய நகராட்சியிலே குடிநீர் பிரச்சினை இருக்கிறது. சாலை வசதி இல்லை, பாலம் வசதி இல்லை. மிகப் பெரிய நகராட்சியாக இருக்கிறது. பெரிய தொழில் கூடங்கள் உள்ள நகராட்சியாகும். அங்கே சாலை வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்து கழிவு நீரை சரியாக அகற்று வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (13—3—1985) காலை [illegible]-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

**பின்னர் பேரவை பிற்பகல் 1-36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.**

[1985 மார்ச் 12

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

67. தமிழ்நாடு 1954 ஆம ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வா ணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 11—10—1984 ஆம் நாளிட்ட 1059 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத் தின் 320(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

68. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்கு முறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் அமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 25—8—1982 ஆம் நாளிட்ட 840 ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

69. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மது (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 31—7—1984 ஆம் நாளிட்ட 929 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

70. தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறை யின் 18—9—1984 ஆம் நாளிட்ட 1589 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1955) 61(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

71. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத் தில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 28—8—1984 ஆம் நாளிட்ட 1893 ஆம் எண் அரசாணையில் வெளி யிடப்பட்ட அறிவிக்கை [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]



1985 மார்ச் 12]

72. தவறான வகைப்பாட்டின் காரணமாக கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஒண்டிப்புதூரிலிருந்து மருதமலை வரையி லும் மற்றும் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள தேனம்பாக்கம் முதல் தேனம்பாக்கம் வரையிலான தடங்களில் ஏற்பட்ட கருத் தியிலான வருவாய் நட்டத்தினைக் குறித்து உள் (போக்கு வரத்து-1) துறையின் 31—12—1984 ஆம் நாளிட்ட 3000 எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

73. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு கருப்பஞ்சாறு கட்டுப்பாடு ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மது விலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 31—8—1984 ஆம் நாளிட்ட 1142 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

74. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கிராம அலுவலர்கள் பணி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறை யின் 1—9—1984 ஆம் நாளிட்ட 1495 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத் தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

ஏதுமில்லை.

1363649
600 008.